2935

T.N.L.A Debates

Official Report

Vol 24 , No1

26th April 1986

C


V211,31 N86
N86.24.1
136480

வெளியீடு 11-3-1987 Issued 11-3-198

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை ஏப்ரல் 26, 1986—தொகுதி 24 எண் 1
Saturday the April 26, 1986—Volume 24 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

V211_31 N86
N86·24·1
136480
சென்னை-600 008.

உள்ளடக்கம்.

26—4—1986

| | பக்கங்கள் |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | i—iii |
| (ii) Personnel of the Government of Tamil Nadu .. | v—vii |
| (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | ix— |
| (iv) தொகுதிகள் உள்ளிட்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல் .. | xi—xviii |
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 1—36 |
| 2. கவன ஈர்ப்பு : | |
| (அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டு மன்னார் கோவில் பகுதியில் உறுமி பறை மேளம் அடிப்பதில் ஏற்பட்ட தகராறு .. | 36—42 |
| (ஆ) கொல்லிமலைப் பகுதியில் பால்வினை நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல் .. .. .. .. | 42—44 |
| 3. அறிக்கைகள் அளித்தல் : | |
| (அ) பொது நிறுவனங்கள் குழு .. .. | 44—45 |
| (ஆ) அரசு உறுதிமொழிக் குழு .. .. | 45 |
| 4. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) .. .. .. | 45—125 |

பக்கங்கள்.

கோரிக்கை எண் 30—சமூக நலன்.

| | |
|---|---|
| மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் | 45, 46, 79, 82, 87, 88, 106,—124 |
| திரு. ஆர். தியாகராசன் | 46—55 |
| திருமதி பி. லட்சுமி | 55—59 |
| திரு. ம. ஆபிரகாம் | 60—64 |
| திரு. ச. சங்கரலிங்கம் | 65—67 |
| திரு. எம். செல்லமுத்து | 67—71 |
| திரு. சா. ஞானசுந்தரம் | 71—76 |
| திருமதி தா. இராசாம்பாள் | 76—83 |
| திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் | 83—91 |
| திருமதி டி. யசோதா | 91—103 |

5. அமைச்சரின் அறிக்கை :

விதி III-ன் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள காவேரி நூற்பு மற்றும் நெசவாலை குறித்து ஆயத் துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் அறிக்கை .. 103—106

6. அறிவிப்பு :

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.) .. .. 125

7. அரசினர் சட்ட முன்வடிவு :

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. .. .. 125—152

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 152

## (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)—இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத் திந்தியப் பணியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, கால் நடை பராமரிப்பு, பஞால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப்பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், பொது நிர்வாகம், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி முன்னாள் இராணுவத்தி னர் மற்றும் தொழிலாளர்

3. மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் : (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி-அற நிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல்பொருள் இயல், மற்றும் பயண இசைவு சீட்டு.

5. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

8. மாண்புமிகு டாக்டர் நா. காளிமுத்து ; (வேளாண்மைத் துறை அமைச்சர்) — வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; (சட்ட அமைச்சர்)— சட்டம், நீதி மன்றங்கள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, சிறைகள், எடைகள்— அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் சர்க்கரைப் பாகு கழிவு.

10. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)— மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

11. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; (போக்குவரத்துத் துறை அமைச்சர்)— போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

12. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; (உணவு அமைச்சர்)— உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

13. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் ; (ஆயத் துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்)— மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

14. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் ; (சத்துணவு அமைச்சர்)— சத்துணவு.

15. மாண்புமிகு திரு. தா. வீராசாமி ; (வணிக வரித்துறை அமைச்சர்)— வணிக வரிகள்.

16. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி ; (வீட்டு வசதித் துறை அமைச்சர்)— வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

17. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் ; (ஊரகத் தொழில் அமைச்சர்)— கிராமக் குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.



18. மாண்புமிகு திரு. த. இராமசாமி ; (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)— வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

19. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் ; (ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்)— ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

20. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் ; (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)— பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளப்

21. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் ; (சமூக நலத் துறை அமைச்சர்)— மகளிர், குழந்தைகள் உள்ளிட்ட சமூகநலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

22. மாண்புமிகு திருமதி விசாலட்சுமி பழனிச்சாமி ; (கதர்த் துறை அமைச்சர்)— கதர் , பூமிதானம் மற்றும் கிராமதானம்.

23. மாண்புமிகு திரு. பா. உ. மு. யூசுப் ; (பொதுப் பணித் துறை அமைச்சர்)— பொதுப் பணித் துறை, சிறு பாசனப் உள்ளிட்ட பாசனத்திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

24. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் ; (கூட்டுறவுத் துறை அமைச்சர்)— கூட்டுறவு.

## (iii) PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

### THIRU SUNDAR LAL KHURANA

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. **The** HON. DR. M. G. RAMACHANDRAN ; **(Chief Minister)**—Indian Administrative Service and other All India Services, Police, Prevention of Corruption, Animal Husbandry, Milk, Dairy Development . Registration and Stamp Act.

2. **The** HON. DR. V. R. NEDUNCHEZHIAN ; **Minister for Finance)**—Finance, Revenue, General Administration, Legislature, Elections, Statistics, Youth Service Corps, Ex-Servicemen and Labour.

3. **The** HON. THIRU S. RAMACHANDRAN ; **(Minister for Electricity)**—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. **The** HON. THIRU R. M. VEERAPPAN ; **(Minister for Information and Religious Endowments)**—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation. Public, District Revenue Officers. Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits, Planning, Archaeology and Passport.

5. **The** HON. THIRU K. RAJARAM ; **(Minister for Industries)**—Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

6. **The** HON. THIRU P. U. SHANMUGAM ; **(Minister for Local Administration)**—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

7. **The** HON. THIRU C. ARANGANAYAGAM ; **(Minister for Education)**—Education, Official Language, Tamil Development and Culture.

8. **The** HON. DR. K. KALIMUTHU; **(Minister for Agriculture)**—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

9. **The HON. THIRU C. PONNAIYAN: (Minister for Law)**—Law Courts, Prisons, Deputy Collectors, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending, Legislation on Chits and Molasses.

10. **The HON. DR. H. V. HANDE ; (Minister for Health)**—Health and Environmental Pollution Control.

11. **The HON. THIRU S. MUTHUSAMY ; (Minister for Transport)**—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

12. **The HON. THIRU S. THIRUNAVUKKARASU; (Minister for Food)**—Food, Price Control and Census.

13. **The HON. THIRU V. V. SWAMINATHAN ; (Minister for Excise and Handlooms)** —Prohibition excluding grant of Liquor Permits, Excise, Handlooms and Textiles.

14. **The HON. THIRU R. SOUNDARARAJAN; (Minister for Nutritious Meals)**—Nutritious Meals.

15. **The HON. THIRU T. VEERASAMY; (Minister for Commercial Taxes)**—Commercial Taxes.

16. **The HON. THIRU N. NALLUSAMY ; (Minister for Housing)**—Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

17. **The HON. THIRU ANOOR P. G. JAGADEESAN ; (Minister for Rural Industries)**—Rural Industries including Village, Cottage and Small Industries.

18. **The HON. THIRU T. RAMASAMY ; (Minister for Rehabilitation and Employment)**—Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees.

19. **The HON. THIRU A. ARUNACHALAM ; (Minister for Adi Dravidar Welfare)**—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.



20. **The HON. THIRU M. R. GOVENDAN ; (Minister for Backward Classes)**—Backward Classes and Fisheries.

21. **The HON. TMT. GOMATHI SRINIVASAN ; (Minister for Social Welfare)**—Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration.

22. **The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY : (Minister for Khadi)**—Khadi, Bhoodan and Gramdhan.

23. **The HON. THIRU Y. S. M. YUSUF (Minister for Public Works)**—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

24. **The HON. THIRU K. K. S. S. R. RAMACHANDRAN: (Minister for Co-operation)**—Co-operation.

## (iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

**பேரவைத் துணைத் தலைவர் :**

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :**

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. சைதை சா. துரைசாமி
திரு. டி. ஆர். வேங்கடரமணன்
திரு. பொன். முத்துராமலிங்கம்

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர் :**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**இணைச் செயலாளர் :**

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

**துணைச் செயலாளர்கள் :**

திரு. வெ. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

**குழு அலுவலர்கள் :**

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள் :

திரு. ப. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.
திரு. மா. கு. ஜோசப், பி.ஏ.

### எஸ்டேட் அலுவலர்கள் :

திரு. க. சேவராம், பி.ஏ.
திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர் ;

திரு. கோ. வெங்கட்டராமன்.

### தலைமை நிருபர் :

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

### துணைச் செயலாளர் (பதிப்பாளர்) ;

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், எம்.ஏ. (தமிழ்.)

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பி[னர்]களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெய[ர்] |
|---|---|---|
| 1. அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவரம்பூர் |
| 2. அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | .. | திருவல்லிக்கேணி |
| 3. அப்துல் மஜீத், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 4. அரங்கநாயகம், திரு. செ. | .. | தொண்டாமுத்தூர் |
| 5. அரிக்குமார், திரு. இரா. | .. | பெரணமல்லூர் |
| 6. அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 7. அருணாசலம், திரு. எ. | .. | வரகூர் (செ.வ.) |
| 8. அன்பழகன், திரு. க. .. | .. | பார்க் டவுன் |
| 9. அன்பழகன், திரு. கே. .. | .. | ஓமலூர் |
| 10. அன்பழகன், திரு. தி. .. | .. | நாட்றாம்பள்ளி |
| 11. அன்பழகன், திரு. பொ. | .. | இளையான்குடி |
| 12. ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 13. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி திரு. .. .. | .. | ஆண்டிமடம் |
| 14. ஆபிரகாம், திரு. ம. .. | .. | ஆலந்தூர் |
| 15. ஆறுமுகம், திரு. அ. .. | .. | வந்தவாசி |
| 16. ஆறுமுகம், திரு. எச்.ஜி. | .. | பென்னாகரம் |
| 17. ஆறுமுகம், திரு. ஆர்.எஸ். | .. | ஓட்டப்பிடாரம்(.செ |
| 18. ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | .. | விருதுநகர் |
| 19. ஆறுமுகம், திரு. செ. .. | .. | மதுராந்தகம் |
| 20. ஆறுமுகம், திரு. மு. .. | .. | சேலம்-2 |
| 21. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜி. | | பூந்தமல்லி |
| 22. ஆனந்தன், திரு. மு. .. | .. | உளுந்தூர்பேட்டை |
| 23. இரகுபதி, திரு. கோ. .. | .. | காட்பாடி |
| 24. இரத்தினம், திரு. எம்.வி. | .. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. செ. | .. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல்ல. | .. | தாம்பரம் |
| 28. இராசரத்தினம், திரு. எப்.எம். | .. | கொளச்சல் |
| 29. இராசரத்தினம், திரு. எம். | .. | விழுப்புரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 30. இராசாங்கம், திரு. மு. .. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி. த. .. | தலைவாசல் (செ.வ.) |
| 32. இராசாராம், திரு. க. .. .. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி.கே. .. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 35. இராசேந்திரன், திரு. எஸ்.என். .. | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம்.ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே.எஸ்.எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ். ஆர். .. .. | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. .. | பன்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ.மா. | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப.ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ்.என். .. | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. .. .. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. .. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே.பி. .. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். .. .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48. உச்சி, திரு. கே. .. .. | கூடலூர் |
| 49. உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50. எத்திராசன், திரு. கி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ). |
| 51. கணபதி, திரு. கே.ஆர். .. | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. .. .. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா.வே. .. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பி. .. .. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர் கா. .. | மதுரை கிழக்கு |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. .. | ஆயிரம் விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. .. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. .. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்—1 |
| 62. குப்புசாமி, திரு. கே. .. .. | ஒட்டன்சத்திரம் |
| 63 குப்புசாமி, திரு. வே. .. .. | செய்யாறு |
| 64. குமரகுருபர ராமநாதன் திரு. ச... | விளாத்திகுளம் |
| 65. குமரி அனந்தன், திரு. .. | ராதாபுரம் |
| 66. குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. .. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ஆர். .. | பேராவூரணி |
| 71. சங்கரலிங்கம், திரு. ச. .. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72. சண்முகம், திரு. இரா. .. .. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். .. .. | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. .. | மேல் மலையனூர் |
| 75. சண்முகையா பாண்டியன், திரு. எம். | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. .. .. | முகையூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி.எஸ்.டி. .. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம் டாக்டர் கே. .. .. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா, திருமதி இரா. ... | உப்பிலியாபுரம் (ஆ.வா) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.) |
| 82. சித்தன், திரு. என்.எஸ்.வி. .. | திருமங்கலம் |
| 83. சித்தன், திரு. வி.பி. .. .. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆர். .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். .. | கூனூர் (செ.வ.) |
| 86. சிவஞானம், திரு. ந. .. .. | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். .. .. | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. சு. .. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை. திரு. மு. .. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. ரா. .. .. | தர்மபுரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. .. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. .. .. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. .. .. | விளவன்கோடு |
| 96. சுப்பராயன், திரு. கு. .. .. | திருப்பூர் |
| 97. சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். .. .. | திருச்செந்தூர் |
| 98. சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 99. சுப்பிரமணியன், திரு. வி. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 100. சுப்புராயர், திரு. சி. .. .. | கம்பம் |
| 101. சுவாமிநாதன், திரு. வி.வி. .. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். .. | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 104. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. .. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி.கோ. .. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம் |
| 109. சேகர், திரு. கே.பி.கே. .. | பொன்னேரி (செ.வ.) |
| 110. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 111. சொர்ணலிங்கம், திரு. கா. .. | திருவாடானை |
| 112. சோலைராசு, திரு. க. .. | மருங்காபுரி |
| 113. சௌந்திரராஜன், திரு. ஆர். .. | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. .. | தியாகராயநகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. .. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. .. .. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே.எம். .. | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. .. .. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. .. | மங்களூர் (செ.வ.) |
| 121. தங்கவேல்ராஜ், திரு. பி.எம். .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| 122. தங்கவேலு, திரு. வி. .. .. | வால்பாறை (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. .. .. | திருப்போரூர் (செ.வ. |
| 124. தமிழரசன், திரு. கு. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125. தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.) |
| 126. தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி.ஆர். .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 130. திருமலைச்சாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி... | மொரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. .. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன், திரு. .. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி திரு. .. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ்.பி. .. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. .. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி.எம். .. | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. .. .. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. .. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ.மு. .. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். .. .. | திருச்சிராப்பள்ளி—? |
| 145. நாச்சிமுத்து, திரு. கே.பி. .. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. எஸ். .. | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு.கோ. .. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா.ந. .. | பல்லடம் |
| 151. பரிதி இளம்வழுதி, திரு. .. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. .. ... | ஆற்காடு |
| 153. பழனிச்சாமி, திரு. கா.செ. ... | காங்கேயம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 154. பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி.எச். .. | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. .. | கலசப்பாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி.கே.ஜெ. .. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. .. .. | மானாமதுரை (செ. |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வி. .. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. .. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வேடசந்தூர் வி.பி. .. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. .. .. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. .. .. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. .. | பரமக்குடி (செ.வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ. |
| 170. பிச்சை, திரு. மு. .. .. | அருப்புக்கோட்டை |
| 171. பிரணவநாதன், திரு. அ. .. | கடலாடி |
| 172. பிரேம்குமார், திரு. ஆ. .. | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். .. | அரியலூர் |
| 174. புஷ்பராசு, திரு. த. .. .. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 176. பெரியசாமி, திரு. ரா. .. | தொட்டியம் |
| 177. பெருமாள், திரு. தெ. .. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179. பொன் முத்துராமலிங்கம், திரு. | மதுரை (மேற்கு) |
| 180. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். | பழனி (செ.வ.) |
| 181. பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 182. பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 183. பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 184. மணவாளன், திரு. எஸ்.பி. .. | திருப்பத்தூர் |
| 185. மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ. |
| 186. மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிரா[illegible]ள்ளி—1 |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 187. மனோகரன், திரு. கி. .. | புரசைவாக்கம் |
| 188. மனோகரன், திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 189. மாசிலாமணி, டாக்டர் த. .. | ஜெயங்கொண்டான் |
| 190. மாதவன், திரு. செ. .. | திருப்பத்தூர் |
| 191. மாதையன், திரு. யு.பி. .. | அந்தியூர் (செ.வ.) |
| 192. மாரிமுத்து, திரு. த. .. .. | குளத்தூர் (செ.வ.) |
| 193. மாரிமுத்து, திரு. மு. .. | திருப்பரங்குன்றம் |
| 194. மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. | வேதாரண்யம் |
| 195. முகம்மது கனி, திரு. ஜே. .. | புதுக்கோட்டை |
| 196. முகம்மது சலீம், டாக்டர் த. .. | பெரியகுளம் |
| 197. முசிறிபுத்தன், திரு. பி. .. | குளித்தலை |
| 198. முத்துசாமி, திரு. சு. .. .. | ஈரோடு |
| 199. முத்துராமலிங்கம், திரு. பி.கே.எம். .. .. | உசிலம்பட்டி |
| 200. முத்துவேல், திரு. கே. .. | முதுகுளத்தூர் |
| 201. முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி |
| 202. முருகானந்தம், திரு. டி.என். .. | செஞ்சி |
| 203. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204. யசோதா, திருமதி டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 205. ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 206. ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. ரவீந்திரன், திரு. ஏ.எஸ். .. | திருவண்ணாமலை |
| 208. ராமஜெயம், திரு. ம.நா. .. | வானூர் (செ.வ.) |
| 209. ராமன், திரு. கி. .. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210. ராஜாபாபு, திரு. ஜெ. .. | போளூர் |
| 211. ரெங்கசாமி, திரு. ஆர். .. | கோவில்பட்டி |
| 212. ரெத்தினராஜ், திரு. எஸ். .. | நாகர்கோவில் |
| 213. லட்சுமி, திருமதி பி. .. .. | அவினாசி (செ.வ.) |
| 214. வடிவேல், திரு. கு. .. .. | கரூர் |
| 215. வளர்மதி, திருமதி பா. .. | மயிலாப்பூர் |
| 216. விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார் |
| 217. வி[illegible]யலட்சுமி பழனிச்சாமி, திருமதி | வீரபாண்டி |
| 218. வீரானம்பலம், திரு. க.வெ. .. | மேலூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| 219. வீரய்யன், திரு. கோ. | .. | நாகப்பட்டினம் |
| 220. வீராசாமி, திரு. கா. .. | .. | ஒரத்தநாடு |
| 221. வெங்கடரெட்டி, திரு. டி. | .. | ஒசூர் |
| 222. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 223. வெங்கடாசலம், திரு. கி. | .. | லால்குடி |
| 224. வெங்கடாசலம், திரு. டி.எம். | | பரகூர் |
| 225. வேங்கடரமணன், திரு. டி.ஆர். | | தென்காசி |
| 226. வேணுகோபால், திரு. எஸ். | .. | டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் |
| 227. வேணுகோபால், திரு. கே .வி. | | தல்லி |
| 228. வேலு, திரு. கூடலூர் இ.வி. | .. | தண்டராம்பட்டு |
| 229. ஜகதீசன், திரு. ஆனூர் பு.கோ. | | செங்கல்பட்டு |
| 230. ஜான் வின்சென்ட், திரு. மு. | .. | நாங்குநேரி |
| 231. ஜெகதீசன், திரு. சு. .. | .. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன், திரு. சா. | .. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 233. ஜெயராமன், திரு. வே. இரா... | | தேனி |
| 234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 235. பிரான்சிஸ், திரு. ஜி.கே. | .. | நியமன உறுப்பினர் |

[பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே—அமைச்சர்.
3. மாண்புமிகு திரு. யா.சை.மு. யூசுப்—அமைச்சர்.
4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, ஏப்ரல் 26, சனிக்கிழமை

சித்திரை 13, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும் உடையானாம் வேந்தர்க் கொளி "

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன்.

### 1. வினாக்கள் விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

நெய்வேலியில் மூன்றாம் நிலக்கரிச் சுரங்கப் பணிகள்.

(570—*வினா எண். 1172)—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

நெய்வேலி மூன்றாவது பழுப்பு நிலக்கரிச் சுரங்கப் பணி களும் அதனுடன் சூப்பர் மின் விசை நிலையம் நிறுவும் பணிகளும் எடுத்துக் கொள்ளப்படுவது குறித்து தகவல் ஏதும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், ஆம் என்று சுருக்கமாக பதில் அளித் திருக்கிறார்கள். மத்திய அரசு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளேயே மூன்றாவது சுரங்கத்தை வெட்ட நட வடிக்கை எடுக்குமா ? அதற்கு மத்திய அரசை வலியுறுத் துமா என்று அறிவதோடு, ஆரம்ப காலத்திலே சுரங்க வாய்ப்பு இல்லை என்று மத்திய அரசு சொல்லி வந்தது. இப்போது நிலக்கரி வளமும் வாய்ப்பும் இருக்கின்ற இன்றைய நிலையில் மாநில அரசு உரிய காலத்தில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளேயே மூன்றாவது நிலக்கரிச் சுரங்கத்தை துவக்கவேண்டுமென்று உரியபடி அழுத்தமாக வலியுறுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :
கள், தமிழகத்தில் மின் பற்றாக்குறை தீரவேண்டுமானால் இந்த தலைவர் அவர்
மூன்றாவது சுரங்கம் மிக அவசியம்; அதுவும் இந்த
தாண்டுத் திட்டத்தில் துவக்கினால்தான் அடுத்த ஐந்
திட்டத்திற்குள் பலன் கிடைக்கும். இதை ஐந்தாண்டுத்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியப் பிரதமருக்கு வற்புறுத்தி
எழுதி இருக்கிறார்கள். எரிசக்தித் துறை அமைச்சர் கடிதம்
மிகு வசந்த் சாத்தே அவர்கள் அண்மையில் நெய்வேலி மாண்பு
போதும் இதுகுறித்து நாங்கள் வற்புறுத்தியிருக்கின்றோம். வந்த
விலே ஒரு நல்ல முடிவை மத்திய அரசு எடுக்கும் என்று விரை
பார்க்கப்படுகிறது. எதிர்

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே,
நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய நெய்வேலி, என். எல்.
சி. கழகத்திடமிருந்து, தற்போது அது நஷ்டத்தில் நடந்து
கொண்டிருந்தாலும்கூட ஒரு கோட்பாடு என்ற அடிப்படையில்
லாபம் ஏற்படுகின்றபோது, அதற்குரிய பங்கை மாநில அர
சுக்கு வழங்கவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை
வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
கள், நெய்வேலி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் நாம்
ராயல்டி கேட்பதில்லை. அதற்கு மாறாக, லாபத்தில் பங்கு
தருவதாக ஏற்கனவே நெய்வேலி நிறுவனத்திடம் நாம்
ஒப்புதல் பெற்றிருக்கிறோம். அதன்படி லாபத்தில் பங்கு
பெற மாநில அரசு மத்திய அரசை கேட்டு வருகிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரியை தமிழகத்தில்
இருக்கும் மற்ற அனல் மின் நிலையங்களுக்கு பயன்படுத்துகின்ற
எண்ணம் இருக்கிறதா ? இது சம்பந்தமாக ஏதாவது மைய
அரசுடன் பேசப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
பொதுவாக மத்திய அரசினுடைய முதலீடு தமிழகத்தில் குறைந்து
வருகிறது. ஆகவே தான் நெய்வேலி நிலக்கரி நிறுவனம் போன்ற
அமைப்பில் நிலக்கரியை வெட்டி அவர்களே அனல் மின் நிலை
யம் அமைப்பதன் மூலம் மத்திய அரசினுடைய முதலீடும் சம
நிலையை எய்துவதற்கு வழி வகுக்கிறது. நமக்கும் மின்சாரம்
கிடைக்கின்றது. ஆனால் அனல் மின் நிலையங்களுக்கு, நம்
மைப் பொறுத்தவரையில் வட புலத்திலிருந்துதான் நிலக்கரியை
பெற்று வருகிறோம். நிலக்கரிச் சுரங்கம், நெய்வேலியைப்
பொறுத்த வரையில் மேலும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்
படுமேயானால் அந்த நிலக்கரியை வைத்துக் கூட, அதாவது
பழுப்பு நிலக்கரியை வைத்துகூட அனல் மின் நிலைய திட்டத்தை
நாம் உருவாக்கலாம்.



1986 ஏப்ரல் 26]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, நெய்வேலியில்
இருக்கும்படியான Lignite Deposits நீண்ட காலத்
திற்குக் கிடைக்கக் கூடிய ஏராளமான கரி இருக்கிற
இடம். அங்கே மத்திய சர்க்கார் தாங்களே சுரங்கத்தைத்
தோண்டி, அவர்களே மின் நிலையத்தை மேற்பார்வை செய்து
தான் நாம் அந்த மின் விசையை விலைக்கு வாங்க வேண்டியிருக்
கிறது. நமது தமிழக அரசு அந்த விசையை விலைக்கு வாங்கு
வதற்குப் பதிலாக அந்தக் கரியிலேயே ஒரு பகுதியை தமிழக
அரசுக்குத் தர வேண்டுமென்று கேட்டு, அதைக்கொண்டு நாமே
பக்கத்திலே ஒரு பெரிய மின் நிலையத்தை அமைப்பதற்கான
வாய்ப்பு இருக்கிறதா ? அது பற்றி மத்திய அரசிடம் ஏதாவது
யோசனைகள் கேட்டதுண்டா ? அதற்கு முயற்சி எடுக்குமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் இரண்டு வகை
யிலேயும் யோசிக்கிறோம். பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி
மத்திய சர்க்கார், அவர்கள் முதலீட்டில் அனல் மின் நிலையங்
களைத் துவக்குவதும், அதே பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி
நாம் அனல் மின் நிலையங்களைத் துவக்குவதும் ஏற்புடையது.
மத்திய அரசே துவக்குகிறபோது, அந்த அளவுக்கு நாம் முதலீடு
போடுவது குறைகிறது. ஆகையினாலே அவர்களையும் வற்
புறுத்துகிறோம். நாமும் அத்தகைய யோசனைகளை கருத்தில்
கொண்டு செயலாற்றி வருகிறோம்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்
களே, நெய்வேலி நிறுவனத்தின் அருகிலே தமிழ்நாடு அரசின்
மூலமாக ஒரு மின் நிலையம் அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஏற்கனவே கருத்துச் சொன்னார்கள். அந்த யோசனை
எந்த அளவுக்கு இருக்கிறது என்பது தெரியவில்லை. அந்த
பகுதியில் 1, 2, 3 என்று இந்த அனல் மின் நிலையம் துவக்கப்
படுகிறது. அந்தப் பகுதியில் வாழக் கூடியவர்கள், அதற்கு
தங்களுடைய நிலங்களை, வீடுகளை கொடுத்த அந்த விவசாய
குடிமக்களுடைய குறை அந்த நிறுவனத்தில் வேலை வாய்ப்பு
அளிக்கவேண்டும் என்பது. இதுவரைக்கும் மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் பேசி, மற்றவர்களும் பேசி, அந்த நிறுவனத்தில்
சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு
அமைச்சர் அவர்கள் ஏதாவது இங்கே உதவி செய்ய முன் வரு
வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, நெய்வேலி 2-வது அனல் மின்
நிலையத்தின் முதல் பிரிவு 29-3-1986 அன்று மாண்புமிகு மத்திய
எரிசக்தி அமைச்சர் திரு. வசந்த் சாத்தே அவர்களால் துவங்கப்
பட்ட அந்த நிகழ்ச்சியிலேயே குறிப்பிட்டேன், 3-வது சுரங்
கத்தை வெட்டி மத்திய அரசு அனல் மின் நிலையத்தை அமைக்க

வேண்டும். 4-வது சுரங்கத்தை மத்திய அரசு வெட்டித் தருவார்களானால் அதன் மூலமமாக கிடைக்கின்ற பழுப்பு நிலக்கரியைக் கொண்டு தமிழ்நாடே அனல் மின் நிலையம் அமைப்பதற்கு தயாராக இருக்கிறது. ஆகவே 2 சுரங்கப் பகுதிகளை வெட்டித் தருவதற்கு மத்திய அரசு முன் வர வேண்டும் என்று வற்புறுத்தினேன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல நிலம் கையகப்படுத்தப்பட்டதன் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு பரிகாரம் தேடுகின்ற வகையில் தகுதி உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதை நெய்வேலி நிறுவனத்தை நாம் வற்புறுத்தி இருக்கிறோம். மத்திய அமைச்சரிடம் இது பற்றி சொல்லி இருக்கிறோம். நெய்வேலி நிறுவனம் விரைவில் அத்தகைய பரிகாரம் வழங்கும் என்று நாம் எதிர்பார்ப்போம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கப்பட்டால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் முடியும் என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்ளுவது எல்லாம் தமிழகத்தில் இன்றைக்கு அதிகமான மின் பற்றாக்குறை இருப்பதால் இந்த சூப்பர் மின் விசை நிலையத்தை துவக்குவதற்கு எவ்வளவு நிதி தேவைப்படும்? இந்த நிதியை மத்திய அரசு காலம் கடத்தாமல் துரிதமாக கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வேகமாக நடவடிக்கை எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை செயல்படுத்துவதற்கு நிதியும் தேவை, நிறுவுவதற்கு காலமும் ஆகும். சுமார் 7 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டுகள் வரை காலம் பிடிக்கும். ஆக நிதி பற்றாக்குறைக்காரணம் மட்டும் அல்ல. ஒரு திட்டத்தை துவக்கி நிறைவேற்றுவதற்கு ஆகின்ற காலத்தை கருதிதான் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் துவக்கினால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் பலன் கிடைக்கும் என்று நான் குறிப்பிட்டேன். சுமாராக ஒரு மெகா வாட்டுக்கு ஒரு கோடி ரூபாய் செலவாகும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் 3-வது பழுப்பு நிலக்கரி சுரங்கத்து பணிகளுடன் கூடிய அந்த சூப்பர் மின் விசை நிலையம் அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய திட்ட மதிப்பீடு எவ்வளவு? அதன் மூலம் தமிழகத்திற்கு எந்த அளவுக்கு மின்சாரம் கிடைக்கும் என்ற தகவலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திட்டம் நெய்வேலி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு இந்திய பேரரசுக்கு அனுப்பப்பட்டு இருக்





கிறது. ஆகவே இந்திய அரசு அதற்கான அனுமதியைக் கொடுத்து அதை செய்ய வேண்டும். திட்டத்தின் மதிப்பீடு மற்ற விவரங்கள் எல்லாம் தற்போது என்னிடத்தில் இல்லை. நெய்வேலி நிறுவனமே அதை தயாரித்து இந்திய அரசுக்கு ஏற்கனவே அனுப்பியிருக்கிறது.

தமிழ்நாடு அரசுக்கு நெய்வேலி நிறுவனத்திலிருந்து கிடைப்பது, மத்திய அரசு வகுத்து இருக்கின்ற ஒரு கொள்கையின் அடிப்படையில் பங்கிட்டு நமக்குத் தருகிறார்கள். ஏன் என்றால் நெய்வேலியில் உற்பத்தி ஆகின்ற மின்சாரத்தைப் பொறுத்த வரையில் தென் நாடு முழுவதும் 4 மாநிலங்களுக்கு உரிமையுண்டு என்பது தான் மத்திய அரசின் வாதம்.

### தஞ்சை அணைக்கரைப் பகுதியில் சிறிய நீர் மின் நிலையம்

57.—(*வினா எண். 5117)—திரு.கி.கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் கீழணை (அணைக்கரை) யில கொள்ளிடத்திலிருந்து பிரியும் இராஜா வாய்க்காலில் வேகமாக பாயும் தண்ணீரின் வேகத்தை பயன் படுத்தி சிறிய நீர் மின் நிலையம் ஒன்று (Mini Hydro Electric Power Generation) அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமகுண்டம் சூப்பர்தெர்மல் பவர் ஸ்டேஷனிலிருந்து கிடைக்க வேண்டிய பவரை பெறுவதற்காக ஸ்ரீபெரும்புதூரில் ஒரு சப் ஸ்டேஷன் மட்டுமே கட்ட வேண்டி உள்ள நிலையில் அதைக்கூட ஏற்பாடு செய்யாத இந்த நிர்வாகம் இது போன்ற புதுமையான அகில உலக அளவில் ஒத்துக் கொள்ளப்பட்ட நல்ல சிறிய திட்டங்களை செயலாற்றுமா என்பதிலே எனக்கும் சந்தேகம் உண்டு. அதை இல்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அகில உலகிலே, சிறிய தண்ணீர் போக்கிலே 10 அடி உயரம் இருந்தாலே போதும், 50 கிலோ வாட், 100 கிலோ வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இயலும் என்றும், அதற்கு ரூ. 10,000 முதலீடு போதும் என்றும் திட்டங்கள் இருக்கின்றன. அதைப்போன்று, 'டிரைய்னேஜ் வாட்டரிலே' கார்பேஜ் இருந்தாலும், சிறு சிறு மின்சாரத் திட்டங்கள் இருந்தாலும்

மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய அளவில், அகில உலகிலே ஒத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள் இருக்கின்றன. அதைப் போன்று சிறு சிறு, மினி பவர் ப்ளாட்டுகளை நிறைவேற்றி, தமிழ்நாட்டில் அந்தந்தப் பகுதிகளில் மின்சாரம் உற்பத்தி செய்து மின்சாரத் தட்டுப்பாட்டைக் குறைக்க, இனிமேலாவது சரியான நடவடிக்கை எடுக்கப்படுமா; அந்த முயற்சியை மாண்புமிகு அமைச்சரவர்கள் மேற்கொண்டு நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9–10.)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சிறிய நீர் மின் உற்பத்தித் திட்டங்கள் மின் வாரியத்தினால் எத்தனையோ உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்தத் திட்டங்களில் இந்தத் திட்டம் இடம் பெறவில்லை என்பதைத் தான் குறிப்பிட்டேன். சிறிய நீர் மின் திட்டங்களுக்கு நாம் கூடாது என்ற கொள்கையைக் கொண்டவர்கள் அல்ல. குறிப்பாக குறைந்த செலவில், அது சிறிய மின் திட்டங்களாக இருந்தாலும், பெருமளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகள் உள்ள திட்டங்களை முதலில் எடுத்து, அவற்றை நிறைவேற்றிய பின்னர் தான், இவற்றைப் பற்றி எண்ண முடியும். ஏற்கனவே நாம் உருவாக்கியிருக்கிற திட்டங்களுக்குப் போதுமான நிதி வசதி நம்மிடத்தில் இல்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே! சிறு மின் திட்டங்கள் மிக மிகக் குறைந்த முதலீட்டில் நிறைவேற்றப்பட என்று திட்டங்கள் தயாராக இருக்கின்றன. முன்பே குறிப்பிட்டது போல, ஒரு கிலோ வாட் மின் உற்பத்திக்கு ரூ. 10,000 போதும் என்று எக்ஸ்பர்ட் ரிப்போர்ட்ஸ் இருக்கின்றன. அதை மனதில் கொண்டு, தனியாக சிறு சிறு வாய்க்கால்கள் கலிங்கல்கள் உள்ள பகுதிகளில் 10 அடி உயரத்தில் 265 லிட்டர் பர் செகண்ட் இருந்தால், ஒரு கிலோவாட் உற்பத்தி செய்யலாம் என்று எக்ஸ்பர்ட் ரிப்போர்ட் இருக்கிறது. அதைக் கவனத்தில் கொண்டு அமைச்சரவர்கள் செய்வார்கள் என்பதுடன் 'விண்ட் மில்ஸ்' காற்று சுழற்சி மூலம் மின் உற்பத்தியை தூத்துக்குடிப் பகுதியிலே வெற்றிகரமாக தமிழக அரசு நிறைவேற்றியதால், அடுத்த ஒரு திட்டத்திற்கு இப்போது மத்திய அரசு அனுமதித்து உருவாக்கப்படுவது, தஞ்சை மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? நாகையிலே........(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத்தலைவர்: தமிழகம் பற்றிப் பூராவும் பேச முடியாது. சுருக்கமாக, கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி : நான் உதாரணத்திற்காகச் சொன்னேன். தஞ்சை மாவட்டத்தில் அதைச்செய்யலாம் அல்லவா? நாகைக் கடற்கரைப் பகுதியில் விண்ட் மில் மூலம் மின் உற்பத்தியைச் செய்ய அரசு முன்வருமா? நாகை தெர்மல் பவர் ப்ளாண்ட் எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு கிலோவாட் ரூ. 10,000 என்றால், ஒரு மெகவாட் உற்பத்திக்கு என்னவாகும் என்பதை அந்த நிபுணர்களிடத்திலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டுத் தெரிந்துகொண்டு, இந்த சிறிய திட்டங்க்ள் சிக்கனமானதா என்பது பற்றிய முடிவிற்கு வர வேண்டும். காற்று சுழற்சி மூலம் மின்சார உற்பத்தி செய்ய வேண்டுமென்பது பற்றிய விவரங்களை திட்டத் துறை அமைச்சர் மூலமாக, தஞ்சை மாவட்டமனாலும் அல்லது தமிழகத்திற்கேயானாலும் பெற்றுக் கொள்வது சாலச் சிறந்தது.

## ஜெயங்கொண்டம் பகுதியில் மின் இணைப்புகள்.

572— (*வினா எண். 6626)— டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் சட்டமன்ற பகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் எத்தனை கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ஜெயங்கொண்டப் சட்டமன்ற பகுதிக்கு உட்பட்ட எல்லா கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு விட்டது.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் சட்டமன்றப் பகுதிக்கு உட்பட்டு, 20 பஞ்சாயத்துக்கள் உள்ளன. கிட்டத்தட்ட 248 கிராமங்கள் உள்ளன. இன்னும் புதியதாக வயல் வெளிகளில், தோட்டங்களில் கட்டப்பட்ட குடியிருப்புகளுக்கு மின்சார இணைப்பு தரப்படவில்லை. அரசு மூலமாக கட்டப்பட்ட வீடுகளுக்கும் மின் இணைப்பு தரப்படவில்லை. அவற்றுக்கு எல்லாம் அரசு தனியாக ஒரு தாக்கீது அனுப்பி, உடனடியாக மின் இணைப்பு கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புதிய குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்குவதைப் பொறுத்தவரையில், ஒன்று வீட்டிற்கு மின்சாரம் வேண்டும்

என்று மனுக்கள் கொடுத்தால், மின்சாரம் வழங்குகிறோம். வீதிகளுக்கு மின்சாரம் வேண்டும் என்று ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானம் போட்டு அனுப்பினால், அதற்குரிய வரைப்படங்கள் போட்டு அனுப்பினால், நாம் மின்சாரம் தருகிறோம். மின்சார வாரியம் தரலாம். அதுதான் வழி.

டாக்டர் ந. மாசிலாமணி : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக கட்டித் தரப்படுகின்ற, ஆர்.எல். ஈ.ஜி.பி., என்.ஆர்.ஈ.பி., தாட்கோ மூலமாக கட்டப்படுகின்ற காலனிகளுக்கு, மின் இணைப்பு தரப்படுவதில்லை. எனவே அந்த வீடுகளுக்கு அரசு இலவசமாக மின் இணைப்பு தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அந்த வீடுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்ற வகையில் அண்மையில் அரசு உத்திரவு பிறப்பித்திருப்பதாக எனக்கு நினைவு.

## 250 K. V. டிரான்ஸ்பார்மர்கள்.

கு. கா. வி. எண். 7 (*வினா எண் 9072)— திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 250 கே. வி. சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் அரசிடம் இருப்பில் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 250 கே. வி. சக்தி கொண்ட டிரான்ஸ்பார்மர்கள் பழுதடைந்துவிட்டால் அதையே பழுதுபார்த்து வைக்கவேண்டியிருக்கிறது. இதற்கிடைப்பட்ட காலத்திலே தண்ணீர் இல்லாமல் பயிர்கள் வாடுவதால் உற்பத்தி குறைந்து அதன் மூலமாக விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, 250 கே.வி. டிரான்ஸ்பார்மர்களுக்குப் பதிலாக 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்களை வைப்பதால் அந்த நேரத்திலே மின் சப்ளை குறைவதால் மோட்டார்





களின் காயில் தீய்ந்துபோகிற காரணத்தினால் அதனாலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்காக 250 கே. வி. டிரான்ஸ்பார்மர்களையே வாங்கி வைப்பதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடந்த 4 மாதங்களிலே 150, 250 கே.வி.ஏ. மின்மாற்றிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 447, 250 கே.வி.ஏ. மின்மாற்றிகள் வாங்குவதற்கு உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 145 மின்மாற்றிகள் ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. துரை அன்பரசன் : தலைவர் அவர்களே, 250 கே.வி. டிரான்ஸ்பார்மர்கள் இல்லாது இருப்பது தென் ஆற்காடு மாவட்டத்தில் மட்டுமா ? அல்லது தமிழகம் முழுவதுமா ? தமிழகம் முழுவதும் என்றால் 250 கே. வி. டிரான்ஸ்பார்மர்கள் இருந்த இடத்தில் மூன்று 100 கே. வி. டிரான்ஸ்பார்மர்களைப் பொருத்தி எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தமிழகத்தின் பல்வேறு இடங்களிலே இத்தகைய 250 கே. வி. ஏ. மின்மாற்றிகள் உள்ளன. அவற்றிற்காக மூன்று 100 கே. வி. மின்மாற்றிகளை வைப்பதைவிட 250 கே. வி.ஏ. மின்மாற்றிகள் வைப்பதுதான் சிறந்தது. அவை இல்லாதபோது வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற யோசனையைப் பரிசீலிக்கலாம்.

## தலைஞாயிறு ஸ்ரீகோதண்ட ராமஸ்வாமி கோயில்.

573—(*வினா எண். 3704)—திரு. எம். செல்லமுத்து மற்றும் திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தலைஞாயிறு ஸ்ரீகோதண்டராமஸ்வாமி கோவில் சிலைகள் திருட்டு போனது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) களவாடப்பட்ட சிலைகளும், நகைகளும் முழுவதும் கைப்பற்றப்பட்டுவிட்டன.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே தலைஞாயிறு கோதண்டராமசாமி கோயில் சிலைகள், நகைகள் முழுவதும் களவாடப்பட்டு

அவையெல்லாம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவைகளினுடைய மதிப்பீடு எவ்வளவு? களவாடியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, 3 உற்சவ விக்ரகங்களையும், வெள்ளி இனம் 18, தங்க இனம் 6 எவர்சில்வர் 1 ஆகிய இந்தப் பொருள்கள் களவாடப்பட்டன. இவை எல்லாம் இப்போது மீட்கப்பட்டுவிட்டன. அந்தக் களவிலே கணேசன், காளிதாஸ், மாணிக்கவேலு, ரவி ஆகிய நால்வர் மீதும் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்றிருக்கிறது. அதிலே காளிதாஸ் என்பவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு இப்போது அவர் சிறையில் இருக்கிறார். மற்ற மூவரும் எதிர்த்து வழக்கு நடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, கலை நுணுக்கங்களும், கலைச் சிறப்பும் மிக்க சிலைகள் திருடப்படுவது, அவையெல்லாம் வெளிநாடுகளுக்கு கடத்திச் செல்லப்படுவதற்காகத்தான் என்று சொல்லப்படுகிறது. நம்முடைய கலை அங்கே விலைபோகிறது. எனவே நம் நாட்டிலிருந்து சிலைகள் கடத்தப்படாமல் இருப்பதற்கு என்ன என்ன சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரத்தையும் நம் நாட்டிலிருந்து வெளிநாடுக்குக் கடத்தப்பட்ட சிவபுரம் நடராசர் சிலையைத் திரும்பக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எந்த நிலையில் இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது மிகப் பெரிய விவரங்கள் அடங்கிய பதிலைத் தந்தாக வேண்டிய கேள்வியாகும். இத்தகைய சிலை திருட்டுக்களைத் தடுப்பதற்காக அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்காக பல்வேறு துறைகளின் மூலம் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதைப்போலவே, நீண்ட நாட்களுக்கு முன்பே வெளிநாட்டுக்குக் கடத்திச் செல்லப்பட்ட அந்த சிவபுரம் நடராஜர் சிலை மீண்டும் நம்மிடத்திலே வருவதற்கான அந்தக் காலக்கெடு சீக்கிரத்திலே வரவும் இருக்கிறது என்ற அந்த அளவிற்குத்தான் இப்பொழுது பதில் சொல்ல முடியும். இதைப் பற்றிய விரிவான விளக்கம் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சிலைத் திருட்டு என்பது ஒரு வழக்கமாக ஆகிவிட்டது. ஆகவே, சிலை திருடுகின்றவர்களை மட்டும்தான் காவல்துறையினர் பிடிக்கிறார்கள். ஆனால் சிலையை வாங்குகின்றவர்கள், அரசியல்வாதிகளாக இருந்து கொண்டும், பெரிய பணக்காரர்கள் என்ற போர்வையில் இருந்துகொண்டும் இருக்கிறார்கள். அப்படிச் சிலையை வாங்குகின்றவர்கள் இருக்கின்ற காரணத்தினால் தான் சிலைத் திருட்டுக்கள் அதிகமாக இருந்து கொண்டு இருக்கின்றன. எனவே, அப்படி சிலை வாங்குகின்றவர்களையும் பிடித்து தண்டனை கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சிலையை வாங்கி வைத்திருப்பவர்களும் கடுமையான சட்ட விதிகளின்கீழ் கைது செய்யப்பட்டு, வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கீழையூர் வீரட்டேஸ்வரர் ஆலயத் திருப்பணி.

574—(வினா எண். 4036)—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோவிலூரில் உள்ள கீழையூர் வீரட்டேஸ்வரர் ஆலயத் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ). ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி அவர்களின் பொன்விழாக் குழுவினர் இத்திருப்பணியை நன்கொடையாக செய்ய மேற்கொண்டுள்ளனர். திருப்பணி வேலைகள் இன்னும் துவக்கப்படவில்லை. வேலைகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வீரட்டேஸ்வரர் ஆலயம் என்பது அஷ்ட வீரட்டானம் எனப்படும் எட்டு வீரட்டானங்களில் ஒன்றாகும். மிகப் பிரசித்தி பெற்ற இந்த ஆலயம் இப்பொழுது மிகவும் சீர்கேடாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறும்பொழுது காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி அவர்களின் பொன்விழாக் குழுவினர் மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்கள். அந்த நிதியிலிருந்து ரூபாய் 65,000 மட்டுமே இந்த ஆலயத்திற்காக ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த ஆலயத்தைத் திருப்பணி செய்வதற்கு அந்தத் தொகை போதாமல் இருப்பதால் நம்முடைய அறநிலையத் துறை ஏதாவது நிதியை ஒதுக்கி

இந்தத் திருப்பணியைச் சிறப்பாகச் செய்வதற்கு மாண்புமிகு
அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, வணக்கத்திற்குரிய ஜெயேந்திர சரஸ்வதி அவர்
களின் ஐம்பதாவது ஆண்டு விழாவை ஒட்டி தமிழகத்தில்
ஐம்பது ஆலயங்களின் திருப்பணியை இந்த விழாக் குழுவினர்,
மேற்கொண்டு தங்களுடைய செலவிலே நிறைவேற்றுவதாக
ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள். அறநிலையத் துறை
யின் மூலம், அப்படி அவர்கள் எந்தெந்த ஆலயங்களில் திருப்
பணி செய்ய விரும்பி தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கிறார்
களோ அதற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று
ஆணை பிறப்பித்து அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த
ஐம்பது ஆலயங்களில் இந்த ஆலயமும் அடங்குகிறது. அவர்கள்
எவ்வளவு தொகை கொடுக்கிறார்கள், எவ்வளவு தொகையில்
திருப்பணிகளை மேற்கொள்கிறார்கள், என்ன செலவைச்
செய்கிறார்கள் என்பதைப்பற்றி அறநிலையத் துறை கவலைப்
படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் 65,000 ரூபாய்
கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு எங்களிடத்
திலே தகவல் இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்
அவர்களே முயற்சி எடுத்து அந்தத் திருப்பணியைச் செய்து
முடிக்கிறோம் என்று ஏற்றுக்கொண்டிருக்கின்ற அந்தக் குழு
வினர் மிக விரைவில் துவங்கி முடிப்பதற்கு அவர்களும் முன்
வந்து உதவி செய்தால் இந்தத் திருப்பணி விரைவில் நிறைவு
பெறும். காரணம், அது அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற
திருப்பணியாகும். ஆகவேதான் அறநிலையத் துறை இதிலே
முழுமையாக ஈடுபடவில்லை. ஆனால் துணை ஆணையாள
ருக்குத் தகவல் தெரிவித்து, இந்தத் திருப்பணியை விரைவில்
நடத்தி முடிக்க வேண்டுமென்று நாம் அறிவுறுத்தியிருக்கிறோம்.
இந்த ஆலயத்தின் ஒரு உப கோயிலாக இருக்கின்ற தேரடி
விநாயகர் கோயிலை வேறொரு நன்கொடையாளர் தங்கள்
செலவிலே திருப்பணியைச் செய்வதற்கு இந்தத் துறையின்
அனுமதியைப் பெற்று அந்தத் திருப்பணியை முடிக்கின்ற தரு
வாயில் இருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பாடல் பெற்ற மிகச்
சிறந்த ஆலயத்தின் திருப்பணியை உடனடியாக ஆரம்பித்து
நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே
கேட்பதைப் போலவே அங்கே செயலிலே ஈடுபட்டால் மிக
விரைவிலே திருப்பணி நிறைவுறும்.

திரு. சு. சிவராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கே இருக்கிற
விநாயகர் ஆலயத்தை வேறு ஒருவர் திருப்பணி
செய்து கொண்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.
அந்த விநாயகர் ஆலயத்திற்கு திருப்பணி செய்து கொண்டிருப்
பது தற்போது எங்கள் குடும்பத்தாராகும். அதுபோலவே



தற்போது அறநிலையத் துறையிலிருந்து ஏதாவது நிதி
ஒதுக்கினால் நானும் பொதுமக்களிடம் சென்று நிதி வசூல்
செய்து இந்தத் திருப்பணியை மிகவும் நல்லமுறையில்
நடத்தமுடியும் என்பதற்காகத்தான் நமது அறநிலையத்
துறை மூலமாக கொஞ்சம் நிதியாவது ஒதுக்கிக் கொடுங்கள்
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அமைச்
சர் அவர்கள் கூறிய ஆலோசனையின்பேரில் நானும் முன் நின்று
இந்தத் திருப்பணியை நடத்துவதற்கு உதவியாக இருப்பேன்
என்று இந்தத் தருணத்தில் கூறிக்கொண்டு மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் அரசு நிதியிலிருந்து ஏதாவது இந்த ஆலயத்திற்கு
ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர்
அவர்களே, ஜயேந்திர சரஸ்வதி அவர்களின் 50-வது ஆண்டு
விழாவினையொட்டி நடைபெறவேண்டிய திருப்பணி என்கிற
அந்தப் பட்டியலிலிருந்து இதை விலக்கிக் கொள்கிறார்களா
அல்லது அந்தக் குழுவினரே இந்தத் திருப்பணியை தொடங்க
இருக்கிறார்களா என்ற விவரத்தைத் தெரிவித்து அந்தத்
திருப்பணிக்கு எவ்வளவு தேவை, எவ்வளவு திருப்பணி நடை
பெறவேண்டும் என்கிற விவரத்தையும் திட்டவட்டமாக அற
நிலையத் துறைக்குத் தெரிவித்தால் அதற்கு பொதுமக்கள் சார்
பில் எவ்வளவு நீங்கள் போடுகிறீர்கள் என்ற விவரத்தையும்
தெரிவித்தால் எப்படியும் அந்தத் திருப்பணியை நிறைவேற்றி
வைப்பதற்கு அறநிலையத் துறை தன்னாலான அத்தனை
உதவியையும் முடிந்த அளவிற்கு அதற்குச் செய்யும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிரீன்வேஸ் சாலையில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம்**

575—(*வினா எண். 5756)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு
செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மயிலாப்பூர் வட்டம், கிரீன்வேஸ்
சாலையில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தும்
செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர்
அவர்களே,

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மாநாட்டு அரங்கம் ஒன்று கட்டுவதற்காக நிலத்தை,
செய்தி மற்றும் சுற்றுலாத் துறைக்கு மாற்றுவதற்கான மேல்
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1986 ஏப்ரல் 26

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நினைவுச் சின்னத்தை எழுப்புவதற்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதை அறிய விருப்புவதோடு இந்தப் பணி எப்போது துவங்கும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் நூற்றாண்டு விழா குழுவின் சார்பில் நினைவுச் சின்னங்கள் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய பல்வேறு குறிப்புகள் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டன. அதிலே தந்தை பெரியாருடைய நினைவாக அமைக்கப்பட வேண்டிய மாநாட்டு அரங்கம் ஒன்றும் அவர்கள் பரிந்துரை செய்தார்கள். அதை அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்போது அதற்கான இடத்தை ஒதுக்கீடு செய்து எந்த இடத்திலே இது கட்டப்படுகிறது என்று தீர்மானித்ததற்குப் பிறகுதான் அதிலே எப்படிப்பட்ட மாநாட்டு அரங்கம் கட்டமுடியும், எப்படி மாநாட்டு அரங்கத்தைக் கட்டுவது என்று முடிவு செய்தால், அதற்கு எவ்வளவு செலவு செய்வது என்று தீர்மானிக்க முடியும் என்று அரசாங்கம் இந்தத் துறைக்கு தெரிவித்திருக்கிறது. ஆகவே இந்த இட ஒதுக்கீடு நடைபெற்று முடிந்ததற்குப் பிறகுதான் அந்த மண்டபம் எப்படி அமையும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அரசாங்கம் முடிவு செய்யும்.

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு மைலாப்பூரில் க்ரீன் வேஸ் ரோடில் இடம் இருப்பதாக ஏற்கனவே அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்து எப்படியாவது அந்த நினைவுச் சின்னம் மைலாப்பூரிலேயே ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து தந்தை பெரியார் அவர்கள் தன்மானத்தையும் பகுத்தறிவையும் இந்த நாட்டுக்குப் போதித்தவர்கள். அவர்களது சிறந்த நூல்களை உள்ளடக்கிய தமிழகத்திலேயே மிகச் சிறந்த நூல் நிலையத்தை அந்த நினைவுச் சின்னத்தில் ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, க்ரீன்வேஸ் சாலையும் காமராஜர் சாலையும் சந்திக்கும் இடத்தில் மீன் வளத் துறை வசமுள்ள 18 ஏக்கர் நிலத்தையும் இந்த நிலத்தையொட்டியுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் முழுவதையும் பெரியார் மாநாட்டு அரங்கு அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யவேண்டும் என்ற கருத்து விவாதத்திலே இருக்கிறது. அதைப்பற்றி இறுதி முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் மற்றப் பிரச்னைகளைப் பரிசீலிக்க முடியும்.



1986 ஏப்ரல் 26]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பெயரால் அறிவியல் ஆய்வுக்கூடம் நிறுவவும் பெரியார் சொன்ன முற்போக்குக் கருத்துக்களை ஆய்வு செய்ய விரும்பி முன்வருவோருக்கு பல்கலைக்கழகத்தில் வாய்ப்பளிக்கப்படுமா? மேலும் பெரியார் இதயம் எங்கேயிருக்கிறது? பெரியார் இதயத்தை எல்லோரும் பார்ப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

நலிந்த தொழிற்சாலைக்கான வரையறை.

444—(*வினா எண். 1831)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 'நலிந்த தொழிற்சாலை' (Sick Industry) என்பதற்கு தற்போது உள்ள அளவுகோலை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

(முற்பகல் 9-30).

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நலிந்த ஆலைகளுக்கு உதவி செய்வதற்காக "தமிழ்நாடு ரிலீப் அன்டர்டேக்கிங் ஆக்ட்" உருவாக்கப்பட்டு, அதன்படி நலிவுற்ற ஆலைகளுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அந்த அடிப்படையில் எத்தனை ஆலைகள் அரசின் உதவி கோரி வந்துள்ளன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இது வரை நலிவுற்ற 43 சிறு தொழில்களுக்கு 71 இலட்சம் ரூபாய் உதவிப் பணம் வழங்கப்பட்டிருக்கின்றது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தபின் காப்பதை விட, வருமுன் காப்பது மேல் என்ற அடிப்படையில் நலிவுற்ற பிறகு உதவுவது என்பதை விட

[1986 ஏப்ரல் 26

நலிவுறுவதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து, அதற்கு முன்பாகவே உதவுகின்ற வகையில் அதை மானிட்டர் செய்வதற்கு ஏதாவது ஏஜென்சி அல்லது அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றதா? அப்படி இல்லையெனில், இனிமேலாவது அப்படிப்பட்ட ஏஜென்சி முறையை உருவாக்குவதற்கான முயற்சியை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 'State Level Co-ordination Committee for marginal assistance to sick small-scale units' என்ற அமைப்பு இருக்கிறது. அது நலிவுற்றதற்கான காரணங்களை ஆராய்ந்து ஆவன செய்து வருகிறது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல நிலையிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆலைகளின் நிதியை எடுத்து, பிற பெரும் தொழில்களில் முதலீடு செய்து விட்டு, அவற்றை நலிந்த ஆலையாக்கி, அரசாங்க நிதி உதவி பெறுகின்ற நோக்கத்தோடு, இதே முறையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற தொழில் நிறுவனங்களைக் கண்காணிக்கவும், கவனிக்கவும் அரசு விசேஷ நடவடிக்கைகள் ஏதேனும் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே இது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஆனால், தொழில் நலிவுற்றதா என்பதைப் பார்ப்பதற்கு ஒரு குழுவை நியமித்திருக்கிறோம். மூன்று காரணங்கள் இருந்தால், அது நலிவுற்றது என்று கருதி, அதைப்பற்றி ஆராயும். தொழில் நிறுவனம் தான் பெற்ற கடனுக்கான வட்டியை 6 கால் ஆண்டுகள் செலுத்தாவிட்டாலும், தொழில் நிறுவனத்தை மூடி விட்டாலும் அல்லது விற்று விட்டாலும், தொழில் நிறுவனம் பண உதவி பெற்று குறிப்பிட்ட காலத்திற்குள் மேம்பாடு அடையாவிட்டாலும்— இவைகளை நலிவுற்ற நிறுவனங்களாக அரசு கருதுகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே குறிப்பாக கேட்கப்பட்டிருப்பது, சிக் இன்டஸ்ட்ரி அதாவது நலிவுற்ற தொழிற்சாலைக்கான என்ன அளவு கோலை அரசு வைத்திருக்கிறது? அது தான் ஸ்பெசிபிக்கான கேள்வி. இந்தக் கேள்வியின் நோக்கமே, சிக் வருவதற்கு முன்பாகவே அதைத் தடுத்து நிறுத்தி, அரசுப் பணத்தை அங்கே கொண்டு போய் போடுவதற்கான சூழ்நிலை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது. நல்ல யூனிட்டை மூடி விட்டு அதிக லாபம் கிடைக்கிற நிறுவனத்திற்குப் போய் விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். மிஸ்-மானேஜ்மென்ட் தான் இன்றைக்கு முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. இப்படி மிஸ்-மானேஜ்மென்ட் செய்யப்படும் தொழிற்சாலைகள் ஏராளமாக செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அதைத் தடுக்கக்கூடிய முறையில் அமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்தக் குழு இதுவரை என்னென்ன நடவடிக்கைகளை,



1986 ஏப்ரல் 26]

எடுத்திருக்கிறார்கள்? முற்றிலும் மூடப்படுவதற்கு முன்பு முன்னெச்சரிக்கையாக அதைத் தடுப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலை நலிவுற்றதா என்று கண்டுபிடிப்பதற்கு சாத்தியக் கூறுகள் அதிகம் இல்லை. காரணம், ஏராளமான தொழிற்சாலைகள் இருக்கின்றன. இது ஒன்று. இரண்டாவதாக, வட்டி கட்டாமல் இருக்கும் போது தான் அது நம்முடைய கவனத்திற்கு வருகிறது. 6 காலாண்டுகளுக்கு வட்டி செலுத்தாவிட்டால், நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம். மீண்டும் திறந்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று ஆராய்கிறோம். அப்படி ஆராய்ந்த பிறகு தான் நலிவுற்றதாக அறிவிக்கிறோம். திடீரென்று அறிவிப்பதில்லை.

### தைல மரத்திலிருந்து காகித உற்பத்தி.

445—(*வினா எண். 5111)—திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) யூகலிப்டஸ் (தைல மரம்) மரத்தைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) யூகலிப்டஸ் வைரபிரிட் என்னும் தைல மரத்தை பயன்படுத்தி திருவாளர் சேஷசாயி காகித தொழிற்சாலை மற்றும் தமிழ்நாடு நியூஸ் பிரிண்ட் மற்றும் காகிதம் லிமிடெட் நிறுவனத்தினரால் காகிதம் தயாரிக்கப்படுகிறது. 1985–86 ஆம் ஆண்டில் திருவாளர்கள் சேஷசாயி நிறுவனத்திற்கு தமிழ்நாடு வனத் துறை மற்றும் வனத் தோட்டக் கழகத்திலிருந்து கீழ்க்கண்ட அளவில் மூலப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| | வனத் துறை. | வனத் தோட்டக் கழகம். |
|---|---|---|
| யூகலிப்டஸ் ஹைபிரிட் .. | 35,000 | 30,000 |
| யூகலிப்டஸ் கிராண்டிஸ் .. | 15,000 | 30,000 |
| பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மரங்கள். | 15,000 | 15,00 |
| மூங்கில் .. .. .. | 15,000 | 30,000 |

டி 2 A 85—3

[1986 ஏப்ரல் 26

அதே ஆண்டில் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தில் இருந்து தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனத்திற்கு 40,000 டன்கள் எடையுள்ள யூகலிப்டஸ் ஹைபிரிட் மரங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. இம் மரங்கள் கீழ்க்கண்ட தற்காலிக விலையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | தற்காலிக விலை டன் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|
| யூகலிப்டஸ் ஹைபிரிட் .. .. .. .. | 150 |
| யூகலிப்டஸ் கிராண்டிஸ் .. .. .. | 280 |
| பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மரங்கள் .. | 250 |
| மூங்கில் .. .. .. .. | 100 |

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தைல மரத்தைப் பயன்படுத்தி, காகிதம்—செய்தித் தாள் போன்றவற்றை, தனியார் துறை தயாரிப்பது போல், தொழில் துறையும் வனத் துறையும் சேர்ந்து இப்படி ஒரு தொழிற் சாலை நிறுவ முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே, தமிழ்நாடு காகித ஆலை, புகளூரில் இந்த மாதிரியான காகிதம்-செய்தித்தாள் தயாரிக்க, 40,000 டன் ஒதுக்கப்பட்டி ருக்கின்றது. வனத் துறை உதவியோடு தான் புகளூரிலே இருக்கிற காகிதத் தொழிற்சாலை, கரும்பு சக்கை உதவியைக் கொண்டும், தற்போது அரசுத் துறையாக இயக்கப்பட்டு வரு கிறது.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புகளூரிலே உள்ள காகித ஆலைக்கு எத்தனை டன் தைல மரம் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, 40,000 டன்.

### திருச்சியில் அறிவியல் அருங்காட்சியகம்.

446 —(*வினா எண். 5143)—திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாநகரில் அறிவியல் அருங்காட்சியகம் (Science Museum) நிறுவும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



1986 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(ஆ) 1986–87 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் அறி வியல் மற்றும் தொழில் நுட்பவியல் மையம் நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### அறிவியல் பூங்காக்கள்.

576 —(*வினா எண். 6257) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழகத்தில் தற்போது எங்கெங்கு அறிவியல் பூங் காக்கள் உள்ளன ?

(ஆ) அவைகளை மேலும் விரிவாக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) எங்கும் இல்லை.

(ஆ) மத்திய அரசின் தேசிய அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் வளர்ச்சி வாரியம் இந்திய தொழில் முன்னேற்ற வங்கி போன்ற நிதி நிறுவனங்களின் உதவி யுடன் தமிழ் நாட்டில் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தொழில் நுட்ப நிறுவனங்களின் வளாகத்தில் அறி வியல் மற்றும் தொழில் நுட்பவியல் தொழில் முனைவர்கள் பூங்காக்களை அமைக்க ஆலோசித்து வருகிறது.

### பென்னாகரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் படுக்கை வசதிகள்.

577 —(*வினா எண். 2227)—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னாகரம் வட்டம், பென்னாகரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை படுக்கை வசதியுடன் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இல்லை.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமபுரி மாவட்டத்திலே பென்னாகரம் தாலுக்கா வாகி சுமார் 8 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அங்கே ஆரம்பச் சுகாதார நிலையம் மட்டும் தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 1984-வது ஆண்டு அங்கே வந்தார்கள் பென்னாகரம் நகரத்திலே 20,000 மக்கள் தொகை உள்ளனர்.

அங்கு ஒரு அரசு மருத்துவமனை அமைக்கப்படுமா ? இல்லையென்றால், ஆரம்பச் சுகாதார நிலையத்தை, 20 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக அப்கிரேட் செய்ய அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பென்னாகரத்தைப் பொறுத்த அளவிலே, இப்பொழுது தாலுக்காவாக்கப் பட்டிருக்கக்கூடிய காரணத்தால், அங்கே ஒரு தாலுக்கா மருத்துவமனை தேவை என்கிற கோரிக்கை நியாயமான கோரிக்கை. இப்பொழுதிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையத்தை, மேம்படுத்தி ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்குவதா இல்லாவிட்டால், தாலுக்கா மருத்துவ மனையாக ஆக்குவதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து, உரிய நேரத்தில், தக்க முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, பொன்னாகரம் வட்டத்திலே சுமார் 30 கிலோமீட்டர் அளவுக்கு எந்தவிதமான ஆரம்ப சுகாதார நிலையமோ அல்லது வேறு சுகாதார நிலையமோ இல்லை. இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையத்திலே போஸ்ட் மார்ட்டம் செய்ய வசதி இல்லை. அப்படிச் செய்ய வேண்டுமென்றால், 30 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தர்மபுரி அரசு மருத்துவமனைக்குப் போக வேண்டிய நிலை உள்ளது. அதையெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கவனித்து, பென்னாகரம் நகரத்திற்கு உடனடியாக அரசு மருத்துவ மனை ஏற்பாடு செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–40)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி இது நியாயமான கோரிக்கை. பரிவுடன் கவனிக்கப்படும்.

**தாம்பரம் மருத்துவமனையை விரிவுபடுத்தல்.**

578 —(*வினா எண். 2758) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் மருத்துவமனையில் கூடுதலாக மருத்துவர்களை நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) மற்றும் (ஆ) தாம்பரம் அரசு மருத்துவமனையில் சிறப்புச் சிகிச்சைப் பிரிவு துவங்க ஏதுவாக உதவி அறுவை மருத்துவரும் மற்றும் இதர பணியிடங்களும் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.





**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் பகுதி ஒரு புறநகர் பகுதியாகும். சுற்று வட்டாரத்திலிருந்து ஒவ்வொரு நாளும் 500க்கும் மேற்பட்ட மக்கள் கிராமத்திலிருந்து தாம்பரத்திலே வநது சந்திக்கின்றதால் அவர்களுடைய அன்றாடத் தேவையான இந்த சுகாதாரத் துறையை தாம்பரத்தில் உடனடியாக விரைவுபடுத்துவதோடு மருத்துவமனைகளை இரவு நேரங்களில் அதிகப்படுத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, இப்போது தாம்பரம் மருத்துவமனையை பொறுத்தவரையில் 8 மருத்துவர்கள் இருக்கிறார்கள். அந்த இடங்களில் இப்போது மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீசஸ் அவர்கள் நமக்கு ப்ரபோசல்ஸ் அனுப்பி இருக்கிறார்கள். Opthalmic, Orthopaedic and Paediatrics இந்த மூன்று பிரிவுகளை அங்கு ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் நமக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த பரிந்துரை அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று நான் சொல்லி இருக்கிறேன். தாம்பரம் மருத்துவ மனை 120 படுக்கைகள் கொண்டதாகும். அங்கு 120 படுக்கைகள் இருந்தாலும் கூடுதலாக 40 பேர் அங்கே படுக்கையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இன்னும் நல்லவகையிலே அங்கே விஸ்தரிக்க வேண்டும் என்ற உறுப்பினரின் கோரிக்கையை அரசாங்கம் உடனடியாக பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் எனபதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு.**

579—(*வினா எண். 4588) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31—3—1985 ஆண்டு வரை மாநிலத்தில் வேலை வாய்ப்பு கோரி வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச், வி. ஹண்டே :** (அ) இப்புள்ளி விவரங்கள் ஆண்டுக்கு இருமுறையே சேகரிக்கப்படுவதால் 30—6—1985 அன்று வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு

செய்து உயிர்ப் பதிவேட்டில் காத்திருக்கும் மருத்துவப்பட்டதாரிகளின் எண்ணிக்கையின் மொத்தம் 2,415 ஆகும். (Including அலோபதி, இண்டிஜீனியஸ், ஓமியோபதி).

(ஆ) தமிழ்நாடு மருத்துவப் பணியில் ஏற்படும் உதவி மருத்துவர் மற்றும் அதற்கீடான பணியிடங்கள், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. தற்காலிகமாக வேலை வாய்ப்பகங்கள் மூலம் நியமிக்கப்படுவதில்லை. பணி நியமனம் எதிர் நோக்கியுள்ள மருத்துவப்பட்டதாரிகள் தேர்வாணையத்தினால் நடத்தப்படும் தேர்வில் கலந்துகொள்ள வாய்ப்பு உண்டு.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே சுமார் 2,400க்கு மேற்பட்ட மருத்துவ பட்டதாரிகள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள். இப்படி வேலைவாய்ப்பு இல்லாத மருத்துவ பட்டதாரிகளுக்கு அவர்களே தொழில் நடத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா? அப்படி உதவி செய்தால் கூட இன்று அவர்கள் தொழில் நடத்துவதிலே பெரிய நெருக்கடி இருக்கிறது. காரணம் அரசாங்கத்திலே வேலை பெறுகின்ற டாக்டர்கள் எல்லோரும் 100க்கு 100 சதவிகிதம் தனியாக தொழில் நடத்துகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தை கருத்திலே கொண்டு அரசுத் துறையில் பணியாற்றுகின்ற டாக்டர்கள் தனியாக தொழில் நடத்துவதை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்த வேலையில்லா டாக்டர்கள் எண்ணிக்கை பொறுத்த வரையில் அலோபதி டாக்டர்கள் பதிவேட்டின் எண்ணிக்கை 2,265, சித்தா டாக்டர்கள் 78, ஹோமியோபதி டாக்டர்கள் 72, மொத்தமாக 2,415 என்று சொன்னேன். 1980-ஆம் ஆண்டு ரிஜிஸ்ட்டர் எண்ணிக்கை 459, வாய்ப்புகள் நாம் உருவாக்கி வேலையில் அமர்த்தப்பட்டவர்கள் எண்ணிக்கை 259.

அதே மாதிரியாக ஒவ்வொரு ஆண்டும் நல்ல வகையில் ஏறத்தாழ 40 சதவீதம் அவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருக்கிறோம். வேலை வாய்ப்பகம் மூலமாக அவர்களுக்கு வேலை தந்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் 1982—83-ஆம் ஆண்டில் 1,500 பேர்களுக்கு தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக நாம் வேலை வாய்ப்பை உருவாக்கி இருக்கிறோம்.





மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த பிரைவேட் ப்ராக்டீஸ் பற்றி கேட்கிறார்கள். இது கொள்கைப் பிரச்சினையாக இருப்பதால் இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியவில்லை என்றாலும் இதிலே இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. பிரைவேட் பிராக்டீஸ் அபாலிஷ் செய்துவிட்டால் நல்ல தரமான டாக்டர்கள் கிடைக்கவில்லை என்று மகாராஷ்டிர மாநிலத்திலே கூட மறு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறார்கள். எனவே இதைப்பற்றி கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொரு கேள்வியும் கேட்கப்பட்டிருக்கிறது. வேறு வகைகளில் வேலை வாய்ப்புக்களைத் தனியாகத் தருவதன் மூலமாகவும், அல்லது கடன் வசதி மூலமாகவும் உதவ ஏற்பாடு செய்யப்பட முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். எல். ஐ. சி., நிறுவனம், பல ஷெட்யூல்ட் பேங்க்ஸ் போன்றவற்றின் மூலம் கிராமப் பகுதிகளில் ஆரம்பிக்கக்கூடிய டாக்டர்களுக்கு நல்ல வகையில் சலுகைகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன என்பதையும் பண உதவி கிடைத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வேலையில்லாமல் மருத்துவப்பட்டதாரிகள் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் தேர்வாணைக் குழுவின் மூலம் நடத்தப்படக் கூடிய நேர்முகத் தேர்விலே சில டாக்டர்கள் கலந்து கொண்டு தேர்வாணைக்குழுவும் அவர்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவத் துறையின் இயக்குநரகம் கிராமப் பகுதிகளில் அந்த டாக்டர்களை அனுப்புகிற வகையில் பணி உத்தரவு கொடுத்தும் கூட அந்தப் பணியில் அவர்கள் இன்னும் சேராமல் இருக்கிறார்கள். இப்படி பல டாக்டர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட டாக்டர்களைக் கணக்கில் எடுத்து அவர்களை ப்ளாக் லிஸ்டிலே சேர்த்து அவர்கள் எப்போதுமே அரசாங்கப் பணிக்குப் போக முடியாமலும், மேல்படிப்பு படிக்கிற தகுதியையும் அவர்கள் இழக்கிற வகையில் நடவடிக்கை எடுக்கப்படுமா? இங்கே இருக்கிற 2,500 மருத்துவ பட்டதாரிகள் மருத்துவத் துறையில் வளர்ந்து வருகின்ற மாற்றங்களையும், புதிய முறைகளையும் வேலையில் அவர்கள் இல்லாத காரணத்தால் அறிந்துகொள்கிற வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமல் போகிறது. எனவே அவர்களுக்குத் தொடர் பயிற்சி கொடுக்கிற வகையில் அதாவது கடந்த காலங்களில் பி.டி. அஸிஸ்டன்ட்ஸ் அப்பாயின்ட் பண்ணப்பட்டதுபோல் ஒரு அப்ரண்டீஸ் என்ற வகையில் அரசு மருத்துவமனைகளில் நியமிக்க அரசு முன்வருமா, அதுபற்றிப் பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பி இருக்கக் கூடிய கேள்வியை நியாயமான கேள்வியாகத்தான் நான் கருது கிறேன். ''டைரக்டர் ஆப் மெடிக்கல் சர்வீஸஸ்'' மூலமாக பணியமர்த்துகிறபோது சிலபேர் போய்ச்சேரவில்லை என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பாக இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு மாண்புமிகு முதலமைச்ச ருடைய கவனத்திற்கு வந்து யார் பணியில் சேரவில்லையோ அவர்களைத் தாட்சண்யமின்றிப் பணிநீக்கம் செய்வதோடு மட்டுமல்லாமல் மீண்டும் அவர்களுக்கு வாய்ப்பு தரக்கூடாது என்றும் உத்தரவு போட்டு 130 டாக்டர்களுக்கு அப்படி வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பணி நீக்கம் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்மையில் ''அசிஸ்டன்ட் சர்ஜன்ஸ் அசோசியேஷன்'' கூட யார் நியமிக்கப்படக்கூடிய இடத்தில் போய்ச் சேர வில்லையோ அவர்கள் மீது தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த வாயப்பைப் பயன்படுத்தி யாராவது அப்படிச் சேரவில்லை என்றால் தாட்சண்யம் இல்லாமல் நிர்த்தாட்சண்யமாக அவர்களை வேலை நீக்கம் செய்கிறோம் என்ற எச்சரிக்கையை இந்த மன்றத்தின் மூலமாக நான் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

அப்ரண்டீஸ் என்பதைப் பொறுத்தவரையில் இப்போது ஸ்பெஷல் ட்ரெயினிங் நாங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய கருத்துக்களின் அடிப்படையில் அந்த ஸ்பெஷல் ட்ரெயினிங்கை விஸ்தரிப்பதற்குரிய வகையில் அதுபற்றி ஒரு பாயின்டை ரெய்ஸ் பண்ணியிருக்கிறார்கள். அதுவும் ஆராயப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். எ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர்கள் 2,500 பேர்களுக்கு மேற் பட்டவர்கள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று கூறுவது ஒரு மிகப் பெரிய எண்ணிக்கையாகவும் குறையாகவும் இருக்கிறது. டாக்டர்களைப் பொறுத்தவரையில் 5 வருஷம் கஷ்டப்பட்டு படித்து பல்வேறு மனக்கோட்டை களைக் கட்டி இருக்கின்ற நிலைமையில் டாக்டர்கள் இப்படி வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பது சரியானதாக இருக்காது. எனவே தேர்வாணைக் குழுவின் மூலம் தான் அவர்கள் வர வேண்டும் என்கிற விதியைத் தளர்த்தி அரசே அவர்களை டாக்டர்களாக நியமித்து அனுப்புவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷயத்தை நாம் ஆராய்ந்துபரி சீலனை செய்து இருக்கிறோம். தேர்வாணைக் குழுவின் மூல



மாக அவர்களைத் தேர்ந்தேடுக்க வேண்டுமென்ற முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்தார்கள். தற்காலிக மாக சிலபேரை வேலையில் அமர்த்தினால் பிறகு தேர் வாணைக் குழு இவர்கள் தற்காலிகமாக இருக்கிறார்கள், எனவே இவர்களை நிரந்தரமாக்கக்கூடிய நிலைமை இல்லை என்று சொல்லி அதன்படி அவர்கள் நிரந்தரமாக்கப்படா மல் இருப்பார்களேயானால் பிறகு டெம்பரரியாக அவர்கள் வேலை செய்தது எப்படி என்ற கேள்வி வரும். அதன் காரணத் தால்தான் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நன் றாகத் தீர ஆலோசித்து தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்கிற திட்டவட்டமான முடிவுக்கு அரசாங்கம் வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

**டாக்டர் ந. மாசிலாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மருத்துவப் பட்டதாரிகளை வேலைக்கு எடுக்கின்ற வகையிலே, அவர்கள் தேர்வு ஆணைக்குழுவின் மூலமாகத்தான் தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள். ஆனால் அதை செயல்படுத்துகின்ற முறையிலே அதிக காலதாமதம் ஏற்படு கிறது. உதாரணமாக கடந்த 1981-ல் தேர்வு ஆணைக்குழு விளம்பரம் செய்து, 1982-ல் நேர்முக தேர்வு செய்து, 1983-ல் தேர்வு முடிவுகளை தெரிவித்து, 1985-லே தான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் வரை அவர்கள் காத்து இருக்கின்ற நிலைமை இருக்கிறது. மருத்துவப் பட்டதாரிகள் மருத்துவப் படிப்பை படிக்கின்ற காலத்தை விட அதிகமான காலத்தை, வேலைதேடுவதில் செலவழிக்க வேண்டியிருக்கிறது. எனவே அந்த நிலையை மாற்ற, அனாவசிய காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்று அரசு தேர்வு ஆணைக்குழுவிற்கு பரிந்துரை செய்யுமா அல்லது பழைய முறைப்படி தேர்வு ஆணைக்குழுவின் மூலம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல், நேரிடையாக சீனியாரிட்டி அடிப் படையில் வேலைக்கு சேர்க்க இயலுமா என்பதைப் பரிசீலிக் குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர் களே, ஏற்கெனவே நான் சொன்னமாதிரியாக தேர்வு ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கும் முறையைத்தான் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தேர்வு ஆணைக் குழுவின் மூல மாகத்தான் அதைச் செய்யவேண்டும் என்ற முடிவுக்கும் வந் திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக் கக்கூடிய கருத்தின் அடிப்படையில் தான் 2 ஆண்டுகளுக்கு முன்பு நமக்கு 850 இடங்களில்தான் வேகன்சி இருந்தாலும் கூட 1,500 பேர்களைக் கொண்ட ஒரு பட்டியலைக் கேட்டு, எப்பொழுது எல்லாம் நமக்கு வேகன்சி ஏற்படுகிறதோ எங்கெங்கே தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் உடனடி

யாக அந்தப் பட்டியலின்படி வேலைக்கு நியமித்து வருகிறோம். அதனால்தான் தேவையை விட அதிகமாக, 2 மடங்கு அதிகமாக பட்டியல் வாங்கிக் கொண்டிருக்கிறோம். அவைகளிலிருந்து உடனுக்குடன் வேகன்சி வந்த உடனேயே அவர்களை நிரப்பிக் கொண்டிருக்கிறோம். ஆகவே செலக்ட் செய்த உடனேயே, தேர்வு ஆணைக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே வேலையை கொடுத்து விட முடியாது. எனவே வேகன்சி எந்தெந்த நேரத்தில் ஏற்படுகிறதோ அந்தந்த நிலைமையைப் பொறுத்துத் தான் வேலை வாய்ப்புக் கொடுத்து அந்த டாக்டர்களை அமர்த்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, வேலை கிடைக்காத மருத்துவப் பட்டதாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வேலையும் தேடித்தர அரசு தனியாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் ஒன்றை அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மேன் பவர் கார்ப்பொரேஷன் என்று ஒன்று ஏற்கெனவே உள்ளது. இப்போது செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சைதை மருத்துவமனையில் சோதனைக் கருவிப் பணியாளர்கள்.**

580—(*வினா எண். 8718) திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதை அரசு மருத்துவமனையில் ''இரத்தம், சளி, மலம்'' சோதனைக்கான கருவிகள் மற்றும் எக்ஸ்ரே கருவி வாங்கப்பட்டும் அவற்றுக்கான பிரிவுகள் ஏற்படுத்தியும் பணியாளர்கள் நியமிக்கப்படாததால், இப்பிரிவுகள் செயல்படாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணியாளர்கள் நியமிக்கப்பட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருவிகள் எல்லாம் வழங்கப்பட்ட பிறகும், அரசு ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகும் இவ்



வளவு காலதாமதம் ஆவதற்கு காரணம் என்ன? இப்படி பிரிவுகள் அதிகமாக்கப்பட்ட பிறகு பணியாளர்கள் நியமிக்காத காரணத்தால், மிகவும் பாதிக்கப்பட்ட சூழ்நிலையில், அந்த மருத்துவமனையை தேடி வருகின்ற மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்களைப் போக்குகின்ற வகையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும், 31—3—1984-ல் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் முழுமையான சுக வாழ்வு திட்டம் என்ற அடிப்படையில் ப்ரீமேசன் சார்பாக ஒரு ஊர்தி வழங்கப்பட்டது. குடிசைப்பகுதிகளுக்கெல்லாம் சென்று டிரீட்மெண்ட் பண்ணுவதற்கான முறையிலே அந்த ஊர்தி வழங்கப்பட்டது. ஆனால் அதற்கு இன்னும் டிரைவரை நியமிக்காத காரணத்தால், அது பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு பணிகளிலும் விரைந்து நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

a proposal for sanction of staff for X-ray Department, sanction of E.C.G. Technician, Clinical Laboratory Technician, etc., was submitted to Government on 29th October 1985. 29—10—85லே தான் அவர்கள் நமக்கு அனுப்பியிருக்கிறார்கள். உரிய நடவடிக்கை அதற்கு விரைவில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் இப்போது இங்கே, X-Ray diagnostic Unit 300 MA E.C.G. equipment, Equipment for Clinical Bacterialogy Laboratory, Equipment for Clinical Pathology Laboratory, Equipment ofr Clinical Bio-chemistry Laboratory என்று ஆரம்பிப்பதற்காகவும் நாம் ஆணையிட்டிருக்கிறோம். ஆகவே அந்த மருத்துவமனையைப் பொறுத்த அளவிலே, அதை ஒரு பெரிய மருத்துவமனையாக, அந்தப் பகுதி மக்களுக்குப் பயன்படுகிற மருத்துவமனையாக ஆக்கச் செய்து வருகிறேன். அதற்கான உத்தரவினைப் போட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையானது தென் சென்னைப் பகுதியிலே ராயப்பேட்டை மருத்துவமனைக்கு அடுத்தபடியாக ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிற மருத்துவமனை. குறிப்பாக தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மக்கள் எல்லாம் வந்து அந்த மருத்துவமனையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த மருத்துவமனையை 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக விரிவுபடுத்துகிற திட்டமொன்று இருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்தத் திட்டம் என்னவாயிற்று? அந்த மருத்துவமனை 100 படுக்கைகள் கொண்ட மருத்

[1986 ஏப்ரல் 26

துவமனையாக மாற்றப்படுமா? இல்லையென்றால் அப்படி விரிவு படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கேற்ப 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக விரிவுபடுத்துகிற திட்டம் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அந்த மருத்துவ மனைக்கு ஏற் கனவே நாம் செய்த பட்ஜெட் அலாட்மெண்டைப் பார்த்தோ மானால் 1985–86 ஆம் ஆண்டில் 83 லட்சத்து 77 ஆயிரம் ரூபாய் அந்த மருத்துவமனைக்காக ஒதுக்கி செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச் சர் அவர்கள் ரத்தம், சளி, மலம் போன்றவைகளை சோதனை செய்வதற்காக கருவிகள் வாங்க அரசு உத்தேசித்து இருப்பதாகச் சொன்னார்கள். அந்த மருத்துவமனையில் ரத்தப் பரிசோதனை மிகச் சுலபமான முறையில் பார்க்கப்படுகிறது. அதேபோல மாநகராட்சி நடத்துகிற தாய் சேய் நல மருத்துவமனைக்கும் இப்படிப்பட்ட கருவிகளை கொடுத்து ஏழை மக்கள் எளிதாக பரி சோதனை செய்துகொள்கிற வகையில் கருவிகளை வழங்க அமைச் சர் அவர்கள் வழிவகைச் செய்வார்களா என்று அறிய விரும்பு கிறேன். (பதில் இல்லை.).

கந்தே கவுண்டன் சாவடி சோதனைச் சாவடி.

581—(*வினா எண். 6084) திரு. ஆ. நடராசன் : மாண்பு மிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி கந்தே கவுண்டன் சாவடியிலுள்ள வணிகவரி சோதனைச் சாவடி காரணமாக ஏராளமான வாகனங் கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்து தடை ஏற்பட்டு பொது மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) அதை முறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : (அ) மற்றும் (ஆ) ஆம். பேரூர் தொகுதி கந்தே கவுண்டன் சாவடி சோதனைச் சாவடியில், வாகனப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, தற்போது பரீட்சார்த்த முறையில் நுழைவு வாகனங்களை (incoming vehicles சோதனையிட தனிக் குழுவும் வெளிச் செல்லும் வாக னங்களைச் (outgoing vehicles) சோதனையிட தனிக் குழுவும் அமைக்கப்பட்டு, வாகனங்கள் சோதனை செய்யப்பட்டு வருவ தால் வாகனப் போக்குவரத்தில் தடை மற்றும் காலவிரயம் தவிர்க்கப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 26]

மருத்துவக் கருவிகள் தொழிற்பேட்டை.

582—(*வினா எண். 1607) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கருவிகளைத் தயாரிப்பதற்காகத் தனித் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) தற் போது எதுவும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, நம்மு டைய மருத்துவமனைக் கல்லூரிகளுக்கு தேவையான மருத்துவக் கருவிகளை எங்கேயிருந்து வாங்குகிறார்கள்? விலை உயர்ந்த எலக்ட்ரானிக்ஸ் கருவிகளை நமது நாட்டில் யாராவது தயாரிக்க முன்வந்தால் அரசு அவர்களுக்கு உதவி செய்யுமா? மேலும் மருத்துவக்கருவிகளைத் தயாரிக்கிற நத்தம்பாக்கம் சர்ஜிக்கல் தொழிற்சாலை மூடப் படுமென்று சொல்லப்படுகிறதே, அப்படி மத்திய அரசு அதை மூடுவதற்கு முயற்சி செய்தால் நம்முடைய மாநில அரசு அதை எடுத்து நடத்துமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, மருத்துவக் கருவிகளைப் பொறுத்தவரையில் இன் றைக்கு வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் தருவித்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் எப்படிப் பட்டவர்கள் முன் வந்தாலும் ஒரு தனி தொழில் பேட்டையோ, அல்லது பல தொழில் பேட்டை களையோ உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக் கிறது. ஆனால் தொழில் துவங்குபவர்கள் யாரும் முன் வராத காரணத்தால் தான் திட்டம் நடைமுறைப் படுத்த முடியாமல் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு எடுக்கிற நடவடிக்கைக்கு நாம் நிச்சயமாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்களை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மீண்டும் வற்புறுத்துவோம்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஒரு தாய் கர்ப்பமாக இருக்கும் போது பிறக்கும் குழந்தை ஆணா, பெண்ணா என்று தெரிந்துகொள்ள அதைக் கண்டுபிடிக்கும் இயந்திரம் நமது மருத்துவ மனையில் எங்கேயாவது இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இதனைக் கேட்டால் உறுப்பி னர் அவர்களுக்கு பதில் கிடைக்கும்.

துவரங்குறிச்சிப் பகுதியில் தென்னை நார்த் தொழில்.

583—(*வினா எண். 5952)—திரு. க. சோலைராஜ : மாண்பு மிகு ஊரகத்தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

துவரங்குறிச்சி பகுதியில் தென்னை நாரிலிருந்து கார்பெட், கால்மிதியடி போன்றவைகள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : இல்லை.

விளாத்திகுளம் தொகுதியில் தீப்பெட்டித் தொழில்.

584—(*வினா எண். 7851)—திரு. ச. குமரகுருபர ராமநாதன்: மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள '' சிறுதொழில் தீப் பெட்டி உற்பத்தியாளர் சங்கம் '' நசிந்து போயுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தொழிற்சாலைகளை நடத்த அரசு உதவி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சிறு தீப்பெட்டி உற் பத்தியாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சில பொதுவான காரணங்களால் இலாபமாகச் செயல்பட இயலாத நிலையில் உள் ளன. இந்தச் சங்கங்கள் இலாபகரமாக இயங்கும்பொருட்டு மற் றைய சிறு தீப்பெட்டி தயாரிப்பாளர்கள் பொது லேபில்கள் உப யோகிப்பதை தடுத்து, தீப்பெட்டித் தொழிற் சங்கங்கள் மட்டும் பொது லேபில்கள் பயன்படுத்த அனுமதிக்கும்படி மைய அரசுக்கு இந்த அரசு பரிந்துரை செய்துள்ளது. மைய அரசு இந்தச் சலு கையை வழங்கினால் இந்தச் சங்கங்கள் இலாபகரமாக நிச் சயம் நடக்கும்.

(முற்பகல் 10.00).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தீப்பெட்டி உற்பத்திச் சங்கங்கள் பொது வாக நஷ்டத்தில இயங்குகின்றன. சாத்தூர், சிவகாசி, விளாத்தி





குளம் மற்றும் கோவில்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள சங்கங் கள் மிகவும் நஷ்டத்தில் இயங்குவதாகச் சொல்கிறார்கள். இதற் குக் காரணம், அவர்களுக்கு நிர்வாகத் திறமையின்மைதான். அவர்கள் சரியாக இவைகளைக் கவனிப்பதில்லை. ஆனால் தனி யார் துறையில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகள் எல்லாம் நல்ல முறையில் லாபத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. நஷ்டத்தில் இயங்குவதற்கு முக்கியமான காரணம் என்ன என்று பார்த்தால் அங்கே உள்ளவர்களின் நிர்வாகத் திறமையின்மை, சோம்பேறித்தனம், மற்றும் ஒழுங்காக வேலை செய்யாமல் இருப் பதுதான். எனவே இவைகளுக்கு எல்லாம் நிவாரணம் செய்து, மாற்றி அமைக்கின்ற வகையில் கமிட்டி ஒன்றை அமைத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் சில கண்டிப்பான கட்டுப்பாடுகளை வைத்திருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகளில் சில, ஒரு தீப்பெட்டியில் எத்தனை குச்சிகள் இருக்கவேண்டும், எந்த அளவிற்கு மருந்துகளை அதில் வைக்க வேண்டும், அதேபோல் மெழுகை எவ்வளவு உபயோகப்படுத்த வேண்டும் என்பதுபோன்ற கட்டுப்பாடுகள் இருக்கிற காரணத் தால், பல கூட்டுறவுச் சங்கங்கள் நசிந்து போவதற்கு ஒரு முக்கிய மான காரணமாகும். மேலும் சிறு தீப்பெட்டிகள் தொழில்கூட்டு றவுச் சங்கங்களுக்கு மட்டுமே கலால் வரிச் சலுகை தொடர்ந்து இருந்து வந்திருந்தால இப்படிப்பட்ட சிக்கல்கள் இருந்து இருக் காது. 1–1–1982 முதல் இந்தச் சலுகை எல்லாத் தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கும் நீட்டித்ததாலும், காமன் லேபில் முறை அதாவது பொது லேபில் முறை தொழில் கூட்டுறவுச் சங்கங் களுக்கு மட்டுமே என்று இருந்ததை தனியார் கம்பெனிகளும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுத்த தாலும் இப்படிப்பட்ட சிக்கல்கள் இருந்தன. ஏராளமான தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இதனால மூடப்பட்டு விட்டன; நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இதில் மத்திய அரசை நம்முடைய அரசு. கலால் வரிச்சலுகை சிறுத் தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் தரவேண்டும் என்றும், காமன் 'லேபில் முறையை கம்பெனிகள் உபயோகப்படுத்து வதைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், சிறு தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குரோஸ் ஒன்றுக்கு 60 காசு வீதம் '' டிரா பேக் சப்சிடி '' வழங் கப்படவேண்டும் என்றும் அரசாங்கம் வற்புறுத்த தகுந்த பரி சீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலை நடைபெறுவதைப் பற்றி இங்கே சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்தில் உள்ள

பாப்பரெட்டிபட்டி யூனியனிலும், நல்லமுள்ளி யூனியனிலும், மற்றும் தர்மபுரி யூனியனிலும் சுமார் ஆயிரக்கணக்கான தீப்பெட்டித் தொழிற்சாலைகளை ஆரம்பித்து, அந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் தற்போது மூடப்பட்டு, அந்தத் தொழிற்சாலைகளில் யார் குடியிருக்கிறார்கள் என்பது கூட தெரியவில்லை. எனவே அந்தத் தொழிற்சாலைகளுக்கு எல்லாம் மறுபடியும் உயிரூட்டம் கொடுக்க இந்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், 1981–82 1982–83 ஆம் ஆண்டுகளில் ஏறக்குறைய 300-க்கும் மேற்பட்ட, தொழிற்சங்கங்கள் இருந்தன. ஆனால் பராமரிப்பற்ற முறையில் அவைகள் எல்லாம் வேகமாக தொடங்கப்பட்டன. அதன் காரணமாக இந்தத் தொழில் செய்யக்கூடிய அந்தக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் எல்லாம் அந்தக் கட்டுக்கோப்புக்குள் இருக்க இயலாத காரணத்தால் பல தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நசிந்து போய்விட்டன. இருந்தாலும் கூட, சில தொழிற் கூடங்களை மீண்டும் நடத்தவேண்டும் என்று அரசாங்கம் முடிவு எடுத்து, அதற்காக உதவி செய்வதாக இருந்தாலும், அதை ஏற்க அவர்கள் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூட்டுறவுத் துறையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு எல்லாம் பல கட்டுப்பாடுகள் இருப்பதாகவும், தீப்பெட்டிகளில் எத்தனை குச்சிகள் இருக்கவேண்டும், எவ்வளவு மருந்துகள் வைக்க வேண்டும் என்பது போன்ற கட்டுப்பாடுகள் இருந்ததினால்தான் அவைகள் நஷ்டத்தில் இடங்கி வருவதாகவும் சொன்னார்கள். அப்படியானால் தனியார் துறையை குறை சொல்வதாகத் தெரிகிறது. அவர்களுக்கு அந்தக் கட்டுப்பாடு இல்லையா ? அவர்கள் தப்பு செய்கிறார்களா என்று அறியவும், இந்தக் கூட்டுறவுத் துறையில உள்ள இவைகள் நசிந்து விடுவதற்குக் காரணம் புதிதாகப் போடப்பட்ட விற்பனை வரி—மத்திய சர்க்கார் சலுகையிலே மாறுபடுவதன காரணமாகத்தான் என்பதையும், தனியார்கள் மீது குறை சொல்லிப் பேசியதையும் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தீப்பெட்டித் தொழிலை நான் குறை கூறுவதாக மாண்புமிகு உறுப்பினர் கருதக்கூடாது. இருக்கிற நிலைமையில் ஏறக்குறைய முந்நூற்றிச் சொச்சம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மிகச் சிறப்பாக நடைபெறவேண்டும். எல்லோருக்கும் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்பதற்காக 1981–82-லே இந்தத் திட்டத்தை நிறை



வேற்றுவதற்காக ஏராளமான இடங்களிலும், பாரம்பரியம் இல்லாத நிலையில் இடங்களிலும் இப்படிப்பட்ட தொழில் புரியும் திட்டங்களை ஏற்படுத்தினோம். அதற்கு முன்னாலே, சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி போன்ற சில இடங்களிலேதான் இதைத் தொடர்ந்து முழுமையாக நடத்தி வந்தார்கள். இன்றைக்கு என்ன நிலைமை என்று சொன்னால், தீப்பெட்டி தொழில் சங்கங்கள் என்ற பெயராலே பல தனியார் கம்பெனிகள், பெரிய பெரிய கம்பெனிகளெல்லாம் உள்ளே புகுந்து இன்றைக்கு வடமாநிலங்களுக்கு செல்லக்கூடிய ஒரு தீப்பெட்டியை எடுத்துப்பார்த்தால் அதன் மேலே 50 தீக்குச்சி என்று போட்டு உள்ளே 30, 32-கூட இருக்கும். ஆனால் அதே நேரத்தில் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் இப்படி இருக்க முடியுமா என்று சொன்னால் 45-க்கும் குறைவாக இருந்தால் அவர்களுக்கு ஒரு ரூபாய் அபராதம் விதிக்கிறார்கள். இப்படிப்பட்ட தரக்கட்டுப்பாடு கண்டிப்பாக இருக்கிற காரணத்தினாலே தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சரிவர இயங்கவில்லை. ஆனால் நல்ல பெயரோடு விளங்கிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பாலுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்திக்குளத்தைப் போன்று நிலக்கோட்டையிலும் சிறு தொழில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. ஆனால் அந்தச் சிறு தொழில் உற்பத்தியாளர் சங்கத்தில் உள்ள, அமைக்கப்பெற்றுள்ள போர்டில் உள்ள தலைவரோ அதனுடைய அங்கத்தினர்களோ சரிவர இயங்காத காரணத்தினால் அங்கே தீப்பெட்டி சிறு தொழில் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. ஆகையினால் அந்த போர்டை கலைத்துவிட்டு மீண்டும் புதிய போர்டு ஒன்றை ஆரம்பித்து அந்தச் சிறு தொழில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தை ஆரம்பிப்பதற்கும் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாலுசாமி கேட்கின்ற அந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கம் மட்டும் அல்லாமல் எத்தனையோ கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்குவதாக இருந்தாலும்கூட இந்த அரசாங்கம் உதவுவதற்கு தயாராக இருக்கிறது. பல தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சம்பந்தப்பட்ட தலைவர்களையும் மற்றும் உள்ள உறுப்பினர்களையும் கூப்பிட்டு கேட்டபோது தயவு செய்து இப்போது இருக்கிற சலுகையே போதும்; மேலும் எங்களுக்கு பணத்தைக் கொடுத்து, நிதியைக் கொடுத்து அரசாங்க மூலதனத்தைக் கொடுத்து, திணித்து மீண்டும் எங்களைக் கடன்காரர்களாக ஆக்கிவிடாதீர்கள் என்று அவர்கள் அச்சப்படுகிற நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைக்கு காரணம் அந்த கலால் வரிச் சலுகையும், இரண்டாவது காமன் லேபில் சிஸ்டம்

இந்த இரண்டையும் மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. 1-1-1981 க்குப் பிறகு போடப்பட்டுள்ள உத்தரவு மூலமாக இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை மாறுமானால் இன்னும் பல சங்கங்கள் உருவாவதற்கு இடமிருக்கிறது.

சிறப்பு அங்காடிகளில் சுயசேவைப் பிரிவுகள்.

585—(*வினா எண்: 6126) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, தேனாம்பேட்டையிலுள்ள காமதேனு சிறப்பு அங்காடியில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் ''சுயசேவைப்பிரிவு' தமிழகமெங்கும் விரிவுபடுத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: ஆம்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமதேனு சிறப்பு அங்காடியைப்போல இங்கே பல்வேறு இடங்களில் அமைப்பதற்காக அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறினார்கள். எந்தெந்த நகரத்தில் அமைக்க இருக்கிறார்கள்? படித்து பட்டம் பெற்ற, வேலையற்றவர்களுக்கு சுய வேலைப் பிரிவு மூலம் வேலை கொடுப்பதற்கு இது ஏதுவாக இருக்கின்ற காரணத்தினால் பெருநகரமாக இருக்கின்ற தஞ்சை, குடந்தை, திருச்சி, கோவை போன்ற நகரங்களில் உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன ஆண்டிலே 10 இடங்களிலே திறந்திருக்கிறோம். வருகின்ற இந்த ஆண்டிலே 25 இடங்களிலே திறப்பதாக இருக்கிறோம். இந்த ஆண்டிலே கும்பகோணத்திலேகூட திறப்பதற்கு வேண்டிய வேலைகளைச் செய்திருக்கிறோம். தஞ்சாவூரிலே திறப்பதற்கு வேண்டிய வேலைகளையும் நிச்சயமாகச் செய்வோம். மொத்த, பண்டக சாலைகள் உள்ள தலைமை இடங்களிலெல்லாம் கட்டாயமாக ஒரு சுய சேவைப் பிரிவும் இருக்கவேண்டுமென்ற உத்தரவினையும் நாங்கள் அனுப்பி இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே படித்த பட்டத்தாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? விலை அதிகமாக உள்ள பொருள்களாக இருந்தாலும், சாதாரண பொருள்களாக இருந்தாலும் 'ரெடிட்' முறையிலே கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரிகள் இதற்கு வேண்டியதில்லை. சேல்ஸ்மேன் இடத்திற்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தாலே போதும் என்று நாங்கள் வைத்திருக்கிறோம். ஆனால் பட்டதாரிகளைப் பொறுத்த அளவிற்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிலிருந்து வரும் என்று சொன்னால் அவர்களுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்க முடியும். 'கிரடிட்' பற்றி நாங்கள் தனியாக கொடுக்கின்ற வழக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே 10 இடங்களில் ஆரம்பித்து உள்ளதாகச் சொன்னார்கள். இப்போது இந்த சுய சேவைப் பிரிவு 25 இடங்களில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். அந்த 25 இடங்கள் எவை என்பதையும் அதில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியும் நிச்சயமாக அதில் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 25 ஊர்களின் பட்டியல் தற்போது என்னிடத்தில் இல்லை. ஏன் என்றால் இப்போது தான் பட்ஜெட்டில் அறிவித்து இருக்கிறேன். அதற்கு வேண்டிய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லாடவரத்தில் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம்.

586—(*வினா எண் 8972) திரு. த. பழனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டத்தில் லாடவரத்தில் புதியதாக அமைக்க இருந்த கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாங்காடு, சர்வந்தாங்கல் மற்றும் குஞ்சரப்பந்தாங்கல் கிராமங்களை சேர்த்து லாடவரத்தில் ஒரு புதிய விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்படும்? அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து ஆரம்பித்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[1986 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாத காலத்திற்குள்ளே ஆரம்பிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல் நானே வந்து அங்கே ஆரம்பித்து வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. கவன ஈர்ப்பு.

### (அ) காட்டுமன்னார் கோவில் பகுதியில் ஏற்பட்ட தகராறு.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் உறுமி பறை மேளம் அடிப்பதில் ஏற்பட்ட தகராறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் சா. ஜெயச்சந்திரன், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் பகுதியில் வன்னியர் மக்களுக்கும், ஆதி திராவிடர் மக்களுக்கும் இடையே மேளம் அடிக்கும் விஷயத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக அப்பகுதியில் நிலவும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்குடி கோவில் பகுதியில் வாழும் ஆதி திராவிடர்கள், உறுமி பறை மேளம் அடித்தல், தண்டல் பணிகள் போன்ற இன்ன பிற சிறு வேலைகளைச் செய்வதை வெறுத்து, அவற்றை கைவிட முடிவு செய்து,



1986 ஏப்ரல் 26] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அப்பகுதியிலும் அருகிலுள்ள பகுதிகளிலுமுள்ள ஆதி திராவிடரல் லாத இனத்தவர்களின் மூத்தவர்களைக் கொண்டு கலந்து பேசி, ஆதி திராவிடர்களை மேளம் அடித்தல், சிற்சிறு ஏவல் பணி போன்ற இன்ன பிற வேலைகளைச் செய்ய இனிமேல் பயன் படுத்தக்கூடாது என முடிவெடுத்திருந்தனர். இதற்கிடையில் 15—8—1985-ல், குறுங்குடி என்ற ஊரில் நடைபெற்ற மாரி யம்மன் திருவிழாவின்போது, கிராம மக்கள் அயலூரிலுள்ள ஆதி திராவிட இன மக்களைக் கொண்டு மேளம் அடிக்க ஏற்பாடு செய்தனர். இதனால் கோபமுற்ற ஆதி திராவிடர்கள் சுமார் 700 பேர் ஒன்று கூடி, கிராமத்தில் மேளம் அடிக்க ஏற்பாடு செய்திருந்ததைத் தடுத்து நிறுத்த முயன்றனர்.

2. பாதுகாப்புப் பணிக்காக வந்திருந்த காவல் துறையினர், கூட்டத்தினரைக் கலைந்து செல்லுமாறு வற்புறுத்தினர். ஆனால் கூட்டத்தினர் பொறுமையிழந்தவர்களாகிக் காவல் துறையின ரைத் தாக்க முயன்றனர். நிலைமை மோசமடையவே, காவல் துறையினர் துப்பாக்கியால் சுட்டனர். அதன் விளைவாக 14 ஆதி திராவிடர்கள் காயமுற்றனர். மற்றுமொருவர் படுகாய முற்று மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனளிக் காமல் இறக்க நேரிட்டது. மரணமடைந்த நபரான திரு. பாண்டியன் என்பவரது தாயாருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 5,000 வழங்கப்பட்டுள்ளது.

3. இச்சம்பவத்தில் அப்பகுதி கோட்டாட்சியர், ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் 28 காவல் துறை அலுவலர் களுக்கும் காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் குறித்து மாவட்ட வருவாய் அலுவலர், அரசுக்கு விசாரணை அறிக்கையினை அனுப்பியுள்ளார். அவ்வறிக்கை அரசின் ஆய்வில் இருந்து வருகிறது.

4. காட்டுமன்னார்கோயில் பகுதியில் இவ்வாறு எழும் பிரச் சினைகளைக் கருத்திற்கொண்டு, சிதம்பரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில், தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் கடந்த 26—3—1986 அன்று அமைதிக் குழு கூட்டப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அவர்கள், இந்தப் பகுதி மக்களுடைய முன்னேற்றத்திற்காக குறுங்குடி கிராமத் தில் பால் பண்ணை அமைத்து வன்னியர்களும் ஆதி திரா விடர்களும் உறுப்பினர்களாக ஆக்கப்பட்டு அப்பண்ணையை நடத்த இருப்பதாகவும், அப்பகுதி மக்கள் அமைதியான முறை யில் பொருளாதார முன்னேற்றம் காண ஆவன செய்யப்படுவ தாகவும் தெரிவித்துள்ளார்.

5. உறுமி மேளம் அடிப்பது குறித்து அப்பகுதியில் அடிக்கடி எழும் இத்தகைய நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்காக தகுந்த நட வடிக்கைகள் எடுக்கும் பொருட்டு, அமைதிக் குழுக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டு, 13—4—1986

அன்று முக்கியஸ்தர்களைக் கொண்டு மீண்டும் அமைதிக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அன்று நடைபெற்ற அமைதிக் குழுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். சி. பண்டா முன்னிலையில் இருசாராரும் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து கையெழுத்திடப்பட்டுள்ளது. இந்த விஷயமாக எழும் பிரச்சினைகளைத் தீர்க்கும் வண்ணம், அப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், காவல் துறை ஆய்வாளர், வன்னியர் சமூகப் பிரிவில் இருவர், ஆதி திராவிடர் பிரிவில் இருவர் மற்றும் இதர சமூகத்திலிருந்து இருவர் கொண்ட கூட்டம் காட்டுமன்னார் கோயில் வட்டாட்சியரால் கூட்டப்படும் என்றும் முடிவு செய்யப் பட்டது.

6. காட்டுமன்னார்கோயில் பகுதியில் மேளம் அடிப்பது தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் தகுந்த முறையில் கையாளப்பட்டு நிலைமை சுமூகமாக இருப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 13—4—1986 அன்று ஏற்பட்ட உடன்படிக்கையின் விளைவாக காட்டுமன்னார்கோயில் வட்டத்திலுள்ள கிராமங்களில் சாவு காரியங்களுக்கு உறுமி மேளம் அடிப்பதில்லை என்றும், எந்த வித மேளமும் இன்றி அனைத்து சமூகத்ினரும் சாவு காரியங்களை அமைதியாக நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் கோயில், திருமணம் மற்றும் இதர விழாக்களுக்கு உறுமி, தப்பு ஆகிய இரு வாத்தியங்களையும் வாசிக்கக்கூடாது என்றும் இவை இரண்டும் தவிர மற்ற வாத்தியங்களை வாசிப்பதில் ஆட்சேபணையில்லை என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்தப் பிரச்சினை குறித்து தங்கள் தங்கள் சமூக மக்களுக்கு தகுந்தபடி எடுத்துக்கூறி, கிராமத்தில் எந்தவித சச்சரவுமின்றி அமைதி காப்பதற்கான முழுப் பொறுப்பினையும் தாங்கள் ஏற்றுக் கொள்வதாக தங்கள் சமூகத்தின் சார்பாக திரு. எல். இளையபெருமாள் (ஆதி-திராவிடர்) அவர்களும், திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி (வன்னியர்) அவர்களும் உறுதியளித்துள்ளனர். காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் நிரந்தரமான அமைதியும் இன ஒற்றுமையும் ஏற்பட இவை வழி வகுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

*திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 13—4—1986 அன்று அந்தப் பகுதியில் உள்ள் இரு சாராரும் ஒன்று கூடி சாவு காரியங்களுக்கு உருமி மேளம், தப்பு மேளம் அடிக்கவில்லை என்றும் மற்ற காரியங்களுக்கு இவற்றை தவிர மற்ற அனைத்து மேளங்களையும் அடிக்கலாம் என்றும் அதற்காக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தம் ஏற்பட்டும் கூட சஞ்சன்கொல்லை என்ற கிராமத்திலும், திருமுட்டம் என்ற கிராமத்திலும், ராயநல்லூர் என்ற கிராமத்திலும், கருப்பேரி என்ற கிராமத்திலும் சாவு காரியங்களுக்கு





மேளம் அடித்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக கலவரம் மீண்டும் ஏற்பட்டு வருவாய்த்துறை அதிகாரிகளும், காவல் துறை அதிகாரிகளும்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாக கேளுங்கள். இப்படி பேசுவதால் இன்னும் ஒரு கலவரம் வந்துவிடப் போகிறது.

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** இந்த ஒப்பந்தம் சரியில்லை என்ற ஒரு நிலை அந்தப் பகுதியில் ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தை மாற்றி இந்தச் சட்டமன்றத்தில் மீண்டும் மறு பரிசிலனை செய்து நிரந்தர தீர்வு காணும் வகையில் ஒப்பந்தத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ? அந்த இரண்டு தலைவர்களும் பொறுப்புஏற்றுக் கொள்ளுவதாக அறிவித்துள்ளதாக இந்த அறிக்கையில் இருக்கிறது. இந்தக் கலவரத்திற்கு காரணமானவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற சம்பவங்கள் நம்முடைய நாட்டில் நம்முடைய சமுதாயத்தில் பல்லாண்டு காலமாக பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிற ஒரு பழக்க வழக்கத்தினுடைய அடிப்படையில் தீர்க்கப்பட முடியாமல், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் நாம் வளர்த்து கொண்டிருக்கிற சில பழக்க வழக்கங்களின் அடிப்படையில் எதிர்பாராமல் வருந்தத்தக்க இந்த நிலைமைகள் வளர்ந்து கொண்டு இருக்கின்றன, நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆகவே இதற்கு யார் காரணம், என்ன அடிப்படை என்பதையெல்லாம் ஆராய முயன்றால், இதற்கு முடிவே கிடைக்காது. சில நேரங்களில் திட்டமிட்டும் சில காரியங்கள் நடைபெறுகின்றன. உணர்ச்சி வசப்பட்டும் எதிர்பாராமல், காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே சமுதாயத்தில் எல்லா தரப்பினரும் இந்த அடிப்படை நிலைமைகளை, உண்மைகளை உணர்ந்து அமைதி காக்கவும், ஒருவரையொருவர் மதித்து நடக்கவும், நாமே சில வரையறைகளை, நியதிகளை ஏற்படுத்தி நடந்தாலொழிய, இதற்கு எந்தச் சட்டமும் எந்த அரசும் வழி கண்டு விடமுடியாது. ஆகவேதான் இந்தச் சூழ்நிலையில் ஒரு சம்பவம் துரதிருஷ்டவசமாக நடைபெற்று, அதனாலே, இறப்பும் படுகாயங்கள் அடைகின்ற சூழ்நிலையில், அமைதியாக தோழமை உணர்வோடு, நட்புணர்வோடு, வாழ வேண்டிய சமுதாயத்திற்குள்ளே இப்போது தேவையற்ற பகை உணர்வுகள் தோன்றிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலைகளை எப்படி குறைப்பது, அல்லது எப்படி

மாற்றுவது என்ற முயற்சியில் எல்லா தரப்பினரும் ஈடுபட வேண்டு மென்பதற்காகத்தான் இந்த அமைதிக் கூட்டம் கூட்டப் பட்டது. இதிலே முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் சில தொழிலை நாங்கள் செய்ய மாட்டோம், இந்தத் தொழில் செய்வது எங்களை இழிவு படுத்துவதாக அமைந்திருக்கிறது, நீண்டகாலமாக நடைமுறை யில் இருந்து வருகிறது என்றாலும் கூட, என்றைக்கோ ஏற் படுத்தப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்க வழக்கங்கள் இன்றைக்கு மாற்றப்பட்டாக வேண்டும், அது எங்களுடைய தன் மான உணர்வுகளைப் பாதிக்கிறது என்று சொல்கின்ற நேரத் தில், இதை நீங்கள் செய்துதான் ஆக வேண்டுமென்று வலி யுறுத்த மற்றவர்களுக்கு உரிமையில்லை. ஆனால் அதே நேரத் தில் சில காரியங்களை, நாங்கள் தொழிலாக செய்கிறோம் என்று சிலர் முன் வந்தால், நீங்கள் அதைச் செய்யாதீர்கள் என்று தடுக்கின்ற, வன்முறையோடு தடுக்கின்ற அந்தச் செயல் களை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே முள் ளிலே துணியைப் போட்டுவிட்டு, எப்படி எடுப்பது என்ற நிலை யைப் போல, சமுதாயத்தில் அமைதி கெடாமல் சகோதரஉணர்வு தோழமைஉணர்வு, அற்றுப் போகாமல், அதற்குப் பரிகாரம் வேண்டும். ஏதோ நேற்று தோன்றிய காரணத்தினாலே இன்றைக்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் அல்ல. இது நீண்ட காலமாக இந்த சமுதாயத்திலே புரையோடிப் போய் இருக்கின்ற பழக்க வழக்கங்களினாலே, ரத்தத்திலே ஊறிப்போய், உணர்வு கள் தொடர்ந்து வருகின்ற ஒரு தொடர் நிகழ்ச்சி. ஆகவேதான் இதிலே மிகுந்த எச்சரிக்கையோடு சமுதாய நலனை மனதில் கொண்டு, இதிலே யார் பெரியவர்கள், இதிலே யாருடைய முயற்சிகள் வெற்றி பெறுகிறது என்கின்ற அந்த வீம்பு பாராட் டப்படாமல் அமைதியாக, சில உரிமைகளைகூட சில நேரங் களிலே விட்டுக் கொடுத்து, தற்காலிகமாக, அதற்குப் பிறகு அந்த உரிமைகளையே எல்லோருடைய அனுமதியோடு பெற்றுக்கொள் கின்ற வாய்ப்பை உருவாக்குவதற்காக அப்படிப்பட்ட விட்டுக் கொடுக்கின்ற தாராள மனப்பான்மையோடு சமுதாயத்திலே வழி காட்டுவதற்கு வருகின்ற தலைவர்கள், எந்தத் தரப்பிலே இருந் தாலும், எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவர் கள் அந்த உணர்வை, சாதாரண பாமர மக்களுக்கு தாங்கள் உணர்ச்சி வசப்படும்போது, தாங்கள் என்ன காரியம் செய்கின் றோம் என்கின்ற அந்த நிலைமையக்கூட மறந்து, காரியங்களிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற, உணர்ச்சி வசப்படுகின்ற மக்க ளுக்கு வழி காட்டுகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற வர்கள்தான் இதற்கு வழிகாட்ட வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்த ஒப்பந்தம் ஏற்பட்டு, இன்றைக்குச் சில கிராமங்களிலே சில நிகழ்ச்சிகள் நடைபெற்று இருப்பதாகச் சொல்கிறார்கள். அமைச்சருடைய கவனத்திற்கு வரவில்லை. அப்படி நடைபெற்றிருந்தால், மாண்புமிகு உறுப்பினர் உட்பட



நம்மைப் போன்ற ல் கட்சிகளைச் சார்ந்தவர்களும்
இதைத் தீர்ப்பதற் முயற்சி எடுக்க வேண்டுமே தவிர,
சட்டமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்பி, இதற்கு
யார் காரணம் என்று பிரேத பரிசோதனை செய்வதினாலே,
இதற்குப் பரிகாரம் தந்துவிட முடியாது என்பதை மாண்பு
மிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலம் இந்த அவைக்
குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவர்கள் இங்கே விளக்
கம் தந்திருக்கிறார்கள். இங்கே இருக்கக் கூடிய பிரச்சினை என்
பது காட்டுமன்னார் கோவிலில் நடைபெற்ற அந்தத் துப்பாக்கிச்
சூடு சம்பந்தமாக. இது நீண்ட நெடுங்காலமாக இருக்கக்கூடிய
ஒரு பிரச்சினையாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், இந்தப் பிரச்
சினை முன்னுக்கு வரும்போது அதை எப்படி கட்டுப்படுத்த
வேண்டுமென்பதை அதற்குரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து,
அதை தடுத்திருந்தால், நிச்சயமாக இப்படிப்பட்ட சம்பவங்கள்
நடந்திருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். எனவே அதற்
குரிய அதிகாரிகள் இப்பிரச்சினையை வளர்த்துவிட்டு, பின்னர்
பாதுகாப்பிற்குச் சென்று, 700 பேர் கூடியிருந்து, பெரிய ஆர்ப்
பாட்டம், கிளர்ச்சி செய்யக்கூடிய அளவிற்கு இந்தப் பிரச்சி
னையை உருவாக்கித்தந்த அந்த அதிகாரிகள்மீது உரிய நட
டிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத்
லைவர் அவர்களே, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை
றிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அதிலே இதற்குக் காரண
ாக இருந்த அதிகாரிகள் இதற்கு முன்னாலேயே தடுத்து
ருக்கக்கூடும், தடுக்க முடியாமல் அதை வளர்த்து விட்டவர்கள்
திகாரிகளா என்ற பிரச்சினைகள் எல்லாம் அந்த அறிக்கையிலே
ராயப்பட்டிருக்கிறது. அரசுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.
தை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பி
னர் கூறுவதைப் போன்று முன்னாலே தடுத்திருக்கக் கூடிய
கழ்ச்சிகளை தடுக்காது இருந்தால், அதற்கு அதிகாரிகள் காரண
ாக இருந்தால் அந்த அதிகாரிகளை நிச்சயமாக அரசு தண்டிப்
தற்குரிய கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. ச.. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர்
வர்களே, இந்தச் சம்பவம் குறித்து வருவாய்த்துறை அதிகாரி
ரு அறிக்கையை அனுப்பியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அமைச்
ர் அவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அறிக்கை
ின் விவரத்தை இந்தச் சட்டமன்றத்தில் அமைச்சர் அவர்கள்
வைப்பார்களா?

[1986 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர்
அவர்களே, இவை அன்றாடம் நடைபெறுகின்ற நிர்வாகத்தை
ஒட்டிய அறிக்கைகள். இந்த அறிக்கையை சட்டமன்றத்தில் வைப்
பது என்றால் சட்டமன்றம் வேறு வேலைகளைப் பார்க்க முடியா
மல் போய்விடும். அரசு சில தகவல்களை திரட்டித் தரவேண்டு
மென்று அதிகாரிகளுக்குப் பணிக்கிறது. அதிகாரிகள் அங்கே
ஆய்வு நடத்தி, விசாரணை நடத்தி, சாட்சிகளை கேட்டறிந்து
அந்த அறிக்கையை அனுப்புகிறார்கள். மாவட்ட ஆட்சித்
தலைவர் தன்னுடைய கருத்தைச் தெரிவிக்கிறார். அதன்மீது
அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கிறது. ஆனால்
இந்த அறிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கபட்டது என்பது
மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும்.

(ஆ) கொல்லி மலைப்பகுதியில் பால்வினை நோயை கட்டுப்
படுத்த நடவடிக்கை எடுத்தல்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, '' சேலம் மாவட்டம் கொல்லி
மலை வாசிகளுக்கு பால்வினை நோய் கண்டுள்ளதால்
அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த ''
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட
அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சேலம் மாவட்டத்திலுள்ள கொல்லி மலையில் சென்னை
மருத்துவக் கல்லூரி பால்வினை நோய் மருத்துவத்துறை பேரா
சிரியர் தலைமையிலான குழு ஒன்று, சேலம் டேனிடா, மற்றும்
ரோட்டரி கிளப் உதவியுடன் இப்பகுதியில் பால்வினை நோய்
இருப்பதை ஆய்வு செய்தது. கொல்லி மலையில் மொத்தம்
30,000 மக்கட் தொகை உள்ளது. இதில் ஆண்கள் 16,000;
பெண்கள் 14,000 ஆவார்கள். அவர்களில் 6,000 பேர் பருவம்
அடைந்தவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களில் 410 பேர்களிடம் குருதி மாதிரி சேகரிக்கப்பட்டு
பரிசோதிக்கப்பட்டது. இதில் 205 குருதி மாதிரிகளில் சிப்லிஸ்
( Syphilis ) இருப்பது தெரிய வந்தது. எனவே 50
விழுக்காடு பால்வினை நோய் பாசிட்டிவாக உள்ளது. பால்வினை
நோய் சம்பந்தப்பட்ட கனோரியா போன்ற மற்ற வகை
நோய்கள் 1 விழுக்காடுக்கும் கீழே உள்ளது. எனவே இப்பகுதியில்
பால்வினை நோயைக் கட்டுப்படுத்த டேனிடா ஆதரவுடன்
அரசுஆணை நிலை எண் 1085, சுகாதாரம், நாள் 29—6—19-844



1986 ஏப்ரல் 26] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஒரு திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. பென்சிலின் போன்ற
மருந்துகளும், மற்ற நோய் தடுப்பு மருந்துகளும் டேனிடா
வினால் இந்நோய் தடுப்புக்கு வழங்கப்பட்டுள்ளது. இங்குள்ள
மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வாழவந்தநாடு ஆரம்ப
சுகாதார நிலையம் உள்ளது. இதில் 4 மருத்துவ அதிகாரிகள் பணி
புரிகின்றார்கள். மேலும் இப்பகுதி மக்களுக்கு சிகிச்சை அளிக்க
10 சார்பு மருத்துவ நிலையங்கள் உள்ளன. இதனால் இந்நோய்
இப்பகுதியில் கட்டுப்படுத்தப்பட்டு குறைந்து வருகின்றது. மேலும்
இப்பகுதியில் பால்வினை நோயை அறவே ஒழிக்க ஒரு திட்டம்
அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சேலம்
மாவட்டம் கொல்லிமலையில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்
பட்ட மக்கள் வசிப்பதாக இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்
கிறது. அந்த கொல்லிமலைவாழ் பகுதி மக்களுக்கு ஏன் இந்த
பால்வினை நோய் வருகிறது என்று ஆய்வு செய்யப்பட்டிருக்
கிறதா ? அங்கே 4 மருத்துவ அதிகாரிகளும் 10 சார்பு மருத்துவ
நிலையங்களும் இருப்பதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறார்
கள். அது போதாது, மத்திய அரசும் மாநில அரசும் இதற்கு
என்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்து அந்த வியாதியைப்
போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? அவர்களுக்குக்
கொடுக்கிற மருந்துகள் P.A.M. (Dumex) ஆக இல்லை.
P. A. M. Medicine out of stock. P. A. M. Medicine
போன்ற மருந்துகள் அங்கே இல்லை. ஆகவே மருந்துகளை
யெல்லாம் தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். Hosta
cycline, Doxy cycline, Ampi cilline, Penture LA blaks, LA20 laks
இப்படி விலையுயர்ந்த மருந்துகளை அவர்களுக்குக் கொடுத்து
வியாதிகளைப் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: துணைத் தலைவர்
அவர்களே, என்ன மருந்துகள் தேவைப்படுகின்றனவோ அந்த
மருந்துகள் அங்கே கொடுக்கப்படுகின்றன. அதற்காகத் தனியாக
74 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறோம், அதுவும்போதாது
என்று கூடுதலாக 20 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது.
அதிலே ஆயிரம் பேர்களை நாம் பரிசோதனை செய்திருக்கிறோம்.
மற்ற விவரங்கள் எல்லாம் அந்த அறிக்கையிலே கொடுக்கப்
பட்டிருக்கிறது. நாம் அங்கே எல்லாவகையான மருந்துகளையும்
கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் சொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி ; துணைத் தலைவர் அவர்களே,
அந்தப்பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு சிவப்
பிரகாசம் அவர்கள் என்னிடம் ஒரு விளக்கத்தைச் சொன்னார்
கள். அந்தத் கொல்லிமலையிலே பிறந்த குழந்தைகளுக்கு
எல்லாம் அந்த நோய் வருகிறது என்கிறார்கள். அந்தக்
குழந்தைகளையெல்லாம் அரசே வைத்துக்கொண்டு ஒரு தனி

இடத்திலே வைத்து சிகிச்சை அளிக்க முன்வருமா? தாங்களே முன் வந்து இந்த நோயைத் தீர்ப்பதற்கு மருத்துவர்கள் கேட்டால் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த வியாதிக்கு சித்தமருத்துவத்திலே நல்ல மருந்துகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே அதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : சித்த மருத்துவத்திலே அந்த வியாதிக்கு மருந்துகள் இருப்பதாக நமக்கு இதுவரை தகவல் வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னொரு தகவலையும் நான் சொல்ல விரும்புகிறேன். இதை நாம் கண்டுபிடித்ததே—ஏற்கனவே நம்முடைய மாநிலத்திலே இரண்டு மாவட்டங்களிலே டென்மார்க் நாட்டின் உதவியோடு நடத்தப்பட்டு வரும் டேனிடா திட்டம் என்ற அந்தத் திட்டத்தை நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். அந்தத் திட்டத்தின்கீழ் அவர்கள் கொடுத்திருக்கின்ற பல்வேறு உபகரணங்களின் மூலமாக ' இன்புட்ஸ்'' என்று ஆங்கிலத்தில் சொல்கிறோமே, அவைகளின் மூலமாக இவைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இந்த நிலைமை கட்டுக்கடங்கி, நல்ல நிலைமையில் சமாளித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னொரு தகவலையும் சொல்லியிருக்கிறார்கள். பிறந்த குழந்தைகளுக்குகூட இந்த நோய் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அது நியாயமான கேள்விதான். Syphilis என்ற வியாதி பிறக்கும் குழந்தைகளுக்குக்கூட வரும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் குழந்தைகளைப் பரிசோதித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். தேவைப்பட்டால் சமூக நல இலாக்காவின் மூலம் என்ன செய்யலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வருவதற்கும் தயாராக இருக்கிறோம்; ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொன்னால் அவர்களுக்கு அது ஆறுதலாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

### 3. அறிக்கைகள் அளித்தல்.

#### (அ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவரவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை " பொது நிறுவனங்கள் குழுவின் தலைவரின் சார்பாக அளிக்கிறேன்:

(அ) தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல்முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை.



(ஆ) பொது நிறுவனங்களின் செயலாக்கம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை.

#### (ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நான் அரசு உறுதிமொழிக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன் :

அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

### 4, வரவு-செலவுத் திட்டம், 1986–87வாக்கெடுப்பு— (தொடர்ச்சி)

#### கோரிக்கை எண். 30— சமூக நலன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30— சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 76,04,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், காரியனூர் ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த வெள்ளுவாடி கிராமத்தில் குழந்தைகள் நல காப்பகம் (பால்வாடி) அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 30— சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,04,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 26

" மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,04,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனாதை இல்லங்கள், தொழுநோய் இல்லங்கள ஆகியவற்றில் உள்ளவர்களுக்கு மானியத் தொகை கூடுதலாக்கி கொடுக்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,04,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. பொ. உத்ராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே், கிராமப்புற கர்ப்பிணி பெண்களுக்கு 3 மாதங்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 வழங்குவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

', மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 76,04,25,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவையின் முன் வைக்கப் பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய ஆலோசனைகளையும், கருத்துக்களையும் சொல்லியதற்குப் பிறகு விளக்கமாக பதில் கூறுகிறேன் என்று இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. ஆர். தியாகராாசன் :** மாண்புமிகு மன்றத்தினுடைய உதவி சபாநாயகர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநிலத்திலே இருக்கக்

---

@ 153 முதல் 203 வரையுள்ள பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



1986 ஏப்ரல் 26] [திரு. ஆர். தியாகராசன்]

நலிந்தோர்
கூடிய ஊனமுற்றோர், முதியோர், விதவைகள், பாதிக்கப்பட்ட
மற்றுமுள்ள அனைவருடைய நலனுக்காக திட்டங்
பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களுக்காகப் பல பல
களுக்கு மத்திய அரசும் மாநில அரசும் ஆண்டுதோறும் இந்தத்
கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளிக் கொடுத்து முறையில்
துறை வளர வேண்டும், வாழ வேண்டும் என்ற
செய்து வருகிறது.

(முற்பகல் 10-30)

வேலை
மேலும், அவர்கள் நல்லமுறையிலே நிரந்தரமாக வாழ்க்
வாய்ப்பு பெற வேண்டும், அவர்கள் எல்லாம் தங்கள் வேண்டுமென்ப
கையிலே ஒரு நல்ல பொற்காலம் அடைய மத்திய,
தற்காக வேண்டி, கோடிக்கணக்கான ரூபாய்களை, நான்
மாநில அரசுகள் செலவு செய்கின்றன. அதை உள்ள
மறுக்கவில்லை. ஆனாலுங்கூட, இந்த மாநிலத்திலே உதவிகள்
குழந்தைகளுக்கும், முதியோருக்கும் கொடுக்கக்கூடிய சேருகின்றன
அவர்களுக்கு எந்த அளவிலே போய்ச் நம்முடைய
என்பதைக் கண்காணிப்பதிலே நாம் சரியாக, அமைச்சர்
கடமையை, நிறைவேற்றுகிறோமா என்பதை
அவர்கள் கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

அரசு
திட்டம் போட்டுவிட்டால் மட்டும் போதாது. யாருக்குப்
கொடுக்கக்கூடிய அந்த உதவித் தொகைகள் சேர்வதற்கு
போய்ச் சேர வேண்டுமோ, அவர்கள் கையிலே ஏகப்பட்ட
வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதிலே இன்னும் களையப்பட
குறைபாடுகள் இருக்கின்றன. அவையெல்லாம் நெல்லுக்குத்
வேண்டும். ஒருவன் தன் வயலிலே இருக்கிற நேரடியாக,
தண்ணீர் இறைப்பானானால், அந்தத் தண்ணீர் எண்ணத்தோடு,
நெல்லுக்குப் போய்ச் சேரவேண்டுமென்ற இருக்
அதற்கு சிமெண்டிலே வாய்க்காலைக் கட்டி—அருகிலே விடக்
கிற புல் செடி கொடிகள் தண்ணீரைச் சாப்பிட்டு விடு
கூடாது—அந்த நீரை நெல்லுக்குக் கொண்டுபோய் பணம்
கிறான். அதுபோல், மத்திய, மாநில அரசுகள் சேர
கொடுத்தாலும், அந்தப் பணம் எவருக்குப் போய்ச் சேர்வதற்குள்ள
வேண்டுமோ, அவர்களுக்குப் போய் குறைகள்
தடங்கல்கள் என்ன? யார், யார், என்ன ஆண்டுகளாக,
சொல்கிறார்கள் என்பதை எல்லாம் இத்தனை அத்தனை
சமூகநலத் துறையிலே—ஆண்டுகொண்டிருந்த ஆனால்,
அரசியல் கட்சிகளுமே, கவனித்துப் பார்க்கவில்லை; இருக்கிறார்களா
தட்டிப் பறிக்கிற நிலையிலே அவர்கள் விதவைகள்,
என்றால் இல்லை. அவர்கள் முதியவர்கள், நலிந்தவர்கள்
குழந்தைகள், ஊனமுற்றவர்கள், அனாதைகள், எனக்குச்
அவர்கள் பாவம், தட்டிக் கேட்க முடியுமா? ஏன், கேட்க
சேர வேண்டிய ரூ. 30 கொடுக்கவில்லை என்று

[திரு. ஆர். தியாகராசன்] [1986 ஏப்ரல் 26

முடியுமா? கேட்டால், அடுத்த மாதம் ரூ. 30 கிடைக்குமா? வாராவாரம் அரிசி கிடைக்குமா? ஒன்றுமே கிடைக்காத வகையில் அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள். இப்பொழுது நாங்கள் எல்லாம் கையெழுத்து போடுகிறோம்; அந்த முதியோர் பென்ஷன் வாங்குபவர்களுக்கு, நாங்கள், அவர்களிடம் எந்த உதவியும் எதிர்பார்க்காமல், கையெழுத்துப் போடுகிறோம். அந்த மாதிரி கையெழுத்துப் போட்டோம், என்று அவர்கள் 10 பேர்களிடம் சொன்னால் போதும் என்பதற்காகக் கையெழுத்துப் போடுகிறோம். நாங்கள் வாக்குகளைப் பெற்று வந்தவர்கள் அல்லவா? ஆனால், கையெழுத்து வாங்க டாக்டர்களிடம், உத்தியோகஸ்தர்களிடம் போனால், அந்த முதியோர்களை அவர்கள் என்ன செய்கிறார்கள்? முதியோர்கள், குழந்தைகளிடம் என்ன கைமாறு பெறுகிறார்கள்? கைமாறு கோடிக்கணக்கில் அள்ளிக் கொடுக்க ஆள் இருக்கும்போது, இந்த ஊனமுற்றவர்களிடம், அதிகாரிகளும், டாக்டர்களும் பெறுகிறார்களே, அது கட்டாயம் இந்த அரசுக்குத் தெரிந்து இருக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கு உரிய தொகை, அவர்கள் கையிலே சேர்வதற்கு நல்ல திட்டத்தை, இப்படி, இப்படியெல்லாம நான் நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்ற வகையில் அமைச்சர் அவர்கள் சொலல வேண்டும்.

நம் மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் உயர்ந்த எண்ணத்தோடு, நல்ல நோக்கத்தோடு, இந்த நாட்டிலே இருக்கிற பிள்ளைகள் எல்லாம் வலுவோடு இருக்க வேண்டுமென்று சீரோடும், சிறப்போடும் ஒரு பெரும் நிதியை ஒதுக்கி சத்துணவுக் கொடுக்கிறார். அந்தச் சத்துணவுக்கு எத்தனை கோடி ரூபாய் செலவு? அவர் கொடுத்தது நல்ல திட்டம். சத்துணவுக்குப் போய்ச் சேர என்ன தடங்கல் இருக்கிறது? யார், யார் பங்கு போட்டுக் கொள்கிறார்கள்? எப்படி, எப்படி, என்ன, என்ன தவறுகள் நடக்கின்றன என்பதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். எம். எல். ஏக்கள் கொண்ட குழுக்களைப் போட, என்ன, என்ன சங்கடங்கள் இருக்கின்றன? கொடுக்கக் கூடியதொகை எவ்வளவு? காய்கறிகளைப் பற்றி நேற்றெல்லாம் பேசினோம். நான் பாரிப்பள்ளி பள்ளியிலே சத்துணவுக் கூடத்தைச் சோதிக்கின்றபொழுது, கஞ்சித் தண்ணீரை வைத்து, சுட வைத்து, மிளகாய்த் தூளைப் போட்டுக் கொடுத்தார்கள், நான் கண்ணாலே பார்த்தேன், அதுபற்றி நானே எழுதிவிட்டு வந்தேன்.

சத்துணவுத் திட்டத்திலே நம்முடைய எண்ணம் என்ன? அந்தக் குழந்தைகளுக்கு கொடுப்பதை கண்காணிப்பதற்குசரியான கண்காணிப்பாளர்கள் இல்லை. அவைகளை பரிசீலிக்க வேண்டும் என்று நான் இந்தஅரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறிய ஊனம் உற்ற குழந்தைகளுக்கு வண்டி கொடுப்பதிலே சமூக நலத் துறையிலே சொன்னால்பட்டியல் காண்பிக்கிறார்கள். அந்த பட்டி



1986 ஏப்ரல் 26] [திரு. ஆர். தியாகராசன்]

யலிலே இன்றைக்கு நூறு பேர் இருக்கிறார்கள். காலாலே ஏறி உட்கார முடியாத நொண்டிகளும் இருக்கிறார்கள். ஒரு கால் போன நொண்டிகளும் இருக்கிறார்கள். கை போன நொணடிகளும் இருக்கிறார்கள். அதில யாருக்கு முதலிடம் கொடுக்க வேணடுமோ, அவர்களுக்கு கொடுக்கவில்லை. இரண்டு கால்களும் இல்லாமல் நடக்க முடியாமல் இருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். அந்த 3 சக்கரம் வண்டி கொடுப்பதில் பெரும் தில்லுமுல்லுகள். விதவைகள் அவர்களுடைய வாழ்வில் மறுமலர்ச்சி அடைவதற்காக கொடுக்கக் கூடிய கடனில் இட்டிலி கடை வைக்கிறார்கள். அவர்களுடைய மனுக்களை சிபாரிசு பண்ணி பஞ்சாயத்து ஆணையர்களிடம் அனுப்பி பணம் பெறுவதற்குள் அந்தத் தொகையில் பாதி செலவாகிவிடுகிறது. சிறுதொகைதான். அந்தத் தொகையும் சேர்வதில்லை. காய்கறி வியாபாரம். அதிலும் இதே நிலைமைதான்.

இந்தத் தொகைகளை அரசாங்க அதிகாரிகள் ஒரு நாளைக்கு விழாவாக எடுத்து யார் யாருக்கு வழங்க வேண்டும் என்ற பட்டியலை வாங்க வேண்டும். அந்த பட்டியலை கையிலே வைத்துக்கொண்டு அங்குபோய் இன்னின்னாருக்கு கொடுங்கள் என்று ஆர்டர் இஷ்யு பண்ணச்சொல்ல வேண்டும். அப்பொழுதாவது அந்தத் தொகை அவர்களுக்கு நேரடியாக போய்ச் சேருகிறதா என்று பார்க்க வேண்டும்.

பல்லாண்டு காலமாக இந்த சமூக நலத்துறை வாழவேண்டும் என்பதற்காகப் பல திட்டங்களை போட்டு போட்டு பல அரசுகள் அதிலே வெற்றிபெற முடியவில்லை. ஆனால் இந்த அரசாவது, இனிமேலாவது இதில் உள்ள குற்றங்களை களைந்து நல்ல முறையிலே அவர்களுக்கு பலன் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

1985–86-ம் ஆண்டுக்கு, 4 பணிபுரியும் பெண்கள் விடுதிகள் சில இடங்களில் கட்டுவதற்கு மானியத்தொகை மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூ. 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இதனை எல்லா மாவட்டங்களுக்கும் நிரந்தரமாக செய்தால் நன்றாக இருக்கும். பல ஊர்கள் இருக்கின்றன. இருந்தாலும், மாவட்டவாரியாக எல்லா மாவட்டங்களிலும் இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேலையற்றவர்களுக்கு உதவி. சாதாரணமாக, கால் இல்லாத பெண்களுக்கு உதவி. இன்றைக்கு நெய்வேலி நிறுவனம் இருக்கிறது. இல்லையென்றால் அரசு நிறுவனம் அல்லது தனியார் நிறுவனம் இருக்கிறது. அந்த ஊனம் உற்ற பெண்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். கொடுக்கிறார்

களா ? தனியார் மட்டும் என்ன ? நாம் இல்லாமலா அவர்கள் கம்பெனி நடத்துகிறார்கள் ? இப்படித்தான் நேற்று இங்கு மரியாதைக்குரிய முன்னவர் அவர்கள் ஒரு நல்ல குறிப்பைச் சொன்னார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன். சென்னை நகரத்திலும், செயலகத்திலும், மற்ற இடங்களிலும் தமிழ் முதன்மை இடம் பெற வேண்டும் என்று சொன்னார்கள். நா ஞ இதனை மனமார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் தனியார் கம்பெனியாக இருந்தாலும், அரசாங்க கம்பெனியாக இருந்தாலும், தொழிற்பேட்டையாக இருந்தாலும், ஊனம் உற்றவர்களுக்குத்தான் முதல் சலுகை என்ற அடிப்படையில் சட்ட திருத்தம் செய்யவேண்டும்.

ஒரு ஊரிலே ஒருவர் ஒரு கண் பிறவி ஊனம் உடையவர், பிளஸ் 2 படித்தவர், கிராமத்திலே தோட்டி வேலைக்கு மனு செய்திருந்தார். அவருக்கு கண் குருடாக இருந்த ஒரே காரணத்தால் அந்த வேலை கொடுக்கப்படவில்லை.

(முற்பகல் 10-40)

வேறு காரணங்கள் இருந்தாலும் இருக்கலாம். ஆனால படித்தது ப்ளஸ் 2. இது போதாதா ? தோட்டி வேலை பார்ப்பதற்கு என்ன பெரிய படிப்பு தேவை ? அவர் என்ன கலெக்டர் மாதிரி ஃபைலைப் புரட்டப் போகிறாரா ? ஒரு கண் இல்லாவிட்டால் என்ன ? அந்த வேலையைக் கொடுத்தால் என்ன ? ஓட்டேரி கிராமத்தில் இப்படி ஒரு சம்பவம நடந்திருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஞாபகமூட்டத்தான் இதை நான் சொல்கிறேன். எந்த அளவுக்கு நாம் ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்துகொண்டிருக்கிறோம என்பதைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். எனவே ஊனமுற்றோருக்கு உதவி செய்யக்கூடிய நாம் அந்தக் கிராமத்தில் அந்த நபருக்குத் தோட்டி வேலையைக் கூட கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், இந்தத் திட்டம் தமிழகத்தில் எந்த அளவுக்குச் செயல்படுகிறது என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பணிபுரியும் பெண்கள் விடுதிகளில் கட்டடம் கட்டுவதற்காக மொத்த மதிப்பீட்டில் 75 சதவீதம் மத்திய அரசு மானியமாக வழங்குகிறது. ஆனால் மாநில அரசு மிச்சம் 25 சதவீதத்தைத் தான் அதற்காக அளிக்கிறது. மத்திய அரசு இப்படி எவ்வளவோ உதவிகளைச் செய்தாலும், எவ்வளவு காரியங்களைச் செய்தாலும், அதை எல்லாம் விட்டு, விட்டு எங்கோ ஒரு இடத்திலே சிறு குறை இருக்குமேயானால், அதைப் பிடித்துக்கொண்டு, அவர்கள் அதைச் செய்கிறார்களா, இதைச் செய்கிறார்களா என்று ஒவ்வொருவரும் பேசுவதை நாமெல்லாம் பார்க்கிறோம். நல்லது செய்வதை எல்லாம் விட்டுவிடுகிறார்கள். 25 சதவீதம்





தான் நீங்கள் கொடுக்கிறீர்கள், 75 சதவீதத்தை அவர்கள் கொடுக்கிறார்கள் என்று எங்கேயாவது சொல்லியிருக்கிறோமா? அமைச்சர்களாவது அதுபற்றிப் பேசியிருக்கிறார்களா ? எனவே மத்திய, மாநில அரசுகள் இரண்டுமே ஒத்திருந்து..........

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பணிபுரியும் பெண் களுக்காக மத்திய அரசு 75 சதவீதம் தொகை ஒதுக்கி இருக்கிறது என்று பலமுறை நான் பேசி இருக்கிறேன்.

திரு. ஆர். தியாகராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகவும் மகிழ்ச்சி. ஆனால் என்னுடைய காதால் இப்போதுதான் கேட்கிறேன். நல்லது செய்கின்ற போது அது பற்றிச் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை. ஏதோ காழ்ப்புணர்ச்சியை வைத்துக் கொண்டு, அரசியல் ஆதாயம் பெற வேண்டும் என்பதற்காகப் பேச வேண்டும் என்ற வகையில் நான் பேசவில்லை. நம்முடைய கடமையை நாம் செய்கி றோமா என்று பார்க்கவேண்டும். பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறோம். இன்னும் செய்ய வேண்டிய செயல்கள் நல்ல முறையில் நடக்கிறதா என்று பார்த்தால், அவை சரியாக இல்லை என்று தான் நான் குற்றம் சொல்லுகிறேனே தவிர இந்தத் திட்டத்திலே குற்றம் சொல்லவேண்டும் என்று நான் விரும்பவில்லை.

சிலபேர் தொழிற்சாலைகளிலே வேலை செய்கிறார்கள். அவர்களுக்காக நிறையபேர் பேசுகிறார்கள். ஊனமுற்ற மக்களுக்காக யாரும் பேசுவதில்லை. ஆனால் தொழிற்சாலை களில் யாரும் வேலை செய்வதில்லை; போராட்டம் நடத்திக் கொண்டே இருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்காகப் பேசுவதற்கு ஒரு கூட்டமே இருந்து கொண் டிருக்கிறது. ஊனமுற்றவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால், விதவைகளுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொன்னால், முதியோருக்கு உதவித் தொகை கிடைக்க வில்லை என்று சொன்னால் அதைப்பற்றிப் பேசுவதற்குத் தமிழ் நாட்டில் ஆளே இல்லை. சிறு தொழில்களாக இருந்தாலும் கூட வேலையைச் செய்யாமல் எப்படியாவது பணத்தைப் பெற வேண்டும் என்று எண்ணுகிறார்கள். உழைக்காமல் ஊதியம் பெறு வதற்கு எப்படி, எப்படிச் செய்யலாம் என்று திட்டம் தீட்டிக் கொடுக்க நாட்டில் ஒரு கும்பலே இருக்கிறது. குழப்பவாதிகள் அவர்கள். நல்ல காரியங்கள் நடக்க வேண்டும். அதை விட்டு விட்டு எதை எடுத்தாலும் குற்றம் சொல்கிற கூட்டங்கள் நிறைந் இருக்கின்றன. எனவே மரியாதைக்குரிய புரட்சித் தலைவ அவர்கள் இதுபற்றி மறுபடியும் மறு பரிசீலனை செய்து இந்தச் சமூக நலத்துறையில் இன்னும் அதிகமான முறையில் கவனம் செலுத்தி, நல்ல பலன் பலருக்கும் கிடைக்க வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆர். தியாகராசன்] [1986 ஏப்ரல் 2

அடுத்து கிராமப் புறங்களில் வத்திப் பெட்டி செய்கிறார்கள்
மெழுகுவர்த்தி செய்கிறார்கள். சாக்பீஸ் செய்கிறார்கள்.
இந்தத் தொழில்கள் எல்லாம் சாதாரண படிக்காத மக்கள்,
பெண்கள் எல்லாம் கூட செய்கின்ற தொழில். ஆனால் விளம்
பரம் வேண்டும் என்பதற்காக முக்கியமான இடங்களில் மட்டும்
இந்தத் தொழிற்கூடங்களை அமைக்கிறார்கள். அரிசன நலத்
துறையிலே ரோடு ஓரங்களிலே மட்டும் வீடுகளைக் கட்டிக்
கொடுப்பது மாதிரி செய்கிறார்கள். ஏனென்றால் விளம்பரம்
வேண்டும் என்பதற்காக அப்படிச் செய்கிறார்கள்.

நடுமத்தியிலே யாராவது மனை வைத்திருந்தால் அவர்களுக்கு
போய் அக்கறையோடு வீடு கட்டிக் கொடுக்கின்ற பழக்கம்
இல்லை. ஏனென்றால் அது பார்ப்பதற்கு முன்னாடி. பார்வை
யாக இருக்காது என்பதற்காகவே. அதுபோல அல்லாமல்
இதற்குச் செய்ய வேண்டும். விளம்பரத்திற்காக மட்டும் செய்யக்
கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் கிராமப்புறங்களிலே சிறு தொழில் வளரவேண்டும்
என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதேபோல பெண்
களுக்கு தையல் மெஷின்கள் கொடுக்கிறோம் என்று சொல்லிக்
கொண்டிருக்கிறோம். நான் ஒரு நொண்டிப் பெண்ணிற்கு சிபாரிசு
பண்ணினேன். அந்தப் பெண்ணின் ஊர் பாடங்குடி.. அது
வந்து என்னிடத்திலே கேட்டது, தையல் மெஷின் வாங்கிக்
கொடுங்கள், நான் படித்துக் கொண்டு, அதை வைத்துக் கொண்டு
பிழைத்துக் கொள்கிறேன் என்று சொல்லியது.

நான் அதற்காக நேரிலேயே போய் சிபாரிசு பண்ணினேன்.
பஞ்சாயத்து யூனியன் ஆபிசிலே கொண்டு போய் கொடுக்கும்
போது அவர்களுக்குக் முன்னாலே கேட்டவர்கள் எல்லாம் இருக்
கிறார்கள். அவர்களுக்கு கொடுத்து விட்டு, பிறகு இவருக்கு
கொடுக்கிறோம் என்று சொல்லி விட்டார்கள். அப்படி எந்தக்
காரணத்திற்காகச் சொல்லியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத்
தெரியும். அந்த வகையிலே பஞ்சாயத்து யூனியனிலே இருக்கிற
அதிகாரிகள் எல்லாம் ஒரு பெரிய கொள்ளையே அடித்துக் கொண்
டிருக்கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் நீங்கள் கவனம்
செலுத்தி, இதையெல்லாம் பார்க்க வேண்டும். நலிந்தவர்களுக்கு
எல்லா வகையிலும் தான் உதவி பண்ணிக் கொடுக்கிறோம்.
ஆட்டம் ஆடுகிறவர்களுக்குக் கூட உதவிப் பணம் கொடுக்
கிறோம். உடைகள் அலங்காரச் சாமான்கள் போன்றவை
வாங்குவதற்காக கொடுக்கிறோம். கார் ஓட்டுகிறவர்களுக்குக்
கொடுக்கிறோம். டெய்லரிங் மெஷினில் கற்றுக் கொள்வதற்காக
கொடுக்கிறோம். இப்படி எத்தனையோ காரியங்களுக்குக்
கிறோம். எவ்வளவோ திட்டங்கள் அதில் நடத்து
சரியாகச் செய்கிறோமா எத்தனையோ செய்கிறோம். ஆனால் அவ்வளவும்
இல்லையா என்பதைத்தான் கண்



1986 ஏப்ரல் 26] [திரு. ஆர். தியாகராசன்]

காணிக்க வேண்டும். ஏதோ திட்டத்தைப் போட்டு சொல்லிக்
கொடுத்து விட்டால், தீர்ந்துவிடும் நம்முடைய கடமை என்று
நினைக்கிறோம்.

அது தப்பு. கல்யாணம் பண்ணி வைத்து விடுகிறார்கள்,
பெற்றோர்கள். அதற்குப் பின்னாலே அந்த மகனுடைய கடமை
என்ன? அந்தக் கடமையை நாம் சரியாகப் பார்க்க வேண்டும்
என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். ஊனம் உற்றவர்களுக்கு
கொடுக்க வேண்டிய சலுகையை ஒழுங்காகக் கொடுக்க வேண்டும்.
பிச்சை எடுப்பவர்களையெல்லாம் பாருங்கள். பெரும்பாலும்
பிச்சை எடுப்பவர்களில் பாதிக்கு மேல் குழந்தைகள், மறுபாதி
வயது முதிர்ந்த முதியோர்கள், அல்லது கை கால் இல்லாத
உடல் ஊனம் உற்றவர்கள். அவர்களுக்கெல்லாம் இப்படி
எத்தனையோ திட்டங்களைத் தீட்டிக் கொண்டு வருகிறோமே
அதற்குப் பதில், இவ்வளவு கோடி ரூபாய் செலவு பண்ணுவதற்கு
பதிலாக, ஒரு பெரும் திட்டத்தைப் போட்டு, ஊனம் உற்றவர்
களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றால், என்னென்ன
பண்ண வேண்டும், அவர்களுக்கு எப்படியெல்லாம் உதவலாம்
என்று பார்த்து செய்ய வேண்டும். தெருவிலே பிச்சை எடுப்
பவர்களைப் பார்க்கிறோம். ஒரு சிறிய குழந்
தையைத் தூக்கிக் கொண்டு, சார் இந்தக் குழந்தையைப்
பாருங்கள் சார், இதைப் பார்த்து காசு போடுங்கள் என்று கேட்
கிறது. இந்த மாதிரி உள்ளவர்களையெல்லாம் பார்த்துக்
கண்டு பிடித்து, அவர்களுக்கு ஒரு பெரிய சமூக நலக் கூடமாக
கட்டிக் கொடுத்து .. ..

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பவர்களை காவல் துறை
யினர் கண்காணித்து, அவர்களைப் பிடித்து, அரசு மறு வாழ்வு
இல்லத்திலே சேர்த்து, அவர்களுக்கு உணவு உடை உறைவிடம்
போன்ற எல்லாம் கொடுப்பதோடு அவர்களுக்கு தொழிற்
பயிற்சியும் கொடுத்து, அவர்களின் மறு வாழ்விற்காக வேண்டிய
வசதிகளையும் அரசு செய்து கொடுக்கிறது. எங்கெங்கே அது
மாதிரியாக பிச்சைக்காரர்கள் இருக்கிறார்களோ, அவர்களை
யெல்லாம் காவல் துறையினர் கண்காணித்து கொண்டு வரு
கிறார்கள்.

**திரு. ஆர். தியாகராசன் :** துணைத் தலைவர் அவர்களே,
அவர்கள் கண்காணிக்கிறார்களோ இல்லையோ, பிச்சைக்காரர்
கள் இருக்கிறார்கள். இல்லை என்று சொல்ல முடியாது. போய்
பார்த்தால் தெரியும். நான் ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்
காகச் சொல்லவில்லை. அமைச்சர் அவர்கள் போய்ப் பார்த்தால்
தெரியும். இப்போது கூட எக்மோர் பக்கம் போனால் எவ்வளவு
பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து ஏகப்பட்ட
பேர்களைப் பிடிக்கலாம். அதற்கென்று தனியாக ஒரு படையே
அனுப்பினால் தான் அவர்கள் எல்லோரையும் பிடிக்க முடியும்.

போலீஸ்காரர்கள் போய் பிடிக்க மாட்டார்கள். ஏனென்றால்
அது வருமானம் இல்லாத கம்பெனி. அவர்களால் எந்தவித
ஆதாயமும் இல்லை. ஆகவே அவர்கள் போய் பிடிக்க மாட்டார்
கள். அதனால் போலீஸ் துறையிலே ஒரு தனிப் பிரிவையே
இதற்காகப் போட வேண்டும்.

அந்தப் பிச்சைக்காரர்களில் இரண்டு பிரிவினர்தான் இருக்
கிறார்கள். ஒன்று சிறு குழந்தைகள் வேலை செய்ய முடியாத
நிலையில் உள்ளவர்கள். இரண்டாவது முதியோர்கள். வேலை
செய்ய வயதினால் முடியாமல் போனவர்கள். இந்த இருவரும்
தான் இருக்கிறார்கள். நாம் அவர்களுக்காக சமூக நலம் என்று
ஒரு டிபார்ட்மெண்டையே வைத்துக் கொண்டிருக்கிறோம்,
அவர்களைப் பாதுகாப்பதற்கு. அந்த பாதுகாக்கின்ற வேலையை
ஒழுங்காக கண்காணித்து அவர்களை வாழ வைக்க வேண்டும்
என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே அதற்கு ஒரு ஏற்
பாட்டை செய்து, அவர்களை உடனடியாக சமூக நலக்கூடத்
திற்கு அனுப்பி... ..

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அது மாதிரி சிறுவர்கள் பிச்சை எடுத்துக்
கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் குறிப்பிட்டார்கள். சிறுவர்கள் எங்காவது அது மாதிரி
பிச்சை எடுத்துக் கொண்டிருந்தால் அவர்களைக் கண்டு பிடிப்
பதற்காகத்தான், காவல் துறையினர் சில்ட்ரன்ஸ் ஆக்ட்டின்படி
அவர்களைப் பிடித்துபோய் சீர்திருத்தப் பள்ளிகளிலே சேர்க்
கிறார்கள். அவர்கள் இப்போது அங்கே படித்துக் கொண்டிருக்
கிறார்கள்.

**திரு. ஆர். தியாகராசன் :** துணைத் தலைவர் அவர்களே,
அந்தக் குழந்தைகள் எல்லோருமே சீர்திருத்தப் பள்ளிகளிலே
இருப்பது போலச் சொல்லுகிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்
கள் வந்து பார்த்தால் தெரியும். ஆகவே அவர்களுக்கு உதவி
செய்ய இந்த மானியத் தொகையை அதிகமாக்கினால் கூட பர
வாயில்லை. அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மதிய உணவுத் திட்டத்தைப் பற்றி சொல்லியிருக்
கிறார்கள். அதைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், நாங்கள்
எங்காவது ஓர் இடத்தில் போய் பார்த்து, அங்கே குறைகள்
இருந்தால் அதை எழுதி வைத்துவிட்டு வரும்போது, பின்னால்
போய் பார்க்கும் கல்வி அதிகாரிகள் அதை மாற்றி எழுதி
விடுகிறார்கள். நாங்கள் பப்ளிக் இல்லையா? ஜனங்களுடைய
ஓட்டை வாங்கிக் கொண்டு வந்தவர்கள் இல்லையா? எங்களுக்குத்
தானே தெரியும் உண்மை நிலைமை. அவர்களுக்கு உணவு சரி
யாகப் போடவில்லை என்றால் அவர்கள் யாரிடம் போய் சொல்லு
வார்கள். எங்களிடம் தான் வந்து சொல்லுவார்களே தவிர,
அதிகாரிகளிடமா போய்ச் சொல்லுவார்கள். தாசில்தார





கலெக்டர், டி.டி.ஓ., பி.டி.ஓ. என்று பல அதிகாரிகள் எல்லாம்
இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் இல்லாத அக்கறை எங்
களுக்கு இருக்கிறது.

(முற்பகல் 10–50)

அதனால் மக்கள் பிரதிநிதிகளான எம்.பி., எம்.எல்.ஏ.க்
களான நாங்கள் போனால் கிராமப் புறங்களில் சரியாக சோறு
போடவில்லை, கொஞ்சமாகப் போடுகிறார்கள் என்று சொல்
வார்கள். (மணியடிக்கப் பெற்றது) மானியக் கோரிக்கையில்
நியாயமாக பேசுகிற எங்களைப் போன்றவர்களுக்கு அதிக நேரம்
கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள். ரகுமான்கான் போன்ற
உறுப்பினர் திரும்ப திரும்ப கேள்வி கேட்க அனுமதிக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மானியக்
கோரிக்கையின் மீது விவாதம் இருக்கிறது. அதற்கு அடுத்து ஒரு
சட்ட முன்வடிவு இருக்கிறது.

**திரு. இ. மனோகரன் :** துணைத் தலைவர் அவர்களே, காங்
கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகிற உரிமை அவருக்கு
உண்டு. இவ்வளவு காலம் பேசலாம் என்று வரம்பு கட்டுகிற
உரிமை உங்களுக்கு உண்டு. அப்படி அவர் தனது உரிமைகளை
நிலைநாட்டுகிற முயற்சியில் ரகுமான்கான் அவர்களுக்கு நீங்கள்
அதிகமாக நேரம் கொடுக்கிறீர்கள் என்று தேவையில்லாமல்
அவரை இழுப்பது சரியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். வயதானவர் என்பதால் இதற்கு மேல் கடுமையான
வார்த்தைகளை நான் பயன்படுத்த விரும்பவில்லை.

**திரு. ஆர். தியாகராசன் :** துணைத் தலைவர் அவர்களே,
திராவிட முன்னேற்றக் கழகத்தின் மரியாதைக்குரிய துணைத்
தலைவர் ஒரு கருத்தைச் சொல்கிறார். திரு. ரகுமான்கான்
அவர்கள் அதிக வாய்ப்பை எடுத்துக்கொள்கிறார் என்று தான்
நான் சொன்னேன். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு
உறுப்பினர் இறுதியாக குறிப்பிட்டவை அவைக் குறிப்பிலிருந்து
நீக்கப்படுகின்றன.

**திருமதி பி. லட்சுமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, சமூக நல மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்
பளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்
கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்
தலைவர் அவர்கள் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்பதற்கு

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

முன்னால் இத்துறையின் மூலமாக ஆதரவற்ற முதியோர்களுக்கு 30 ஆயிரம் பேர்களுக்கு மாதந்தோறும் ரூ. 20 என்ற அளவில் உதவித் தொகை கொடுத்து வந்தார்கள். இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் ஆதரவற்ற முதியவர்களுக்கும், விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கும், ஊனமுற்றவர்களுக்கும் என்று எல்லோருக்கும் விரிவுபடுத்தி மாதம் 30 ரூபாய் உதவித் தொகையும், வருடத்திற்கு இரண்டு ஜோடி உடைகளும், வாரம் ஒரு கிலோ அரிசியும் கொடுக்கப்படுகிறது. இப்போது சுமார் 2 இலட்சம் பேர்கள் இந்த உதவியைப் பெற்று வருகிறார்கள். முன்னாலிருந்த அரசு ஒரு குறிப்பிட்ட பேர்களுக்கு தான் உதவித் தொகையை அளித்து வந்தது. உதவித் தொகை பெறுபவர்களில் யாராவது இறந்தால் தான் புதியதாக விண்ணப்பித்தவர்களுக்கு உதவித் தொகை முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுமென்று இருந்து வந்தது. அந்த நடைமுறையை மாற்றி இந்த உதவித் தொகைப் பெற அரசினுடைய விதிமுறைகளுக்கு உட்பட்டு அனைவரும் இதனைப் பெறலாம் என்று உத்தரவை பிறப்பித்தவுடன்தான் இன்றைக்கு 2½ இலட்சம் பேர் இந்த உதவித்தொகை பெற்று வருகிறார்கள். அதற்காக அரசு ஆண்டுக்கு 15 கோடி ரூபாய் செலவு செய்வதை மனப்பூர்வமாக நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் இந்த உதவித் தொகையைப் பெற, பழைய விதிமுறையை மீண்டும் கொண்டு வந்துள்ளதால் புதிதாக விதிமுறைக்கு உட்பட்ட பலர் இன்றைக்கு பல ஆண்டுக்காலமாக இந்த உதவித் தொகையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. ஆனால், அதே நேரத்தில் தற்போது உதவித் தொகையைப் பெற்று வரும் பலர் வசதி உள்ளவர்களாகத்தான் பெற்ற பிள்ளைகளின் ஆதரவு உள்ளவர்களாக இருந்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் உதவித் தொகையை பெறும்போது உண்மையிலேயே உதவித் தொகையைப் பெற தகுதி இருந்தும், அதைப் பெற முடியாத நிலையில் உள்ள ஆதரவற்றவர்களின் நலன் கருதி மீண்டும் தகுதி படைத்த அனைவரும் உதவித் தொகையை, நிர்ணயம் இல்லாமல் வழங்க அரசு ஆணையிட்டு உதவுமாறு, ஆதரவற்ற அனாதைகளின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அத்தோடு தற்போது அரசு விதவைப் பெண்களுக்கு ரூபாய் 1,000 உதவித் தொகையை திருமணச் செலவிற்காக தந்து கொண்டு இருக்கிறார்கள். அப்படி திருமண உதவித் தொகையை கேட்டு விண்ணப்பிக்கும் விதவைத் தாய்மார்கள் திருமணத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே விண்ணப்பிக்க வேண்டும் என்றும், தன் கணவன் இறந்து போன இறப்புச் சான்றிதழ் ஒப்படைக்க வேண்டும் என்றும் விதிமுறைகள் வகுக்கப்பட்டு உள்ளன. இதன் காரணமாக பல விதவைத் தாய்மார்கள் இந்த உதவியைப் பெற முடியாமல் உள்ளார்கள். காரணம் கணவன் இறந்து போய் நீண்ட காலம் ஆனவர்கள், விபத்தினால் இறந்து போனவர்கள் எல்லாம் சில கிராமப்புறங்களில், முறையாக இறப்பு சம்பந்த





மான பதிவுகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் செய்ய வேண்டும் என்ற அந்த விதிமுறையைத் தெரிந்து கொள்ளாதவர்கள், இப்படிப்பட்ட உதவித் தொகையைப் பெற விண்ணப்பிக்கும் நேரங்களில், இந்த இறப்புச் சான்றிதழ்களைக் கொடுக்க முடியவில்லை. எனவே, இந்த திருமண உதவித் தொகையை பெற முடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. எனவே, இதை மனிதாபிமான முறையில் பரிசீலனை செய்து, விதவைத் தாய்மார்கள், அவர்கள் விதவைதான் என்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்களான மக்கள் பிரதிநிதிகளோ, அல்லது உள்ளாட்சி மன்றத் தலைவர்களோ சான்றிதழ் தந்தால், அதை ஏற்று, அவர்களுக்கு திருமண உதவித் தொகையை வழங்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சில விதவைத் தாய்மார்கள், தங்கள் பெண்களுக்கு திருமணம் செய்துவிட்டு, அதன் பின் அரசின் திட்டத்தைத் தெரிந்து உதவிப் பணம் பெற விண்ணப்பித்தால், அந்தக் கோரிக்கை மனு நிராகரிக்கப்படுகிறது. எனவே, அந்த விதவைத் தாய்மார்களுடைய பெண்கள் திருமணம் முடிந்த பின்னாலும் அவர்கள் விண்ணப்பிக்கலாம், அதற்கு தக்க சான்று வழங்கினால், உதவிப் பணம் பெறலாம் என்ற உத்தரவு அரசு இடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சமூக நலத்துறையின் மூலமாக தையல் பயிற்சி போன்ற தொழில் பயின்று உள்ள பலர் வேலை வாய்ப்பு இல்லாமல் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் விதமாக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தில் சீருடைக்காக வழங்கும் உடைகளையும், அரசு ஊழியர்களுக்கு, வழங்கும் உடைகளையும் தைத்துக் கொடுக்கும் பணிகளை இத்தகைய பயிற்சி பெற்றவர்களுக்குத் தர ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உடல் ஊனமற்றவர்களுக்கு இந்தத் துறையின் மூலமாக செயற்கை உறுப்புகள் பொருத்தப்பட்டு வருகின்றன. செயற்கை உறுப்புகளைப் பொருத்துவதற்கு விண்ணப்பிக்கும், ஊனமுற்றவர்கள் தாங்கள் உறுப்புகளைப் பொருத்திக் கொள்ள வேண்டும் என்றால், அவர்கள் சென்னைக்கு வந்து தங்கள் உடல் உறுப்பின் அளவுகளைக் கொடுத்துவிட்டு, பின்பு மீண்டும் அவர்களை வரச் சொல்லி, செயற்கை உறுப்பினைப் பொருத்துகின்ற நடைமுறை தற்போது அமுலில் இருந்து வருகிறது. வசதி இல்லாத ஏழை எளியவர்கள் பணத்தைச் செலவு செய்து கொண்டு, சென்னை வந்து போக அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்தக் குறையைப் போக்க, செயற்கை உறுப்புகள் பொருத்தும் நிறுவனத்தைச் சார்ந்தவர்களை ஒரு குறிப்பிட்ட நாட்களில் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்குச் சென்று, அங்கே உள்ள சமூக நலத் துறை அலுவலகங்களில் தங்கி இது

போன்று செயற்கை உறுப்புகள் பொருத்த விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் வருகை தரும் தேதியைக் குறித்து கடிதம் எழுதி, அவர்கள் அங்கு வந்து தங்களுடைய உறுப்புகளுக்கான அளவினைத் தரவும், அப்படி அளவுகள் எடுத்த பிறகு, குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து உறுப்புகளையும் தயாரித்து, மீண்டும் கொண்டு வந்து, மாவட்ட சமூக நல அலுவலகங்களில் வந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பொருத்த ஏற்பாடு செய்து, வசதியற்ற ஏழை எளியவர்களின் சிரமத்தைப் போக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அரசின் சார்பில் பெண்கள் பாதுகாப்பிற்காகவும், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மறுவாழ்வு இல்லங்கள் உள்ளதைப் போல, வயது முதிர்ந்த ஆதரவற்ற நிலையில், தங்களுடைய இறுதி நாட்களில் வாழ வழி இன்றி தவிக்கும் முதியோர்களுக்கு நல்வாழ்வு வழங்கும் வகையில், ஆதரவற்ற முதியோர் பாதுகாப்பு இல்லங்களை மாவட்டந்தோறும் அமைத்து, அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

மேலும் தற்போது பெரும்பான்மையான பெண்கள் வரதட்சணைக் கொடுமையினால் கொலை செய்யப்படுவதும், தற்கொலை செய்துகொள்வதும் அதிகரித்து வருகின்றன. இதை கடும் சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்துவதுடன், மணமான பெண்கள் தங்கள் கணவன்மார்களின் கொடுமையால் நரக வாழ்வு வாழ்ந்து கொண்டு வருகிறார்கள், அப்படிப்பட்ட பெண்கள், விவாக ரத்து பெற தற்போது பல சட்டத் தடைகள் உள்ளன. அவைகளை தளர்த்தி, பெண்களைத் கொடுமை செய்யும் கணவன்மார்களிடமிருந்து பிரிந்து வாழ, விரும்பினால் அவர்கள் கணவன்மார்களிடமிருந்து விவாக ரத்து பெற, பெண்களின் கோரிக்கையை வைத்து விவாகரத்து உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சத்துணவு மையங்களில் பணியாற்றும் தாய்மார்கள் பிரசவ விடுப்பில் செல்லும் காலத்திற்கு சம்பளம் வழங்கப்படுவது கிடையாது. ஆகவே, அதை கவனித்து அரசுத்துறைகளில் பணியாற்றும் மற்ற பெண்களைப் போல பேறுகால விடுமுறையோடு சம்பளம் வழங்கப்படுவதைப் போல சத்துணவு மையத்தில் பணிபுரியும் தாய்மார்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் மற்ற தாய்மார்களுக்கும் "கேர்" உணவு பொருள்களாக பல்கார் ஸ்வீட், சாலட் எண்ணெய் போன்றவை வழங்கப்படுகின்றன. "கேர்" உணவுப் பொருள்கள் 39 திட்ட பிரிவுகளுக்கு வழங்கப்படுகின்றன. இத்திட்டம் கோவை மாவட்டம், சேலம், தருமபுரி, திருச்சி இன்னும் பல மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு இப்போது செயல்படாமல் இருக்கிறது. மீண்டும் இத்





திட்டம் நடைபெற, அனைத்து இடங்களிலும் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களை இத்திட்டம் செயல்படுத்தப் பட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இத் திட்டத்தினால் கிராமப்புறங்களில் உள்ள ஏழை கர்ப்பிணி தாய் மார்களுக்கும், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் இன் னும் பல சத்துள்ள பொருட்கள் கிடைக்க வாய்ப்புகள் ஏற்படும். எனவே, மீண்டும் இத்திட்டத்தை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் இறந்தால் அவர்களுடைய ஈமச்சடங்குக்கு இதுவரை ரூபாய் 50 வழங்கப்பட்டு வந்தது. இதனை கருணை உள்ளம் படைத்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு 100 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தமைக்கு ஆதி திராவிடர், பழங்குடியினர் சார்பிலும் என்னுடைய சார்பிலும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக்கலாம் என்பதனை கொள்கை அளவிலே ஏற்று அதனைப் படிப்படியாக செயலாற்றும் பொருட்டு சமூக நலத் துறையால் பராமரிக்கப் படும் 4,343 குழந்தைகள் நல மையங்களில் நர்சரி பள்ளிகளைத் திறக்க அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 1983-84 ஆம் ஆண்டில் 5 ஆயிரம் குழந்தைகள நல மையங்களிலும் நர்சரி பள்ளிகளைத் திறக்க அனுமதிக்கப்பட்டது. குழந்தைகள் நல மையங்களில் உள்ள அமைப்புகளில் மேற்படி நர்சரி வகுப்புகளை நடத்துவதற்கு கல்வித் துறையைச் சார்ந்த ஆதார பயிற்சி யாளர்கள் மூலமாக சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வி ஆண்டிலேயே நர்சரி பள்ளிகளாக ஆக்க பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது தனியார்கள் நர்சரி பள்ளிகளை நடத்திக்கொண் டிருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளிலே சேரக்கூடிய குழந்தைக ளுக்கு மாதம் ஒரு தொகை வாங்கிக் கொண்டு பள்ளி நடத்தி வருகிறார்கள். இதனைத் தவிர்க்க அரசு நர்சரிப் பள்ளிகளை இந்த ஆண்டிலேயே அமைத்து ஏழை எளிய குழந்தைகளும் நர்சரிப் பள்ளிகளில் படிக்க மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவரவர்களின் நல்ல அரசை நர்சரிப் பள்ளிகளை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு விதவைகளின் திருமணத்திற் காக இந்த ஆண்டின் தொகையாக ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாமன் றத்தில் பேச வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

[1986 ஏப்ரல் 26

திரு. ம. ஆபிரகாம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத் துறை மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் என நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஆண்டு இந்தத் துறைக்கு 78 கோடியே 5 இலட்சத்து 94 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு 76 கோடியே 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக ஆண்டுக்கு ஆண்டு விலைவாசி ஏற்றம், பண வீக்கம் காரணமாக நாணயத்தின் மதிப்பு குறைவு என்பது நாடு தழுவிய ஒன்றாக இருக்கிற நிலையில் நம்முடைய வரவு செலவு திட்டத்தில் வருவாய் கடந்த ஆண்டு 2,368 கோடியே 4 லட்சம் ரூபாயாக இருந்தது. இந்த ஆண்டு வருவாய் கணக்கு 2,674 கோடியே 10 லட்சத்து 98 ஆயிரம் ரூபாயாக உயர்ந்து இருக்கிற நிலையில் இந்த துறைக்கு ஒதுக்கீடானது குறைவானது. அந்த நிதி உயர்த்தப்பட வேண்டும். ஆனால் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு குறைவாக ஒதுக்கப்படடிருக்கிறது. அரசு பணியாளர்களுக்கு சம்பள விகிதம் உயர்த்திய வகையிலும் திருத்தி அமைக்கப்பட்ட காரணத்தாலும் நிர்வாக செலவு கூடுகின்ற நிலைமையினால் இந்த துறைக்கு தொகை குறைக்கப்பட்டிருக்கிறது. இது வருந்தத்தக்க ஒன்று ஆகும். சமூகநலத் துறை புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. அதை இந்த நிதி ஒதுக்கீடு நிரூபிக்கிறது. இந்தத் துறை அமைச்சர் பொறுப்பில் இருந்து ஆதி திராவிட நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை எல்லாம் காலப் போக்கில் தனித்தனி அமைச்சர் பொறுப்பில் போய் தற்போது மகளிர் நலத்தை மட்டும் ஏற்று இருக்கிறார் இந்த அமைச்சர். இதுவும் கூட நன்மை என்றே கருதுகிறேன். மகளிர் நலப் பணி முழுவதிலும் தீவிர கவனம் செலுத்தி பணி செய்வதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். இப்படி சொல்லுகின்ற நேரத்தில் இந்தத் துறையில சில மாறுதல்களைச் செய்ய வேண்டும். இந்தத் துறைப் பொறுப்பில் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். இல்லை என்றால் என்னதான் பணி செய்தாலும் புண்ணுக்கு புனுகு பூசுவதை போல்தான் பூரண பலன் கிடைக்காது. ஆதரவு அற்ற மகளிர், ஆதரவு அற்ற குழந்தைகள் இவர்களுக்கெல்லாம் உதவுவதற்கு எத்தனையோ திட்டங்கள் ஏட்டில் தரப்பட்டிருக்கின்றன சேவைஇல்லங்கள் நடத்தப்படுகின்றனஇந்த சேவை இல்லங்களில் ஏழை விதவைகள், ஆதரவு அற்ற பெண்கள் கணவனால் கைவிடப்பட்டவர்கள், இவர்களுக்கு எல்லாம் ஆதரவு தந்து மறுவாழ்வு தருவது கைவினைத் தொழில் பயிற்சி, தருவது போன்ற திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. நான் இங்கே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவு அற்ற பெண்கள், சேவை இல்லங்கள் மூலம் உதவி செய்கின்ற அந்த பணிகள் நல்ல பணிகள் ஆகும். ஆனால் அதுவே





நிரந்தரப் பணி ஆகிவிடாது. சமூக கொடுமைகள் காரணமாக கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவு அற்ற பெண்கள், வசதி அற்றவர்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவது வாய்ப்பு இந்ததுறையின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பெண்களுக்கு நீதி மன்றத்தில் சென்று வழக்கைத் தொடர்ந்து வாதாடி நீதி பெற்று தரும் பொறுப்பை இந்தத் துறை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதற்காக பெண்கள் வழக்கறிஞர்கள் இந்தத் துறையின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் நியமிக்கப்பட்டு சமூக நீதிக்கு எதிராக மகளிருக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து நீதிமன்றம் சென்று வழக்கை தொடர்ந்து நீதியைப் பெற்றுத் தரவேண்டும். இதற்கான செலவுகளை இந்த துறையே ஏற்கவேண்டும். அதற்காக இலவச சட்ட உதவி இருக்கிறது என்று இங்கே பேசலாம். கையை காட்டி விடலாம். மாவட்டம் தோறும் 4, 5 பெண் வழக்கறிஞர்களை இந்த துறையில சார்பில நியமிக்கப்படுவார்களானால் அவர்கள் வரதட்சிணை கொடுமைகளால் பெண்கள் இறப்பது முதல் ஏன் திரைப்படங்களின் சுவரொட்டிகளில் பெண்களை தாக்குவது வரை ஒழிக்க முடியும். அத்தனை பிரச்சினைகளையும் இந்த வழக்கறிஞர்கள் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று நீதியைப் பெற்று தருகின்ற வகையில் இந்தத் துறை இதற்கு என்று தனியாக ஒரு ஸ்பெஷல் செல் தேவை. இந்த ஸ்பெஷல் செல்லில் சமூகநலத் துறை அமைச்சர், இயக்குநர், அவர்களின் நேரடிப் பார்வையில் சி.பி. யைப் போல் செயல்பட வேண்டும். அப்போது தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் முழுமையாக தடுக்க முடியும். ஆதரவு அற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோரின் எண்ணிக்கையை குறைத்து காட்டவும் முடியும்.

அடுத்து, சேவை இல்லங்களில் அடைக்கலம் போகக்கூடிய பெண்களுக்கு வழங்குகின்ற உதவி தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அது போதுமானது அல்ல. இதை உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் தொழில் கூட்டுறவு சங்கங்கள அமைக்கப்படுவது பற்றி இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இதிலே 15 சங்கங்கள் மற்றும் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கான பதிவேடுகள் தயாரிக்கப் படுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11–10]

இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சமூகநலத்துறைக்கு தேவையான பதிவேடுகள், மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை போன்ற அமைச்சகங்களுக்குத் தேவையான பதிவேடுகளை இந்தச் சங்கங்களிலிருந்து தான் வாங்க வேண்டும் என்று வரையறுக்கப்படவேண்டும். அதை இந்த மகளிர் கூட்டுறவுச்

சங்கங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். மெழுகுவர்த்தி, சாக்குக்கட்டிகள் செய்வது போன்ற பணிகளில் 60 மகளிர் களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. மெழுகுவர்த்தி, சாக்குக்கட்டிகள், போன்றவற்றை அரசு அலுவல கங்கள், கல்லூரிகள், பள்ளிகள் போன்றவைகள் இந்த மகளிர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கப்படவேண்டும் என்று இந்த அரசு உத்தரவிடுமானால், குறைந்தபட்சம் 6,000 மகளிருக் காவது வேலை வாய்ப்பு தரமுடியும்.

தீப்பெட்டி தொழில் பற்றி இங்கே கூறப்பட்டிருக்கிறது. இந்த தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு துறையிலும், தனியார்த் துறையிலும் ஒரு லாபகரமான ஒரு தொழிலாக இல்லை. தர்மபுரி மாவட்டத்தில் தீப்பெட்டி தொழிற்சாலைகள் மூடப் பட்டிருக்கின்றன. அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. எனவே, அந்தத் தொழிலுக்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்யவேண்டுமென் பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

விதவைகள் மூலம் சிற்றுண்டி சாலைகள் நடத்துவது பற்றி இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக நம்முடைய தலைமைச் செயலகத்தில் இதுபோன்ற சிற்றுண்டிச் சாலைகள் துவங்கப்படுவதுடன் அனைத்து மாவட்ட ஆட்சி தலைவர் அலுவ லகங்களிலும் மகளிர் மன்றங்களின் மூலம் இந்தச் சிற்றுண்டிச் சாலைகளை அமைக்க வேண்டும். இதன்மூலம் அதிகப்படியான வேலைவாய்ப்பு கிடைக்கும். இந்தப் பெண்களுக்கு வாழ வழி கிடைக்கும்.

இங்கே தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்குத்துறைப் பயிற்சி அளித்தல் என்கின்ற தலைப்பின் கீழ் ஏழைப் பெணகளுக்கு உதவுகின்ற பல திட்டங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே கூறியிருக்கிற கணக்குப்படி, 1,000 பெண்களுக்கு தட்டச்சும், 400 பெண்களுக்கு கணக்குப் பயிற்சியும், 500 பெண்களுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சியும் கொடுத்து உதவுவதாகக் கூறப் பட்டிருக்கிறது. இது ஒரு மாவட்டத்திற்கு என்றால் ஒருவேளை சொல்லலாம். மாநிலம் முழுவதிலும் 1,900 பேர் என்று சொன் னால், இன்றைக்கு மாநிலத்தில் இருக்கிற ஏழைப் பெண்கள் கணக்கைப் பார்த்தால், இது கடலிலே கரைத்த பெருங்காயம் போல் ஆகிறது. அதிகம் பேர் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் விரிவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டங்கள் பற்றி ஒரு சில வார்த்தை கள் கூற விரும்புகிறேன். இந்த அவையிலே இதற்கென்று தனி விவாதம் கிடையாது. இந்த மன்றத்திலே மானியக் கோரிக்கை வைக்காமல் இருக்கிற ஒரு அமைச்சர் இருக்கிறார்.





அடுத்து மின்துறை. அதைப்பற்றி நாம் சில ஆண்டுகளிலே விவாதிப்போம், ஆனால் பல ஆண்டுகளில் விவாதிப்பது இல்லை. ஆகவே இரண்டும் விவாதிக்கப்பட வேண்டிய துறைகள். ஆனால் விவகாரம் மிகுந்த துறைகள். சத்துணவுத் துறைக்கு சமூகநலத் துறையிலிருந்து மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் வேறு பல துறைகளிலிருந்தும் மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த சமூக நலத்துறைக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 76 கோடியில், சத்துணவுக்கு மட்டும் ஏறத்தாழ 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, பல்வேறு துறைகளிலிருந்தும் சத்துணவிற்கு பணம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அது செயல்படும் விதம் குறித்து ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் அதிருப்தி தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

குழந்தைகள் நல மையங்களில் சோப் வாங்குவதற்கும், விளக்குமாறு வாங்குவதற்கும் மாதம் ரூ. 12 ஒதுக்கப்படுகிறது. இந்த நான்கு மாவட்டங்களிலுள்ள 8,248 மையங்களுக்கு ரூ. 12,70,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 6,84,000 தான் செலவழிக்கப்பட்டுள்ளது. 3,839 மையங்களில் சோப் வாங்க வில்லை. விளக்குமாறும் வாங்கவில்லை . இதைப் போலவே ரிஜிஸ்டர்கள் வாங்குவதற்காக இந்த 8,248 மையங்களுக்கும் ரூ. 4,84,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த 5,257 மையங் களில் இந்த ரிஜிஸ்டர்கள் வைக்கப்படவில்லை. சமூக நலத் துறை இயக்குநர் சத்துணவிற்காக மூன்று மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட கலெக்டருக்கு மானிய நிதி தருகிறார். மூன்று மாவட்டங்களில் செலவினங்கள் கணக்கு தரப்படவில்லை. இப்படி கணக்கு தராத மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கித் தந்த வகையில், 1982-83ல் ரூ. 31,11,000-ம், 1983-84ல் ரூ. 21,36,000-ம் இந்த மூன்று மாவட்டங்களுக்கும் அதிகமாக தரப்பட்டுள்ளது. அந்தத் தொகையும் நன்றாக செலவழிக்கப் படவில்லை. திருப்பித் தரவும் இல்லை என்று ஆடிட்டர் ஜெனரல் கூறியிருக்கிறார்.

அது மட்டுமல்லாமல், குழந்தைகள் நலம் என்ற தலைப்பில் இங்கே சில விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த குழந்தைகள் நலம் என்ற தலைப்பில் உடல் நலம் பராமரித்தல், தடுப்பு ஊசி, உடல் நலம் சரி பார்த்தல், எடை எடுத்தல் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் எப்படி நடைமுறைப்படுத்தப்படு கிறது என்பதைப் பற்றி இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் 66 மைய களில் அதிகாரிகள் சோதனையிட்டார்கள். அதில் 6,919 குழந்தை களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. ஆனால் 3,370 குழந்தைகளுக்குத்தான் உடல்நலம் பற்றி பதிவேடுகள் பரா மரிக்கப்படுகின்றன. அந்த 3,370 குழந்தைகளுக்கு முன்னாலே

சேர்ந்த குழந்தைகளுக்குத்தானாம், பின்னாலே சேர்ந்த குழந்தைகளுக்கு கிடையாதாம். 28 மையங்கள் 2,781 குழந்தை களுக்கு எடை குறிக்கப்பட்டிருச்கிறது. மீதம் இருக்கிற 38 மையங்களில் 1,788 குழந்தைகளுக்கு மட்டும் எடை பதிவு செய்யப்பட்டிருச்கிறது 3,176 குழந்தைகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. நிதி ஒதுக்கீடு முறையாக செய்யப்பட வில்லை என்று ஆடிட்டர் ஜெனரல் கூறியிருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகள் எல்லாம் களையப்படவேண்டும்

அடுத்து செங்கற்பட்டு மாவட்டம், அண்ணா பிறந்த மாவட் டத்தில் மறுவாழ்வு மையம் ஒன்று 74 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் செலவில நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக மத்திய அரசு பன்னிரண்டேமுக்கால் லட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. அந்தத திட்டப் பணிகளை விரைவில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னுடைய தொகுதியில் குரோம்பேட்டை யில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள இல்லம் ஒன்று இருக் கிறது. அந்த இல்லத்தில் 25 குழந்தைகள் படிக்கிறார்கள். அதற்கு 3 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் துறையில் நடத்தப்படும் முதல் நிறுவனம் இது. அதை மேலும் விரிவாக்குவதற்கு அரசு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இலவச தையல் இயந்திரங்கள் இந்த ஆண்டு ஆயிரம் பெண் களுக்கு வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இது மிகக் குறைவானது. ஒரு தொகுதிக்கு 10 பேர்களுக்காவது கொடுத் தாலும் 25 ஆயிரம் இயந்திரங்கள் தேவைப்படும். அதிகமான எண்ணிக்கையில் வழங்கவேண்டும்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ஆயிரம் தையல் இயந்திரங்கள் கொடுக்கப்படுகின்றன.

**திரு. ம. ஆபிரகாம்** : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்துணவுக்கு தனியாக அமைச்சர் தேவையில்லை. அத்துறையை சமூக நலத் துறையிடம் ஒப்படைக்க வேண்டும். மேலும் மக்கள் நல்வாழ்வு இலாகாவின் கீழ் உள்ள குடும்பநலத் துறையும் சமூக நலத் துறையிடம் மாற்றம் செய்தால் குடும்ப நலத் திட்டம் இன்னும் செம்மையான முறையிலே நடைபெற வாய்ப்பு உண்டு. எனவே அமைச்சருக்கு அதிகத் துறைகளைக் கொடுத்து அதிக நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலமாக இந்தத் துறை சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதைத் தெரிவித்து முடித்துக்கொள் கிறேன்.

**திரு. இ. அன்புமுகன்** : துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது அண்ணா மாவட்டம் என்று செங்கற்பட்டு மாவட்டத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார் கள். இன்றைக்கு அதிகாரப் பூர்வமாக அண்ணா மாவட்டம் என்று அரசு அறிவித்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் செங்கற்பட்டு மாவட்டத்தை அண்ணா மாவட்டம் என்று கூறுவது முறைதானா ?



**திரு. க. அன்பழகன்** : ஆளுங்கட்சிக்கு அப்படிக் குறிப்பிடு வதில் விருப்பம் இல்லையென்றால் அண்ணா பிறந்த மாவட்டம் என்று திருத்திக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : அப்படிப் பேசியிருந் தால் அதைத் திருத்திக்கொள்ளுங்கள்.

**திரு. ச. சங்கரலிங்கம்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தக் கோரிக்கையை ஆதரித்து நான் சார்ந்திருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றச் கழகத்தின் சார்பாக நானும் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தமிழகத்திலே இருக்கிற அனைத்துத் துறைகளும் பல முற் போக்குத் திட்டங்களைக் கொண்டு வந்து சீரும்சிறப்புமாக இயங்கி வருகின்றன. அதைப்போல சமூக நலத் துறையும் மாண்பு மிகு புரட்சித் தலைவா பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னாலே சிறப்பாக இயங்கி வாழ்க்கையில் வழுக்கிவிழுந்த வர்கள், விதவைகள், வாழ்வை இழந்தவர்கள், அனாதைகள், பிச்சைக்காரர்கள், மற்றும் சமுதாயத்தில் நலிந்தவர்கள் ஏழை எளியவர்கள் சாப்பாற்ற யாருமே இல்லை என்று சொல்லக் கூடிய வயது முதிர்ந்தவர்கள் அத்தனை பேர்களுக்கும் இது சுதந்திர நாடு, இந்த சுதந்திர நாட்டிலே உள்ள உங்களுக்கு எல்லா உரிமைகளும் சலுகைகளும் உண்டு என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் வாரி வழங்குகிற சமூக நலத் துறை இன்றைக்கு சீரும் சிறப்புமாகப் பீடுநடை போட்டுக்கொண்டி ருக்கிறது. இந்தத் துறையிலேதான் நல்ல முற்போக்கான திட்டங்கள், வளமான வாழ்வுக்கு வழிவகுக்கும் திட்டங் களெல்லாம் இன்றைக்குச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன.

(முற்பகல் 11.20)

அனாதைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றவர்கள், அபலைகளாக இருக்கின்றவர்கள் மறுவாழ்வு பெற்று, இன்றைக்குப் புத்துயிர் பெற்று அவர்கள் வாழ்வை தரமான வாழ்க்கைத் தரத்தில் உயர்த்திக்கொண்டிருக்கின்ற நிலைமையை சமூக நலத் துறையின் மூலமாக இன்றைய அரசு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

எத்தனையோ இளஞ் சிறார்கள் குற்றவாளிகளாக இருந் தாலும், அவர்களையும் திருத்துவதற்காகக் கூட இந்த சமூக நலத் துறையின் மூலமாக அவர்களுக்காக சீர்திருத்தப்

பள்ளி அமைக்கப்பட்டு, அவர்களும் திருந்தி மறுவாழ்வு பெற்று இந்தத் தமிழகத்தில் ஒரு மனிதனாக உலவுவதற்காக எத்த னையோ அறிவுரைகலளத் தெள்ளத் தெளிவாகப் புரிய வைத்து அவர்கள் தங்கள் வாழ்க்கையைத் திருத்தியமைத்துக் கொள்வதற்காக இந்த சீர்திருத்தப் பள்ளியானது சமூக நலத் துறையின் சார்பாக இயங்கிக்கொண்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், கிராமப்புறங்களில் ஊட்டச்சத்து முறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. பல்வகையான ஊட்டச் சத்துக்கள் அந்தத் தாய்மார்களுக்குக் கிடைக்காத காரணத்தி னால அவர்கள் குழந்தைகளைப் பெற்று எடுக்கின்ற நேரத்தில் அரைகுறையாகப் பெற்றெடுக்கின்ற நிலைமைகளைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இந்தத் திட்டம் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டு, அந்தத் தாய்மார்களுக்கு ஒரு சிறப்பான ஊட்டச்சத்து அந்தக் குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு இன்றைக்குக் கிராமப் புறங்களில உள்ள குழந்தைகள் எல்லாம் மிகச் சிறப்பான நலத்தோடு வாழ்ந்து வருகின்றன என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவுத் திட்டம் எங்களுடைய இதய தெய்வம், புரட்சித் தலைவரவர்களால் கொண்டு வரப்பட்டு, இத்திட்டத்தின் காரணமாகப் பல இலட்சக்கணக்கான தாய்மார்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். வரதட்சிணைக் கொடுமை காரணமாக 30, 35 வயது வரையில்கூட திருமணம் ஆகாத பெண்கள் இன்றைக்கு எல்லாச் சமுதாயத்திலேயும் இருக்கி றார்கள் என்பதை வெளியே பட்டவர்த்தனமாக மக்கள் மன்றத் திற்குக் காட்டுகின்ற முறையில், வரதட்சிணைக் கொடுமையால் கஷ்டப்படும் ஏழைகள் இருக்கிறார்கள் எல்லாச் சமுதாயத்தி லேயும் என்பதைத் தெளிவாகப் புரிய வைக்கும் முறையில் இருப்பதுதான் இந்தச் சத்துணவுத் திட்டம். இந்தத் திட்டத் தின் மூலமாகப் பல தாய்மார்கள் தங்கள் வாழ்விலே ஒளிபெற்றுப் பிரகாசிக்கின்ற அளவிற்கு வேலைவாய்ப்பைப் பெற்று, இந்தத் திட்டம் தமிழகத்திலே சிறப்பாகப் பீடுநடை போட்டுக் கொண் டிருக்கிறது. இதன் மூலமாகத் தாய்மார்கள் தங்கள் வாழ்க் கைக்கு வேண்டிய வேலையைத் தேடிக்கொண்டு சிறப்பான இடத் தில் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு அனாதைகளும், முதியோர் களும், விதவைகளும் அரசு மானியத்தைப் பெற்று ஒரு தாய் தந்தையர் தங்களுடைய குடும்பத்திலே தங்களுடைய குழந்தை களால் தர முடியாத செல்வத்தை அதாவது அவர்களால் வழங்க முடியாத செல்வத்தை, அன்பை என்று சொல்வார்கள், அந்த அளவிற்கு இந்த அரசு அவர்களிடத்திலே அன்பு காட்டி அந்த முதியவர்களுக்கு மானியமாக மாதாமாதம் உதவிப் பணமும்





உடையும் கொடுத்து, தினசரி முதியோருக்கு உணவைக் கொடுத்து அவர்களுக்கு ஆதரவளித்து வருகிறது. தமிழகத்தில் இன்றைக்குப் பிச்சைக்காரர்களே இல்லாத நிலைமையை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் புரட்சித் தலைவரவர்கள் சிறப்பான திட்டங்களையெல்லாம் தந்து சமூக நலத் துறை சீரும் சிறப்புமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது இந்தத் துறையானது இன்னும் சீரும் சிறப்புமாக வளர்ந் தோங்க வேண்டுமென்ற எண்ணத்தில் ஒருசில குறைபாடுகளைக் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னாலும்கூட, அந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருங்காலத்தில் வளமான தமிழகத்தை பிச்சைக்காரர்களே இல்லை என்கின்ற நிலைமைக்கு மாற்றப்பட வேண்டும், குற்றவாளிகளாக இருக்கின்ற இளஞ் சிறார்கள் திருத்தப்பட்டு நல்ல முறையில் பயிற்சி பெற்று அவர்கள் நல்ல முறையில் மனந்திருந்தி வருகின்ற நிலைமையை உருவாக்கித் தருகின்ற இந்த மானியக் கோரிக்கையை மனமார வரவேற்று, வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறை பற்றி நான் சார்ந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒருசில கருத்துக்களை கூற விரும்புகிறேன். சமூக நலத் துறை என்று சொல் கின்றபொழுது, இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள 5 கோடி மக்களில் ஏறத்தாழ பாதிக்கு அதிகமாக இருக்கக்கூடிய பெண் களைப் பற்றியும் அதே நேரத்தில் குழந்தைகளைப் பற்றியும் அவர்களுக்கு பல்வேறு சலுகைகளை உருவாக்குவதற்கும் ஒருக்கக் கூடிய அந்தத் துறைக்கு ஒதுக்கக்கூடிய பணம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. சமுதாயத்திலே இருக்கிற பிரச்சினை களையும் துறைக்கு ஒதுக்கியிருக்கின்ற பணத்தையும் பார்க்கிற பொழுது இத் தொகை கடலில் கரைத்த பெருங்காயமாகத்தான் இருக்கிறது. எனவே, சமூக நலத் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கி, சமுதாயத்திலே நலிந்த பிரிவினருக்கு வாழ்வளிக்கக் கூடிய முறையில் தமிழக அரசு செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, பல்வேறு விவரங் களை சமூக நலத் துறை சொல்லியிருந்தாலும், அதில் கூறப் பட்டிருக்கக்கூடிய சலுகைகளை எல்லாம் இன்றைக்கு யார் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறபொழுது, ஒரு குறிப்பிட்ட அளவு, குறைந்த எண்ணிக்கை உடையவர்கள் தான், அதுவும் மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் பெற்றுக் கொண்டிருக்கிறார்களே தவிர, அது அடிமட்டத்தில் இருக்கிற சாதாரண ஏழை எளியவர்களைப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், நிச்சயமாக நம்முடைய நோக்கம் நிறைவேற வில்லை என்பதுதான் எங்களுடைய அனுபவமாகஇருக்கிறது

[திரு. எம். செல்லமுத்து] [1986 ஏப்ரல் 26

இன்றைக்குச் சமூகத்திலே பொருளாதார நெருக்கடி
மேன்மேலும் வளர்ந்து வரும் சூழ்நிலையில், எல்லாம் நவீன
மயமாக்கப்பட்டு மனிதர்கள் வேலைக்குச் செல்ல வேண்டாம்
என்று சொல்லும் நிலையில், வேலையற்றவர்கள் எண்ணிக்கை
அதிகமாகிக் கொண்டிருக்கிற நிலையில், எல்லாம் பணம் என்ற
நிலையில், எப்படியாவது பெண்ணைத் திருமணம் செய்து கொள்
வதன் மூலமாவது ஒரு பெரும் தொகை வர வேண்டுமென்ற
எதிர்பார்ப்புகளைச் சமுதாயச் சூழ்நிலை காரணமாகக்
கொண்டிருக்கிறார்கள். ஆகவால், கிராமப்புறத்திலும் சரி,
நகர்ப்புறத்திலும் சரி, இலட்சக்கணக்கான வரதட்சணைக்
கொடுமை வழக்குகள் வந்து கொண்டிருப்பதை நாம்
பார்க்கிறோம்.

அதே போல, கற்பழிப்பு சம்பவங்கள், பெண்களை இழிவு
படுத்துகின்ற கொடுமைகள், ஏராளமாக பத்திரிகைகள்
வாயிலாகவும் நேரடியாகவும் பார்க்கிறோம். எனவே, அத்
தகைய கொடுமைகளைத் தடுக்க, உரிய நடவடிக்கைகளை
அரசு எடுக்கிறதா, காவல் துறை எடுக்கிறதா என்று பார்த்
தால், அவையெல்லாம் கண் துடைப்பாகத்தான் இருக்கி
றதே தவிர, உள்ளபடியே வரதட்சணைக் கொடுமையால்
பாதிக்கப்பட்ட பெண்களுக்கோ, அல்லது கற்பழிக்கப்பட்ட
சூழ்நிலையில் இருக்கிற பெண்களுக்கோ, போதிய சமூக
பாதுகாப்பு அளிக்கக்கூடிய நடவடிக்கையை அரசும், காவல்
துறையினரும் சரிவர செய்யவில்லை என்பதுதான் எங்களுடைய
அனுபவமாக இருக்கிறது. எனவே, வரதட்சணைக்
கொடுமை நீங்கவும், இன்னும் சட்டங்களை நிறைவேற்றவும்
காவல் துறையைச் சரியாக பயன்படுத்த வேண்டுமென்று
நான் என்னுடைய கட்சியின் சார்பிலே கேட்டுக் கொள்கி
றேன்

குறிப்பாக, தமிழ்நாடு ஜனநாயக மாதர் சங்கத்தின்
சார்பிலே, பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கும் சமூக நலத்
துறைக்கும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பெண்களுக்கு
இழைக்கக் கூடிய கொடுமைகளை விசாரிக்க, ஒரு சிறப்பு
காவல் துறை பிரிவை உருவாக்க வேண்டுமென்று கூறி
இருக்கிறார்கள். குறிப்பாக, வரதட்சணைக் கொடுமைகளை
விசாரிக்க ஒரு சிறப்புக் காவல் படையை அமைத்து, அதற்
குப் பொறுப்பாக ஒரு உயர் பெண் காவல்துறை அதிகாரியை
நியமிக்க வேண்டும். பெண்களின் பிரச்சினைகளை விசேஷ
அக்கறையோடு அணுகவும், காலதாமதமின்றி நடவடிக்கை
எடுக்கவும் இந்த அரசு உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.
பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை விசாரிக்க
காவல் துறைக்கு உதவ கணிசமான அளவு, பெண்களைக்
கொண்ட மாவட்ட ஆலோசனைக் குழுக்களை நியமிக்க
வேண்டும் என்று ஆறு ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசு அனுப்



1986 ஏப்ரல் 26] [திரு. எம் செல்லமுத்து]

பிய சுற்றறிக்கையை தமிழ்நாட்டில் இன்னும் அமல்நடத்த
முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே
சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் கோரிக்கை
களை உடனடியாக அமல் நடத்த, நடவடிக்கை எடுக்க
வேண்டும்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக்
கொடுமை போன்ற சமூகக் கொடுமைகளை எல்லாம் ஆராய்
வதற்கும் பரிசீலிப்பதற்கும் மாவட்டந்தோறும் மாவட்ட
ஆட்சித் தலைவர் தலைமையில் குழுக்கள் அமைப்பதற்கான
வழிவகைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. எம். செல்லமுத்து ; மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிறது
என்றுதான் கூறினார்கள். அது எப்பொழுது மேற்கொள்ளப்
படும்? அப்படி அமைக்கப்படக்கூடிய குழுக்களில் பெண்கள்
அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவார்களா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களும் அதில்
இடம் பெறுவார்கள்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் குழுக்கள் அமைப்
பதோடு வட்ட அளவிலும் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச்
செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

அதே போல, இன்றைக்குச் சமூக நலத் துறையால் நடத்தப்
படக்கூடிய பல்வேறு நலத் திட்டங்களைப் பார்க்கிறபொழுது,
இன்றைக்குப் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமை
களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உதவுகின்ற
வகையில், அனைத்து ஜனநாயக மாதர் சங்கங்
களையும் அமைப்புகளையும் கொண்ட ஒரு ஆலோசனைக்
குழுவை ஒவ்வொரு வட்டத்திற்கும், மாவட்டத்திற்கும்
மாநில அளவிலும் அமைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று
நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அதேபோல சத்துணவுக் கூடம், இன்றைக்கு சத்துணவு
வேண்டாம் என்று வாதாடுபவர்கள் அல்ல நாங்கள். ஏனென்
றால் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குழந்தைகளுக்கு
சத்துணவு அளிப்பது பாவம் இல்லை. அந்த சத்துணவுக்
கூடங்களில் கொடுக்கக்கூடிய உணவுகள் அங்கே இருக்கக்
கூடிய கட்டிட வசதிகள் இவைகளையெல்லாம் பார்க்கின்ற

[திரு. எம். செல்லமுத்து] [1986 ஏப்ரல் 26

டோது எந்த நோக்கத்திற்காக அமைக்கப்படுகின்றதோ
அந்த அளவிற்கு இல்லை. அவைகளையெல்லாம் முறையாக
கண்காணிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
சத்துணவுக் கூடங்களில் வேலை செய்யும் ஆயாக்கள், அமைப்
பாளர்களுக்கு போதுமான சம்பளம் இல்லை. வேலை
உத்திரவாதமும் இல்லை. முன்புகூட மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சொல்கின்றபோது சத்துணவுக் கூடங்களில் குழந்தை
கள் படிப்பதற்கு சாதனங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறோம்.
பாடம் சொல்லிக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள்.
இன்றைக்கு பார்க்கின்றபோது அந்த சத்துணவு கூடத்திலே
கொடுத்திருக்கின்ற 16 கட்டளைகள் அமல்நடத்தப்படவில்லை.
சத்துணவுக்கூடம் 8½ மணிக்கு திறக்கப்படவேண்டும். 10
மணிக்குத்தான் வருகிறார்கள். சாரணம் வெளியூரிலிருந்து
போடப்பட்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் முறையாக
நடத்தி, சத்துணவு சத்தாக கொடுப்பதற்கு உரிய முறை
யில்.........(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, கல்வி உபகரணங்களை
கொண்டு கிராமங்களில் இருக்கின்ற சத்துணவு கூடங்களில்
குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கப்படுகின்றது. கட்டிட வசதி
என். ஆர். ஈ. பி. தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்
அடிப்படையில் கட்டப்படும்.

திரு. எம். செல்லமுத்து : துணைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் என். ஆர். ஈ. பி. அடிப்படையில் கட்டப்
டடும் என்று சொல்கிறார்கள். நன்றி. இன்னும் பல
இடங்களில் அப்படிப்பட்ட கட்டிட வசதிகள் இல்லாமல்
இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்கிறேன். அந்த முறை
யிலே அவற்றை கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன். இன்றைய தினம் ஆடாச சுவரொட்டிகளை
தடுப்பதற்கு உரிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதியோர், உடல் ஊனமுற்றோர், விவசாய தொழிலாளர்
களுக்கு இங்கே உதவித் தொகைகள் வழங்கப்பட்டு உள்ளன.
தாசில்தார் அலுவலகங்களில் சென்றால ஒரு குறிப்பிட்ட
அளவிற்குத்தான் கொடுக்கிறார்கள். மனு செய்யக்கூடிய
அத்தனை பேர்களுக்கும் கொடுக்கவில்லை.

விவசாயத் தொழிலாளர்கள் உழைத்து களைத்தவர்கள்
இன்றைக்கு பலவேறு துறைகளில் இருப்பவர்களுக்கு ரிடையர்
மெண்டிற்கு பிறகு பல சலுகைகள் இருக்கின்றன. கழனி
யிலே பாடுபட்டு தோள் எல்லாம் கருகியிருக்கக்கூடிய சாதா
ரண விவசாயிக்கு இன்றைக்கு ரூ. 30 தரப்படுகிறது.
அதனை உயர்த்தி கொடுக்க வேண்டும். மனு செய்யக்கூடிய
அனைவருக்கும் கொடுக்க வேண்டும். ...... (மணியடிக்கப்
பெற்றது.)



1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலை
வர் அவர்களே, முதியோர் உதவித் தொகை இன்றைக்கு
ரூ. 35 கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. எம். செல்லமுத்து : துணைத் தலைவர் அவர்களே,
இந்த 35 ரூபாய் இன்றைக்கு விலைவாசி உயர்விற்கு போது
மானது அல்ல. மனு செய்யக்கூடிய அத்தனை பேர்களுக்கும்
கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.
அநாதைகள் இல்லம் திறந்திருக்கிறார்கள். இவைகளை
ஒரே அளவில் கொண்டுவந்து சமுதாயத்திலே நலிந்த
அல்லது பாதுகாப்பற்ற சமூக சூழ்நிலை காரணமாக
இருக்கின்றவர்களுக்கு ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு
பாதுகாப்பு இல்லத்தை அமைத்துத் தந்து அவர்
கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்குண்டான சூழ்நிலையை உரு
வாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று
பல்வேறு சலுகைகள் அளித்திருந்தாலும் அவர்களுக்கு வேலை
உத்திரவாதம் அளிக்கக்கூடிய காரியத்தை செய்வதன் மூலம்
தான் அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சி அடையுமே தவிர,
அரசாங்கம் கொடுக்கும் சலுகையை பெற்று வாழ்வது
என்பது சிக்கலாக இருக்கிறது. எனவே, வேலைவாய்ப்பு
எல்லா துறைகளிலும் சம அளவிற்கு இல்லாவிட்டாலும்கூட
3-ல் 1 பகுதியாவது அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய
வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சா. ஞானசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, 76,04,25,000 ரூபாய்க்குக் கொண்டு வரப்பட்டிருக்
கின்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று நான் சில
கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

பெண்களை வாழ வைக்காத நாடு வாழ்ந்ததாக வரலாறு
இல்லை. பெண்களின் முன்னேற்றம் தான் ஒரு நாட்டினுடைய
முன்னேற்றம் என்று அறிஞர்கள் சொல்கிறார்கள். அந்த
வகையில் இன்றைக்கு தமிழ் நாட்டில் பெண்களின் முன்னேற்
றத்தை அடிப்படையாகக் கொண்டு, புரட்சித் தலைவர் அவர்
களுடைய தலைமையில் அமைந்திருக்கிற அரசு நல்ல பல திட்டங்
களை வரவுக்கு ஏற்ற வகையில் செலவு செய்து நிறைவேற்றி
வருகிறது. ஏழை, எளிய, பாமர மக்களை வாழ வைத்துக்
கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதை நான் கூறுவதற்குக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே சத்துணவுத் திட்டம் பற்றிப் பேசினார்கள். காப்ப
கங்கள் வேண்டுமென்றெல்லாம் அருமை நண்பர்கள் பலர் பேசி
னார்கள். ஆனால் ஏனோ, இவையெல்லாம் பணக்காரர்

களுக்குத்தான் போய்ச் சேருகிறது என்று மாண்புமிகு உறுப்
பினர் திரு. செல்வமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள்.
சில வரையறைகளை வைத்து, திட்டங்களை வைத்து இப்படித்
தான் செய்ய வேண்டுமென்று இதிலே குறிப்பிட்டிருக்கிறோம்.
ஏழை எளியவர்களுக்குத் தான் 35 ரூபாய் பென்ஷன் கொடுக்
கிறோம். விதவைகளுக்குக் கொடுக்கிறோம். வயது வந்த
தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறோம். இது போல் ஊன
முற்றவர்களுக்கும் கொடுக்கிறோம். இவையெல்லாம் முறை
யாக இந்த அரசு நடத்தி வருகிறது. சத்துணவுத் திட்டம்
என்ற வகையில் இந்த அரசு ஏழை எளிய பாமர மக்களுடைய
வீட்டுக் குழந்தைகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுடைய
வீட்டுக் குழந்தைகளுக்கு, 85 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்
துணவுத் திட்டத்தை இந்த அரசு வழங்குகிறது. சமூக நலத்
துறை மூலமும் இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துகிறார்கள்.
அப்படி இந்தத் திட்டத்தைச் செயல் படுத்துகின்ற அதே நேரத்
தில் அதிலே தரப்படுகின்ற வேலை வாய்ப்பினைப் பொறுத்த
வரையில் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற
அடிப்படையில் விதவைகளாகவும், தாழ்த்தப்பட்டவர்களாக
வும், ஆதரவற்றவர்களாகவும் இருக்கக் கூடிய ஏழை எளிய
மக்களுக்கு சத்துணவு அமைப்பாளர்கள் என்ற பணி கொடுக்க
வேண்டும் என்ற வகையில் செய்யப்பட்டிருக்கிறது. சுமார்
84,315 பேர் சத்துணவு அமைப்பாளர்களாகவும், ஆயாக்களாக
வும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சீருடை வழங்குகிற
திட்டத்தைப் பொறுத்தவரையில் 59,43,338 பேர்கள் இன்
றைக்குச் சீருடை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் முதலாளிகளுக்கு ஆதரவு
கொடுக்க வேண்டுமென்றால் வேறு ஆட்கள் அல்லது முதலாளிகள்
கையிலே கொடுத்து அதைத் தைக்கச் சொல்லியிருக்க
லாம். ஆனால் மகளிர் மேம்பாட்டை ஏற்படுத்த வேண்டும்
என்பதற்காக அதாவது மகளிருக்கான சிறப்பான திட்டத்தைச்
செய்ய வேண்டும் என்பதற்காக 40,000 மகளிருக்கு வேலை
வாய்ப்பை இந்த அரசு அளித்துக் கொண்டிருக்கிறது. தொழில்
கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட
மகளிர் பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச்
சொல்லி இந்தப் புரட்சித் தலைவர் ஆட்சியில் எந்த அளவுக்கு
அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய வாழ்க்
கைக்கு உத்தரவாதத்தைத் தந்துகொண்டு இருக்கிறார்கள் என்
பதைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பெண்களுக்கென்று மகளிர் மேம்பாட்டுக் கழகத்தை அமைத்து
ஏழை எளிய மக்களும், விதவைகளும், ஆதரவற்றவர்களும் பயன்
பெறுகின்ற வகையில் ஏற்பாடு செய்திருப்பதோடு தொழிற்
கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவர்களுடைய வாழ்க்கை
யில் வளத்தை ஏற்படுத்தி வருகிறது இந்த அரசு என்பதைச்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



தட்டச்சு பயில்கிறவர்களுக்கெல்லாம் உதவித் தொகை
கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த உதவித் தொகையைச்
சற்று அதிகப்படுத்த வேண்டும். அதைப் பொறுத்த வரையில்
முன்பு 3,000 ரூபாய் என்று வருமான வரம்பு இருந்தது. இப்
போது அது 6,000 ரூபாயாக உயர்த்தப்பட்டு இருக்கிறது.
அதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். 7,975
பெண்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

ஊனமுற்றவர்கள், பெண்கள் இப்படிப்பட்டவர்கள் எல்
லாம் பெட்டிக் கடை வைக்கிறோம் என்று சொன்னால் 250
ரூபாயிலிருந்து 500 ரூபாய் வரையில் அவர்களுக்கு மானிய
மாக அரசு உதவி தருகிறது. இந்த மானியத் தொகையை
2,000 ரூபாய் என்று உயர்த்தித் தர வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன். மூன்று சக்கர வண்டிகள் 8,782
பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஊனமுற்றவர்கள் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு,
அதாவது ஏழை எளிய ஊனமுற்றவர்கள் இலவசமாகப் பயணம்
செய்வதற்கு பஸ் பாஸ் தந்திருக்கிறார்கள். அரசு நிறுவனங்
களின் பேருந்துகளில் மட்டும் தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்
கள். தனியார் துறைகளில் இருக்கின்ற பேருந்துகளுக்கும் அவ்
வாறு தர வேண்டும்.

(முற்பகல் 11.40)

கலப்பு திருமணம் பற்றியும், வரதட்சணை பற்றியும் பேசி
னார்கள். கலப்பு திருமணம் என்பது தந்தை பெரியார் அவர்
களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சமுதாயத்தைச் சீர்
திருத்த வேண்டும் என்பதற்காகவும், பெண்கள் மேம்பாடு
அடைய வேண்டும் என்பதற்காகவும் இப்படிப்பட்ட சமுதாயப்
புரட்சியை நாட்டிலே கொண்டு வந்து, இன்றைக்குச் சமுதாயம்
மேம்பாடு அடைந்து கலப்பு திருமணங்களும், அய்யர் இல்லாத
திருமணங்களும் தமிழகத்தில் பெருகி வருகின்றன. அப்
படிப்பட்ட நிலைமையில் அந்தத் திருமணங்கள் நடக்கிற
நேரத்தில், கலப்புத் திருமணங்கள் செய்கிற தம்பதிகளுக்கு
5 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது.
அதைப் பாராட்டுகிறேன். அவர்களுக்கு ஒரு பவுன் நகையும்
300 ரூபாயும், கூட தருகிறார்கள். இந்தத் திருமணங்களை
இன்னும் ஊக்குவிக்க 5 ஆயிரம் என்பதை 10 ஆயிரமாகக்
கூட ஆக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்போது
தான் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு மறையும் என்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நாட்டிலே நிலவிவரும் வரதட்சணைக் கொடுமை
கள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த அரசு
பல காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கிறது. அதற்கு

நன்றி. ஆனாலும் இன்னும் அதிகமாக அந்த உணர்வை மக்கள் மத்தியிலே பரவச் செய்ய இன்னும் திரைப்படங்கள் மூலமும், விளம்பரங்கள் மூலமும் பிரச்சாரம் செய்ய வேண்டும். பல துறைகளைச் சார்ந்தவர்களையும் சேர்த்து ஒரு குழுவாக அமைத்தும் அந்தப் பிரச்சாரத்திலே அவர்களை ஈடுபடுத்தியும் அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

இப்படி பல வகைகளிலும், பெண்களுக்கு திருமணம் செய்கிறபோது பல வகைகளிலும் அவர்களுக்கு துன்பம் ஏற்படுகிறது. கணவனை இழந்து விதவைகளாக இருப்பவர்களுக்கும், கணவனால் கைவிடப்படுகிறவர்களுக்கும் வாழ்விற்கு உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு வாழ்வதற்கு வழி காட்டுகிற வகையில், அவர்களுக்கு வாழ சமூக உத்தரவாதம் கொடுக்கிற வகையில் சட்டங்களை இயற்ற வேண்டும். அதே போல திருமணங்களைச் செய்துக் கொண்டு கணவனாலே கைவிடப்படுகிறபோது அவர்களுக்கு வாழ்க்கைக்கே உத்தரவாதம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே சட்ட முறையில் அதைச் செய்ய வேண்டும். அவர்கள் கணவன்மார்களுக்கு அஞ்சுகிறவர்கள் என்றாலும் கூட, திருமணங்களை முறையாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அந்த வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும். அப்போதுதான் சமுதாயத்திலே எத்தனை பேர்கள் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள், எத்தனை பேர்கள் திருமணம் செய்யாமல் இருக்கிறார்கள், எத்தனை பெண்கள் விதவைகளாக இருக்கிறார்கள் ; எத்தனை பேர்கள் கணவனால் கைவிடப்பட்டிருக்கிறார்கள் என்ற குறிப்புகள் அரசுக்கு முறையாகக் கிடைக்கும். ஆகவே அதை முதலாவதாக இந்த அரசு செய்ய வேண்டும்.

நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோது பார்த்தேன். அந்த நாட்டிலே இருக்கக் கூடியவர்கள், திருமணம் செய்து கொள்ளப் போகிற கணவனும் மனைவியுமாக சேர்ந்து போய், திருமணத்திற்கு பத்து நாட்களுக்கு முன்னால், தங்களை பதிவு செய்து கொள்கிறார்கள். அப்படி பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று சட்டமே இருக்கிறது. அதே வகையில் இங்கேயும் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் எத்தனை பேர்கள் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்கள், எப்படி வாழ்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும் ; அவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு கொடுக்கக் கூடிய ஒரு முறையிலும் ஏற்பாடுகளைச் செய்ய முடியும்.

அது போல நம்முடைய கிராமப் புறங்களில் பார்த்தால் 15 வயதிற்கும் கீழே உள்ள பெண்களுக்குக் கூட திருமணம் செய்து நடத்தி விடுகிறார்கள். நம்முடைய நாட்டிலேயும் 18 வயதிற்குள் திருமணம் செய்யக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் இங்கே அப்படி நடப்பதில்லை. மேலை நாடுகளில், கல்யாணம் செய்துக் கொள்ளவேண்டும் என்றால் பெர்த் சர்ட்டிபிகேட், பிறந்த நாள் சான்றிதழ் தர வேண்டும்.



அப்போதுதான் திருமணம் நடத்த முடியும். அந்த வகையில் இங்கேயும் கொண்டு வரவேண்டும். அப்படி இல்லாததால் மேலைநாடுகளில் இருப்பவர்கள் எல்லாம் கூட தமிழ்நாடு போன்ற இடங்களுக்கு வந்து, கோயில்களிலே நம நாட்டு பெண்களை திருமணம் செய்து கொண்டு சென்று விடுகிறார்கள். அதையும் தடுக்க வேண்டும். ஆகவே கட்டாயமாக 15 வயது நிரம்பியதற்குப் பிறகுதான் திருமணம் செய்ய வேண்டும் என்று சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். இப்போதே அந்தச் சட்டம் இருந்தாலும், அதை தீவிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்காகத்தான் நான் இந்த திருமணங்களையெல்லாம் பதிவு செய்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி திருமணங்களைப் பதிவு செய்கிறபோது அவர்கள் அதிகாரிகளிடத்தில் அதற்காகச் செல்லுகிறபோது, அந்தப் பெண்களின் வயது 18 வயதிற்குள் இருந்தால், அதை அவர்கள் உடனேயே நிறுத்தி விடுவார்கள். அதனால் முறையற்ற முறையில் ஏமாற்றி செய்யப்படும் திருமணங்கள் நிறுத்தப்பட்டு விடும். பல கலப்பு திருமணங்களைச் செய்வதற்கும், இப்போது நாம் அடிக்கடி படிக்கிறோமே அதுபோன்ற காதல் திருமணங்கள் நடைபெற அது வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த திருமணங்களையெல்லாம் பதிவு செய்வதற்கு சட்ட ஷரத்து கொண்டு வந்து, அனைத்தையும் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பெண்களுக்கு நிறைய தொழில் இயல் பயிற்சி கொடுப்பதற்கான மையங்கள் திறக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. அதேபோல காது கேளாதவர்களுக்கு ஒரு பள்ளி தஞ்சையிலே இருக்கிறது. அதேபோன்று ஜெயில் பள்ளியிலே இருக்கிற தோழர்களுக்கும் இந்த தொழில் இயல் பயிற்சியிலே பயிற்சி அளிப்பதற்கான வகையில் அதை நல்ல முறையில் விஸ்தரித்து உபகரணங்கள் எல்லாம் அந்தப் பள்ளிக்கு அளித்து அதை இன்னும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல மகளிர்களுக்கு நிறைய தொழிலியல் பயிற்சி யைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். கயிறு தொழில் கூட அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக, முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை போன்ற இடங்களில், தென்னை அதிகமாக இருக்கிற காரணத்தால், அந்தக் கயிறு வைத்து கைத் தொழில் செய்யும் தொழிற் சாலையை அந்தப் பகுதிகளிலே துவங்கி, அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு தருகின்ற வகையில்

[திரு. சா. ஞானசுந்தரம்] [1986 ஏப்ரல் 26

அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

*திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மானியத்தின் மீது நான் ஒரு சில கருத்துக்களை கூற விழைகிறேன். சமூக நலம் என்ற இந்த மானியத்தில் கொடுக்கப்பட்ட புஸ்தகத்தை முழுவதுமாக புரட்டிப் பார்க்கும்போது, ஏற்கனவே ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்பட்டுள்ள அதே திட்டங்கள்தான் இடம் பெற்றிருக்கின்றன. சற்று பண மாறுதல்களோடு, சற்று ஆள் மாறுதல்களோடு, 50 என்பதை 60 என்றும் ஆயிரம் ரூபாய் என்பதை 1500 ரூபாய் என்றும் அதையே, சற்று மாற்றித்தான் அந்த திட்டங்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு பொருளாதாரத்தில் ஏற்றத்தாழ்வுகள் அதிகமாக இருக்கிற சூழ்நிலையில் பெண்கள் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் இருக்கிறார்கள். பெண்களுக்காக தீட்டப்படுகிற திட்டங்கள் தீவிர திட்டங்களாக இல்லாமல் ஏதோ ஒரு நாளைக்கு 5 ரூபாய் 2 ரூபாய் கிடைக்கிற அளவில்தான் இருக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் ஆதிதிராவிட நலத் துறையின் கீழ் தீட்டப்படுகிற திட்டங்கள் அனைத்தும் பாய் முடைதல், கீற்று முடைதல், கயிறு திரித்தல், சோப்பு செய்தல் போன்று சிறுசிறு திட்டங்களாக, கிராம மக்கள் அவற்றை செய்ய இயலாத திட்டங்களாக, அவற்றின் மூலம் அவர்களின் வாழ்க்கைக்கு போதுமான வருமானம் கிடைக்காத திட்டங்களாக இருப்பதைப் போல, சமூகநலத் துறையின்கீழ் அளிக்கப்படுகிற தொழில்கள் சாக்பீஸ் செய்தல், மெழுகுவர்த்தி செய்தல், நூற்பு இயந்திரம், தையல் இயந்திரம் வழங்குதல் போன்றவைகளாக இருக்கின்றன. இவைகள் எல்லாம் சமூக நலத்துறையில் ஆரம்ப காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டங்கள். அதே திட்டங்கள்தான் இப்போதும் இருந்து வருகின்றன. வளரும் சமுதாய தேவைகளுக்கேற்ப இதில் தீவிரமாக மாறுதல்கள் தேவையென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் எல்லாம் கிராமங்களில் இருந்து வந்தவர்கள். கிராமப்புறங்களில் சமூகநலத் துறையின் வாயிலாக அளிக்கப்படுகிற முதியோர், ஊனமுற்றோர், விதவைகள், விவசாயக் கூலிகள் உதவித் தொகை வேண்டுமானால் 10, 20 பேர்களுக்கு கிடைக்கிறதே தவிர, இதைத் தவிர வேறு எந்தத் திட்டமும் கிராமப் புறங்களில் நடப்பதில்லை அவை கிராம மக்களை அடையவில்லையென்பதை நான் இந்த நேரத்தில் உறுதியாகக் கூற முடியும். வேண்டுமானால் துறையின் வாயிலாக புள்ளி விவரங்களைச் சேகரித்து இந்த இந்த ஊர்களில் நாங்கள் இன்னென்ன பேர்களுக்கு இந்த உதவிகளைச் செய்திருக்-



1986 ஏப்ரல் 26] [திருமதி தா. இராசாம்பாள்]

கிறோம் என்று சொன்னால் நாங்கள் ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருக்கிறோம் என்பதை குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு கிராமப்புறங்களில் கல்விக்கூடங்கள் இருந்தாலும் படிக்காத பாமர மக்கள், குறிப்பாக பெண்கள் அதிகமாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசுந்தரம் அவர்கள் சொன்னதைப் போல 18 வயதிற்கு முன்னால் அவர்களுக்கு திருமணத்தை செய்து வைத்து வாழ்க்கையில் ஈடுபடும் நிலைமைதான் இன்றைக்கும் இருந்து வருகிறது. ஆகவே கிராமப்புறங்களில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 'இருண்ட வீடு' கவிதையை ஓரங்க நாடகமாக, திரைப்படமாக திரையிட வேண்டும். சமூக நலத்துறையின் வாயிலாக நடைபெறுகிற அனைத்துத் திட்டங்களும் நகரங்களில்தான் அமல்படுத்தப்படுகின்றன. ஆகவே இந்தத் திரைப்பட நிகழ்ச்சியை கண்டிப்பாக செய்தி விளம்பரத் துறை மூலமாக கிராமப்புறங்களில் திரையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–50)

இன்றைக்கு முதியோர், ஊனமுற்றோர், விவசாயக் கூலிகள் உதவித்தொகை மாதம் 35 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. ஆளும் கட்சியிலும், எதிர்க்கட்சியிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த உதவித் தொகை நியாயமாக உரியவர்களுக்குப் போய் சேரவில்லையென்று கேட்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விண்ணப்பம் கொடுத்த அனைவருக்கும் தகுதியின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்று சொல்லி வருகிறார்கள். ஆத்தூர் தாலுகாவில் 2,000-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இன்றைக்கும் நிலுவையில் இருக்கின்றன. அதற்கு காரணம் கேட்டால் அதிகாரிகள் இல்லை, போதுமான அலுவலர்கள் இல்லையென்று பதில் சொல்கிறார்கள். நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம் படித்து வேலையில்லாமல் இருப்பவர்களை 1 மாதம், 2 மாதம், 3 மாத காலத்திற்கு நியமனம் செய்து அவர்களை வைத்து விண்ணப்பங்களை பரிசீலனை செய்து முழுமையாக அவற்றை சீர்செய்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த ஆய்வை முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிலுவையாக உள்ள விண்ணப்பங்கள் நிறைய இருந்தும் கூட, இங்கே ஒரு கிராமத்தில் 20 பேர்களுக்கு உதவித் தொகைக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அதில் விதவையாக இருக்கின்ற ஒருவர் இறந்தால்தான் மற்றொரு விதவைக்கு அந்தத் தொகையைக் கொடுக்கிறார்கள். அதேபோல் ஊனமுற்றவர் ஒருவர் இறந்தால்தான் மற்றொருவருக்குக் கிடைக்கும். இதுதான் உண்மை நிலை. இப்படி இருக்கும்போது, நாங்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும்கூட, அனைவருக்கும்

[திருமதி தா. இராசாம்பாள்] [1986 ஏப்ரல் 26

இது கொடுக்கப்படுகிறது என்ற பதில் தான் கொடுக்கப்படுகிறது. ஒரு தாலுக்காவிற்கு 100 பேர்கள் என்றால், அந்த 100 பேர்களுக்கும்தான் கொடுக்கிறார்கள். வருகின்ற விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசிலனை செய்யப்படுவதில்லை.

அடுத்தாற்போல், முன்னதாக விண்ணப்பித்தவர்கள் எல்லாம் விவரம் தெரிந்தவர்களாக இருப்பதாலும், மற்ற அலுவலர்களை அணுகுகின்றவர்களாக இருப்பதாலும் அந்தத் தொகையை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். தற்போது மோசமான நிலையில் இருக்ககூடியவர்கள் எல்லாம் இந்தத் தொகையைப் பெற முடியாமல் இருக்கிறார்கள். என்னுடைய தலைவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே மனு நீதிக்காக வந்திருந்தார். ஏராளமான விண்ணப்பங்கள் இந்த உதவித் தொகை கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுக்கப்பட்டது. உதாரணமாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த புத்தூர் ஆறுமுகம் என்பவர், அவருக்கு இரண்டு கால்களும் இல்லை. வேலை செய்ய முடியாத நிலை. அவர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விண்ணப்பம் கொடுத்து, தாசில்தார், அவர்களிடம் கொடுத்து சட்டமன்ற உறுப்பினர் சிபாரிசுடன் கொடுக்கப்பட்டு, அந்த விண்ணப்பம் இதுவரையில் ஏறக்குறைய 3 ஆண்டுக்காலமாக கொடுக்கப்படவில்லை. அவர்கள் முறையாக விண்ணப்பித்து இருந்தும் கூட இதுவரை அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. எனவே தயவு செய்து அதில் தனிக் கவனம் செலுத்தி, முழுக் கவனம் செலுத்தி அரசு போடுகிற திட்டங்கள் தகுதியானவர்களுக்குச் சென்று அடையவேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் அரசு இயங்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊனமுற்ற மாணவ மாணவியர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. வரவேற்கிறேன். அதேபோல் ஊனமுற்றவர்களுக்கு சமூக நலத்துறை வாயிலாக பெட்டிக் கடைகள் வைப்பதற்கு நாம் சிபாரிசு செய்கிறோம். அவர்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு சென்றுதான் பொருட்களை வாங்கவேண்டும். எனவே, அவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஊனமுற்றவர்கள் சாதாரணமாக பெட்டிக் கடைகள், காய்கறிக் கடைகள், டீ கடைகள்தான் வைத்திருப்பார்கள். ஆகவே அவர்கள் அந்தப் பொருள்களை அருகில் உள்ள டவுனுக்குச் சென்றுதான் வாங்கவேண்டும். எனவே, அவர்களுக்கும் இந்த உதவியை நீட்டித்துக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 26] [திருமதி தா. இராசாம்பாள்]

அடுத்து ஊராட்சி ஒன்றியத்தில் தையல் ஆசிரியர்கள் என்ற பணி நியமனம் இருக்கிறது. அவர்கள் நீண்டகாலமாக, 1961ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு வரை, 25 ஆண்டு காலமாக பணியாற்றி வருகிறார்கள். அவர்களை வேலை வாங்குவது சமூக நலத்துறை. ஆனால் அவர்களுக்கு சம்பளத்தை கொடுப்பது உள்ளாட்சித் துறை. அவர்களும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், தையல் பயிற்சி பெற்றவர்கள், டி.டி.சி. சர்ட்டிபிகேட் பெற்றவர்கள்தான். ஆனால் அவர்களுக்கு இதுவரை எந்தவிதமான பதவி உயர்வும் இல்லை. அவர்கள் எந்தவிதமான ஊதிய உயர்வும் இல்லாமல், இதுவரையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். முன்பு எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை, கிராம சேவிகாக்களாக நாம் பதவி உயர்வு கொடுத்திருக்கிறோம். அதை நான் வரவேற்கிறேன். அதேபோல் இந்தத் தையல் ஆசிரியர்களை, நீண்டகாலமாக தகுந்த சம்பளம் இல்லாமல் பணியாற்றுகின்ற அவர்களை, சமூகநலத் துறை எடுத்து, அவர்களுக்கு நல்ல சம்பளமும், ஊதிய உயர்வும் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுச் கொள்கிறேன்.

இன்றைக்கு வேலையில்லாத பட்டதாரிகளாக இருப்பவர்கள் 5 ஆண்டுக் காலம் பதிவு செய்திருந்தால், மாதம் 100 ரூபாய் நாம் உதவித் தொகை வழங்குகிறோம். அதேபோல் முதியோர்களுக்கு 35 ரூபாய் வழங்குகிறோம். நான் கேட்டுக் கொள்கிறேன், சத்துணவு மையத்தில் பணி புரியும் அமைப்பாளர்களுக்கு 150 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவர்களிடம் வாங்கப்படுகிற வேலை என்பது, சட்டத்திற்கு உட்பட்டு அவர்கள், செய்யவேண்டியது இந்த சத்துணவு மையத்தைக் கண்காணிப்பது ஒன்றுதான். இன்று ஊராட்சி ஒன்றியத்திற்கு என்னென்ன வேலைகள் கொடுக்கப்படுகிறதோ, என்னென்ன திட்டங்கள் வருகிறதோ, அதாவது பொருளாதாரத் திட்டங்கள் அல்லாத, பொருளாதார உதவித் திட்டம் இல்லாமல், நிதி ஒதுக்கீடு இல்லாமல் வருகின்ற திட்டங்கள் எது எது வருகிறதோ, அவைகள் அனைத்துமே, இவர்கள் மூலமாகத்தான் இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக குடும்ப நலத் திட்டம் என்று சொன்னால், இன்றைக்கு மாநிலத்தில் உள்ள அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் ஒவ்வொருவரும் ஒரு கேஸ் போட்டால் கூட நீங்கள் கொடுக்கின்ற அந்த குறியீட்டை நாம் எப்போதோ அடையமுடியும். ஆனால் ஒருவரும் செய்வதில்லை. இதை முழுமையாக சத்துணவு அமைப்பாளர்களிடம் கொடுத்துதான் இலக்கை எட்டிக் கொண்டு வருகிறோம். ஆனால் அதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லலாம்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல அமைப்பாளர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஈடுபட்டு கேஸ் கொண்டு வரக்கூடாது என்றுநான் அரசின் மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்

[திருமதி கோமதி சீனிவாசன்] [1986 ஏப்ரல் 26

பட்டு இருக்கிறது. வேண்டுமானால் குழந்தைகள் நல அமைப்
பாளர்கள் '' மோட்டிவேட் '' செய்யலாம், குடும்பக் கட்டுப்பாடு
திட்டத்தைப்பற்றி வாய் மூலமாக தாய்மார்களிடம் எடுத்துச்
சொல்லலாம்.

திருமதி தா. இராசாம்பாள் : நாங்கள் இன்றைக்கு அதை
நிரூபிக்க இயலாத நிலையில் இருக்கிறோம். காரணம் நேரடியாக
அங்கே சென்று பார்க்கும்போதுதான் அதை நாம் தெரிந்து
கொள்ள முடியும் ; உணர முடியும். ஏனென்று சொன்னால்,
அந்தச் சான்றிதழ், குடும்பநலத் திட்டத்தில் அறுவை
சிகிச்சை செய்து கொண்ட அந்தச் சான்றிதழ் என்பது ஒரு
அதிகாரியின் பெயரில்தான் வாங்குகிறார்கள். இதைச் சத்துணவு
அமைப்பாளர்கள் மீது போட்டு வாங்குவது இல்லை. நீங்கள்
சென்று பார்த்தால் எந்த ஒரு சத்துணவு மையத்திலும் சத்துணவு
அமைப்பாளர்கள் இருக்கமாட்டார்கள்.

அத்தோடு மட்டுமல்ல கொடுமை, அந்தச் சத்துணவுக் கூடத்
தில் 30 ரூபாய் சம்பளம் பெருகின்ற அந்த ஆயா கூட 150
ரூபாய், 200 ரூபாய் கொடுத்து இந்தக் குடும்ப நலத்திட்டத்திற்கு
ஆள் பிடிக்க வேண்டுமென்று சொன்னால், சத்துணவுத் திட்டத்
திற்கு ரூ. 200 கோடி என்று இந்த அரசால் செலவழிக்கப்படுகின்ற
அந்தத் திட்டம் எந்த வகையில் சரியாக இயங்குகிறது என்பதைத்
தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு..............
(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மாற்
றுத் தலைவர் அவர்களே, அது தேவையில்லை என்று சொல்கி
றார்களா ? தேவையில்லை என்று சொல்வார்களேயானால் அதை
நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் நமக்கு
வருகின்ற கடிதத்தைப் பார்த்தீர்களேயானால் அவ்வளவு பயங்
கரமான வகையிலே, இந்த ஆண்டிலே கூட இந்த இலக்கை கூடுத
லாக நிர்ணயித்திருக்கிறார்கள். நாங்கள் மத்திய அரசாங்கத்
தைக் கேட்க இருக்கிறோம். 5 இலட்சத்து 75 ஆயிரம் பேருக்கு
அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்று இலக்கு நிர்ணயித்து,
இப்போதுதான் அந்தக் கடிதம் வந்திருக்கிறது. இதையெல்லாம்
நாம் செய்யவேண்டுமென்றால், நிர்ப்பந்தப்படுத்தாமல் செய்ய
முடியாது. நிர்ப்பந்தப்படுத்த வேண்டாமென்று காங்கிரஸ்
பேரியக்கத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்
வார்களேயானால், திட்டவட்டமாக அது அவர்களுடைய கருத்
தாக இருக்குமேயானால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ள
தயாராக இருக்கிறோம். மத்திய அரசாங்கத்திற்கு இப்படித்
தான் இருக்க வேண்டுமென்று நாங்கள் எழுதிவிடத் தயாராக
இருக்கிறோம்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு மாற்றுத் தலை
வர் அவர்களே, திட்டங்கள் செயல்படக்கூடாது, செயல்படு
வதிடங்கள் ல் ஏற்படுத்தவேண்டுமென்பது எங்களுடைய குறிக்



1986 ஏப்ரல் 26] [திருமதி தா. இராசாம்பாள்]

கோள் அல்ல. இன்னும் குறிப்பாக சொல்லவேண்டுமென்று
சொன்னால், அமைச்சர் அவர்கள் மத்திய அரசினுடைய திட்டம்
என்று கூறுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், மத்திய
சர்க்காருடைய திட்டமாக இருந்தாலும், மாநில அரசு திட்டமாக
இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளான சட்டமன்ற
உறுப்பினர்கள் நாங்கள் பொறுப்பேற்றிருக்கிறோம். அவைகள்
கண்டிப்பாக நல்லமுறையில் நிறைவேற்றப்பட வேண்டும்.
ஆனால் சத்துணவு அமைப்பாளர் வாயிலாக, 150 ரூபாய்
சம்பளம் வாங்குகின்ற அவர்கள் வாயிலாக.......முதியோர்களுக்
குக் கூட 35 ரூபாய் கொடுக்கிறோம்... 30 ரூபாய் வாங்குகின்ற
அந்த விதவைத் தாய்மார்கள், முதிய தாய்மார்களின் வாயிலாக
அதைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு நிலைமையைத்தான்
நான் கண்டிக்கிறேனேயொழிய குடும்ப நலத் திட்டத்தை
நாங்கள் வரவேற்கிறோம். செம்மையாக அது நடைபெற
நாங்கள் அனைவரும் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம். என்னு
டைய தொகுதியில் குடும்ப நல விளம்பரத்திற்காக ...(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மன்னிக்கவேண்டும்.
நான் குறுக்கிடுவதை தவறாக நினைக்கக்கூடாது. இது மேஜர்
இஷ்யூ ; பெரிய பிரச்சினையாக இருக்கிற காரணத்தினாலே
குறுக்கிடுகிறேன். அந்த மையங்களுக்கு பல தாய்மார்கள் வரு
கின்றார்கள். அப்பொழுது அங்கே வேலை செய்யக் கூடிய
தாய்மார்களோடு நல்ல விதத்திலே தொடர்பு ஏற்படும். ஆகவே
தான் அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு, இந்தக் குடும்பநலத்
திட்டத்தை ஏற்பீர்களேயானால் நாட்டுக்கு நலமாக இருக்கும்,
நல்லதாக இருக்கும் என்று இவர்கள் சொன்னால், அவர்கள்
ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த ஒரு
நல்ல முறையை—இந்த சேனல் ஆப் கம்யூனிகேஷன்—இவர்
களை நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இது தேவை
யில்லை என்று சொல்வீர்களேயானால், அந்த முறையை
கைவிடுவதற்காக, என்னைப் பொறுத்தவரையில், இந்தக் குடும்ப
நல இலாக்காவின் சார்பாக நான் நிறுத்தத் தயாராக இருக்கி
றேன். அங்கே என்ன பிரச்சினை வருகிறது என்றால், இப்படிப்
பட்ட தொடர்பு கிடைக்கக்கூடிய இடங்களையெல்லாம் நாம்
பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றால், இந்த இலக்கையே
நாம் எட்ட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு மாற்றுத் தலை
வர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்திற்கு நான்
நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அவர்களுடைய
கருத்திலிருந்து மாறுபட்டவள் அல்ல நான் சொல்லிக் கொள்ள
ஆசைப்படுவதெல்லாம், குறைந்த சம்பளம் வாங்குகின்ற இவர்கள்
மூலமாகத்தான் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்ற வேண்
டுமா ? ரெவின்யூ அதிகாரிகள் இருக்கிறார்கள். மருத்துவ
அதிகாரிகள் இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள்

இருக்கிறார்கள். ஏற்கெனவே ஆசிரியர்கள் மூலமாகக்கூட இந்தத் திட்டத்தை நிறைவேற்றினோம். ஆனால் இன்றைக்கு அனை வரையும் விட்டுவிட்டு, இந்தப் பெண்கள் என்று போட்டவுடன் இவர்கள் மூல'மாகத்தான் இவைகளை நிறைவேற்றவேண்டு மென்று சொன்னால் அது சரியாக இல்லை என்பதைத்தான் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுவும் ஒரு நல்ல எண்ணத் தோடு சொல்கிறேன். நீண்ட நாட்களாக அந்த சத்துணவு மையங்கள் மூடியே இருக்கின்றன.

(நண்பகல் 12.00)

ஆனால் சரக்குகள் தான் போடப்படுகின்றன. ஒரு மூட்டை அரிசியை ஒரு பெண் எடுத்துக் கொண்டு போகிறாள் என்று சொன்னால், ஏன் எடுத்துக் கொண்டு போகிறாள் என்று சொன் னால் ''நான் 300 ரூபாய் கடன் பட்டு இருக்கிறேன், குடும்ப நலத் திற்காக, ஆகவே 2 கேஸ் போட்டு இருக்கிறார்கள் அதற்காக இந்த அரிசியை விற்க வேண்டும்'' என்று சொல்லுகிறார்கள். நல்ல எண்ணத்தோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தத் திட்டம் பாழ் ஆகக் கூடாது. அந்த கிராம மக்களுக்கு சத்துணவுத் திட்டம் முழுமையாக பயன் தா வேண்டும் என்ற எண்ணத்தில் நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு மலை வாழ் மக்களுக்கு தையல் பயிற்சி, தட்டெழுத்து பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களுக்கு எல்லாம் நல்ல ஒரு நிலையத்தை ஏற்படுத்தித் தந்து மேலும் பெண்கள் முன்னேற்றத்திற்கு பாடு பட வேண்டும். இன்னும் ஒன்று, மாவட்டம் தோறும் தையல் மிஷின்களை கொடுக்கிறோம். மிஷின் கொடுக்கும்போது அங்கே அநாதைகளுக்கு மிஷின் வழங் கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு அரசு கடிதம் ந.க. எண். 44545/எம். 2/79, நாள் 7–12–1979 என்ன கூறுகிறது என்று சொன்னால் deserted wives are not eligible for free supply of sewing Machines என்று இருக்கிறது. நம்முடைய நலப் பள்ளிகளில் கூட கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை வெளியே அனுப்புகிறோம். ஆனால் அவர்களுக்கு மிஷின் வழங்குகிற அந்தத் தகுதி இல்லை. ஆகவே அவர்களுக்கும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், அந்தத் தையல் மிஷின் கொடுக்க ஏற்பாடு இருக்க வேண்டும். என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்த அரசு ஆணையில் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று இருக்கிறது. ஒரு வேளை இந்த சிறு விவசாயி களுக்கு சான்றிதழ் வழங்குவது போல்..................

மாண்புமிகு திருமதி சோமதி சீனிவாசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி இராசாம்பாள் அவர்கள் சொல்லியது சேலம் மாவட்டத்தில் அந்த அரசு உத்தரவு போடப்பட்டதாக, அந்த கருத்து பற்றி, இங்கே கூறியிருக்கிறார்கள். கணவன் கைவிட்ட பெண்களுக்கு தையல் இயந்திரம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் அரசு மறு உத்தரவு போடச் சொல்லி நான் சொல்லியிருக்கிறேன்





திருமதி தா. இராசாம்பாள் : மாற்றுத் தலைவர் அவர்களே நான் கூறியது சேலம் மாவட்டத்தில் அல்ல, S cial Welfare Depart-mentஇல் இருந்து போட்டு தமிழகம் முழுமைக்கும் ஆனது. மீண்டும் அதை திருத்தி அமைத்துக் கொண்டதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அரசு இந்த மாதிரி சிறு சிறு தொழிலாக அவர்களுக்கு அமைத்துக் கொடுப்பதை விட, அந்த ஏழை விதவைத் தாய்மார்களின் பெண் பிள்ளைகள் படிப் பதற்கு குறைந்தது மாவட்டத்திற்கு ஒரு ஐ.டி.ஐ. திறக்க வேண் டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

அதோடு இன்றைக்கு கங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் காது கேளாதோர் பள்ளி ஒன்று நடக்கிறது, சமூக நலத்துறை யின் மூலமாக. ஆனால் இன்றைக்கு பெண்களுக்கான உயர் நிலைப் பள்ளி துவங்கப்பட்டு இருப்பதால் அந்த பிள்ளைகள் அங்கே இருப்பதற்கு சிரமமாக இருக்கிறது. அவர்களுக்கு புதிதாக, வேறு கட்டிடம் கட்டிக் கொடுப்பதோடு அங்கே கொடுக் கின்ற உணவுப் பண்டங்களுக்குக் கொடுக்கின்ற, அந்தத் தொகை போதாது, அதையும் அதிகப்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மறுமணம் செய்து கொள்பவர்களுக்கு பல சலுகைகள் கொடுத்து இருப்பதற்கு தமிழக அரசை வரவேற்கிறேன். ஆனால் அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில், கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்குக் கூட, இன்றைக்கு எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசுந்தரம் அவர்கள் சொன்னதுபோல, 4 ஆயிரம் ரூபாய், பவுன், 300 ரூபாய் திருமண செலவுக்கு என்று கொடுக்கிறார்கள். நான் என்ன சொல்லு கிறேன் என்றால், அந்தத் தொகையே தேவை இல்லை. ஏன் என்றால் அதனால் பாதிக்கப்பட்டவள் நான். நான் சொல்வது என்னவென்றால் அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பை வழங்குங்கள். அது தான் அவர்களுக்கு உறு துணையாக இருக்கிற செயலாக, வாழ்க்கைக்கு உதவுகின்ற ஒரு செயலாக இருக்கும் என்பதை நான் கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நல மானியத்தில் ஜனதா கட்சியின் சார்பில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையை துவக்குகிறேன்.

சமூக நல வாரியத்தின் மூலமாக மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் ரூ. 71 கோடிக்கு கோரிக்கை வைத் திருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு அவர்கள் கோரிக்கை ரூ. 78 கோடி. ஆனால் இந்த ஆண்டு ரூ. 7 கோடி குறைவாக வைத்திருக்கிறார்கள். மற்ற பல்வேறு துறையைச் சார்ந்த அமைச்சர்கள் எல்லாம் மானியக் கோரிக்கைகளிலே கூடுதலாகக் கேட்கின்றபோது, இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் மாத்

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 ஏப்ரல் 26

திரம் மானியக் கோரிக்கையை குறைவாகக் கொடுப்பதற்கான காரணம் தெரியவில்லை. அப்படியென்றால், பிரச்சினைகள் இங்கே குறைந்து விட்டதா, சமூக நலத்துறையைப் பொறுத்த வரையில், பிரச்சினைகள் குறைந்து விட்டதா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப் போல, சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்புப் புத்த கம் 60 பக்கங்களாக அச்சிடப் பெற்றிருந்தது. ஆனால் இந்த ஆண்டு 50 பக்கம் தான் அச்சிடப்பட்டிருக்கிறது. இதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புவதோடு, இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது, ஏதோ சென்ற வருடப் புத்தகத் தைத்தான் படிக்கிறோமோ என்ற நிலை வருகின்றது. சுமார் 20 பக்கம் வரையில் எந்தவிதமான எழுத்து மாற்றமும் இல்லா மல், அதையே திரும்பத் திரும்ப அமைச்சரவர்கள் சொல்லி யிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

முதியோர்களுக்கு இந்தத் துறையிலே இன்னும் என்ன வசதி கள் செய்து கொடுத்திருக்கிறீர்கள், மேலும் தாய்மார்களுக்கு இன்னும் என்ன வசதிகள் செய்து கொடுத்திருக்கிறீர்கள்? அதுபோலவே குழந்தைகளுக்கு இன்னும் என்ன வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் கேட்க இருக் கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

வெட்டுத் தீர்மானங்களைப் பார்க்கின்றபோது, சத்துணவுக் கூடங்கள் வேண்டும், உடல் ஊனமுற்றோர்களுக்காக செவி மடுப்புக் கருவிகள், உபகரணங்கள், உடல் ஊனமுற்றோர்களுக் காக பள்ளிகள் வேண்டும், உடல் ஊனமுற்றோருக்காக உதவித் தொகை காலாகாலத்தில் கொடுக்கப்பட வேண்டும், அநாதை இல்லங்கள் கட்டப்பட வேண்டும், முதியோர் உதவித் தொகை அதிகப்படுத்தப்பட வேண்டும். கிராமப் புறங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு 3 மாதங்களுக்கு முன்பாக உதவித் தொகையை வழங்க வேண்டுமென்று பல்வேறு பிரச்சினைகள் இந்த வெட்டுத் தீர்மானங்களில் கேட்கப்பட்டிருக்கிறது. எவ்வளவோ பிரச் சினைகள் இருக்கும்போது, அதிகப்படியான பணத்தை மற்ற எல்லா மானியக் கோரிக்கை மூலமாகக் கேட்டிருக்கும்போது, இவர் கள் குறைவாகக் கேட்டிருக்கிறார்களே, அதைப் பார்க்கும் போது, பிரச்சினைகளை அணுக பயப்படுகிறார்களோ என்று தான் நான் கேட்க விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 6 மாவட்டங்களில் தான் இன்றைக்கு சுகாதாரப் பணியாளர்களு டைய அமைப்புகளை அமைத்திருக்கிறார்கள். இராமநாத புரத்தைப் பிரிக்கும் போது 8-ஆக இருக்கிறது, இரண்டு மாவட்டத்தை அதிகப்படுத்தியதால். அதைப் போலவே



1986 ஏப்ரல் 26] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

மதுரையைப் பிரிக்கும்போது 9-ஆக இருக்கிறது, ஒரு மாவட்டத் தை அதிகப்படுத்தியதாலே. இது தவிர மற்ற மாவட்டங்களில் சுகாதாரப் பணியாளர் அமைப்புகளையெல்லாம் ஏன் இன்னும் வைக்காமல் இருக்கிறீர்கள்? அங்கெல்லாம் சுகாதாரத் தேவையே இல்லாமல், அவர்கள் நல்ல வாழ்க்கையை நடத்துகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

நீங்கள் கொடுத்திருக்கிற குறிப்பிலே மகளிர் நலம், குழந் தைகள் நலம், ஊனமுற்றோர் நலம், தமிழ்நாடு சமூக நல வாரியம் என்ற இந்த நான்கு தான் சமூக நலத்துறையின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்லி இருப்பதிலே பல் வேறு துறைகளில் 975 பெண்களுக்கும், பனைப் பொருள் தொழில்களில் 250 பெண்களுக்கும், கிராமப் புற நூற்பு மையங் களில் 57 பெண்களுக்கும், சாக்குக்கட்டி மற்றும் மெழுகுவர்த்திக் கூடங்களில் 60 பெண்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட் டுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு மாநிலத் திலே, 5 கோடி மக்கள் வாழ்கின்ற இந்த மாநிலத்தில், ஏறத்தாழ 2½ கோடி பெண்கள் இருக்கின்ற ஒரு மாநிலத்திலே, மாநிலம் முழுமைக்கும் 50, 100 என்ற அளவில் வேலை வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கின்றபொழுது சமூக நலத் துறை சரியாக செயல்படவில்லை என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற வருடம் சீருடை கொடுப்பதில் 40,000 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்திருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் அந்தப் பெண்கள் எல்லாம் அதைத் தைக்கவில்லை என்பதையும், தனியார்தான் தைத்து தந்திருக்கிறார்கள் என்றும் அவர்களுக்குக் கூலி கூட கொடுக்கப்படவில்லை என்றும் இங்கே சட்டமன்றத்தில் பேசப்பட்டது.

கர்ப்பிணியாக இருக்கும் பெண்களுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பாகவும், அதற்குப்பிறகும் மாதம் ரூ. 50 வீதம், கொடுக்கப்பட வேண்டுமென்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஜனதா கட்சி ஆளும் கர்நாடகத்தில் இந்த விதமான முறை வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

முதியோர் உதவித் தொகையின் மூலம் 2,80,032 பேர் பலன் அடைந்திருக்கிறார்கள். மாதத்திற்கு ரூ. 35. இது உயர்த்தப் பட இருக்கிறது, பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சென்ற ஆண்டு கொள்கைக் குறிப்பிலே அமைச்சரவர்கள் சொன் னார்கள். சென்ற ஆண்டு கொள்கைப் புத்தகத்தில் ரூ. 35 கொடுப்பது பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மானியக் கோரிக்கையில் எவ்வளவு கொடுக்கிறார்கள் என்ற கணக்கு எனக் குத் தெரியவில்லை. ஆகவே அதுவே தொடரப்பட்டிருக்கிறதா? அல்லது மாற்றப்பட்டிருக்கிறதா? மாண்புமிகு உறுப்பினர் லட்சுமி

அவர்கள் பேசும்போது ரூ. 30 என்று குறிப்பிட்டுச் சொல்ல போது அமைச்சர் அவர்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை. ஆனால் இந்தப் பக்கத்திலுள்ள உறுப்பினர் பேசும்போது ரூ. 30 என்று சொல்லும்போது ரூ. 35 என்று அவர்கள் விளக்கம் சொன் னார்கள். அப்படி ஏற்கனவே ரூ. 35 கொடுக்கப்படுகிறது.

(பிற்பகல் 12.10)

சென்ற ஆண்டு கூட்டுவதற்கு பரிசீலனை செய்யப்படுவதாகச் சொன்ன தொகையை ஏன் இன்னும் கூட்டிக் கொடுக்கவில்லை? சென்ற ஆண்டு நான் பேசுகிறபோது 100 ரூபாயாவது குறைந்த பட்சம் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். அது சாத் தியம் இல்லாவிட்டால் 50 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென் பது தான் என்னுடைய வேண்டுகோள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இன்னொன்று, அவர்கள் வரிசையிலே இருக்கிறார்கள். எலிஜி பிள் என்று, தகுதிபெற்றவர்கள் என்று இருந்தாலும் உணவு மட்டும் கொடுக்கிறார்கள். 35 ரூபாய் கொடுப்பதில்லை. என்ன வரிசை என்று எனக்குத் தெரியவில்லை. தாலுகா ஆபிசிலே கேட்டால், எங்களுக்கு இவ்வளவு தான் கோட்டா இருக்கிறது என்கிறார்கள். அவர்களுக்குப் பிறகு வந்து சேருகிறவர்கள் இருக்கிறார்கள், அவர்களை எப்படிச் சேர்ப்பது என்றால் இருக்கிற முதியோர்களிலே யாராவது இறந்துவிட்டால் சேர்த்துக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். இது என்ன திட்டம் என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் கொடுக்கக்கூடி யதை அனைவருக்கும் கொடுக்க வேண்டும். நாங்கள் ..க யெழுத்துப் போட்டு அனுப்பினால் கூட, டாக்டர் சர்டிபிகேட் ஆர்.ஐ. சர்டிபிகேட் வேண்டியிருக்கிறது. இவை எல்லாம் தேவைதானா ? அவர்களோ, முதியவர்கள், வாழ வசதியற்ற வர்கள். அனாதைகள் ஆக இருக்கும்போது இதற்கெல்லாம் செலவழிப்பதற்கு அவர்களுக்கு எங்கே பணம் இருக்கிறது? அந்தக் காரணத்தினால் சில பேர்கள் மனுக்கூடப் போட முடி யாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். வாக்காளர் ஜாபி தாவிலே இருக்கிற வயதைப் பார்த்து உதவி செய்ய வேண்டும். வாக்காளர் ஜாபிதா என்பது அரசால் அச்சடிக்கப்படுவது. அதிலே வயதைச் சரிபார்த்து நீங்கள் அவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டும். டாக்டர் சர்டிபிகேட் மற்ற சர்டிபிகேட் என்று இவர்களை அலைய வைக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மறுவாழ்வு. 3 ஆண்டுகளுக்கு 10 பேர்களுக்குத் தான் செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் வருடத் திற்கு 3 பேர்கள். அப்படியானால் மறுவாழ்வு பெறுவதற்கு யாரும் முயற்சி எடுக்கவில்லையா அல்லது அந்த அமைப்புச்



சரியாக இயங்கவில்லையா என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதிலே இன்னும் என்ன என்னவோ பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளி, பிற்காப்பு இல்லங்கள் இப்படிப் பலப்பல..

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : துணைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், யாருக்கு மறுவாழ்வு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு விளக்கம் கொடுக்கப்படும்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்** : துணைத் தலைவர் அவர்களே, அனாதைப் பெண்கள் மறுவாழ்வு பெறுவதிலே 3 வருடத்திலே 10 பேர்கள் தான் பெற்றிருக்கிறார்கள் என்று இந்தப் புத்த கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மறுவாழ்வு பெறுவதற்கு யாரும் சரியாக அப்ளிகேஷன் போடவில்லையா, அல்லது இந்தத் துறை சரியாக இயங்கவில்லையா என்பது தான் என்னுடைய கேள்வி. பல சீர்திருத்தப் பள்ளிகள் பற்றி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மாநிலத் திலே அவை 10, 15 தான் இருக்கிறது. சில மாவட்டங்களிலே தான் சமூக நலத்துறை இயங்குவதாகத் தெரிகிறது. அனைத்து மாவட்டங்களிலும், மாநிலம் பூராவும் அது சரியாக இயங்க வில்லை. காது கேளாதோர் பள்ளிகள் அரசுப் பள்ளிகள் 9, தனியார் 11 என்று இருக்கிறது, அதைப் போலவே பார்வை யற்றோர் பள்ளிகள் அரசு சார்பிலே 11, தனியார் 9 என்று தான் இன்று இருக்கிறது. இப்படி ஒரு மாநிலம் பூராவும் 20 தான் இருக்கிறது. மாவட்டத்திற்கு ஒன்றாவது அல்லது இரண்டு என்ற முறையிலாவது அரசு சார்பாக வைக்க வேண்டு மென்ற வேண்டுகோளை நான் வைக்க விரும்புறேன்.

5 ஆயிரம் பேர்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பெண் சுகாதாரப் பணியாளர், ஒரு ஆண் சுகாதாரப் பணியாளர் இருப்பதாகப் போடப்பட் டிருக்கிறது. 1,600 சுகாதார நிலையங்கள் கட்ட இருப்பதாகவும் 265 கட்டியிருப்பதாகவும் மீதியைக் கட்ட இருப்பதாகவும் சென்ற ஆண்டு குறிப்பிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே 1075 கட்டப்படுவதாகச்சொல்லப் பட்டிருக்கிறது. அப்படியானால் இந்த 1,600-ஐ ஒரு வருட காலமாக கட்டி முடிக்கவில்லையா 800 சுகாதார நிலையம் கட்டுவதற்கு ஒரு வருடம் போதாதா ? என்று நான் கேட்க விரும்புகிறேன். நான் ஏற்கனவே சொன்னதைப் போல் அந்த 6 மாவட்டங்களுக்கு மட்டும்தான் இந்தத் திட்டமா ? மற்ற மாவட்டங்களுக்கு இல்லையா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்** : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அந்த 6 மாவட்டங்களில் உலக வங்கி ஊட்டச் சத்துத் திட்டத்தின் அடிப்படையில் சுகாதார மையங்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

[1986 ஏப்ரல் 26

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது, மற்ற மாவட்டங்களுக்கு சுகாதார மையங்கள் பற்றிக் குறிப்பிடவில்லையே. மற்ற மாவட்டங் களிலே சுகாதாரம் சரியாக இருக்கிறதா ? அங்கே எல்லாம் ஏன் சுகாதார மையங்கள் நிறுவப்படவில்லை ? அவர்கள் எல்லாம் சுகாதார வசதியோடு இருக்கிறார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாவட்டங்களில் பல திட்டங்கள் இருக்கின்றன. அந்த 6 மாவட்டங்களில் உலக வங்கி ஊட்டச் சத்துத் திட்டத் தின் அடிப்படையில் இருக்கின்றது. இன்னும் பல திட்டங்கள் இருக்கின்றன. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம். முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் இப்படி பல்வேறு திட்டங் கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது 5 ஆயிரம் பேர்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்று சொல்கிறீர்கள். 5 கோடி பேர்கள் இருக்கிறபோது மாநிலம் முழுவதும் எத்தனை நிறுவ வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி. 5 ஆயிரம் பேர்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்கிற போது மாநிலம் பூராவும் நிறுவ வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறு மாவட்டங் களுக்குத்தான் உலக வங்கியின் நிதி உதவி கொடுக்கப்பட்டிருக் கிறது. அந்த அடிப்படையிலேதான் ஆறு மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து செய்யப்பட்டு வருகிறது. யூனிசெப் நிறுவனத் தின் மூலமாக சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு செயல் பட்டு வருகின்றன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இதைத் தவிர வேறு மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கின்ற வாய்ப் புக்களைச் செய்யுங்கள் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினரவர்களுடைய தகவலுக்காகச் சொல்லுகிறேன். "World Bank Projec" என்பது முதலிலே பைலட் ஸ்கீமாக மதுரை மாவட்டத்தில் உள்ள கொட்டாம்பட்டி என்ற இடத்தில் ஆரம் பிக்கப்பட்டு, ஆறு மாவட்டங்களில் செயலில் கொண்டு வரப்





பட்டிருக்கின்றது. அதேமாதிரி சற்று வேறுபாடு உள்ள டேனிடா திட்டம் இரண்டு மாவட்டங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றது. ஆகவே, எங்கெங்கு முடியுமோ, எந்தெந்த மாவட்டங்களுக்கு வாங்க முடியுமோ அதற்கு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, அவர்கள் வெளிநாடுகளிலே உள்ள நிறு வனங்களோடு World B nk, DAN DA projec போன்றவற்றிற்கு projec are s என்று ஒட்டு மொத்தமாகப் பெயர் வைத்திருக் கிறார்கள் We ry to increase the projec areas s far s possible. நம்மால் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு சொல்லிச்சொல்லி வாங்கிக் கொண்டிருக்கிறோம். இதுபோக இன்னும் இரண்டு மாவட்டங்கள் இருக்கின்றன. மற்ற மாவட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்கவில்லை என்றால் நம்முடைய மாநில அரசின் நிதி நிலைமையை வைத்துக் கொண்டே திட்டங் களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவரவர்களே, அதைத்தான் நான் அமைச்சரவர்களிடத்திலேயிருந்து எதிர் பார்த்தேன். நம்முடைய மாநிலத்திலே உள்ள பணத்தின் மூலமாக ஆரம்பிக்கக் கூடாதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

சுகாதாரப் பணியாளர்களாக இருப்பவர்கள் திருமணம் ஆகாத பெண்களாக இருக்க வேண்டும் என்று இருப்பதாக நான் அறி கிறேன். அது பற்றி எனக்குச் சரியாகத் தெரியவில்லை. அப்படி சுகாதாரப் பணியாளர்கள் திருமணம் ஆகாத பெண்களாக இருக் கிறார்கள். கிராமங்களில் உள்ளவர்கள், தங்களுக்கு இவர்கள் மருந்து கொடுப்பதில்லை, மாத்திரை கொடுப்பதில்லை, ஊசி போடுவதில்லை என்று புகார் சொல்கிறார்கள். இந்தப் பணி யாளர்களைக் கேட்டால், இவைகளையெல்லாம் காலாகாலத் தில் அவர்கள் கேட்பதில்லை, இரவு நேரங்களில் வந்து தொந்தரவு செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே, அந்தப் பணியாளர்களைப் போடுகின்றபொழுது திருமணம் ஆனவர்களைப் போட்டால் என்ன என்றுதான் கேட்கிறேன். திருமணம் ஆகாதவர்களைப் போடுவதால் அவர்கள் வேறு யாரையாவது அண்டி வாழ வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இல்லையென்றால் அந்த ஊரை விட்டு வேறு எங்காவது சென்று இருக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தக் கிராமங்களில் உள்ள இடங்களில் இந்தப் பெண்கள் தங்குவது இல்லை. எனவே இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை மூலமாகவும், சமூக வளர்ச்சித் துறை மூலமாகவும் கட்டப்படுகின்ற கட்டிடங்களை அமைச்சர் கள் நகரங்களுக்கு வந்து சிறப்பு விழாக்களில் திறந்து வைத்து

விட்டுச் செல்கிறார்கள். இப்படி இந்த ஊரக வளர்ச்சித் திட்
டத்தின் மூலமாக கட்டப்படும் அல்லது சமூக வளர்ச்சித் துறை
மூலமாகக் கட்டப்படும் கட்டிடங்களை நகரங்களில்
அமைச்சர்கள் வந்து திறந்து வைத்து விட்டுச் செல்லுகின்ற
பொழுது கிராமங்களுக்கு வராமல் சென்று விடுகிறார்கள்.
தான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அமைச்சர்க
ளெல்லாம் கிராமங்களுக்கு வந்து பாருங்கள் ; அந்த
விழாக்களைக் கிராமப்புறங்களிலே நடத்துங்கள் ; நேரடியாக
அங்குள்ள குழந்தைகளைப் பாருங்கள் ; அங்கே
உள்ள சத்துணவுக் கூடங்களைப் பாருங்கள் ; இப்படி
இவைகளையெல்லாம் நேரடியாகப் பார்க்க வேண்டுமென்று
அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

சமூக நலத்திலே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.
பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியைப்பற்றி, தராசு பத்திரி
கையிலேகூட வந்திருக்கிறது. இரண்டு பெரிய பிரச்சினைகள்
இருக்கின்றன. அதில் ஒன்று, வரதட்சிணைக் கொடுமை.
இரண்டாவது, போலீசில் புகார் கொடுத்தும் கேஸ் எடுக்க
வில்லை. ஒரு மாத காலமாக அந்தப் பெண்ணை அடித்துக்
கொண்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் சமூக நலத்துறை
எடுத்துச் செயல்பட வேண்டும். ஆதரவில்லாத ஏழைத்தாய்
போலீசில் புகார் கொடுத்து அதை கேஸாக எடுக்கவில்லை
என்றால், சமூக நலத்துறை அந்தப் பிரச்னையை எடுத்து
தீர்க்க வேண்டும். பெண்கள் மான பங்கம் செய்யப்படுவது,
பெண்கள் ஏமாற்றப்படுவது ஆகியவைகளைத் தடுப்பதற்காக
இந்த சமூக நலத்துறை பாடுபட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அனாதைக் குழந்தைகளைப்பற்றிச் சொல்லும்பொழுது,
250 குறியீட்டெண்ணிக்கை கொண்ட 20 ஆதரவற்ற குழந்
தைகள் பராமரிப்பு இல்லங்கள் பராமரிக்கப்படுகின்றன
என்று சொல்கிறீர்கள். இப்படி 20 இடங்களில் இந்த அனாதைக்
குழந்தைகளுக்கான இல்லங்கள் இருக்கின்றன. இதை அதிகப்
படுத்த வேண்டும். அனாதைக் குழந்தைகள் தாங்கள்
அனாதைகள் என்று எண்ண முடியாத அளவிற்கு ஏற்பாடுகளைச்
செய்து கொடுத்து பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

சத்துணவுத் திட்டத்திலே 2 வயது முதல் 4 வயது வரையுள்ள
பயன்பெறும் குழந்தைகள் எண்ணிக்கை ஏறத்தாழ 23 இலட்சம்
என்று சொல்கிறீர்கள். இந்தத் திட்டத்தினால் ஏழை மக்க





நக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது. அதை நாம் ஒத்துக்
கொள்ளலாம்** குழந்தைகளுக்குப் பயன்படவில்லை என்பதைச்
சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. 2 வயது முதல் 4 வயது
வரையுள்ள பயன்பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 23
இலட்சம் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 12-20).

கணக்கெடுக்கிறார்
இருக்கிற அனைத்துக் குழந்தைகளைக் ... 44 பைசா
னா என்று தெரியவில்லை. ஒரு குழந்தைக்கு
இந்த விலை
செலவழிக்கப்படுவதாக சொல்லும்போது என்று எப்படிச்
பாசியில் சத்துணவுத் திட்டம் நல்ல திட்டம் என்றெல்லாம்
சொல்லமுடியும். தன்னிகரில்லா திட்டம் அது அடுத்து
வர்ணிக்கப்படுகிறது. (மணியடிக்கப் பெற்றது). சத்துணவு
நடும்ப நலத்திட்டம். இந்தத் திட்டத்திற்கு எடுத்துக்
அமைப்பாளர்களை பயன்படுத்த வேண்டாம் என்று
கூறி, வாய்ப்பு அளித்தமைக்குநன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு பெரியவர் பேசும்பொழுது
ஒரு கருத்தைச் சொன்னார். அது தவறான கருத்து என்பதால்,
தயவுசெய்து அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் சொல்லும்போது, * *
ஆகவே, அதை நீக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்லிப்பிங்காகச்
சொல்லக் கூடாது. ஆகவே, அப்பகுதி நீக்கப்படுகிறது.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சமூகநலத் துறையின் மூலமாக, 1986–87
ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை எண். 30-ன் கீழ்
ரூ. 76,04,25,000 நிதி ஒதுக்கீடு கோரிக்கையின் பேரிலே நான்
சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில்
என்னுடைய ஒருசில கருத்துக்களை உங்கள் முன்னே படைக்க
விழைகின்றேன்.

மகளிர் நலம், சமூக நலமாக மாறி, அது மகளிர் நலம்
மட்டுமல்ல, குழந்தைகள் நலம், ஊனமுற்றோர் நலம், மற்றும்
நல வாழ்வு, அனாதைகள் மற்றும் உதவி வேண்டுவோர் ஆகிய
அனைவரின் நலன்களையும் கவனிக்கும் பொருட்டு செயல்பட்டு
வருகின்ற விதத்திலே, மகளிர் நலமாக இருந்தது, சமூக நலமாக
மாறியிருக்கிறது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப் பெற்றது.

[திருமதி டி. யசோதா] [1986 ஏப்ரல் 26

ஒட்டுமொத்தமாக, இந்தப் புத்தகத்தைப் படித்தபொழுது' எனக்கு பூலோக சொர்க்கமே கண்ணுக்குள் வந்து விட்டது; அந்த அளவுக்கு கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கின்ற திட்டங்களைப் பார்க்கின்றபொழுது, இவ்வளவும், உண்மையிலே ஏழை, எளிய மக்கள் அனைவருக்கும், இடைத் தரகர்கள் இல்லாமல், போய்ச் சேருமானால், இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலுடைய ஆட்சியிலேயே மத்திய அரசாங்கத்தின் உதவியோடு தமிழகம் இருப்பது போல், சொர்க்கத்தை அடைந்துவிடமுடியும் என்ற அங்கலாய்ப்பிலேயே அதைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால், நிலைமை நிச்சயமாக அப்படி இல்லை. இன்றைக்கு தமிழக முதல்வருடைய சத்துணவுத் திட்டம் இல்லை, அந்த வளமான திட்டம் இல்லை யென்றால், சமூகநலத் துறையிலேயே பெரும் பங்கு நலம் இல்லாமலேயே போய் இருக்குமோ என்ற அச்சச் சூழ்நிலை கூட இருக்கிறது. காரணம், தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் பாலூட்டும் பெண்கள் என்று தரம் பிரித்து, பயன் அடையக் கூடிய வகையிலே இன்றைக்கு இந்தச் சத்துணவுத் திட்டமும் பயன்பட்டு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

அது மட்டுமல்ல, இன்றைக்குச் சமூக நலத் துறையின் மூலமாக பல மகளிருடைய மன்றங்களை அமைத்து, அந்த மகளிர் மன்றங்களின் மூலமாக, பல தொழில்களை உருவாக்கி வருகிறார்கள். தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்குப் பதிவு மற்றும் கணக்குத் துறையில் பயிற்சி, எழுதுபொருள் உற்பத்தி, பனைப் பொருள் தொழில்கள், சாக்குக்கட்டி மற்றும் மெழுகு வர்த்திக் கூடம், தீப்பெட்டித் தொழில், கயிறு தொழில், பட்டு நூல் எடுப்பு, தையல் தொழில் கூட்டுறவுச்சங்கங்கள் என்று இருப்பது மட்டுமல்லாமல், விதவைகள் மூலம் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகள் போன்ற பல தொழில்களை இந்த மகளிர் மன்றத்தினுடைய சார்பிலே நடத்துவதற்கும், தனிப் பட்டவர்களுக்கு இந்தத் துறை கொடுத்து உதவுவதற்கும் இன் றைக்கு வழி வகை காண்கின்றதை இந்தக் குறிப்பேட்டிலே நாம் பார்க்கின்றோம். நான் உண்மையிலேயே இதனை பெரு மையாக எடுத்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதெல்லாம் ஒன்றுதான் இன்றைக்கு நிறைய மாதர் சங்கங்கள் இருக்கின்றன. அந்த மாதர் சங்கங்களில் எல்லாம் பல அமைப்புகள் கொழுத்துவிட்டிருக்கின்றன. பல மாதர் சங்கங்கள் எல்லாம் மிகப் பெரிய அளவிலே வளர்ந்துகொண்டி ருக்கின்றன. எங்களுடைய பகுதியிலே ஒரு பழமொழி சொல் வார்கள். அதனை சட்டமன்றத்திலே அனுமதிப்பார்களா, இல்லையா என்பது தெரியாது என்ற காரணத்தினால் அதை கொஞ்சம் மறைத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். வயிற் றுக்கு மேலே ஈரம் என்று சொல்வார்கள். அதுபோல் வயிற் றுக்கு மேலே ஈரம் இருக்கின்ற மகளிர் மன்றங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் தோன்றிய உடனே அழிக்கப்படுகின்ற



1986 ஏப்ரல் 26] [திருமதி டி. யசோதா]

சூழ்நிலையில் பல மகளிர் மன்றங்கள் இருக்கின்றன. பல இடங்களில் மகளிர் மன்றங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. மன்றங்களை தோற்றுவிக்கின்றவர்கள் அத்தனை பேரும் கல்வி அறிவிலே தேர்ச்சி பெற்றவர்கள், முதிர்ச்சி பெற்றவர்கள் என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. அப்படிப்பட்டவர்களை பயிற்றுவித்து, அவர்கள் மன்றம் அழிந்து விடாமல் பாதுகாத்து அந்த மன்றங்களை ஊக்குவிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் இதுகாறும் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பது புரியாத புதிராக இருக்கிறது. புத்தகத்திலே பார்த்து இருக்கிறோம். அவ்வை இல்லத்திற்கு இவ்வளவு கொடுத்து இருக்கிறோம், இந்த அமைப்பிற்கு இவ்வளவு கொடுத்து இருக்கிறோம் என்று நீங்கள் எழுதி இருப்பதையெல்லாம் பார்த்து இருக்கிறோம். இவை அத்தனையும் மிகப் பெரிய அமைப்புகள். இந்த மிகப் பெரிய அமைப்புகளுக்கு நீங்கள் உதவி செய்யவில்லை என்றாலும் அவர்கள் பல நாட்டு உதவிகளைப் பெற்று அமைப்புகளை வாழ்வித்துக் கொள்வார்கள். உங்களுடைய உண்மையான உதவி எங்கே வேண்டும் என்று சொன்னால், அடித் தளத்திலே, வறுமைக் கோட்டின்கீழ் இருக்கின்ற ஏழை எளிய மக்கள் இருக்கின்ற அந்தப் பகுதியிலே வேண்டும். அங்கு மாதர் சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட மாதர் சங்கங்கள் வளர்ந்தால்தான் உண்மையிலேயே நமக்கு நல்ல எதிர் பார்ப்புகள் கிடைக்கும் என்பதை நான் மிகப் பணிவோடு சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகளிர் மன்றங்கள் என்ற அடிப்படையில் தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசாங்கம் ஊக்கத் தொகை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் மாநில அரசு அவர்கள் என்னென்ன கல்விக் கூடங்களை நடத்துகின்றார்களோ அதற்கெல்லாம் அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் ஊக்கத் தொகைகள் கொடுக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியில் பதில் சொல்ல வேண்டும். இடையில் குறுக்கிட்டால் உறுப்பினர்கள் நேரத்தை அதிப்படுத்துமாறு கேட்கிறார்கள்.

**திருமதி டி. யசோதா :** துணைத் தலைவர் அவர்களே, ஊக்கப்படுத்தக் கூடாது என்று சொல்லவில்லை. அவர்களுக்கு நீங்கள் ஊக்கப்படுத்தித்தான் ஆகவேண்டும் என்பதில்லை என்கின்ற நிலைக்கு அவர்கள் போய்விட்டார்கள். அவர்கள் வளர்ந்துவிட்டார்கள். உங்களுடைய ஊக்கத்தை அவர்கள் எதிர் பார்க்கவில்லை. இருப்பினும் உங்களுடைய எண்ணத்திற்கு நீங்கள் ஊக்கப்படுத்துவது குறைந்தபட்ச ஊக்கமாக இருந்து அது இல்லாதவர்களுக்கு அதிகபட்ச ஊக்கமாக..................

[1986 ஏப்ரல் 26

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஊக்கப்படுத்தவில்லை. மத்திய அரசாங்கம் ஊக்கப்படுத்தச் சொல்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் நாங்களும் ஊக்கப்படுத்துகின்றோம்.

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊக்கப்படுத்தச் சொல்வதால் நீங்கள் அதிலே உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். சட்டமன்றத்திலே இருக்கின்றவர்கள், தமிழகத்தினுடைய நிலைமையைப் புரிந்தவர்கள் இப்படிச் சொல்கிறார்கள். இல்லாதவர்களுக்கு அது போய் சேர வேண்டும் என்று சொன்னால்....................

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : அதை நீங்களே சொல்லலாம்.

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே, எங்களை கூப்பிட வேண்டிய இடத்திலே கூப்பிட்டால் சொல்ல வேண்டிய இடத்திலே அதை கட்டாயமாக சொல்வோம். அதை எந்த இடத்திலும் சொல்வோம். இந்தப் பொறுப்பிலே நீங்கள் இருக்கின்ற காரணத்தினால் அந்தத் துறை அமைச்சரை நீங்கள் சந்திக்கின்றபோது இந்த மன்றத்தினுடைய கருத்துக்களை நீங்கள் அவர்கள் முன்னாலே வைக்கலாம் என்ற கருத்தை குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் சமூக் நலத் துறை அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கின்ற மாதர் சங்கங்கள் இருக்கின்றதே, அதில் இந்த நலத் துறை மூலமாக எத்தனை தாழ்த்தப்பட்ட மகளிர் சங்கங்கள் இருக்கின்றன என்பதை விரல்விட்டு சொல்ல முடியுமா ? இங்கே கணக்கிலே ஒரு பகுதியிலே கொடுத்திருக்கிறார்கள். ஏதோ குறிப்பிட்ட சில மையங்கள் மலைப் பகுதியிலே இருக்கின்றன. அந்தப் பகுதியிலே கொஞ்சம் பேர் மாதர் சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கங்கள் மூலமாக உதவி செய்வதாக ஒரு கணக்கு கொடுத்து இருக்கிறீர்கள்.

(பிற்பகல் 12–30)

நான் உங்களிடத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒட்டுமொத்தமாக மகளிர் சங்கங்கள் இன்றைக்கு இருப்பதிலே எத்தனை தாழ்த்தப்பட்ட அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த மகளிருக்காக சங்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன ? எத்தனை இன்றைக்கு வளர்ந்து வந்திருக்கின்றன என்று சொன்னால், குறிப்பிட்டுச் சொன்னால் நான்கைந்துகூட இருக்காது என்பதை மிக வேதனையோடு நான் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து இங்கே ஒரு கணக்கு கொடுத்திருக்கிறீர்கள். சத்துணவு கொடுக்கப்படும் குழந்தைகளுக்குச் சீருடை தைத்துக்கொடுப்பதில் 59,43,338 பேருக்கு தைத்துக் கொடுக்கப்பட்டது என்றும் 3.64 கோடி ரூபாய் மகளிருக்கு வருமானம் ஏற்பட்டிருக்கிறது



என்றும் அதிலே 40,000 மகளிர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். உங்களுக்கு இதைக்கூட நான் சொல்ல விரும்புகிறேன் ஒரு ஆலோசனையாக. இன்றைக்கு எக்ஸ்போர்ட் துணிகளைக் கொண்டு வந்து பல தனிப்பட்ட முதலாளிகள் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் தான் தையல் பயிற்சி கொடுக்கிறோம். உதவித் தொகை கொடுக்கிறோம். அப்படி உதவித் தொகை பெற்று பயிற்சி பெற்று வருகிறவர்கள் எக்ஸ்போர்ட் கடையில் வேலை செய்கிறபோது, அந்த எக்ஸ்போர்ட்டை ஏன் நம்முடைய அரசுத் துறையில் நடத்தி அந்த பயிற்சி பெற்று வருகிற மாணவிகள் அதைச் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தக்கூடாது? அப்படி ஏற்படுத்தினால் தனிப்பட்டவர்கள் இதில் பரவி வருகிற நிலைமைகளைத் தடுக்கலாம் அல்லவா ?

மகளிர் மன்றங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு 50 உள்ளன. மன்ற அமைப்பாளர்களுக்கு 3 மாதத்திற்கு 15 ரூபாய் மதிப்பூதியம் கொடுக்கிறோம். ஒரு அம்மாவுக்கு அதாவது ஒரு அமைப்பாளருக்கு மூன்று மாதத்திற்கு 15 ரூபாய். ஏன் மாதத்திற்கு 5 ரூபாய் என்று போடுங்களேன்? அப்போதுதான் தெரியும் அதனுடைய உண்மையான நிலவரம். இது எப்படி இருக்கிறது என்றால், என்னுடைய மகள் தினம், தினம் குளிப்பாள், ஆனால் என்னுடைய மருமகள் தீபாவளிக்குத் தீபாவளி குளிப்பாள் என்று சொல்லுவது மாதிரி இருக்கிறது. ஒரு மாதத்திற்கு 5 ரூபாய் வருகிறது என்றால் அந்த மதிப்பூதியத்தை வைத்துக் கொண்டு அந்தப் பெண்மணியாலே எப்படி தான் ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்பைச் சரியாகச் செய்ய முடியும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே அந்த ரூ. 15-ஐ ரூ. 30-ஆக அல்லது 50-ஆக ஆக்குங்கள். அதனால் ஒன்றும் குறைந்துவிடாது. அந்த வகையில் அதனை உயர்த்த வேண்டும்.

அடுத்து சிறப்பாகச் செயல்படும் மகளிர் மன்றங்களுக்குப் பரிசுத் தொகை ரூ. 1,000, ரூ. 600 என்று கொடுக்கிறோம். இதிலே ஏன் ரேட் டிவைட் பண்ணி வைத்திருக்கிறீர்கள்? தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாசிகள், முற்பட்டவர்கள், பிற்பட்டவர்கள் என்றெல்லாம் பிரித்து வைத்திருப்பது மாதிரி ஏன் இதிலேயும் வைத்திருக்கிறீர்கள்? அப்படி டிகிரி வாரியாகப் பிரித்து வைத்துக் கொடுக்காமல் 400 ரூபாய் என்றால் எல்லோருக்கும் அதையே கொடுங்கள், 1,000 ரூபாய் என்றாலும், 5,000 ரூபாய் என்றாலும் எல்லோருக்கும் ஒரே சீராக கொடுங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. இந்த வித்தியாசம் வேண்டாம் என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விதவைகளின் பெண்களுக்குத் திருமணம் செய்ய நாம் உதவி செய்கிறோம். அது நல்ல திட்டம். ஆனால் ஒரு பெண்ணுக்குத்தான் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள். ஒரு

விதவைத் தாய்க்கு இரண்டு பெண்களுக்கு மேல் இருந்தால் அடுத்த பெண்ணுக்கு எப்படி கல்யாணம் செய்து வைப்பாள்? ஒரு பெண்ணுக்குதான் சமூக நலத்துறையின் மூலம் உதவி கொடுக்கிறோம். நான்கு பெண்கள் இருந்தால் அந்த நான்கு பெண்களையும் அந்த அம்மா கட்டிக் கொடுக்க எவ்வளவு கஷ்டப்படுவார்கள்? ஒரு பெண்ணைக் கட்டிக் கொடுத்து மருமகன் வந்ததற்குப் பிறகு அந்த மருமகன் மற்ற பெண்களைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா? எனவே விதவைத் தாய்க்கு உதவி செய்கிறபோது கருணை உள்ளத்தோடு அந்தப் பிரச்சினையை அமைச்சர் அவர்கள் அணுகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். உங்களுக்குச் சிரமம் இருந்தால் நம்முடைய தமிழக முதல்வர் கருணை மனம் கொண்டவர், தாய்மனம் கொண்டவர், எனவே விதவைத் தாய் பிரச்சினைகளை அவரிடத்திலே சொன்னால்கூட பரவாயில்லை. ஒரு பெண்ணுக்கு எத்தனை பெண்கள் இருந்தாலும் கல்யாணம் பண்ணிவைக்கலாம் என்று அவர்கள் சொல்வார்கள். ஆகவே விரைவிலே நீங்கள் அந்த வகையில் அறிவிக்க வேண்டும்.

அடுத்து ஒருங்கிணைந்த குழந்தை வளர்ப்புப் பணித் திட்டம். பாராட்டப்படக் கூடிய திட்டம்தான் இது. கருவிலே இருக்கிற குழந்தைக்கும் ஊட்டச் சத்து கொடுக்கிறோம். அது பிறந்து வந்ததற்குப் பிறகு 6 வயது வரையில் அந்தக் குழந்தைகளுக்குச் சுகாதாரம், ஊட்டச் சத்து மற்றும் வேண்டிய அத்தனை காரியங்களையும் மனவளர்ச்சித் திட்டம் உட்பட செய்து கொடுக்கிறபோது உண்மையிலேயே குழந்தை பெறுகிற தாய்மார்களுக்கு எந்தக் கவலையும் இல்லை. அவர்கள் பெறுவதற்கு முன்னாலேயே இந்த அரசு அவர்களைக் காப்பாற்றுகிறது. பெற்ற பிறகும் 6-வது வயது வரை அந்தக் குழந்தையை திடகாத்திரம் உள்ள குழந்தையாக மாற்றுகிற திட்டம் இருக்கிறது என்று சொன்னால் அது சாதாரணத் திட்டமா? இது எப்பேர்ப்பட்ட திட்டம்? ஆனால் அது என்னுடைய தொகுதிக்குக் கிடையாது. நம்முடைய ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள். சில சுகாதார மையங்கள் எல்லாம் சில பகுதிகளுக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலேயும் மையங்கள் தொடங்கவில்லை என்றும் 'எங்களுக்கு ஏன் கொடுக்கவில்லை, எல்லோருக்கும் கொடுக்க வேண்டாமா' என்றும் சொன்னார்கள்.

அந்தத் திட்டம் கூட எனக்கு, என்னுடைய தொகுதிக்கு கிடையாது. ஆகவே அமைச்சர் அவர்கள் இரக்கப்பட்டு என்னுடைய தொகுதிக்கும் அந்த சலுகையை செய்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அதேபோல, அனாதைப் பெண்களுக்கு திருமணம் செய்வதற்கு நம்முடைய அரசு உதவி செய்கிறது. அதைக்கூட நான் வரவேற்கிறேன், அந்தக் குறிப்பிலே ஒரு எழுத்து எழுதி





யிருக்கிறோம். நம்முடைய அறிக்கையிலே, குறிப்பிலே என்ன எழுதியிருக்கிறோம் என்றால், "அனாதைப் பெண்களுக்கு உதவி செய்ய தமிழ்நாடு அரசு ஒரு தனித் திட்டத்தை செயல்படுத்துகிறது. அதன்படி 18 வயது முதல் 30 வரையிலான அநாதைப் பெண்களுக்கு அவர்களது ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் குறைவாக இருந்தால் ஒருவருக்கு ரூ. 1,000 விதம் திருமண நிதி உதவி அளிக்கப்படும். ஒரு குடும்பத்திலிருந்து ஒரு அநாதைப் பெண் மட்டுமே இவ்வுதவியைப் பெற தகுதியுடையவர்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'ஒரு குடும்பத்திலிருந்து ஒரு அநாதைப் பெண்ணிற்கு மட்டுமே' என்றால் எப்படி? குடும்பம் என்று இருந்தால் எப்படி அநாதைப் பெண் ஆகும்? யாருமே இல்லை என்றால்தான் அனாதையே தவிர, ஒரு குடும்பம் என்று இருந்தால் அவள் எப்படி அநாதையாக முடியும்? அரசு தந்துள்ள அறிக்கையிலே 14-ஆவது பக்கத்திலே 15-ஆவது அயிட்டத்திலே அப்படிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே அதையும் பார்த்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல தையல் இயந்திரங்களை 1986-87-லே ஆயிரம் பேர்களுக்குக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். 22 மாவட்டங்கள் இருக்கின்றன. 22 மாவட்டங்களுக்கும் சேர்த்து ஆயிரம் பேர்களுக்கு என்று சொன்னால் எப்படி சரியாக இருக்கும்? அதை நீங்கள் அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் 'தையல் மெஷின்களைக் கொடுக்கிறார்கள், எங்களுக்கு எழுதி தாருங்கள்' என்று கேட்ட பெண்களுக்கெல்லாம் நான் நிறைய எழுதி எழுதி கொடுத்திருக்கிறேன். ஆனால் ஒருவருக்குக் கூட கிடைக்கவில்லை. நான் போய் 'என்ன உங்களுக்கு தையல் மிஷின் கிடைத்ததா' என்று கேட்டால், 'இல்லையம்மா எங்களை செலக்ட் பண்ணவில்லை' இந்த வருடத்து டார்ஜெட் முடிந்து போய் விட்டது, அடுத்த வருஷம் தான் என்று சொல்லுகிறார்கள் என என்னிடம் சொல்லுகிறார்கள். ஆனால் அடுத்த வருஷம், அடுத்த வருஷம் என்று சொல்லுகிறார்களே தவிர, ஒரு வருஷம் கூட கிடைக்கவில்லை. நானும் 1980-லேயிருந்து 1985 வரை 5 வருஷங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்காக எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனால் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் 22 மாவட்டங்களுக்கும் சேர்த்து வருடத்திற்கே ஆயிரம் தையல் மெஷின் தான் என்றால் அது யானைப் பசிக்கு சோளப்பொறிதான் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விதவைகளுக்கு திருமண வயது வரம்பை 30 என்று போட்டிருக்கிறார்கள். 30 வயதிற்குப் பிறகு, 35 வயதானால் அந்தப் பெண்கள், விதவைப் பெண்கள் திருமணம் செய்து கொள்ளக் கூடாதா? செய்து கொண்டால் இந்த

உதவித் தொகை கிடையாது என்று சொல்வது சரியல்ல.
இந்த உதவியே ஒன்றும் மிகப் பெரிய உதவி இல்லை. அந்த
நிலையில் இந்த வரம்பு எதற்கு? ஆகவே விதவைகளின் திரு
மணத்திற்கு வயது வரம்பை சற்று அதிகரிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, சத்துணவுத் திட்டத்தின் மூலமாக 84,315
பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அது உண்மை
யிலேயே பாராட்டப்படக்கூடிய ஒன்றுதான். இந்த சத்
துணவு எப்படி கொடுக்கப்படுகிறது என குறிப்பிலே
கொடுத்திருப்பதைப் பார்த்தால், அரிசி 80 கிராம், பருப்பு 10
கிராம், எண்ணெய் 3 கிராம், காய்கறி மற்றும் தாளிதம்—
50 கிராம் என்று அளவு கொடுத்திருக்கிறார்கள். இந்த
அளவின் பிரகாரம் தான் சத்துணவு கொடுக்கப்படுகிறதா?
நீங்கள் இன்ஸ்பெக்ஷன் போய் பார்த்தால் ஒருக்கால் அப்
படிக் கொடுக்கலாம். ஆனால் எனக்குத் தெரிந்த வரையில்
அப்படி கொடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் விரும்
பினால் நான் அழைத்துப்போய் என்னுடைய தொகுதியிலே
காட்டுகிறேன். எண்ணெயே இல்லாத உணவாகத்தான் அது
இருக்கிறது. எண்ணெயே இல்லாத சத்துணவு ஆகத்தான்
இருக்கிறது. ஆசிரியர்களைக் கேட்டால் 'நாங்கள் என்ன செய்
வது அம்மா, கொடுப்பதை வைத்துக் கொண்டுதான் நாங்கள்
செய்கிறோம்' என்று சொல்லுகிறார்கள். அந்த உணவு மிகவும்
வறட்சியாக இருப்பதனால் குழந்தைகளால் சாப்பிட முடிய
வில்லை. இந்த திட்டத்தை நாம் யாரும் கேட்டுக் கொண்ட
தனால் கொண்டு வரவில்லை. நாமாகக் கொண்டு வந்த
திட்டம். அதனால் அந்த திட்டத்தை சரிவர நடத்த வேண்டும்.
கணக்கிலே கொடுத்திருப்பதைப்போல நடத்த வேண்டும்.

அடுத்து, பழங்குடியினருக்கான குழந்தை நல மையங்கள்.
அதிலே ஆதிவாசிகளுக்கு எந்தெந்த இடங்களிலே என்று
சொன்னால் வடஆற்காடு, மதுரை, கன்னியாகுமரி, நீலகிரி,
கோயம்புத்தூர், பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில்,
ஆதிவாசிகளுக்கான குழந்தைகளின் நல மையங்கள் அமைக்
கப்பட்டிருக்கின்றன. அதாவது மலைப்பகுதிகளில் மட்டும்,
மலைகள் இருக்கும் இடங்களில் மட்டும் அமைந்துள்ளன.
மலை இல்லாத பகுதிகளில் ஆதிவாசிகள் இல்லையா என்ன?
ஆகவே அவர்கள் குடியிருக்கும் எல்லா இடங்களிலும் இந்த
குழந்தை நல மையங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, நர்சரி பள்ளிகளை துவங்கப்போவதாகச் சொல்லி
யிருக்கிறீர்கள். ரொம்ப பாராட்டுகிறேன். காரணம் பல தனி
யார்கள், நர்சரிப் பள்ளிகளை நடத்திக் கொண்டிருப்பவர்கள்,





கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு எல்.கே.ஜி.
வகுப்பிற்கு 15 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள்.
ஏழைகள் தங்களுடைய பிள்ளைகளை அதிலே கொண்டு வந்து
சேர்க்க முடியுமா? இந்த நிலைமையைப் போக்க வேண்டும்
என்றால் நம்முடைய சமூக நலத் துறையின் மூலமாக நர்சரிப்
பள்ளிகளை பல இடங்களிலும் பரவலாக துவக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

ஊனமுற்றவர்களுக்காக அரசு சிறப்புத் திட்டத்தில் பயிற்சி
நிலையங்களை அரசு நடத்துகிறது. அதிலே தொழு நோயாளி
களுக்காகவும், காதுகேளாதவர்களுக்காகவும், மனவளர்ச்சி
குன்றியவர்களுக்காகவும் எந்தத் திட்டமும் இருப்பதாக கணக்
கிலே கொடுக்கவில்லை. அந்த நிலைமையில் இந்த மூவருக்கும்
திட்டம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊனமுற்றவர்களின் கல்விக்காக மத்திய அரசு மிக அதிக
மான அளவிற்கு நிதியுதவி செய்கிறதை இந்த நேரத்தில்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 12,016 ஊனமுற்ற
மாணவர்கள் இந்த வசதியைப் பெற்றுள்ளனர். உதவித்
தொகையாக ரூ. 70 முதல் ரூ 170 வரை அவர்களுடைய கல்விக்
காக வழங்கப்படுகிறது. இதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, ஊனமுற்றவர்களுக்கு பெட்டிக் கடை வைக்க
உதவி வழங்கப்படுகிறது. அமைச்சர் அவர்களுக்கு நினைவிருக்
கும் என்று நினைக்கிறேன். என்னுடைய தொகுதியில் ஒரு
பையன், கை, கால் சரியில்லாத ஊனமுற்றவன், பெட்டிக்
கடை வைக்க விண்ணப்பித்தான். ஊனமுற்றவர்கள் லிஸ்டில்
சேர்ந்து, எல்லா பரிசோதனையும் முடிந்து, பாங்கில் 3,000
ரூபாய் கொடுக்க வேண்டுமென்று குன்றத்தூர் இந்தியன் ஓவர்
சீஸ் பாங்கிக்கு லெட்டர் அனுப்பி விட்டார்கள். பாங்கியிலே என்ன
சொல்கிறார்கள் என்றால் 3,000 ரூபாய் கொடுக்க முடி
யாது, பெட்டிக் கடை வைக்க 500 ரூபாய் கொடுக்கிறோம்,
அவ்வளவு தான் முடியும், அதற்கு மேல் கொடுக்க முடியாது
என்று சொல்கிறார்கள். அந்த பையன் உடனே என்னிடம்
வந்து அந்த விவரத்தைச் சொன்னான். அமைச்சர் அவர்களுக்கு
லெட்டர் கொடுத்தேன். அந்த விவரங்களையும் 4, 5 போட்
டோ ஸ்டேட் காபி எடுத்து வைத்துக் கொண்டேன். காரணம்,
அமைச்சர் அவர்களுக்கு நிறைய வேலைகள் இருக்கும். காப்பி
வைத்துக்கொண்டால், வேண்டுமென்றால் இன்னொன்றையும்
கொடுக்கலாமென்று அப்படி செய்தேன். அமைச்சர் அவர்
களிடம் கேட்ட போது 'கட்டாயம் வாங்கித் தருகிறேன்' என்று
சொன்னார்கள். சில நாட்களுக்குப் பிறகு அந்தப் பையன்
மீண்டும் என்னிடத்தில் வந்தான். 'என்ன லோன் கிடைக்க
வில்லையா' என்று கேட்டபோது, இல்லையென்று சொன்

னான். 'அந்தப் பையன் மறுபடியும் வந்திருக்கிறான், லோன்
கிடைக்கவில்லை'யென்று அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி
அந்த விவரங்களின் இன்னொரு காப்பியை அமைச்சர் அவர்
களுக்கு கொடுத்தேன். 'எப்படியாவது வாங்கிக் கொடுக்கிறேன்'
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நானும் ஒப்புக்
கொண்டு வந்துவிட்டேன்.

அதற்கு பிறகு இன்றைக்கு அந்தப் பையன் ஒரு லெட்டர்
எழுதியிருக்கிறான். 'என்னை மறந்துவிட்டீர்கள் என்றே
நினைக்கிறேன், அமைச்சர் அவர்களிடம் கடிதம் கொடுக்
கிறேன் என்று சொன்னீர்களே, கொடுத்தீர்களோ இல்லையோ
தெரியவில்லை, இதுவரையில் உதவித் தொகை கிடைக்க
வில்லை'யென்று எழுதி இருக்கிறான். அமைச்சர் அவர்களுக்கு
விண்ணப்பம் கொடுத்தும் உதவித் தொகை கிடைக்கவில்லை
யென்றால் ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்விற்காக கொடுப்
பதில் உண்மையான அக்கறை காட்டப்படவில்லை என்றே
குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
ராசாம்பாள் அவர்கள் ஒன்றினை குறிப்பிட்டிருக்கிறார்கள்.
பின்தங்கிய வட்டங்களை பட்டியல் செய்து வட்டார வாரி
யாக மக்கள் தொகைக் கணக்கின் கீழ் அந்த அடிப்படையில்
தையல் இயந்திரங்களைக் கொடுப்பது சாலச்சிறந்ததாக இருக்
குமென்று அவர் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

கலப்புத் திருமணங்கள் செய்பவர்களுக்கு பரிசு கொடுக்
கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிடுகிறபோது
நாங்கள் ஒரு பவுன் கொடுக்கிறோம், 4 ஆயிரம் ரூபாய்
கொடுக்கிறோம் என்று சொன்னார். திருமதி இராசாம்பாள்
அவர்கள் பரிசே வேண்டாம், வேலை கொடுக்க வேண்டுமென்று
கேட்கிறார்கள். அவர்கள் கலப்புத் திருமணம் செய்தவர்கள்.

ஆலந்தூரில் எஸ் பி. ஆபீஸ் இருக்கிறது. அந்த ஆபீசில்
வேலை பார்க்கிற அம்மையார் ஒருவர் அரிசன வகுப்பைச்
சேர்ந்தவர். கல்யாணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக இருக்
கிறார்கள். கல்யாணம் ஆகி ஐந்து வருடங்கள் ஆகியும் பரிசு
கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். இந்த நிலைமை
கள் இருக்கிறபோது. பரிசு எங்களுக்கு வேண்டவே
வேண்டாம் என்று கலப்புத் திருமணம் செய்து கொள்
கிற தம்பதியர்கள் சொல்கிற நிலைமை வந்து விடக்கூடாது
என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : துணைத் தலைவர்
அவர்களே, கலப்புத் திருமணம் பற்றி உறுப்பினர் அவர்கள்
குறிப்பிட்டார்கள். கலப்புத் திருமணம் செய்து கொண்ட
வர்கள் ஒரு ஆண்டு காலத்திற்குள் ரெஜிஸ்ட்ரேஷன் சர்டிபி
கேட்டை வைத்து விண்ணப்பிக்க வேண்டும். அந்த விவரங்
களை உறுப்பினர் அவர்கள் கொடுத்தால் நடவடிக்கையெடுக்க
தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





திருமதி டி. யசோதா : அது எல்லாம் முன்பிருந்த கொடுத்
தாகி விட்டது, செங்கற்பட்டு கலெக்டர் ஆபீசில் நிற்கிறது.

அதுபோல் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித்
தொகை கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கி
றார்கள். வரவேற்கிறேன். அதேநேரத்தில் பிச்சைக்காரர்கள்
ஒழிப்பைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள், உறுப்பினர்
சகோதரர் தியாகராஜன் அவர்கள் பேசும்போது, 'பிச்சைக்காரர்
கள் எங்கே இருக்கிறார்கள் என்று சொன்னால் நடவடிக்கை
எடுக்கிறோம்' என்று சொன்னார்கள். என்கூட வாருங்கள்,
நானும் நீங்களும் போகிற காமாட்சி அம்மன் கோயிலில் பிச்சைக்
காரர்கள் தொந்திரவுதான். அடுத்தாற்போல் அந்தோணியார்
கோயிலுக்கு வாருங்கள், அர்மேனியன் தெருவில் இருக்கிறது,
அங்கேயும் பிச்சைக்காரர்கள் வரிசையாக நின்று கொண்டு நாம்
போவதற்குக் கூட வழிவிடாமல் இருக்கிறார்கள். இந்தப்
பக்கம் அண்ணாசாலைக்கு வந்தால், அங்கே உள்ள தர்கா
பக்கம் போனால், அங்கேயும் பிச்சைக்காரர்கள். டிராபிக்கிலே
வண்டி நின்றால் போதும், உடனே ஒரு பெண், குழந்தையைத்
தூக்கிக்கொண்டு வந்து, இந்தக் குழந்தைக்கு பால் வாங்கிக்
கொடுக்கவேண்டும் என்று சொல்லி, பிச்சை கேட்கிற நிலைமை
இன்றைக்கு எல்லா இடங்களிலும், சுற்றுப்புறங்களிலும் இருக்கி
றது. இதை யாரும் மறுக்க முடியாது. நம்முடைய எம்.எல்.ஏக்கள்
கூட மவுண்ட் ரோடு பக்கம் போகும்போது, டிராபிக்கிலே வண்டி
நின்றுவிட்டால், குழந்தைகள் வந்து, பால் வாங்கிக் கொடுக்க
வேண்டும் என்று சொல்லி, பிச்சைக் கேட்கிற காட்சியைப் பார்க்க
லாம். இதைப்பற்றி போலீசாரும் அக்கறைபடுவதில்லை. அவர்
கள் எதிலேதான் அக்கறைபடுகிறார்கள் என்றால், அவர்கள்
அக்கறை காட்டுவதே வேறு. ஆகவே, இதற்கு என்று தனிப்
பிரிவை உருவாக்கி இந்தப் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்கு,
அவர்களைச் சீர்படுத்துவதற்கு இந்தத் துறையைப் பயன்படுத்த
வேண்டும் என்றுநான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக நல வாரியத்திலே பணிபுரிகிற அத்தனைபேர்
களும் வருஷம் வருஷமாக, பழம்புளி மாதிரியாக, 14 வருஷம்,
15 வருஷம் என்று அங்கேயே இருந்து கொண்டு இருக்கிறார்கள்,
ஏன், அவர்களை எல்லாம் மாற்றினால் என்ன? வேறு அதிகாரிகள்
எல்லாம் நமக்குக் கிடைக்க மாட்டார்களா? அவர்களை மாற்று
வதே இல்லை. உங்களுக்குத் தெரியும். சமூக நல வாரியத்திலே
இருக்கிற அதிகாரிகள், நந்தனத்திலே இருக்கிறவர்கள்,
பல வருஷ காலமாக தொடர்ந்து அங்கேயே இருந்து கொண்டு
இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சாகா வரம் பெற்றவர்கள்
போல் இருக்கிறது. அவர்கள் கிட்ட யாரும் போக முடியாத
நிலைமை இருக்கிறது. எனவே, இவர்களை மாற்றி புதுப் புது
நபர்கள் வந்தால்தான், விருப்பு வெறுப்பின்றி நல்லமுறையில்
அவர்கள் பணியைச் செய்வதற்கு வழிவகை செய்ய முடியும்
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திருமதி டி. யசோதா] [1986 ஏப்ரல் 26

இறுதியாக ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன். அது வரதட் சணைக் கொடுமை, இந்த வரதட்சணைக் கொடுமையினால் நிறையபேர்கள் இந்த காஸினாலே சாகிறார்கள். அப்படி சாகிற அத்தனை பேர்களும் மருமகள்கள்தான். இந்த காஸ் வெடித்து சாகிறவர்கள் மாமியார்கள் அல்ல. இந்த காஸ் வெடித்து சாகிறவர்கள் மாமனார்கள் அல்ல. காஸ் வெடித்து சாகிறவர்கள் புருஷர்கள் அல்ல. சாகிற அத்தனை பேர்களுமே மருமகள்கள் தான். இந்த காஸுக்கு ஏன் இந்த மருமகள்கள் மீது இவ்வளவு கோபம், இது காஸ் டிபார்ட்மென்டா, அல்லது வேறு எந்த டிப்பார்ட்மென்ட்? மத்திய அரசாங்கத் துறையின் மூலமாக அந்தக் கம்பெனி வெளியிடுகிற அந்த காஸ் லீக் ஆகிக் கொண்டு இருக்கிறதா ............

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் சொல் கின்ற நேரத்தில் காஸ் வெடித்து மருமகள்கள்தான் சாகி றார்கள் என்று சொன்னார்கள். மருமகள்கள் சாகிறார்கள் என் றால் அவர்கள்தான் சமையல் அறையில் சமையல் செய்கிறார் கள். மாமியார்கள் வயதான காரணத்தால், சமைக்க வருவ தில்லை. அதனால்தான் இப்படி ஏற்படுகிறது என்று நினைக்கி றேன். (சிரிப்பு).

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே, எல்லா மாமியார்களும் வயதானவர்கள் இல்லை. ஆனாலும் கூட அங்கே இறக்கின்றவர்கள் அத்தனை பேர்களுமே மருமகள்கள் தான். இந்த மருமகள்கள் எல்லாம் எப்படிச் சாகிறார்கள்? காஸ் வெடித்துச் சாகிறார்களா? அல்லது காஸ் லீக்காகி சாகிறார்களா? காஸ் வெடித்து, அல்லது காஸ் லீக்காகி சாகிறார்கள் என்றால், இந்த இந்தியன் ஆயில் கம்பெனி வந்து, அதை புரூஃப் பண்ணு கிறார்களா? டாக்டர்களும் போலீஸ்காரர்களும் சேர்ந்து அங்கே நடைபெறுகின்ற மிகப் பெரிய கொலைக்கு ஒரு மூழுக்கு அப்படியே போட்டு மறைக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய கொடுமை தான் தமிழகத்திலே அதிகட்டசமாக நடந்து கொண்டு வருகி றது. ஆகவே இந்த வரதட்சணைக் கொடுமையை ஒழிப்பதற்கு தனிப்பட்ட முறையில் நீங்கள் தமிழக முதல்வர் அவர்களோடு கலந்து பேசி நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படி வரதட் சணைக் கொடுமையின் காரணமாக, காஸ் லீக்காகி, அல்லது காஸ் வெடித்து இறந்தார்கள் என்று சொன்னால், அந்த கம்பெனியைச் சேர்ந்தவர்கள் வந்து, காஸ் வெடித்துத்தான் இறந்தார், அல்லது காஸ் லீக்காகித்தான் இறந்தார் என்று அவர்கள் புரூப் செய்தா லொழிய இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு அப்பாற்பட்டு ஒருவர் சாகிறார்கள் என்று சொன்னால், இது சம்பந்தப்பட்ட ஒரு சில ருக்காவது கடுமையான தண்டனை கொடுத்தால்தான் இந்த வரதட்சணைச் சாவுகள் என்பதைக் குறைக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, பேச வாய்ப்பு தந்தமைக்கு என்னு டைய நன்றியைக் கூறி முடிக்கிறேன், வணக்கம்.



1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் துணைத் தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் தகவலுக்காகச் சொல்லுகிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்கு முற்றிலும் ஏற்ற கருத்துக்கள்தான் என்னு டைய கருத்துக்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். The sympathies of the entire Government and of the entire country must be towards the daughters-in-law. இங்கே மருமகள்களுடைய பிரச்சினையைப் பொறுத்தவரையில் நாம் இதைப்பற்றி மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர் களுக்கு நம்முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கக் கூடிய அள விற்கு நாம் இங்கே செயல்பட வேண்டும் என்பதிலே எந்த விதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது என்பதைச் சொல்லி, நம்முடைய நல்வாழ்வுத் துறையில் நாம் ஒரு ஆணை யைப் பிறப்பித்து இருக்கிறோம். இந்த மாதிரியாக காஸ் வெடித்து, especially young ladies இப்படிப்பட்ட நிலைமை யில் அவர்கள் மாட்டிக்கொண்டார்கள் என்றால் கடுமையான

(பிற்பகல் 12-50)

வகையிலே, சரியான வகையிலே பரிசோதனைசெய்து, ஒரு முறை அல்ல, இரண்டு முறை பரிசோதனை செய்து, 'The benefit of doubt should be in favour of the daughters-in-law who are the victims of this sort of unfortunate incidents

என்று நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் நல்வாழ்வுத் துறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது என்பதை உங்களுக்கு தகவலுக்காகச் சொன் னால் நீங்கள் ஆறுதல் அடைவீர்கள் என்பதற்காகச் சொல்கி றேன்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு அமைச்சர் அவர்களு டைய ஆறுதலுக்கு என்னுடைய நன்றி.

## 5. அமைச்சரின் அறிக்கை

### விதி I'I-ன் கீழ், புதுக்கோட்டை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள காவேரி நூற்பு மற்றும் நெசவாலை குறித்து ஆயத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் மேலவைக்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்காக சென்றிருந்தபோது, இந்த அவையில் புதுக்கோட்டையில் உள்ள காவிரி நூற்பாலையைப்

பற்றிய பிரச்சினையை எழுப்பினார்கள். அது பற்றிய அந்த நிர்வாகநிலையை விதி iii-ன் கீழ் விளக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே அறிக்கையைப் படிக்கிறேன்.

அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள காவேரி நூற்பு மற்றும் நெசவாலையை திருவாளர்கள் மேட்டூர் பியர்ட்செல் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக காலத்தில் 1975-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் மூடப்பட்டது. இந்த நூற்பாலையில் 600 நிரந்தர தொழிலாளர்களும் 231 தற்காலிக தொழிலாளர்களும் பணிபுரிகிறார்கள். இந்த ஆலை 4—1—1977 முதல் தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்திடம் "தொழிலியல்" (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் 1951–ன் கீழ் (ஐடிஆர் ஆக்ட்) நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாலை கீழ்க்கண்ட காரணங்களால் மூட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

காரணங்கள் :

1. ஆலையில் பழைய இயந்திரங்கள் குறைந்த உற்பத்தியே தரக்கூடியவை
2. நடைமுறை மூலதன பற்றாக்குறை
3. சம்பள அதிகரிப்பு
4. மின்சார தட்டுப்பாடு

மேற்படி ஆலையை நிர்வகிக்க ஐடிஆர் சட்டம் பிரிவு 18 எ என் கீழ் 31—3—1986 வரை தமிழ்நாடு பஞ்சாலை கழகத்தை காவேரி நூற்பாலையின் நிர்வாக பொறுப்பாளராக மத்திய அரசு அவ்வப்போது அறிக்கை மூலம் அறிவிப்பு செய்து வந்தது. ஆனால் மைய அரசு கடித எண் 3 [9)/81 நாள் 24—2—1986-ல் 31—3—1986-க்குப் பின் தமிழ்நாடு பஞ்சாலை கழகம் நிர்வாகத்தை தொடர வேண்டிய அவசியம் இல்லையெனவும் நிறுவனங்களின் சட்டம் ( Companies Act ) 1956-ன் கீழ் இவ்வாலையை கலைப்பதற்கும் (Winding up) உத்தரவு மைய அரசால் வழங்கப்பட்டது. இதற்கு பிறகு தமிழ்நாடு பஞ்சாலை கழகம் காவேரி நூற்புமற்றும் நெசவாலையை அதிகாரம் பெற்ற நபராக(Authorised person) தொடர்ந்து நடத்தும் தகுதியை இழந்து விட்டது.

மைய அரசின் உத்திரவின்படி தமிழ்நாடு பஞ்சாலை கழகம் காவேரி நூற்பாலையை கலைப்பதற்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது. இம்மனு 284—1986 அன்று விசாரணைக்கு வரவுள்ளது.



ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் சங்கங்கள் சார்பில் மாநில அரசு மைய அரசு உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகளுக்கு ஆலையை மூடாமல் தடுக்க வேண்டி தந்தி கொடுத்துள்ளார்கள். அத்துடன் அவர்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆலையை தொடர்ந்து தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம் மூலம் நடத்த மனு கொடுத்துள்ளார்கள். இதுவும் 28–4–1986 அன்று விசாரணைக்கு வர இருக்கிறது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் நிர்வாகத்தை ஏற்ற போது ஆலை ரூபாய் 254 லட்சம் நஷ்டத்தில் இருந்தது. இன்றையதினம் மேலும் 334 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆலையைப் புதுப்பிப்பதற்கு தொழிலாளர்கள் 120 பேர் தங்கள் வேலையை இழந்து தியாகம் செய்யவும் தயாராக உள்ளனர். பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டை மாவட்டதிலுள்ள இந்த ஆலையை தேசியமயமாக்குவது குறித்து தமிழ் நாடு அரசின் பரிசிலனையில் உள்ளபோது மைய அரசு இவ்வாலையை கலைப்பதற்கான உத்தரவு அனுப்பியுள்ளது.

உத்திரப்பிரதேசத்தில் ஆறு நூற்பாலைகளை மைய அரசு தேசியமயமாக்க முடிவு செய்துள்ளது. தொழிலாளர்களுக்கு ஏற்படும் துயரத்தை போக்கும் வகையில் மைய அரசு காவேரி நூற்பாலையை தேசியமயமாக்க முன்வரவேண்டும். இது கொள்கை முடிவு சம்பந்தமான பிரச்சனை. இதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களை, மாண்புமிகு நிதி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மூலம் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

உயர்நீதி மன்றத்தால் நியமிக்கப்பட்ட கலைப்பு அதிகாரியின் (Official liquidator) உத்தரவுப்படி நிர்வாகத்தை 26–4–1986 முதல் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கவேண்டும்...................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று கூட ஜனதா கட்சிக்கு கொடுப்பதற்கு நேரம் இல்லாமல் போய்விட்டது. அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அதன்பிறகு ஒரு பில்லை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்று வாரத்தின் கடைசி நாள். எல்லோரும் போக வேண்டும்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்சியின் சார்பில் அவர்களுக்கு 4, 5 நிமிடங்கள் கொடுத்தால் போதும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாம் ஒவ்வொரு உறுப்பினருக்கும் 10 நிமிடம் என்று ஒதுக்கித் கொடுத்தாலும் அவர்கள் 10 நிமிடத்தில் முடிப்பது இல்லை. மேலும் மேலும்

நீட்டித்துக்கொண்டே போய்விடுகிறார்கள். அதை நீங்களும் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறீர்கள். ஒவ்வொரு உறுப்பினரும் 5 நிமிடத்தில் முடித்து விடுகிறோம் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் பொறுப்பு ஏற்றுக் கொண்டால் அலுவல் ஆய்வுக் குழுவை கூட்டி அதைப் பற்றி முடிவு எடுத்து அதன்படி செய்யலாம்.

## 4. வரவு-செலவுத் திட்டம் 1986—87 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### கோரிக்கை எண் 30—சமூக நலன் (தொடர்ச்சி).

* **மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானிய கோரிக்கையின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் இங்கே எடுத்து வைத்து இருக்கிறார்கள். சமூகநலத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் எடுத்து வைத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாகராசன் அவர்கள் பேசும்போது ஊனம் உற்றவர்களுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற ஆலோசனையையும் அதேபோல் ஏழை எளிய தாய்மார்களுக்கு, விதவைகளுக்கு, குழந்தைகளுக்கு, ஆதரவு அற்ற குழந்தைகளுக்கு, ஊனம் உற்றவர்களுக்கு எல்லாம் சமுதாயத்தில் இருக்கின்ற சூழ்நிலை பற்றியும், அதற்காக சமூக நலத் துறை இன்றைக்கு மிக சிறப்பான முறையில் பொறுப்பு ஏற்று தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இவர்களுக்கு என்ன என்ன செய்து இருக்கிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் சமூகநலத் துறை கொள்கை விளக்க புத்தகத்தின் மூலமாகப் படித்து இங்கே அவர்கள் மிக சிறப்பான முறையில் தெரிவித்து அந்த கருத்துக்களை இங்கே எடுத்து வைத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சமூகநலத் துறையில் எவ்வளவு அக்கறை கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாம் முதலில் கவனிக்கவேண்டும். 1975—76 ஆம் ஆண்டு சமூகநலத் துறைக்காக 1 கோடியே 30 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சமூகநலத் துறை திட்டங்களை தீட்டி செயலாற்றி இருந்து இருக்கிறது. தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பதவியை ஏற்றதற்கு பிறகு தான் இன்றைக்கு அது 76 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டு சமூகநலத்துறை மிகச் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. சமூக நலத் துறையின் மூலமாக ஏழை எளிய விதவைத் தாய்மார்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஊனம் உற்றவர்கள், குழந்தைகள் போன்றவர்கள் மேல் எல்லாம் கவனம் செலுத்தவேண்டும்



என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் இந்த துறைக்கு 76 கோடி ரூபாய் இன்றைக்கு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஒதுக்கீடு செய்து மிக சிறப்பான முறையில் இந்த துறை செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே முதலில் குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களை சொன்னார்கள். சிலர் பேசுகிறபோது சமூகநலத் துறையில் இருக்கின்ற திட்டங்கள் எல்லாம் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதைப் பற்றியும் சில திட்டங்களை வரவேற்றும் பேசியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1—00)

சிலர் பேசுகின்றபோது இந்தத் திட்டம் மிகச் சிறப்பான முறையில் தீட்டப்பட்டிருக்கிறது என்றும் அதைச் செயல்படுத்துகின்றபோது சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதைப் பற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்கள் செயல்படுகின்ற முறையை நாங்கள் அறிவிக்கின்றபோது முறையாக அந்தத் திட்டம் ஏழைகளுக்குப் போய்ச் சேரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அதிகாரிகள் இன்றைக்கும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இடைத் தரகர்கள் பற்றி கூட மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா குறிப்பிட்டார்கள். சமூக நலத் துறையால் தீட்டப்பட்டிருக்கின்ற திட்டம், மிகச் சிறப்பான திட்டம். அந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தைப் படிக்கின்றபோது சொர்க்கமே பூலோகத்திற்கு வரப்போகிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையில் தான் பூலோகத்தில் சொர்க்கத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் தமிழகத்தில் இருக்கின்ற ஏழை எளியவர்களுக்கான திட்டங்களைத் தீட்டி, சமூக நலத்துறையின் மூலமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அந்த வகையிலே, இடைத் தரகர்களை ஒழிக்க வேண்டுமென்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இடைத்தரகர்களை ஒழித்து, நிச்சயமாக பூலோக சொர்க்கத்தை தமிழகத்தில் காணலாம் என்பதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் இன்றைக்கு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இடைத்தரகர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் கண்டறிந்து களைவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்காண்டிருக்கிறது. திட்டங்கள் தீட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. திட்டங்களைச் செயல்படுத்துகின்றபோது, அதற்காக போடப்பட்ட அதிகாரிகள் அந்த திட்டங்கள் ஏழை எளியவர்களுக்கு போய்ச் சேர்கின்றாத

என்று கவனிக்கக்கூடிய சூழ்நிலையில் அரசு மேற்கொண்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஊனமுற்றோர்களுக்காக வேலைவாய்ப்பில் முதவிடம் கொடுக்கவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். என்னிடம் பெண்களுக்கான ஊக்கத்தொகையை, குறிப்பாக ஏழை எளிய பெண்களுக்கு, விதவைத் தாய்மார்களுக்கு ஊக்கத்தொகையை கொடுப்பதைவிட அவர்களுக்கான வேலைவாய்ப்பை ஏறபடுத்திக் கொடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பதவியேற்ற பிறகு, இன்றைக்கு சமூகநலத்துறையின் மூலமாக ஏழை எளிய பெண்களை ஊக்குவிக்கின்ற திட்டங்களை ஒருபுறம் அவர்களுக்கு கொடுத்தாலும், வேலை வாய்ப்பில் அவர்களுக்கு சிறப்பான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான், 1,34, 743 பெண்கள் இன்றைக்கு சமூகநலத்துறையின் மூலமாக, பல்வேறு திட்டங்களின் மூலமாக வேலைவாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை இந்த அவையிலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சேவை இல்லங்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். கணவனால் கைவிடப்பட்ட அந்தப் பெண்களுக்காக, விதவைத் தாய்மார்களுக்கான ஆதரவற்ற பெண்களுக்காக, இன்றைக்கு சேவை இல்லங்களைக் கொண்டுவருவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது என்று மேலும் அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கின்ற வகையில் அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அரசு சமூகநலத் துறையின் மூலம் ஏழைஎளிய பெண்களுக்கும், விதவைத் தாய்மார்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், உடல் ஊனமுற்றோர்களுக்கும், சமுதாயத்தில் சமூகப் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கு திட்டங்களை வகுத்து, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த எண்ணத்தின் அடிப்படையில் இன்றைக்கு தமிழகத்தில் 6 சேவை இல்லங்களும், 6 பணிபுரியும் மகளிர் விடுதிகளும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து தொண்டு நிறுவனங்களைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். இன்றைக்குத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கவேண்டுமென்ற கொள்கையை நாம் நிலைநாட்டி அவைகளைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.





தமிழகத்தில் இருக்கிற எல்லா மக்களுக்கும் அரசால் வழி
வகைகளை, எல்வர் திட்டங்களின் மூலமாகக் கொடுக்க முடியுமா
என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு கணம் சிந்தித்துப்
பார்க்க வேண்டும். அந்தவகையில், தொண்டு நிறுவனங்
களை ஊக்குவித்து தொண்டு நிறுவனங்களின் மூலமாக ஏழை
எளியவர்களுக்கும், விதவைத் தாய்மார்களுக்கும், உதவிகளை
வழங்குவதோடு, மறு வாழ்வு கொடுக்க வேண்டுமென்ற எண்
ணத்தின் அடிப்படையில் தான் தொண்டு நிறுவனங்களை
ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். அந்த வகையில் மத்திய
அரசு தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கவேண்டுமென்ற ஒரு
நியதியை வகுத்ததால் மாநில அரசும் அதை ஏற்றுக்கொண்டு
தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கின்ற செயலில் அரசு ஈடு
பட்டு வருகிறது. தொண்டு நிறுவனங்கள் எல்லாம் மாநில மத்திய
அரசுகளின் உதவி போக ஏராளமான உதவிகள் அவர்களுக்குக்
கிடைக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்.
அவர்கள் வேறு ஏதாவது நிறுவனங்கள் நடத்திக் கொண்டு வரு
வார்கள் அதன் மூலமாக கிடைத்திருக்கலாம், வெளி நாட்டு
உதவி கிடைத்திருக்கலாம். மாநில அரசு, மத்திய அரசு திட்
டங்கள் செயல்படுத்துகிறபோது அவர்களுக்கு உதவி கொடுக்க
வேண்டும் என்ற நியதி இருக்கிறது. அந்த நியதியில் தான்
உதவி வழங்கப்படுகிறது. அவர்கள் சரியாக அவைகளை நடத்த
வில்லையென்றால், அரசாங்கத்திற்கு அப்படித் தெரியுமானால்
அரசு கொடுக்கிற உதவியை நிறுத்தும்.

சேவை இல்லத்தின் கல்வியின் மூலமாக ஏழை எளிய
பெண்களுக்கு, ஆதரவற்ற பெண்களுக்கு, கணவனால் கைவிடப்
பட்ட பெண்களுக்கு, எல்லாம் மேல்நிலைக் கல்விகூட படித்துக்
கொள்கிற நிலை இருக்கிறது. ஆதவே இதை மிகச் சிறப்பான
முறையிலே செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

தையல், தட்டச்சு, சுருக்கெழுத்து பயிற்சியெல்லாம் அவர்
களுக்கு கொடுக்கப்படுவதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
குறிப்பிட்டார்கள். ஒரு வருடத்திற்கு தான் தட்டச்சு, சுருக்
கெழுத்து பயிற்சி கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள்.
ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்து வருகிறோம். ஒரே
வருடத்தில் எல்லோரும் எல்லாப் பயன்களையும் பெறமுடியாது.
ஒவ்வொரு வருடத்திலும் படிப்படியாக எல்லோரும் எல்லாப்
பயன்களையும் பெறவேண்டும் என்ற முறையில் நடவடிக்கை
எடுத்துக்கொண்டு வருகிறோம்.

இலவச தையல் கருவிகள் கொடுக்கின்ற நிலையைப்பற்றி
மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராசாம்பாள் அவர்களும் திருமதி
யசோதா அவர்களும் குறிப்பிட்டார்கள் ஆயிரம் தையல்
இயந்திரங்கள் போதாது என்றார்கள். வட்டங்கள் மூலமாக

ஏழை எளிய தாய்மார்களுக்கு தையல் தொழில் தெரிந்தவர்
களுக்கு அவர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கெல்லாம்
தேர்ந்தெடுத்து தையல் இயந்திரங்களை இலவசமாக கொடுக்க
வேண்டுமென்றும் எண்ணிக்கையை உயர்த்திக் கொடுக்க வேண்
டும் என்றும் குறிப்பிட்டார்கள். வருடாவருடம் அவர்களுக்குக்
கொடுக்கப்படுகிற நிலையை ஏற்படுத்தி இருக்கிறோம். வருடத்
திற்கு ஆயிரம் இயந்திரங்கள் கொடுக்கிறோம். அந்த
முறையில் ஏழை எளிய பெண்கள் அந்தத் திட்டத்தின் மூலமாகப்
பயன்பெறுவார்கள் என்பதை நிச்சயமாக நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். அந்த அடிப்படையில் இலவசமாக தையல்
கருவிகள் 11,289 ஏழைத் தாய்மார்களுக்குக் கொடுக்கப்பட்டு
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வரு
டம் ஆயிரம் பெண்களுக்குக் கொடுக்கப்படும். மாவட்டங்களின்
தேவைக்கு ஏற்ப இயந்திரங்கள் ஒதுக்கப்படும்.

ஏழை விதவைகளின் குழந்தைகளுக்குப் பாடப்புத்தகங்கள்
வழங்குகிற நிலைபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அவர்
களுக்கு ஐ.டி.ஐ. என்ற முறையிலே தொழிற் பயிற்சி ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்
டார்கள். அவர்கள் இன்றைக்கு மேல்நிலைக் கல்வி வரைக்கும்
படிக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்களை
யும் நோட்டுப் புத்தகங்களையும் நாம் கொடுத்துக் கொண்டு
வருகிறோம். 28 ஆயிரம் குழந்தைகள் இந்தத் திட்டம் மூல
மாகப் பாடப்புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும்
பெற்று இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
தொழிற் பயிற்சியைக் கொடுப்பதுபற்றி அரசு பரிசீலனை
செய்யும்.

விதவைகளின் பெண்களுக்கு திருமணத்திற்கான திட்டத்தின்
கீழ் ஆயிரம் பேர்களுக்கு கொடுக்கப்படுகிறது. விதவை மகள்
திருமணத்திற்கு ஒரு பெண்ணுக்குத்தான் தரப்படுகிறது. இரண்
டாவது பெண்ணுக்குப், மூன்றாவது பெண்ணுக்கும் கொடுக்க
லாம் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். விதவைத் தாய்மார்கள்
5 பெண்கள் பெற்றிருந்தால் 5 பெண்களுக்கும் கொடுப்பதற்கு
அரசாங்கத்திடம் நிதி குறைவாக இருக்கிறது. அந்த அடிப்
படையில் ஒரு பெண் திருமணத்திற்கு உதவித் தொகை கொடுக்க
வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு பெண்ணுக்குத்தான் திட்டம்
கொண்டுவரப்பட்டுள்ளது. அநாதைப் பெண்கள் திருமணத்
திட்டம்பற்றிக் குறிப்பிடுகிறபோது ஒரு குடும்பத்தில் என்று
போடப்பட்டிருப்பதால் குடும்பம் என்று இருந்தால் அவர்கள்
எப்படி அநாதையாகக் கருதப்படுவார்கள் என்று மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள்.





(பிற்பகல் 1-10)

பாதுகாவலர்கள் யாராவது இருப்பார்கள். தாய் தகப்பன் இருக்க மாட்டார்கள்; அவர்கள் அநாதைக் குழந்தைகள்தான்; அந்தக் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு யாராவது கார்டியன்ஸ் இருப்பார்கள் என்ற அடிப்படையில்தான் அந்தக் குடும்பம் என்று குறிப்பிட்டிருப்பார்கள். அந்த அடிப்படையில் ஆயிரம் பேர்களுக்கு இன்றைக்கு அவர்களுக்குத் திருமணத்திற்கான உதவித் தொகை கொடுக்கப்படும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

விதவை மறுமணத் திட்டத்தை இங்கே குறிப்பிட்டார்கள். அந்தத் தொகையைக் கூட உயர்த்திக் கொடுக்க வேண்டு மென்றும் 5,000 ரூபாய் கொடுக்கிறீர்கள் அதை 10,000 ரூபாய் ஆக ஆக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் இராசாம்பாள் குறிப்பிட்டார்கள். பத்தாயிரத்திற்கு உயர்த்த லாம்; ஆனால் ஏழாண்டு முடிந்த பிறகு 10,225 ரூபாய் அவர் களுக்குக் கிடைக்கிறது. அந்த ஐந்தாண்டு தேசிய சேமிப்புப் பத்திரத்திற்கு, ஏழாண்டு முடிந்த பிறகு, ஐந்தாயிரம் ரூபாய் என்பது 10,225 ரூபாயாக அவர்களுக்கு வட்டியும் முதலுமாக வழங்கப்படுகிறது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பெண்களுக்காக இந்த வருஷம் புதிதான ஒரு திட்டத்தைத் தீட்ட இருக்கிறது. அந்தத் திட்டத்தை நான் படிக்கலாம் என்று கருதி மாண்புமிகு உறுப்பினர்களுக்காகப் படிக்கிறேன்.

கடலூரில், பணிபுரியும் மகளிர்க்கென அரசு விடுதி கட்டும் பணி தொடங்கப்படும்.

அரசு சேவை இல்லங்களிலுள்ள மகளிர்க்கும், குழந்தை களுக்கும் உடைகளுக்கான நிதி உதவி: பெண்களுக்கு 60 ரூபாயிலிருந்து 100 ரூபாய் ஆகவும், குழந்தைகளுக்கு 35 ரூபாயிலிருந்து 60 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களிலுள்ள கிராமப்புற பெண்கள் பயிற்சியாளர்களின் உதவித் தொகை 30 ரூபாயிலிருந்து 50 ரூபாயாக உயர்த்தப்படும்.

தஞ்சை அரசு சேவை இல்லத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் திட்டம் பற்றியும் இங்கே குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். பெண்கள், சேவை இல்லத்தில் படிக்கின்ற வாய்ப்போடு நிறுத்திவிடாமல், அவர்கள் பொருளாதாரத்திலே உயர வேண்டும், முன்னேற் றம் அடைய வேண்டும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்த

வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே பெண்கள் மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு கழகம் சமூக நலத் துறையில் ஆரம்பிக்கப்பட்டு அந்தக் கழகத்தின் மூலமாக ஏழை எளிய பெண்கள், படிக்காத பாமரப் பெண்கள், ஆதரவற்ற பெண்கள், ஊனமுற்ற பெண்கள் இவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு பெறுகின்ற ஒரு நிலையை இன்றைக்கு மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக சிறப்பான முறையில் நடத்திக்கொண்டு வருகிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்த எண்ணத்தின் அடிப்படையில் இன்றைக்கு பெண்கள் மேம் பாட்டுக் கழகத்தின் மூலம் 10,428 பெண்கள் இதுவரைக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இதில் 5,440 பெண் கள் ஆதிதிராவிடப் பெண்களாக இருக்கிறார்கள். இதிலிருந்து பார்க்கின்றபொழுது சமூக நலத் துறையில் ஜாதி, மத, இன வேறுபாடு இல்லாமல் ஆதிதிராவிட பெண்களுக்கும் மற்றைய பெண்களுக்கும், ஊனமுற்ற பெண்களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கும், ஏழை விதவைகளுக்கும், இவர்களுக்கெல்லாம், பொருளாதார மேம்பாட்டுக்கான வழி வகைகளை பெண்கள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு மட்டும் 1986-87 ஆம் ஆண்டில், 8,279 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்பதையும் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த 8,279 பெண்களும், பெண்கள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக வேலைவாய்ப்பைப் பெறுவார்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பல்வேறு திட்டங்களின் மூலமாக 8,279 பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதைக் குறிப்பிடுவதோடு மட்டுமல்லாமல், இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களையும் நான் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பெரியார் மாவட்டத்தில் 3,800 பெண்களுக்கும், தர்மபுரி மாவட்டத்தில் 3,600 பெண்களுக்கும் வருமானம் தரும் தொழில் அமைக்க இவ்வாண்டு வழிவகை செய்யப்படும்.

சிவகாசியில் 20-4-1986-ல் 52 இலட்சம் ரூபாய் செலவில் துவக்கப்பட்ட அச்சுக்கூடத்தில் 150 பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும். காதி மற்றும் கிராமத் தொழில் குழுவின் பரிந்துரையில், 4 தன்னிச்சை நிறுவனங்களும், 7 கிராமப்புற தொழில் அலகுகளும் துவங்கி அதன்மூலம் 134 பெண்கள் வேலைவாய்ப்பு பெற இருக்கிறார்கள். 25 பருத்தி நூல் நூற்றல் மற்றும் நெய்தல் அலகுகளைத் துவக்கி அதன் மூலம் 595 பெண்கள் வேலை வாய்ப்பைப் பெறவிருக்கிறார்கள்



என்பதையும் இங்கே நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றியும் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். ஊனமுற்றவர் களுக்கு வேலை வாய்ப்பில் முதலிடம் கொடுக்க வேண்டு மென்ற எண்ணத்தின் அடிப்படையில், அரசு இன்றைய தினம் ஊனம் உற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துக் கொண் டிருக்கிறது. அந்த அடிப்படையில் 3 சதவீதம் ஒதுக்கீட்டில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. ஊனம் உற்றவர்கள் எவ்வளவு பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக் கிறார்கள் என்று பார்க்கும்போது, 13,439 ஊனம் உள்ள நண்பர்கள் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் பதவியேற்றதற்குப் பிறகு வேலை வாய்ப்பைப் பெற்றிருக் கிறார்கள்.

அதைப் போல், சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலும் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். அவருடைய தொகுதியில் ஒரு ஊனமுற்றவருக்கு பங்குகடை வைப்பதற்கான திட்டத்தின் மூலமாக, உதவி செய்யவேண்டும். அதை நான் மாண்புமிகு அமைச்சரிடம் கூடக் குறிப்பிட்டிருக்கிறேன். இன்னும் நடக்க வில்லை. அந்தப் பையன், நான் இருக்கின்றேனா, இல்லையா என்றுகூட சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியவில்லை என்ற கேள்வியை கேட்டான் என்ற குறிப்பையும் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் நினைவில் கொண்டுதான் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கவேண்டும், அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும், தாமே உழைத்து, சுயமாக வாழ வேண்டு மென்ற வகையில்தான் தமிழக அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இன்றைக்குத் திட்டங்கள் வகுத்து செயல்படுத்துகின்ற ஒரு நிலையை அரசு மேற்கொண்டிருக் கிறது. மாண்புமிகு உறுப்பினர் யசோதா அம்மையார் தொகுதி யிலே இருக்கிற அந்தப் பையனுக்குப் பெட்டிக் கடை வைப்பதற் கான வழிவகைகளை, அதிகாரிகள் இந்தத் திட்டத்தின் மூலமாகச் செயல்படுத்துவதற்குரிய நிலை இருந்து கொண் டிருக்கிறது. அது நடைபெறும் என்பதை இங்கே நான் குறிப்பிடுகிறேன்.

சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும் தொழில் பழக வாய்ப்பளிக்கும் திட்டத்தின் மூலமாகவும் 37,237 ஊனமுற்றவர்கள் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்

மூலமாக, வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை
நான் மாண்புமிகு உறுப்பினருக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்
தலைவர் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஒன்றாம் வகுப்பு
முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகளுக்கு
சத்துணவு பெறும் குழந்தைகளுக்கு, இலவச சீருடை வழங்கு
கின்ற சிறப்பான திட்டத்தை உறுப்பினர்கள் பாராட்டி
அதன்மூலமாக 40,000 பெண்கள் வேலை வாய்ப்பைப்
பெற்றிருக்கிறார்கள் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அந்த எண்ணத்தின் அடிப்படையில் இந்தத் திட்டம் மிகச்
சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.
அதன் மூலமாக, 40,000 பெண்கள் வேலை வாய்ப்பு பெற்றுக்
கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திருமதி பு. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 86,000 பெண்கள் சத்துணவுத் திட்டத்தில்
இருக்கிறார்கள். அமைச்சர் 40,000 என்று சொல்கிறார். இது
சரியா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1 ஆம் வகுப்பிலிருந்து
8 ஆம் வகுப்பு வரைக்கும் படிக்கின்ற, சத்துணவு பெறும்
குழந்தைகள் 59,43,338 சீருடை பெற்றுக் கொண்டு
வருகிறார்கள். அந்த சீருடை தைக்கின்ற பணியை, சமூக நலத்
துறையின் மூலமாக, 40,000 பெண்கள் வேலை வாய்ப்பை
பெற்றிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு
மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இங்கே சத்துணவுத் திட்டத்தைப்
பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டார்கள்.
மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர், இந்தத்
தமிழகம் முழுவதும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வரு
கின்ற பொழுது, மத்திய அரசும், மற்றைய மாநிலங்களும்
பாராட்டியிருக்கின்றன. ஏன், இன்னும் சொல்லப் போனால்,
உலக நாடுகளிலிருந்து, இங்கே வருகை தருகின்ற குழுவினர்,
இந்தத் திட்டத்தைக் கவனித்து, பாராட்டியும் இருக்கிறார்கள்
என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.
இந்த எண்ணத்தின் அடிப்படையில் 2 வயதிலேயிருந்து, 4 வயது
வரையிலுள்ள குழந்தைகள், 28,105 மையங்கள் மூலமாக, 23.30
இலட்சம் குழந்தைகள் இன்றைக்குச் சத்துணவைப் பெற்றுக்
கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் குறிப்பிட விரும்



(பிற்பகல் 1-20)

புகிறேன். இங்கு சொன்னார்கள். குழந்தைகள் காப்பகங்கள் எல்
லாம் மிகச் சிறப்பான முறையில் செயல்படவில்லை, அவர்களுக்கு
ஊதியம் போதாது என்று குறிப்பிட்டதோடு, அங்கிருக்கின்ற
அரிசிகளையும், பருப்புகளையும் அவர்கள் சாப்பிட்டுக் கொண்
டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டதோடு எண்ணை இல்லாத
சத்துணவுத் திட்டம் என்பதையும் உறுப்பினர்கள் குறிப்பிட்
டார்கள். இதையெல்லாம் கவனிக்கின்ற வகையில்தான்,
எண்ணையோடு கொடுக்கின்ற எண்ணத்தின் அடிப்படையில்
தான் இன்றைக்கு மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டு
இருக்கின்றன. அதுபோல் கிராமங்களில் பார்வையாளர்கள்
குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் பார்வையிட்ட
பிறகு, அந்த அமைப்பாளர்கள்மீது நடவடிக்கைகள் மேற்
கொள்வதற்கு வழிவகைகளை அரசு மேற்கொண்டு செயல்
படுத்திக் கொண்டு வருகிறது. சத்துணவு திட்டத்தில் யார்
தவறு செய்தாலும் சரி, நிச்சயமாக உடனடியாக அதே இடத்
தில் பணி நீக்கத்தை இன்றைக்கு அரசு மேற்கொண்டு இருக்கிறது
என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி இராசாம்பாள் அவர்கள்
பேசுகின்றபோது, குழந்தைகள் நல அமைப்பாளர்கள் குடும்பக்
கட்டுப்பாடு திட்டத்தில் ஈடுபட்டு, அவர்கள் மையங்களிலே
இருப்பது இல்லை, அவர்களுடைய உதவியாளர்களும் இருப்
பது இல்லை என்ற கருத்தைக் குறிப்பிட்டார்கள். குழந்தைகள்
நல அமைப்பாளர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஈடு
பட்டு கேஸ் போட வேண்டாம் என்றுதான் அரசாங்கத்தின்
மூலமாக உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால்
அவர்கள் வாய் மூலமாக சொல்லலாம். மையங்களுக்கு குழந்தை
களை அழைத்து வருகின்ற தாய்மார்களுக்கு அமைப்பாளர்கள்
வாய் மூலமாக சொல்லலாம். எத்தனை குழந்தைகள் இருக்
கின்றன? நான்கு குழந்தைகள் இருந்தால் நீங்கள் குடும்பக்
கட்டுப்பாடு செய்துக் கொள்ளலாமே, நான்கு குழந்தைகளுக்கு
மேலும் நீங்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டால் உங்
களுடைய குடும்பத்தை எப்படி நடத்த முடியும் என்று வாய்
மூலமாக சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்
தான் இன்றைக்கு அரசாங்கத்தின் மூலமாக உத்திரவு பிறப்
பித்து இருக்கிறோம். அங்கும் அவர்கள் அப்படி மறைமுகமாக
செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு
உறுப்பினர் இராசாம்பாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். அம்
மாதிரி ஏதும் நடக்கக் கூடாது என்று மாவட்ட ஆட்சியாளர்
களுக்கு உத்திரவு பிறப்பித்து இருக்கிறோம் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார்
அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நர்சரி பள்ளிகளை நகரங்
களில் இருக்கின்றதை போக்குவதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

அதன் மூலமாக சமூகநலத் துறையில் கிராமப் புறங்களில்
இருக்கின்ற குழந்தைகளுக்கு நர்சரி பள்ளிகள் ஆரம்பித்த வகை
களை பற்றி பாராட்டியும் வரவேற்றும் மேலும் ஆரம்பிக்க வேண்
டும் என்ற ஒரு கருத்தையும் குறிப்பிட்டார்கள். அந்த எண்
ணத்தின் அடிப்படையில்தான் 1982-85 ஆம் ஆண்டு வரை
14,343 நர்சரி பள்ளிகள் இன்றைக்கு கிராமப் புறங்களில் நடத்
தப்பட்டு வருகின்றன. 10,462 நர்சரி பள்ளிகள் திறக்கப்படும்
என்பதையும் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச் சத்து
கொடுக்கின்ற கருத்தைப் பற்றியும் உறுப்பினர்கள் இங்கே குறிப்
பிட்டார்கள். கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்
மார்களுக்கு இன்றைக்கு ஊட்டச் சத்து கொடுக்கப்படுகின்றது.
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக
அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. பல்கர் கோதுமை, ஊட்
டச்சத்து கொடுக்கப்படுகின்றது. அந்தத் திட்டத்தின் மூலமாக
நோய்த்தடுப்பு ஊசி, உடல் நலம் பேணுதல், வளர்ச்சி கண்
காணித்தல், முன் பருவ கல்வி போன்றவை எல்லாம் மிகச்
சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது என்பதையும் இங்கே
குறிப்பிடுவதோடு, இதுவரைக்கும் 39 திட்ட பிரிவுகள் மூலமாக
கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு
ஊட்டச் சத்து கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதையும்
இங்கே குறிப்பிட்டு மேலும் 13 திட்ட பிரிவுகள் இந்த ஆண்டு
ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாக கர்ப்பிணிப் பெண்கள் மற்றும்
பாலூட்டும் தாய்மார்கள் ஊட்டச் சத்தை பெறுவார்கள்
என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் அநாதைக் குழந்தைகளைப் பற்றிக் குறிப்பிட்
டார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற உணவுத் தொகை
யையும் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் மாண்பு
மிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது இங்கே குறிப்பிட்டார்கள்.
இன்றைக்கு ஆதரவற்ற குழந்தைகளுக்கு பராமரிப்பு இல்லமாக
தமிழகத்தில் 20 இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த
இல்லத்தில் 250 குழந்தைகள் இருக்கிறார்கள். மாண்புமிகு
உறுப்பினர் எ.எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்கள் சொல்கின்றபோது
250 குழந்தைகள் ஆதரவற்ற அநாதை பாதுகாப்பு இல்லங்களில்
இல்லை என்பதை குறிப்பிட்டார்கள்.

250 குழந்தைகள் அந்த அநாதை இல்லங்களில் இருக்க வேண்
டும் என்றாலும்கூட அதற்குக் குறைவாக 200-க்கு கீழாகக்கூட
இருக்கலாம். மேலும் அநாதை இல்லங்களை ஆரம்பிக்க
வேண்டுமென்ற ஒரு கருத்தைக் கூடக் குறிப்பிட்டார்கள். எந்த
மாவட்டங்களில் மேலும் அநாதை இல்லங்கள் ஆரம்பிக்க வேண்
டும் என்றாலும் 100 விண்ணப்பங்களாவது அங்கே வர வேண்டும்.
அப்படி வந்தால் நிச்சயமாக மற்றொரு அநாதை இல்லம் ஆரம்
பிக்க நடவடிக்கையை அரசு மேற் கொள்ளும் என்பதைக் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.





ஆதரவற்றோர் பராமரிப்பு இல்லங்களிலே இருக்கிற குழந்தை
களுக்குக் கொடுக்கப்படுகின்ற உணவுத் தொகை குறைவாக
இருந்தது. இதுவரையில் 36 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது.
அந்த 36 ரூபாய் என்பது 60 ரூபாயாக உயர்த்தப்படுகிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொண்டு நிறுவனங்
களுக்கு மட்டும் 78.50 ரூபாயாக உணவுக்காகக் கொடுக்கப்படு
கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அநாதை இல்லங்களில், சென்னை, மதுரை, நாகர்கோவில்,
சேலம் ஆகிய இடங்களில் உள்ள அநாதை இல்லங்களில் தையல்
பயிற்சி தொடங்கப்படும். இதுவரையில் அவர்கள் வெறும்
கல்விதான் கற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத்
தொழில் பயிற்சி கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்
படையில் இந்த ஆண்டு சென்னை, மதுரை, நாகர்கோவில்.
சேலம் ஆகிய இடங்களில் உள்ள அநாதை இல்லங்களில் தையல்
பயிற்சி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்
களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அநாதைக் குழந்தைகளுக்கும், விதவைத் தாய்மார்களின்
குழந்தைகளுக்கும் பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகம் ஆகிய
வற்றைக் கொடுப்பதற்கான உதவித் தொகை உயர்த்தப்பட்
டிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்
கிறேன். அநாதைக் குழந்தைகளுக்கு, உயர்நிலைப் பள்ளி மாண
வர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை 25 ரூபாயிலிருந்து 190
ரூபாயாக உயர்த்தப்படுகிறது. அதாவது பாடப் புத்தகம்,
நோட்டுப் புத்தகம் வாங்குவதற்காகக் கொடுக்கப்படுகின்ற
தொகை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே நான்
குறிப்பிட விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு
25 ரூபாயிலிருந்து 190 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்
பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து சேலம் மாவட்டத்தில் கங்கவல்லி என்ற இடத்திலும்,
குமரி மாவட்டத்தில் கால்குளம் என்ற இடத்திலும் அநாதை
இல்லம் தொடங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரி
வித்துக் கொள்கிறேன்.

அடுத்து உடல் ஊனமுற்றவர்களுக்கு வெறும் கல்வி மட்டும்
கொடுத்தால் போதாது. தொழிற் பயிற்சி கொடுத்து அதன்
மூலமாக வேலைவாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டும் என்ற வழிவகைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள்
தங்களுடைய ஆலோசனையாகவும், கருத்தாகவும் இங்கே அவை
யிலே எடுத்து வைத்தார்கள். அதையெல்லாம் மனதில் கொண்டு
கல்வி மட்டுமல்லாமல் தொழில் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற
வகையில்—ஒரு புறம் அவர்களுக்கு கல்வி கொடுத்துக் கொண்டு
தான் வருகிறோம். பார்வையற்றவர்களுக்குப் பள்ளி, காது

கேளாதவர்களுக்குப் பள்ளி, மன வளர்ச்சி குன்றியவர்களுக்குப் பள்ளி, உடல் ஊனமுற்றவர்களுக்குப் பள்ளி என்று அப்படிப்பட்ட பள்ளிகளின் மூலமாக கல்வி அவர்களுக்குக் கொடுப்பதோடு அவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி கொடுத்து அதன் மூலமாக வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதையும் இங்கே நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

வெட்டுத் தீர்மானங்களில்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலைவாய்ப்பு அலுவலகம் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைக்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னையில் இன்றைக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் ஊனமுற்றோருக்காகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மற்றைய மாவட்டங்களிலும் அமைக்க வேண்டுமென்றால் நிதி வசதியினைப் பற்றியும் யோசனை செய்ய வேண்டிய நிலைமையிலே நாம் இருக்கிறோம். அந்த அடிப்படையில்தான் தஞ்சை, திருச்சி, சேலம், மதுரை, கோவை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உடல் ஊனமுற்றோருக்காக ஒரு தனிப்பிரிவை, ஸ்பெஷல் செக்ஷனை ஆரம்பித்து அதன் மூலமாக அவர்கள் வேலைவாயப்பைப் பெறுகிற ஒரு நிலைமையை இன்றைக்கு இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

அடுத்து, மண்டல மறுவாழ்வு மையங்களை அமைத்து அதன் மூலமாக ஊனமுற்றோர் எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களை எல்லாம் கண்டறிந்து அவர்கள் என்ன வேலைக்குத் தகுதியானவர்கள், என்ன வேலை கொடுத்தால் செய்வார்கள், அவர்களுக்கு என்ன மறுவாழ்வு கொடுக்க முடியும் என்பதை எல்லாம் ஆலோசனை செய்து அதற்கேற்ற வழியில் 5 மண்டல மறுவாழ்வு மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

3 சக்கர வண்டிகள் பற்றியும் குறிப்பிட்டார்கள். அதன் அடிப்படையில்தான் இதுவரையில் 8,782 ஊனமுற்றோர்கள் 3 சக்கர வண்டிகளைப் பெற்றிருக்கிறார்கள். காதொலிக் கருவிகள் 7,878 பேர் பெற்றிருக்கிறார்கள். மேலும் 15,979 பேர் காது கேட்காதவர்கள் காதொலிக் கருவி பெறுவார்கள் என்பதைப் பற்றியும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: பேரவையின் முன் அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்**: துணைத் தலைவர் அவர்களே, ஊனம் உற்றவர்களுக்கு இலவச பஸ் பாஸைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு அதை வரவேற்றும்





பேசியிருக்கிறார்கள். பாராட்டியும் பேசியிருக்கிறார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் ஊனம் உற்றவர்களுக்கும், கண்பார்வை இழந்தவர்களுக்கும் இலவச பஸ் பாஸ் கொடுக்கப்படடு மிகச் சிறப்பான முறையில் அந்த ஊனம் உற்றவர்களை சமூக நலத்துறையின் மூலம் இந்த அரசு பாதுகாத்து செயல்பட்டு வருகிறது, என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல முதியோர் உதவித் தொகையைப் பற்றி இங்கே பல உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தத் தொகையைக்கூட உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டதோடு இன்றைக்கு பல மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன என்பதைப் பற்றியும் குறிப்பிட்டு, ஒருவர் இறந்தால்தான் அந்த இடத்திற்கு மற்றவரைப் போட்டு உதவித் தொகை கொடுக்கப்படுகிறதா என்பதைப் பற்றியும் பல கருத்துக்களையும் ஆலோசனைகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முதியோர் உதவித் தொகையைப் பொறுத்த அளவில் தகுதியான முதியோர்கள் அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்றுதான் அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்திருக்கிறது. அந்த எண்ணத்தின் அடிப்படையில்தான் முதியோர் உதவித் தொகையும் இன்றைக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், ஒருவர் இறந்தால் அந்த இடத்திலே தான் இன்னொருவருக்கு உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்ற அந்த நியதியை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த திட்டத்தை செயல்படுத்தவும் இல்லை. அந்த வகையில் இன்றைக்கு இதுவரைக்கும் 2 இலட்சத்து 80 ஆயிரத்து 32 முதியோர்கள் உதவித் தொகையை பெற்றிருக்கிறார்கள். இன்னும் பல மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன என்பதைப்பற்றியும் இங்கே பல உறுப்பினர்கள் கூறினார்கள். அந்த எண்ணத்தின் அடிப்படையில் தான் மேலும் 26,268 முதியோர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்படும் என்பதையும் இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஆண்டு கொடுக்கவேண்டும் என்றால், இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து தகுதியான முதியோர்களுக்கு உதவித் தொகை கொடுக்க, எவ்வளவு பேர்கள் முதியோர்கள் இருக்கிறார்கள், எவ்வளவு பேர்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள் என்று விவரம் அனுப்பச் சொல்லி கேட்டிருக்கிறோம். அந்த விவரத்தை அரசுக்கு அனுப்பிய பிறகு அந்த விவரத்தின் அடிப்படையில்தான் நிதி ஒதுக்கீடு செய்து ஓய்வூதியம் கொடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வருடமும் எவ்வளவு பேர்கள் விண்ணப்பம் கொடுக்கிறார்களோ அதன் அடிப்படையில்தான், முதியோர் உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்ற நியதி வகுத்து அதன் மூலமாகத்தான் இந்த ஆண்டு

26,268 முதியோர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கப்படும் என்பதையும் இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதோடு, இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் இங்கே நான் இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு குறிபபிடக் கடமைப்பட்டிருக்கிறேன். கணவனால் கைவிடப்பெற்ற, மற்றும் ஆதரவு அற்ற பெண்களுக்கும் இந்தத் திட்டம் நீடிக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டில் இந்தத் திட்டத்தின் மூலமாக 24,758 கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்கள் அந்த முதியோர் உதவித் தொகையைப் பெறுவார்கள் என்பதைப் பற்றியும் குறிப்பிட்டு, அதன் மூலமாக 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவு ஆகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அந்த எண்ணத்தின் அடிப்படையில், இங்கே மிகச் சிறப்பான கருத்துக்களை வரதட்சணைக் கொடுமைகளைப் பற்றியும், குறிப்பாக பிச்சைக்காரர்களைப் பற்றியும், அதில் சிறுவர்கள் பிச்சை எடுக்கிறார்கள், அந்த நிலையை மாற்ற வேண்டும்; முதியோர்கள் பிச்சை எடுக்கிறார்கள் அந்த நிலையை மாற்ற வேண்டும், அதற்கான திட்டங்கள் என்ன இருக்கிறது என்பதைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்தார்கள்.

அந்த அடிப்படையில்தான் சிறுவர்கள் பிச்சை எடுக்கக்கூடாது. எங்கெங்கே சிறுவர்கள் பிச்சை எடுக்கிறார்களோ அவர்கள் எல்லாம் காவல் துறையால் பிடிக்கப்பட்டு சில்ட்ரன்ஸ் ஆக்டின் கீழ் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, அங்கே அந்தக் குழந்தைகளுக்கு கல்வி, தொழில் பயிற்சி கொடுத்து, பிற்காலத்தில் அவர்களின் மறுவாழ்விற்கான நிரந்தர வழி வகைகளை அரசு இன்றைக்கு மேற்கொண்டு வருகிறது.

இங்கே கூட சீர்திருத்தப் பள்ளிகளில் படித்த மாணவர்கள் என்றால் தனியார் துறையினர் கூட அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில்லை என்று சொலலியிருக்கிறார்கள். நீ குற்றவாளி, குற்றம் செய்தவன். நீ சீர்திருத்தப்பள்ளியில் படித்த மாணவன், உனக்கு இங்கே வேலை வாய்ப்புக் கொடுத்தால் மறுபடியும் குற்றம் செய்வாய் என்று தனியார் துறைகளில் சொல்லப்படுவதாக சில கருத்துக்களையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் சொல்லக்கூடாது என்பதற்காகத்தான் சீர்திருத்தப் பள்ளிகளை பெயர் மாற்றி அண்ணா பள்ளி, இந்திராகாந்தி பள்ளி என்று வைத்து மிகச் சிறப்பான முறையில் நடத்த இருக்கிறது என்பதைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில இன்றைக்கு மல்புத்தூரில் உள்ள அரசு ஆண்கள் இளைஞர் சீர்திருத்தப்பள்ளி மாணவர் விடுதி 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பழுது பார்த்து செப்பனிடப்படும் என்று குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.





சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமை தடுப்புச் சட்டத்தின் கீழ் அரசு மகளிர் காப்பகங்கள் 6 இருக்கின்றன. விஜிலன்ஸ் ஹோம்ஸ் 8 இருக்கின்றன. பிற்காப்பு இல்லங்கள் 3 இருக்கின்றன. இதிலே தண்டிக்கப்பட்ட மகளிர்கள் தண்டனைக் காலம் முடிந்த பின்னாலே மறுவாழ்வு கிடைக்காமல் மீண்டும் அதே தொழிலில் ஈடுபடுகிற நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து, தண்டிக்கப்பட்ட மகளிர் மீண்டும் அதே தொழிலில் ஈடுபடாமல் இருப்பதற்கு தண்டனைக் காலம் முடிந்து அவர்கள் வீடு செல்கிற போது மறு வாழ்விற்காக ஐந்தாயிரம் ரூபாய் அவர்களுக்கு கொடுக்கப்படும் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகிறேன்.

வரதட்சணைக் கொடுமை மற்ற சமூகக் கொடுமைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அரசு ஆராய வேண்டுமென்று கவனிக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில தான் இன்றைக்கு மாவட்டம்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழுக்கள் அமைத்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் செய்துகொண்டு வருகிறார்கள். அந்தக் கமிட்டியிலே பெண்களும் இடம் பெறுவார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் தியாகராசன் அவர்கள் பேசுகிற போது உறுப்பினர்கள் சத்துணவுக் கூடங்களைப் பார்வையிட அனுமதி வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்காக இன்றைக்கு மாவட்ட அளவில் மாவட்ட ஆலோசனைக் குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்ட ஆலோசனைக் குழுவில் எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி., போன்றவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். சத்துணவு கூடங்களில் முறைகேடுகள் இருக்கிறதென்றால், சரியான முறையில் நடக்கவில்லையென்றால் அந்த ஆலோசனைக் குழுவில் மாண்புமிகு தியாகராசன் போன்ற உறுப்பினர்கள் சொல்வார்களானால் நிச்சயமாக அதற்கு வேண்டிய நடவடிக்கையெடுக்கப்படும். தவறு செய்யும் ஊழியர்கள் மீது நடவடிக்கையெடுக்கப்படும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். சமூக நலத்துறை மானியத்தின் மீது உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை எடுத்து வைத்திருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் முதியோர் உதவித் தொகை கேட்டு வந்த விண்ணப்பங்களில் எதுவும் வெயிட்டிங் லிஸ்ட்டில் இல்லையென்று சொன்னார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, மனுக்கள் நிறைய கொடுக்கப்பட்டும், அவர்கள் தேர்வு செய்யப்பட்டும்,

தகுதியுள்ளவர்களாக ஆக்கப்பட்டும் அவர்களுக்கு இன்று வரை
யில் முதியோர் உதவித் தொகை கொடுக்கப்படவில்லை. அடுத்து
அரிசன மக்களுக்கு நிறைய வேலை வாய்ப்பு சமூக நலத்துறை
யின் மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், ஜாதி சமய வேறு
பாடுகளுக்கு அப்பாற்பட்டு இந்தத் துறை இயங்குகிறதென்றும்
சொன்னார்கள். அப்படியானால் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்
தவர்கள் எத்தனை மகளிர் மன்றங்கள் வைத்திருக்கிறார்கள்
என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். சேவை இல்லங்
களுக்கு ஊக்கம் அளிக்கப்படும் என்றார்கள். நான் வேண்டாம்
என்று சொல்லவில்லை. யானைக்குத் தரும் தவிட்டு உருண்டை
யானாலும் யானை உண்கின்ற போது இரண்டு பக்கம் சிதறி
பல இலட்சக்கணக்கான எறும்புகளுக்கு உணவாகும். அதைப்
போல மிகப் பெரிய நிலையங்களில் நீங்கள் உதவுகிற தொகையை
சற்று குறைத்து எல்லா ஏழை எளிய மன்றங்களுக்கும் கிடைக்க
வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலை
வர் அவர்களே, முதியோர் உதவித் தொகை பெற காத்திருப்பவர்
களுக்கு, அதாவது 26,268 பேர்களுக்கும் கொடுக்கப்படும் என்
பதை குறிப்பிட்டிருக்கிறேன். அடுத்து, அரிசன மகளிர் மன்
றங்களை புதுப்பிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அதை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்பு
வது, முதியோர்களுக்கு கொடுக்கப்படுகிற 35 ரூபாய் உதவித்
தொகை உயர்த்திக் கொடுக்கப்படுமா என்று கேட்டேன். அதற்கு
பதில் இல்லை.

[பிற்பகல் 1-40]

அதேபோல் முதியோர்கள், அனாதைகள், ஏழைகள் இவர்
கள் எல்லாம் டாக்டர் சர்ட்டிபிகேட் ஆர்.ஐ. சர்ட்டிபிகேட்
வாங்க வேண்டும் என்று சொல்லி, அவர்களை நீங்கள் ரொம்ப
வும் அலையவிடுகிறீர்கள். எனவே இதையெல்லாம் தவிர்த்து,
வாக்காளர் பட்டியலில் இருந்தால் வயதை சரிபார்த்து அவர்
களுக்கு கொடுப்பார்களா என்று கேட்டிருந்தேன். அதற்கு
அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. தற்போதாவது
பதில் சொல்லுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலை
வர் அவர்களே, முதியோர்களுக்கு 35 வயது இருந்தால் கொடுப்ப
தில்லை. அவர்களுக்கு 60, 65 வயது இருக்க வேண்டும்.
விதவைகளுக்கு 40 வயது. ஊனமுற்றவர்களுக்கு 45 வயது.
விவசாயத் தொழிலாளர்களுக்கு 60 வயது. முதியோர்களுக்கு



65 வயது, அந்த அடிப்படையிலேதான் அவர்களுக்கு
உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. வாக்காளர் பட்டியலில்
இடம் பெற்றிருந்தால் அதையும் கணக்குப் பார்த்துக் கொடுக்கப்
படும். (குறுக்கீடு).

துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பதவி ஏற்பதற்கு முன்பு
20 ரூபாய்தான் இந்த முதியோர்கள் பெற்றுக் கொண்டு
இருந்தார்கள். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்
பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் 35 ரூபாய் மாத உதவித்
தொகை பெற்றுக்கொண்டு இருப்பதோடு, அவர்கள் வருடத்
திற்கு 2 முறை, வேஷ்டியும், சேலையும் பெற்றுக்கொண்டு இருக்
கிறார்கள். இது தவிர, சத்துணவு பெறுவதோடு சத்துணவு
பெறுகிறவர்களுக்கு வாரம் ½ கிலோ அரிசியு சத்துணவு பெறா
தவர்களுக்கு வாரம் ஒரு கிலோ அரிசியும் கொடுத்துக்கொண்டு
இருக்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதத்தில்
பங்கு பெற்ற உறுப்பினர்கள் மட்டும்தான் கேள்விகள் கேட்க
லாம். அவர்கள் கூட புதியதாக எதுவும் கேட்க முடியாது.
ஏற்கனவே பேசியதைப் பற்றி விளக்கம் தான் கேட்கலாம்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது கலப்பு
மணம், மறுமணம் மற்றும் ஒரு கண் இல்லாதவர் இன்னொரு
கண் இல்லாதவர்களை மணந்து கொண்டால், இப்படிப்பட்ட
வர்களுக்கு அரசு கொடுக்கும் பத்திரம், தாலி செய்வதற்கான
தங்கம், 300 ரூபாய் ஆகியவைகளை உயர்த்திக் கொடுக்க
வேண்டும் என்று கேட்கவில்லை. அதைக் கொடுப்பதற்கு நீங்கள்
ஆராய்ச்சி செய்யுங்கள். ஆனால் அவர்களுக்கு மறுவாழ்வு
கொடுக்க, சமுதாய சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர்களுக்கு முன்னு
ரிமை கொடுத்து வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா
என்பதைத்தான் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : துணைத் தலைவர்
அவர்களே, அதை அரசு பரிசீலிக்கும் என்பதை நான் குறிப்பிடு
வதோடு இந்தக் கலப்புத் திருமணம் செய்பவர்களுக்குக் கொடுக்
கப்படுகின்ற இந்தத் திட்டத்தின் மூலம் பார்வையற்றவர்களும்
பயன் பெறுவார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்பு
கிறேன். பார்வையற்றவர்களை யார் திருமணம் செய்துகொள்
கிறார்களோ, அவர்களுக்கு 8 கிராம் தங்கம், அதேபோல் திரு
மணச் செலவுக்காக 300 ரூபாய் பணம், 4 ஆயிரம் ரூபாய்க்கான
6 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரமாக இந்த ஆண்டு 20 நபர்
களுக்கு கொடுக்கப்படும் என்பதையும், நான் குறிப்பிட விரும்பு
கிறேன்.

(திருமதி கோமதி சினிவாசன்) [1986 ஏப்ரல் 26

பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத அவர்களுக்கு உதவியாக எழுதுவோர் உதவித் தொகை அளிக்கப்படும். முதல் கட்டமாக சென்னையில் உள்ள 3 சிறப்புப் பள்ளிகளில் 9-வது வகுப்பு முதல் 12-வது வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இந்த உதவி அளிக்கப்படும். சுமார் 200 பார்வையற்ற மாண வர்கள் இதனால் பயன் அடைவர். தஞ்சை அரசு காது கேளா தோர் பள்ளியில் பத்தாவது வகுப்பு வரைதான் இருக்கிறது. சென்ற ஆண்டு பிளஸ் டூ தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு பிளஸ் டூ வகுப்பு ஆரம்பிக்கப்படும். தர்மபுரியிலும் ஈரோட்டிலும் உள்ள அரசு காது கேளாதோர் பள்ளியில் கூடுதலாக 60 மாணவர்கள் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப் படும். தற்போது தர்மபுரியில் 83 மாணவர்களும், ஈரோட்டில் 50 மாணவர்களும் உள்ளனர். வடசென்னையில், அம்பத்தூரில் உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையங்களில், தேர்ந்தெடுக்கப் பட்ட சில தொழில்கள் மூலமாக 92 ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்க தனி வகுப்புகள் தொடங்கப்படும்.

திரு. சா. ஞானசுந்தபரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித் தொகை அளிப்பதிலே வயது வரம்பு இருக்கிறது என்று சொன் னார்கள். அந்த வயது வரம்பைத் தளர்த்துவதற்கு அரசு முன் வருமா? அதோடு முத்துப்பேட்டை, பட்டுக்கோட்டை, மன்னார்குடி ஆகிய இடங்களில் கயிறு தயாரிக்கும் ஆலை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டேன். அதையும் அமைச் சர் அவர்கள் செயல்படுத்த முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவித் தொகை கொடுப்பதற்கு 30 வயது என்று வரம்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

அதற்குக் கீழே இருக்கின்ற அந்த வயது வரம்பை தளர்த்த வேண்டும் என்று சொன்னால், 30 வயதுக்குக் கீழே இருப்பவர்களுக்கு எல்லாம் பல்வேறு திட்டங்கள் சமூகநலத் துறையின் மூலமாக தீட்டப்பட்டு இருக்கிறது. அத்தகைய திட்டங்கள் மூலமாக பல்வேறு விதமான சலுகைகளை அவர்கள் பெற்று வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது ; இப்போது வாக்கெடுப்பு.

டாக்டர் க. நல்லமுத்து அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.



1986 ஏப்ரல் 26]

திருவாளர்கள் எ.எஸ்.ஏ. ஆறுமுகம், எஸ். என். இராமசாமி பொ. உத்திராபதி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; பேரவை முன் னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 30-சமூகநலன் என்ற தலைப் பின்கீழ் ரூ. 76,04,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

6. அறிவிப்பு.

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு 1986 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986) பேரவையில் ஆய்வுக்கு எடுத் துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்ட முன்வடிவு.

ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மா னத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 27/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலை வர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 27/1986) மக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வ தற்காக சுற்றுக்கு அனுப்பப் பெறவேண்டும்'.

* 1986 மார்ச் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. சு. பாலன் : இதை நான் வழிமொழிகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : என்னைப் பொறுத்தவரையிலே
இந்தச் சட்டத் திருத்தம் பொதுமக்களுடைய ஆய்வுக்காக
விடப்பட வேண்டும் என்பதை நான் முன்
மொழிகிறேன். அதே நேரத்திலே தங்கள் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன், சாப்பாட்டு நேரம். செவிக்
குணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' என்ற
றெல்லாம் இப்போது எடுபடாது. திங்கட்கிழமை வைத்
துக்கொண்டால் வசதியாகப் பேசலாம். சில பிரச்சினைகள்
முக்கியமாக இருக்கிறபோது, நேரம், சாப்பாட்டு நேரம் என்று
சொல்வார்களானால் சிரமமாக இருக்கும். (குறுக்கீடு) மன்றத்
தினுடைய துணைத் தலைவர் அவர்களே, உங்களிடத்திலே
கோரிக்கையாகத்தான் வைக்கிறேன். காரணம், அவசரக்
கோலத்தில் அள்ளித் தெளித்ததைப் போல ஒரு முக்கியமான
சட்டம், என்னவென்றால் நாம் ஒரு சட்டத்தை உருவாக்கப்
போகிறோம். மிகமுக்கியமான ஒரு சட்டத்தை, 3 ஆயிரத்துக்
கும் மேற்பட்டவர்களுடைய பிரச்சினை. ஆகையினாலே,
நேரத்தைப்பற்றிக் கவலை வேண்டாம் (குறுக்கீடு) இந்தத்
திருத்தத்தை நான் முன்மொழிகிறேன.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே. இந்த மசோதா 328 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்
கின்றHealth Assistants Auxiliary Nurses Mid-wivesMaternityAssistants
போன்ற ஊழியர்களை, உள்ளாட்சித் துறையிலிருந்து அரசு
எடுத்துக்கொள்வதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டம்.
மேலெழுந்த வாரியாக பார்த்தால், ரொம்ப நன்றாக
இருக்கிறது., ஏனென்றால் அரசு ஊழியர்களாக ஆகிறார்கள்,
அதனாலே. ஆனால் உள்ளாட்சித் துறையிலே எடுத்துக் கொள்
ளும்போதுதான், உள்ளாட்சித் துறையிலே இருக்கின்ற அதிகாரங்
களை எந்தஅளவுக்கு நீங்கள் பறிக்கிறீர்கள் என்பதை நான் இந்த
நேரத்திலே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. உதாரணத்
துக்கு 'நான் சொல்கிறேன். இப்போது 1950 முனிசி
பல் ஆக்ட்-லே செக்ஷன் 65 (சி) என்ன அதிகாரம் பஞ்சாயத்து
யூனியன்களுக்கு வழங்குகிறது என்றால்

"The establishment and maintenance of Maternity and Child Welfare Centres, including the maintenance of "Thayi" service and offering advice and assistance to 'mothers' in Family Planning"

இது எக்ஸிஸ்டிங். பஞ்சாயத்து யூனியனிலே ?இருக்கிற வரம்பு
அதிகாரம். ஆனால் இப்போது இயற்றப்படுகின்ற புதிய
சட்டத்தின் மூலமாக இது ஒமிட்டட். அந்த அதிகாரத்தை
பறித்து விடுகிறீர்கள்.





அடுத்து, அதே சட்டத்தின்கீழ் 65 (எ ப்)

"Preventive and remedial measures connected with any epidemic or with malaria"

இது எக்ஸிஸ்டிங் செக்ஷன். இப்பொழுது பஞ்சாயத்து யூனிய
னுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் நீங்கள், இந்தச் சட்டத்
தின்கீழ் வருவதன் மூலமாக ஒமிட்டட். அதையும் பறித்து விடு
கிறீர்கள்.

(பிற்பகல் 1-50)

Existing Section 93 of 1958 Act, 'Compulsory Vaccination'—
"The Panchayat Union Council shall enforce vaccination
throughout the Panchayat Union and it may enforce revaccination
throughout the Panchayat Union or in any part thereof in respect
of such persons to such an extent and in such a manner as may
be prescribed"

என்று இருக்கிறது. இது இப்போதுள்ள அதிகாரம். இந்த
அதிகாரத்தை இப்போது பஞ்சாயத்து யூனியனிடமிருந்து பறித்து
விடுகிறோம். இந்தச் சட்டத்தின் மூலமாக, நான் மெத்த பணி
வன்போடு தெரிவித்துக் கொள்கிறேன், இந்த ஊழியர்களை
அரசி ஊழியர்களாக ஆக்குவதை நான் மேல் எழுந்தவாரியாக
ஆதரித்தாலும் அந்த ஊழியர்கள் ஒரு 'பெக்குலியராக' இருக்
கிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்கு சென்று இருக்கிறார்கள்.
ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே இதே
பஞ்சாயத்து யூனியனில் இருந்து இருக்கலாம், அவர்கள்
விரும்பி இருக்கலாம், ஏற்கெனவே அது சம்பந்தப் பட்ட
ஊழியர்கள் விரும்பியிருக்கலாம். ஆசிரியர்களை எடுத்து
விட்டோம், வாட்டர் போர்டு, டிரெயினேஜ் போர்டை எடுத்து
விட்டோம். பஞ்சாயத்து யூனியனுக்கு அதிகாரம் இல்லை.
அதனால் கிராமங்களில் எல்லாம் தண்ணீர் தொட்டிகள் எப்படி
இருக்கின்றன. தண்ணீர் இல்லை என்று சட்ட மன்றத்தில்
அடிக்கடி விமர்சிக்கிறோம். தண்ணீர் தொட்டி இல்லை என்றும்
இருக்கிற தொட்டிகள் எல்லாம் பாழடைந்து இருக்கிறன என்
றும் அது உள்ளாட்சித் துறையில் இல்லாத காரணத்தால் போர்
டாக மாறி விட்ட காரணத்தால் மக்களுக்கு கிடைக்கக் கூடிய
தண்ணீர், சாக்கடை வசதிகூட கிடைக்கவில்லை என்ற குற்றச்
சாட்டை ஆளும் தரப்பிலும் வைத்து இருக்கிறார்கள். இந்த
பக்கமும் வைத்து இருக்கிறோம். இப்போதுள்ள சூழ்நிலையில்
இப்போது பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக எல்லா கட்சி
யினரும் வந்திருக்கிறார்கள். அந்த தலைவர்கள் இருக்கிறார்
கள். அந்த தேர்ந்தெடுக்கப்பட்ட பாடிக்கு இருக்கிற அதி
காரத்தை ஒவ்வொன்றாக பறித்து விட்டால் என்ன நியாயம்.
கொஞ்சம் யோசனை செய்து பார்க்கவேண்டும். ஆனால்
நீங்கள் சொல்லுவது

implementation of multi-purpose scheme, i.e., Government of India Scheme

(திரு. பா. பொன்னுரங்கம்) [1986 ஏப்ரல் 26

செய்ய வேண்டும், அதற்காக இதை நாங்கள் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறார்கள் அது கூட Hill areas க்குத்தான், 10 ஆயிரம் 20 ஆயிரம் மக்களுக்கு இந்த 'accommodation

இருப்பது போல் 3 ஆயிரம்' hill areas, 5 thousand—other areas என்று இம்பிளிமெண்டு செய்வதற்கு, அந்த ஸ்கீமை இம்பிளிமெண்டு செய்வதற்கு. இதை நாங்கள் கொண்டு வருகிறோம் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் அதே நேரத்தில் சில அரசியல் கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த சித்திரை ஆண்டில், காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு பழனியாண்டி அவர்கள் அருமையான கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஒரு கட்டுரை மூலமாக கடந்த உள்ளாட்சித் தேர்தலில் ஜனநாயக முறைப்படி ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களில், நகராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அனைவரும் மத்திய அரசு கொடுக்கும் உதவியை முறையாக பொது மக்களுக்கு போய் சேரும் முறையில் தொண்டு ஆற்ற வேண்டும். மத்திய அரசு கொடுக்கும் உதவி முறையாக பொது மக்களுக்கு போய் சேருமாறு ஊராட்சி ஒன்றியம் பணி ஆற்றும். ஆனால் நாம் அதை எடுத்துக் கொள்கிறோம்.

for as health is concerned

அங்கே போய் சேரப்போவது இல்லை. ஏன் என்றால் நாம் அதை எடுத்துக் கொள்கிறோம். ஊராட்சி ஒன்றியங்களுக்கு போகாது.

அது மட்டும் அல்ல, இன்னொரு கருத்தை மத்திய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

'I quote from Indian Express, dated 7th April 1986. 'MINISTER PLEADS FOR MORE POWERS TO LOCAL BODIES' . . . . The Union Minister of State for Personnel and Administrative Reforms Thiru P. Chidambaram has said that if the Tamil Nadu Panchayat and Panchayat Unions were to perform well, they should be invested with more powers and requested the State Government to amend the law . . . ."

அவர் பவரை கொடுங்கள் என்று தான் லாவை அமெண்டு பண்ணு என்கிறார், பவரை பிடுங்க லாவை அமெண்டு செய்கிறோம் நாம்.

" . . . . at the earliest to devolve more powers to local bodies " . . . . .

லோக்கல் பாடிக்கு கொடுக்கிறோமா, எடுக்கிறோமே,

" . . . . . The Minister who was speaking at a function to felicitate the newly elected Panchayat Union Chairman and Panchayat Presidents in Chidambaram Parliamentary Constituency at Neyveli on Saturday, said that the Chief Secretaries who



1986 ஏப்ரல் 26]

met in Delhi had recommended that all developmental and anti-poverty schemes should be undertaken by Block Development Officers, i.e., Block Development Officer who had to be answerable to elected representatives. They had agreed that for the proper implementation of the schemes, decentralisation of powers was a must." ஸ்டேட்டில் இருக்கிற பவர் லோக்கல் பாடிக்கு . . . . . . . .

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பத்திரிகையில் வந்துள்ள அந்தக் கருத்தை தெரிவிக்கிறார்கள். அது யாரோ வெளியிலே பேசிய கருத்தாக தெரிவிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கருத்தைத் தான் அவர் சொல்லுகிறார்.

THE HON. DR. H. V. HANDE: I know that news item. The Hon. Minister Thiru P. Chidambaram has made a statement and you are quoting that statement. Is n't it?

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆக அரசியல்வாதிகள், நிர்வாகிகள், சொல்கிறார்கள். எல்லோரும் சொல்கிறோம். 'மோர் பவர்ஸ் டு தி ஸ்டேட்', நமக்கு வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அரசாங்கத்தின் சார்பிலும், கட்சியின் சார்பிலும், சர்க்காரியா கமிஷனிடம் கூட கொடுத்திருக்கிறோம். நமக்கு பவர்ஸ் வேண்டுமென்று. பவர்ஸ் வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அந்த பவர்சை எடுத்து கொடுக்க மட்டும் தான் சொல்கிறீர்கள். அந்த ஊழியர்கள் அரசு ஊழியர்களாக விரும்புகிறார்களே என்ற ஒரு கருத்து கூட சொல்லக் கூடும், இல்லை நிச்சயமாக இல்லை.

G.O. No. 1936—that too was made by an executive authority and not by this Assembly.

அந்த முனிசிபல் ஆக்ட் 1958-ஐ எதிர்த்து, அமெண்ட் பண்ணாமலேயே நீங்கள் 1936 ஜி.ஓ மூலமாக இம்ப்ளிமெண்ட் பண்ணாத காரணத்தினால், உங்களுக்கு கோர்ட்டில் செல்லவில்லை. கோர்ட்டில் இருக்கிற கேசை முடிப்பதற்காக நீங்கள் இதை அவசர அவசரமாக கொண்டு வருகிறீர்கள். ஆனால் அந்த ஊழியர்கள் அதை விரும்பவில்லை. அதை விரும்பாத காரணத்தால் தான் அவர்கள் கோர்ட்டிற்கே சென்றிருக்கிறார்கள். கோர்ட்டிற்குச் சென்று பல்வேறு காலக்கட்டங்களில் உங்களுக்கு உத்தரவு கோர்ட் மூலமாக வந்திருக்கிறது. 1936/82 டேட்டட் 29-9-82.

அந்த ஜீ ஓ.வை எதிர்த்து, ஒரு முறை ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே 29-9-82

stay granted by Hon. Justice V. Ramaswamy on the writ petition of the Association concerned on 25th November 1982 ஒரு ஸ்டே

அதற்கு அடுத்து அவரே திரும்பவும் நீதி இன்னும் அரசாங் கம் நடைமுறைப்படுத்தாத காரணத்தால் மீண்டும் அவர்கள் ஜஸ் டீஸ் பத்மநாபனிடம், எங்களுடைய 'ஸ்டேட்டஸ்கோ' அப்படியே மெயின்டெயின் செய்யப் பட வேண்டுமென்று அவர்கள் கோர்ட் டிற்குப் போகிறார்கள். அந்த ஜஸ்டிஸ்,

on 29th September 1982, interim stay—Status Quo as on 29th September 1982 be continued, ordered.

அந்த ஆர்டரை போட்டிருக்கிறார்கள். அதை நீங்கள் ஏற்றிருக் கிறீர்களா? அதை நீங்கள் இன்னமும் எடுத்துநடை முறைப்படுத்த வில்லை. இந்த இரண்டு கோர்ட்டுகள் உத்தரவிட்டும், நீங்கள் பண்ணியாத காரணத்தால், அந்த அசோசியேஷனை, எந்த ஊழியர் களை நீங்கள் மாற்றவேண்டுமென்று சொல்கிறீர்களோ அந்த அசோசியேஷனே மீண்டும் போய் கோர்ட்டை அவமதித்த வழ கைப் போடுகிறார்கள். உங்கள் அரசு தரப்பு வக்கீல், இதை அரசாங்கம் மேற்சொண்டு நடைமுறைப்படுத்த எங்களுக்குப் போதிய அவகாசம் இல்லை. அவகாசம் வேண்டும் என்று அவகாசம் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இரண்டு மாத அவ காசம் கொடுத்து, 15–7–1985ல் ஜஸ்டீஸ் பத்மநாபனே இரண்டு மாத கால அவகாசம் கொடுத்திருக்கிறார்கள். அதனால் பெட்டி ஷன் போட்டாரே அந்தப் பெட்டிஷனை டிஸ்மிஸ் பண்ணி விட்டு, இந்த அவகாசம் தந்திருக்கிறார்கள். அதையும் நடைமுறைப் படுத்தியதா என்றால் இல்லை. திரும்பவும் பெஞ்சுக்குப் போகி றார்கள்.

11–8–1983 பெஞ்சிலே சீப் ஜஸ்டிஸ் கே.பி.என். சிங் மற்றும் ஜஸ்டீஸ் பத்மநாபன் ரிட் அப்பீலுக்கு 697/83 போனவுடன், அந்த பெஞ்ச் என்ன சொல்கிறது என்றால், உடனே நம்முடைய ஸ்கீம், 1936 ஜி.ஓ. ஸ்கீமை இம்ப்ளிமெண்ட் பண்ணுவதை ஸ்டே பண்ணியிருக்கிறது. ஆக எவ்வளவோ நடந்திருக்கிறது. நடந்த அதையெல்லாம் மதிக்காமல், அதற்கெல்லாம் ஒரு செவி சாய்க் காமல், நீங்கள் இப்போது இந்த மசோதாவை கொண்டு வந் திருக்கிறீர்கள். ஆனால் அந்த மசோதாவைக் கொண்டு வந்தால் பரவாயில்லை. அவர்களுக்கு தீங்கு இல்லாமல் மசோதா வரு கிறதா என்றால், அவர்கள் எனக்குச் சொல்கிற தகவல்படி இல்லை. முதலாவது, seniority இரண்டாவது transfer from district to district மூன்றாவது, fixed travelling allowance என்ற ஒரு அலவன்ஸ் அவர்களுக்கு இருந்தது. இப்போது அது கிடையாதாம். கவர்ன்மெண்ட் சைட் வந்தவுடன் கிடையா தாம்.

அது மட்டுமல்ல, அவர்களுக்கு கிராமங்களில் சென்று, டெபி வரி போன்ற காரியங்களில் ஈடுபட வேண்டுமானால், இரவிலோ அல்லது பகலிலோ சென்று ஈடுபடுகின்ற போது, அந்த பஞ் சாயத்து யூனியனுக்கு, ஒரு அசிஸ்டெண்டு உண்டு.





(பிற்பகல் 2-00)

ஆனால் அரசுத் தரப்பிலே எடுத்துக்கொள்கிறபோது அந்த வசதியில்லை. ஆகவே அந்த வசதிகள் எல்லாம் குறைகிற காரணத்தினாலே அவர்கள் மீண்டும் அவர்களை அதே துறை யிலே அதாவது பஞ்சாயத்துத் துறையின் கீழே கொண்டுவர வேண்டுமென்று போராடியிருக்கிறார்கள். அவர்கள் கடந்த ஆண்டு உண்ணாவிரதம் இருந்ததை அமைச்சர் அறிவார். அமைச்சரிடம் கூட ஆளுங்கட்சியைச் சேர்ந்த எல்.எல்.ஏ. விசிட்டிங் கார்டைக்கொண்டு வந்து ஒருவர் கொடுத்து கேட்டி ருக்கிறார் என்று அறிகிறேன். அமைச்சர் கூட அப்போது அந்த விவகாரத்தைக் கேட்டு அப்போது ஒரு முறையாக நடந்து கொண்டிருக்கிறார், அதைப்பற்றிப் பிரச்சினையில்லை. ஆகவே அவர்கள் இம்சிக்கப்பட்டிருக்கிறார்கள், கொடுமைப்படுத்தப் பட்டு இருக்கிறார்கள். அவர்கள் வேண்டாமென்று சொல்கிறார் கள். நீங்கள் மத்திய சர்க்காருடைய திட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென்றால் ஒரு சிறிய உதாரணம் நான் சொல்லவிரும்புகிறேன்.

இந்தக் கூட்டத் தொடரில் என்று கருதுகிறேன். எனக்கு ஞாபகம் சரியாக இருந்தால், தென் ஆற்காடு மாவட்டத் திலே முனிசிபாலிட்டியினுடைய ஆளுகைக்குட்பட்ட ஒரு மருத் துவமனை பாழடைந்திருப்பதாகவும் போதிய மருத்துவர்கள் இல்லையென்றும் வேலையாட்கள் இல்லையென்றும் நல்ல மருந்துகள் முறையாக இல்லையென்றும் ஆளுங்கட்சித் தரப் பிலே எழுப்பப்பட்டு அந்த உறுப்பினர் மிக நொந்து சொன்னார். எனவே அருள்கூர்ந்து அரசாங்கம் அந்த மருத்துவ மனையை எடுத்துக்கொள்ளுமா என்று கேட்க நீங்கள் அழகாகப் பதில் அளித்தீர்கள். வேண்டுமானால் அந்த மருத்துவ மனையைப் புதுப்பித்துக் கொள்ளட்டும், டாக்டர்களையும் ஊழியர்களையும் அமைத்துக்கொள்ளட்டும், மருந்துகளை வாங்கி கொள்ளட்டும் அதற்கான மொத்தச் செலவை முனிசிபாலிட்டி எழுதி அனுப்பி னால் சர்க்கார் அதை ஏற்றுக்கொள்ளும் என்று அருமையான பதிலை அளித்தீர்கள். ஆகவே அரசுடைமையாக்கிக் கொள்ளமாட்டோம், தேவையில்லை, அது நல்லதில்லை என்று ஜனநாயக முறையில் பேசுகிறீர்கள். ஏனென்றால் லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷனில் கைவைக்கக்கூடாது, டெமாக்ரடிக் செட் அப் இயங்கவேண்டுமென்ற முறையிலே என்று சொன்னீர்கள். என்ன முறை. லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷனிலே இருக்கிற மருத்துவமனையை எடுத்துக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள். அதற்காகிற செலவையெல்லாம் கொடுக்கிறேன் என்று சொல் கிறீர்கள். ஆனால் உங்கள் பக்கத்திலே அமைச்சர் ப.உ.ச. அவர்கள் உள்ளாட்சித் துறையிலே இருக்கிற பல பிரிவுகளை எடுத்துக்கொள்கிறார். என்ன முறை என்று நான் கேட்டபோது அப்படி இருக்காதே என்று சொன்னீர்கள். பிறகு என்கையிலே இருந்த இதே மசோதாவினுடைய காப்பியை என்னிடம் வாங்கி யெடுத்துக்கொண்டு சென்றீர்கள். அரசாங்க ஊழியர்கள் ஆக்குவது கூடாது என்பதல்ல. ஆசிரியர்களை ஆக்கினீர்கள்

திரு. ப. பொன்னுரங்கம் [1986 ஏப்ரல் 26

ஆனால் இவர்கள் விரும்பவில்லை. அது மட்டும் அல்ல, எனக்கு
தந்திருக்கிற தகவல் மத்திய அரசு இந்த ஸ்கீமை அனுப்புகிற
போது மருத்துவத் துறை ஆட்களை அமர்த்தவேண்டுமென்று
தான் தாக்கீது உங்களுக்குத் தந்திருக்கிறார்கள். இந்த
ஸ்கீமினுடைய பிரியாம்பிளிலே அப்படி இருப்பதாக அந்த
அமைப்பைச் சார்ந்தவர்கள் என்னிடம் தகவல் கொடுத்திருக்
கிறார்கள். ஆகவே மத்திய அரசு திட்டகொள்கை விளக்கத்தில்
பிரியாம்பிளிலே தெளிவாக அது சொல்லப்பட்டு இருக்கிறது.
ஹெல்த் டிபார்ட்மெண்டிலிருந்து எடுத்துக்கொள்ளவேண்டு
மென்று இருக்கிறது. நான் சொல்கிறேன், ஹெல்த் டிபார்ட்
மெண்டிலிருந்து இன்றைக்கு மொபிஷியலுக்கு சிலபேர்கள்
டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறார்கள் இ. எஸ். ஐ. என்று
நினைக்கிறேன். இதே கேட்டகரியிலே இந்தப் பர்ப்பஸுக்கு
கூட அது இருக்கலாம், அந்த ஸ்கிமைப்பற்றி எனக்குத் தெரிய
வில்லை. மத்திய சர்க்கார் ஒதுக்குகின்ற எந்த நிதியாக இருந்
தாலும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சித்துறைக்கு அதிகாரம் தந்து
அவர்களையே அந்தக் காரியத்தைச் செய்யவைத்தால் என்ன?
எல்லாக் கட்சிக்காரர்களும்தான் பஞ்சாயத்து யூனியன்களிலே
தலைவர்களாக இருக்கிறர்கள், அவர்கள் நல்ல பெயரை எடுத்து
விடப்போகிறார்களோ என்ற அச்சமா, பயமா. எதற்காக இப்
போது தேவையில்லாமல் அதுவும் அவர்களுக்கு விரோதமாக
ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து 1—10—1982 என்று
போட்டு ஸ்பெஷல் ஆபீசர்கள் கீழ்தான் அவர்கள் 5 வருடமாக
இயங்கியிருக்கிறார்கள், அப்படியே ஊழியர்களாக இருப்பார்
கள். ஆனால் அதே நேரத்திலே எலக்ட்ட் பாடியின்
கீழே இருக்கக்கூடாது என்று ஒரு சட்டம். பஞ்சாயத்தி
னுடைய அதிகாரங்களைப் படிப்படியாகப் பறிப்பதற்
கான ஒரு செயலாக இது இருப்பதாலே இன்றைக்கு
பஞ்சாயத்து யூனியன் என்பது, நாளைக்கு முனிசிபாலிட்டி என்றும்
நாளை மறுநாள் கார்ப்பரேஷனுக்கும் என்று வராது என்
பதற்கு என்ன உத்தரவாதம்? ஆகவே, அதிகாரங்களைப் பரவ
லாக ஆக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தினிடத்திலே
நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அமைச்சரவர்கள் கூட
அண்மையிலே சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்த தலைவர்கூட இந்த உள்ளாட்சி அமைப்புகளிலே வந்
திருப்பவர்கள் மத்திய சர்க்கார் நிதியைக் கொண்டு சிறப்பாகச்
செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்றெல்லாம் கூறியிருக்கிறார்க
கள். அந்தத் தொழிலாளர்கள் விரும்பாத நிலையில் ஏன் நீங்கள்
சட்டத்தைக் கொண்டு வருகிறீர்கள்? மாண்புமிகு உறுப்பினர்
திரு. ரகுமான்கான் அவர்கள்கூட, It should be referred
to el cit public opinion என்று சொன்னார்கள்.
ரெஃபர் பண்ணக்கூட வேண்டாம். இதை வித்ட்ரா பண்ணுங்கள்
அதுதான் நல்லது, ஜனநாயகத்தை மதிக்கின்ற வகையில், மக்கள்
மன்றத்தை மதிக்கின்ற வகையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்
பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இருக்கின்ற அதிகாரங்
களைப் பறிக்காதீர்கள் என்று நான் கேட்டுக்கொண்டு இந்தச்
சட்டத்தை எதிர்த்து அமர்கிறேன்.



1986 ஏப்ரல் 26] (திரு. கு. ரமணி)

*திரு.கு.ரமணி: மதிப்பிற்குரிய துணைத்தலைவரவர்களே இந்தச்
சட்டத்தை முதன்முதலாக இன்ட்ரொட்யூஸ் செய்தகாலத்திலே
தமது உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் இந்தச் சட்டம்
எப்படிப்பட்ட நோக்கத்தோடு இங்கே கொண்டு வரப்போகி
றோம், ஏன் கொண்டு வரப் போகிறோம் என்று சுருக்கமான
விளக்கம் ஒன்றைச் சொல்லக்கிடையாது. இது ஒன்று. இரண்டா
வதாக இன்றைக்கு விவாதத்திற்கு எடுக்கப் போகின்ற இந்தச்
சமயத்திலேயாவது அப்படிச் சொல்லியிருக்கலாம். இங்கே
ஒரு சுபாவம் என்ன காட்டப்படுகிறது என்றால், இதில் ஒன்று
மில்லை, பிரமாதமாக ஒன்றுமில்லை, பாஸ் செய்து விட்டுப்
போக வேண்டியது என்பதுதான். நான் சொல்வது, ஒரு சட்ட
டத்தை நிறைவேற்றும் காலத்திலே இப்பொழுது இருக்கக்கூடிய
ஆட்டிட்யூட் சரியல்ல என்பதை முதலில் சொல்லவிரும்புகிறேன்.
நம்முடைய மதிப்பிற்கு உரிய மாண்புமிகு அமைச்சரவர்கள்
இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள முன்வரும்பொழுது
இதனுடைய காரண நோக்கம் பற்றி, மற்ற விஷயங்களைப்பற்றிச்
சொல்லியிருந்தாலும்கூட, என்னென்ன விளைவுகள் ஏற்படுகின்றன
என்பதையும், அதிலுள்ள சாதக பாதகமான நிலைமைகளைப்
பொறுத்தவரையில், நீங்கள் சாதகம் என்று கருதக் கூடியவை
களையாவது தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும். அது
விவாதத்திற்கு உதவி செய்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.
ஆனால் இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரிஜினல்
சட்டத்தை கிளாஸ் வைஸ் கிளாசாகப் படித்து— இங்கே மூன்றுவித
மான திருத்தங்கள்— மூன்றுவிதமான சட்டத்தினுடைய ஷரத்
துக்களை கைவிடப்படுவது என்பதுகூட இதில் இருக்கிறது.
அதைத்தான் உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் எடுத்துக்
காட்டினார்கள். அதில் என்னென்ன ஐயிட்டங்கள் என்று
நீங்கள் படித்து, அதுபற்றி ரெடியாக வந்துதானே ஒவ்வொரு
அங்கத்தினரும் பேச வேண்டும் என்று கூட கேட்கலாம். அப்படித்
தான் பேசவேண்டும். அப்படியில்லையென்றால், சட்டத்தை
நிறைவேற்றும்பொழுது ஏமாளிகளாக இருந்து ஏமாந்துவிட்டு,
பிறகுவரும் சங்கடங்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்க
முடியாது. ஆனால் அப்படிப்பட்ட காரியத்தை நாம் துரித
வேகத்திலே முடித்துவிடலாம் என்று சட்ட விஷயங்களிலே இந்த
அரசாங்கம் செய்யக்கூடாது என்பது என்னுடைய தாழ்மையான
வேண்டுகோளாகும். சட்டமெல்லாம் Steam roll
செய்துகொண்டு போய்விடலாம் என்று நினைக்கக்கூடாது.
அப்படிப்பட்ட thinking or situation வரக்கூடாது.
அப்படிப்பட்ட ஒரு (Contingency) நிலைமை வரக்
கூடாது.

இங்கே வந்திருக்கும்படியான நிலையை யார் பார்த்தாலும்
முதலில் தெரிவது, பஞ்சாயத்து யூனியனுக்குக் கீழே இருக்கும்
ஹெல்த் ஸ்கீமிலுள்ள இத்தனை ஊழியர்களையும்
படியான, இன்றைக்கு ஒரேமாதிரியாக ஆக்கி, அரசாங்க ஊழியர்களாக
ஆக்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது
என்றால், இது நல்ல சட்டம்தானே, இதிலே என்ன தவறு

அத்தனைபேரும் அரசு ஊழியர்களாக ஆகிறார்கள் என்று
அப்படித்தான் எடுத்தவுடனே முதல் நோக்கிலே தெரியும்.
அதற்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம்.

மூன்று நான்கு இலட்சம் ஆசிரியர்கள் எங்களை அரசு
ஊழியர்களாக ஆக்குங்கள் என்று கோரவில்லையா? கோரி
னார்கள், போராடினார்கள். இந்த அரசும் ஒத்துக்
கொண்டது. இப்பொழுது ஜூன் 1-ஆம் தேதிமுதல்
நகராட்சிகளில் இருக்கும்படியான ஆசிரியர்களெல்லாம்
அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவது என்று அந்தக் கோரிக்கையை
வைத்து, அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அது நடக்கப்
போகிறது. அதில் என்னென்ன பிரச்சினைகள் என்பது வேறு
விஷயம். ஆனால் ஆக்கப்போகிறது. ஆனால் இதிலேயும்
அதேமாதிரி நாம் கணக்கில் கொள்ள முடியுமா என்று
பார்த்தால் முடியாது. அப்படிப்பட்ட நிர்ப்பந்தம் இருக்கிறது.
சட்டத்தில் இருக்கும் இந்த மூன்று பிரிவுகளிலிருந்து, மூன்று
ஷரத்துக்களிலிருந்து பல உப விதிகள் கைவிடப்படுகின்றன
அதில் என்னென்ன நிலைமைகள் என்பதை உறுப்பினர்
பொன்னுரங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்
அதிகாரத்தை நீங்கள் எந்த அளவிற்கு டிசென்ட்ரலைஸ்
செய்து-பரவலாக ஆக்கிக் கீழே கொடுக்கப் போகிறீர்கள்என்பதற்
கான முறையில் உள்ள சட்டமாக இது இல்லை. ஆனால் கொள்கை

(பிற்பகல் 2—10).

என்ன? கீழே இருக்கும்படியான பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து
யூனியனுக்கும், நகரசபைகளுக்கும், மாநகராட்சி
களுக்கும் அதிகாரத்தைப் பரவலாக்கி, அதிகப்படியான
அதிகாரத்தை கொடுக்க வேண்டுமென்பது கொள்கை,
இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை அப்படி அல்ல;
சொல்லப்படுகிற கொள்கை அதுதான். அப்படிப்பட்ட நிலைமை
வரும்போது, இந்த மாதிரி இருப்பதைக் குறைக்கும்
படியான ஒரு அபாயம் இதிலே இல்லையா? இருக்கிறது
என்று தெரிகிறது. இப்பொழுது நீங்கள் விவாதம் பண்ணும்
போது தெரிகிறது. ஹைகோர்ட்டிலே கேஸ் இருக்கிறது
இந்தச் சட்டத்தை அப்படி பாஸ் பண்ணினால், இப்படி
ஊழியர்களை பூராவும், அரசாங்க ஊழியர்களாக மாற்றி
'இன்டிகிரேடட் ஹெல்த்ஸ்கீம்' முழுவதும் அமுல்படுத்த முடி
யாது என்ற கன்டின்ஜன்சி உங்களுக்கு இருக்கலாம். ஆனால்
அதைப் பரிசீலிக்கவேண்டிய பொறுப்பு இந்த நாட்டு
மக்களுக்கு இருக்கிறது; இந்த மன்றத்தைச் சேர்ந்த அத்தனை
உறுப்பினர்களுக்கும் இருக்கிறது. அந்தக் கவலையோடுதான்
சொல்கிறோம். அப்படிப்பட்ட ஒரு நிலையில் இந்தச்சட்டம்
வருகிறது. மேலும், ஊழியர்களைப் பொறுத்தவரையில்,
1—10—1982-லிருந்து ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து
அமுலாக்குகிறோம். அதை அமுலாக்கும்போது என்ன விளை
வுகள் ஏற்படும் என்று பூரணமாக ஸ்டடி செய்திருக்கிறார்
களா என்று பார்த்தால், பல பேர்கள் ஸ்டடி பண்ணி
யிருக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன.





முறைத்தான் நாங்கள் சொல்கிறோம். இந்த மாதிரியான
விஷயத்தை மிகத் தெளிவாக முன் வைத்து, அதன் பேரில்
விவாதம் நடத்தியிருக்கவேண்டும். அதுதான் சரியானது.
அந்த முறையிலே வந்தது என்று சொன்னால், நாங்கள்
யாருமே இந்த ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கு
வதை எதிர்க்கிறவர்கள் அல்ல; அது வேண்டுமென்று சொல்
வோம். அதுவல்ல எங்கள் எதிர்ப்பு. பஞ்சாயத்து யூனிய
னுக்கு ஏற்கனவே இருந்துவந்த சிலபல சொந்தமான
அதிகாரங்கள் கூட, இந்த மூன்று சட்டப் பிரிவுகளில்
இருக்கிற ஷரத்தைக் கைவிடப்படுவதன் மூலமாக, அந்த
அதிகாரங்கள் பறிக்கப்படுகின்றனவா என்பது தெளிவாக்கப்
படவேண்டும். அது இல்லாவிட்டால் பிரயோஜனம் இல்லை.
அந்த முறையில், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது
என்பதை. இவ்வளவு அவசரக் கோலத்தில் நிறைவேற்றப்
படுவது என்பது சரியானதா, நியாயமானதா? ஒரு ஜனநாயக
முறைக்கு, நாம் எல்லோரும், தெரிந்தும், என்ன நடக்கப்
போகிறது என்று தெரிந்தும், அந்த இடைஞ்சலுக்கு நாம்
பொறுப்பாக இருக்கிறோம் என்ற முறையில், அதை நாம்
எடுத்துக்கொண்டு இதைச் செய்ய முடியவில்லை. ஒரு கருத்து
சொல்லப்பட்டது. அதுதான் நல்லது என்று எனக்குப்
படுகிறது. இந்தச் சட்டத்தை சர்குலேஷனுக்கு விடுங்கள்,
பொறுக்குக் குழுவுக்கு விட்டு, பொது ஜன அபிப்பிராயத்தை
எடுத்து, ஊழியர்களுக்கு மட்டுமல்ல, பஞ்சாயத்துக்களுக்கும்,
பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இவற்றிற்கெல்லாம் இருக்கும்
படியான, அதிகாரம் ஏதாவது நஷ்டப்படும் முறையில் இந்தச்
சட்ட அமைப்பு இருக்கிறதா என்பதைப் புரிந்துகொள்ள
முடியும். ஆகவே, அந்த முறையில் இதைச் சுற்றுக்கு விட்டு,
அதன் பேரிலே கருத்துக்கள் வந்து, அதை எடுத்ததற்குப் பிறகு
அதை நிறைவேற்றலாம். அதுதான் சரியாக இருக்கும்.
அந்த முறையிலே காரியங்கள் செய்யப்படவேண்டும் என்பது
எங்கள் கருத்து என்று சொல்லி, முடித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர்
அவர்களே, இங்கே நான் கொடுத்திருக்கக்கூடிய பொது
மக்களுடைய கவனத்திற்காக, பொதுமக்களுடைய ஆலோ
சனைக்காக, அபிப்பிராயத்திற்காக, இந்த மசோதாவை அனுப்ப
வேண்டுமென்ற ஒரு திருத்தத்தை முன் மொழிந்ததன் அடிப்படை
யில், இங்கே சில மணித்துளிகள் அது சார்பான கருத்துக்
களை எடுத்துத் தெரிவிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டு
மென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இது சாப்பாட்டு நேரம், அதிக நேரம் எடுத்துக்கொள்ள
வில்லை. ஆனால், மாட்டுக்கு எப்படி மூக்கணாங்கயிறு
முக்கியமோ, காருக்கு எப்படி பிரேக் அவசியமோ, ஆற்றுக்கு
எப்படி அணை அவசியமோ, அதைப் போல், அரசாங்கத்தை

[திரு. அ. ரகுமான்கான்] [1986 ஏப்ரல் 26

சரியான பாதையிலே செலுத்துவதற்கு எதிர்க்கட்சிகள் தனது கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று அறியாமைக்கு எதிராக அக்கினிப் பிரவேசம் செய்த அறிவுலக மேதை அண்ணா அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, என்னை நீங்கள் மதிக்காவிட்டாலுங்கூட, அண்ணாவின் வாசகத்தை ஏற்றுக்கொண்டு, சிவு மணித்துளிகள் பொருத்தருள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த மசோதா அபாயகரமான மசோதா. நம்முடைய ரமணி அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல், இன்னும் வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், கல்லறைக்கு வெள்ளை அடிக்கக்கூடிய காரியம் செய்யப் படுகிறது. செத்த பிணத்திற்கு சென்ட் பூசுகிற காரியம். அந்த முறையிலே செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். சகோதரர் சட்டமன்ற உறுப்பினர் ரமணி அவர்கள் அழகாக, சிறப்பாக, எடுத்துச் சொன்னார்கள். அரசாங்க ஊழியர்களாக ஆக்குவதிலே, தொழிலாளர்களாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுகிறவர்கள், எந்தப் பதவி வகித்திருந்தாலும் சமம்தானே. சம்பள விகிதங்கள் உயரலாம். வேலைவாய்ப்புகள் உயரலாம். மற்ற வசதிகள் உயரலாம். இறந்து போனால் வாரிசுதாரர்களுக்கு 20,000 என்ற நிலைமை ஏற்படலாம். அப்படிப்பட்ட பெனிபிட்ஸ். அதை எதிர்க்கலாமா என்று கேட்கத் தோன்றும். ஆனால் மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே இதை நீங்கள் படித்துப் பார்த்தால் பேறுகால உதவியாளர்கள், துணைச் செவிலியர்கள் அதைப்போலவே சுகாதார உதவியாளர்கள் இவர்கள் எல்லாம் 1982ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தேதியிலிருந்து அரசு ஊழியர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்று ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது. ஆனால் இன்று எங்களுடைய கட்சி உறுப்பினர் பொன்னுரங்கம்—டெக்னிகல் பொன்னுரங்கம் என்று அழைக்கக்கூடிய அருமை சட்டமன்ற உறுப்பினர் எடுத்துச் சொல்கின்றபோது இங்கே சொன்னார்கள். அவர்களுடைய நிரந்தர பயணப்படி அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவதால் இழக்கப்படுகிறது அவர்களுடைய சீனியாரிட்டி தள்ளப்படுகிறது. ஊதிய விகிதம் பதவி குறைவாளர்களுடன் இணைக்கப்படுகிறது, உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஸ்கேல் ஆப் பே ரூ. 295 இருக்குமானால் (மிட் வொய்ப்) 1½ வருடம் 2 வருடம் டிரெயினிங் செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆகையினால் அவர்களுடைய அனுபவம் வேறு, சம்பள விகிதம் வேறு. ஆனால் இவர்கள் எல்லாம் ஒருங்கிணைக்கின்றபோது மல்ட்டி பர்பஸ்—பல்நோக்கு மக்கள் நலவாழ்வு



1986 ஏப்ரல் 26] [திரு. அ. ரகுமான்கான்]

பணியாளர் திட்டம் என்பதன்கீழே அரசாங்கப் பணியில் இருப்பவர்களையும், பஞ்சாயத்து யூனியனில் பணிபுரிகின்றவர்களையும் சுகாதாரப் பணிகள் போன்ற பணிகளுக்கு நல்ல நோக்கத்தோடு பயன்படுத்துகின்ற இண்டகிரேட்டட் ஸ்கீம் கொண்டு வருகின்ற இந்த திட்டத்திலே எல்லாவிதமான பணியாளர்களும், சம்பளம் குறைவாக இருந்தாலும், கூடுதலாக இருந்தாலும் ஒன்றிணைக்கப்படுகிறார்கள். அனுபவம் குறைவாக இருந்தாலும், கூடுதலாக இருந்தாலும் ஒன்றாக்கப் படுகிறார்கள். குவாலிபிகேஷன்ஸ் குறைவாக இருந்தாலும், கூடுதலாக இருந்தாலும் ஒன்றாக்கப் படுகிறார்கள். ஆகையினால் ஒரே குட்டையிலே மட்டைகளாக அவர்கள் ஒரே அமைப்பிற்கு கொண்டு வரப்படுகிறார்கள். இது டிஸ்கிரிமினேஷன். இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுக்கு சீருடை போன்ற வசதிகள்கூட அரசாங்க ஊழியர்கள் என்ற அறிவிப்பிலே இழக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியனுக்குள்ளே தான் நம்முடைய பொன்னுரங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் அவர்கள் டிரான்ஸ்பர் செய்யலாம். இப்போது அரசாங்கம் நினைத்தால் தமிழ்நாடு முழுவதும் எங்கே வேண்டுமானாலும் டிரான்ஸ்பர் செய்யலாம் என்ற அதிகாரம் வந்து விடுகிறது. ஆகையினால் இந்த அதிகாரங்கள் குறிப்பாக சீனியாரிட்டி பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலும், நிரந்தர பயணப்படி இழக்கப்படுகின்ற சூழ்நிலையினாலும், தகுதி குறைந்தவர்கள் ஒன்றாக இணைக்கப்படுவதாலும், சீருடை வசதி இல்லாததாலும் இந்த அரசு ஊழியர்களாக்குகின்ற திட்டத்தைப் பொறுத்தவரையில் சாதகமான திட்டமாக இல்லாமல் பாதகமான திட்டமாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இன்னொன்றையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, ஒரு தவறான காரியம் இங்கு நடைபெற்றிருக்கிறது. நீங்கள் சட்டம் படித்தவர்கள். ஆகையினால் நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். இங்கிருக்கக்கூடிய பஞ்சாயத்து ஆக்ட் 1958 இதிலே 65-ஆவது செக்ஷனுடைய 'சி' பிரிவு கீழ்க்கண்டவாறு தெளிவாகச் சொல்கிறது.

Section 65 (c) :

Subject to the provisions of this Act and tht rules made thereunder it shall be the duty of a Panchayat Union Council within the limits of its funds, to make reasonable provision for carrying out the requirements of the Panchayat Union in respect of the following matters, namely :—

[திரு. அ. ரகுமான்கான்] [1986 ஏப்ரல் 26

(c) the establishment and maintenance of maternity and child welfare centres including the maintenance of a thayi service and offering advice and assistance to mothers in family planning.'

இந்த அதிகாரம் எல்லாம் எஸ்டாபிளிஷ்மென்ட் அண்டு மெயின் டனன்ஸ் ஆப் மெட்டர்னட்டி அண்டு சைல்ட் வெல்பேர் சென்டர்ஸ் தாய்சேய் நல விடுதி இது போன்ற அமைப்புகள் எல்லாம் யார் கையில் இருக்கிறது என்று கேட்டால் பஞ்சாயத்து யூனிய னுடைய அதிகாரத்திலே இருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி, இதற்கு ஏதாவது திருத்தம் இந்த சர்க்கார் கொண்டுவந்திருக் கிறதா? இதுவரைக்கும் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டிருக் கிறதா? கிடையாது. இந்த மூலச் சட்டத்திற்கு எந்தத் திருத் தத்தையும் கொண்டு வரவில்லை. அரசாங்கம் 29–9–1982ல் ஓர் உத்தரவு போடுகிறது. என்ன உத்தரவு தெரியுமா? இன்றைக்குச் சட்டம் கொண்டு வருகிறார்களே அரசாங்கப்பணி அதுபோல பஞ் சாயத்து யூனியனிலே பணி செய்கின்ற இந்த செவிலியர்கள் இவர்கள் எல்லாம் ஆக்ட்படி அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்படு கிறார்கள் என்று 29–9–1982ல் (ஜி.ஓ. எம்.எஸ். நம். 1936) உத்தரவு போடப்படுகிறது. நம்முடைய அமைச்சர் ஹண்டே அவர்களும் எனக்கு ரொம்ப வேண்டியவர்கள். சட்டம் படித்த வர்கள். விஷயம் தெரிந்தவர்கள். ஆகையினால் அவரை கேட்கிறேன்.

(பிற்பகல் 2–20)

ஒரு மூலச்சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவராமல் அர சாங்கம் உத்தரவு போட்டது சட்ட விரோதம் அல்லவா? நீதி மன்றத்திற்குப் போனவுடனே நீதிபதி கேட்கிறார், இதற்கும் திருத்தம் கொண்டு வருகிறீர்களா, இல்லையா என்று. இந்தச் சட்டம் தப்புதானே என்று கேட்டு நினைவுப்படுத்த விரும்பு கிறேன். கோர்ட் இதில் தடையுத்தரவு போடுகிறது. தடை யுத்தரவு போடப்பட்டதற்குப் பிறகும் அமல் நடத்துகிறார்கள் தடையுத்தரவை அல்ல; அரசாங்க உத்தரவை. அது கண் டம்ப்ட் ஆப் கோர்ட் என்று சொல்லி அதாவது கோர்ட்டை அவமதிப்பதாகும் என்று சொல்லி வழக்கு போடுவதற்குக்கூட..

திரு. க. பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்கெனவே சொன்ன கருத்தைத்தான் இப்போதும் இவர் கள் சொல்கிறார்கள். வேறு புதிய கருத்துக்களைச் சொன்னா லாவது பரவாயில்லை. நேரத்தை அனாவசியமாக வீணாக்கா மல் மற்றவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாலாவது பரவாயில்லை.



[1986 ஏப்ரல் 26]

திரு. அ. ரகுமான்கான் : திரு. பாலசுப்பிரமணியம் அவர்
கள் புதிய கருத்துக்கள் வேண்டுமென்று சொல்கிறார்கள். கருத்
துப் பஞ்சத்தால் இதை நான் சொல்லவில்லை. நாங்கள் எல்
லாம் கல்லூரியில் படித்த காலங்களில் கோனார் நோட்ஸ் என்று
ஒன்று இருக்கும். மூலம் இருந்தாலும் கூட இந்த உரை வேறு
பாடாக இருக்கும். அதிலே சொல்லி இருக்கக்கூடிய கருத்துக்கள்
சில விளக்கங்களைச் சொல்வதற்காகத்தான். ஒரே கருத்தைத்
சொல்கிறோமே என்பதற்காக அடிக்கடி அதையே சொல்கிறோம்
என்பதற்காக அம்மா என்று அழைத்தவரைத் திடீரென்று
அத்தை என்று அழைப்பார்களா? ஆகவே, மன்றத்தின்
தலைவர் அவர்களே, உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு
வர விரும்புகிறேன். கோர்ட்டினுடைய உத்தரவு மதிக்கப்பட
வேண்டும். கன்டம்ப்ட் ஆப் தி கோர்ட் நடைபெற்றிருக்கிறது.
இதற்குப் பிறகும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இந்தச்
சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவது என்ன நியாயம் என்
பதற்காகத்தான் நான் கேட்கிறேன். இந்த நிகழ்ச்சி ஒன்றே
போதும் இந்த அரசு கோர்ட்டை ஏற்றுக்கொள்ளாத அரசு என்
பதற்கு. நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு
கிறேன். ** ** **

எனவே, கோர்ட்டை மதிக்காத சூழ்நிலை இந்தச் சட்டத்தில் ஏற்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றி இங்கே பேசினால்
நல்லது. மற்றவற்றை எல்லாம் கேட்டால் நான் எப்படி பதில்
சொல்ல முடியும்? இந்தச் சட்டத்தைப் பற்றிப் பேசினால் பின்
னால் பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில்
பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திரு. ரகு
மான்கான் அவர்கள் குறிப்பிட்ட அந்த விஷயம் அவைக் குறிப்
பிலே இருந்து நீக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே,
இன்றைக்கு வந்திருக்கக்கூடிய இந்த மசோதாவிலே இன்னொரு
முக்கியமான பாதிப்பு இருப்பதையும் நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். Decentralisation is the Swaraj என்று
மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். அதிகாரங்
கள் பரவலாக்கப்படுவதுதான் உண்மையான சுயராஜியம் என்று
சொன்னார்கள். இந்தியாவினுடைய ஆத்மா கிராமங்களில்
இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே பஞ்சாயத்து யூனி
யன்களில் பலரை நியமிப்பதற்கான அதிகாரம் இருந்தது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1986 ஏப்ரல் 26

Health Assistant Auxiliary Nurse, Mid-wives and Maternity Assistants.
போன்றவர்களை எல்லாம் நியமிக்கின்ற அதிகாரம் பஞ்சாயத்து
யூனியன் கையிலே இருந்தது. இன்றைக்கு, கொடுத்தவனே
பறித்துக்கொண்டாண்டி, என்று சொல்வது போல் அந்த அதி
காரத்தை அரசாங்கம் பறித்துக் கொண்டிருக்கிறது. சர்க்காரியா
கமிஷன் என்று போட்டிருக்கிறோம். மாநில சுயாட்சி பற்றிப்
பேசுகிறோம். அதிகாரங்கள் வேண்டுமென்று இந்த அவையிலே
கூட கடல் அலையென நம்முடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த
வர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்தபோது இங்கே
முழங்கியிருக்கிறார்கள். மாநில சுயாட்சிக்குக் குரல் கொடுக்கி
றார்கள். உள்ளாட்சிக்கான அதிகாரங்களுக்காகக் குரல் கொடுப்
பார்களா என்று அன்றைக்கு ஆர்ப்பரித்துப் பேசியவர்கள் இன்
றைக்கு அவையில் இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு அதி
காரங்கள் பறிக்கப்பட்டு பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அந்
தப் பதவிகளை நியமிக்கலாம் என்று சொன்னதற்குப் பதிலாக
அரசாங்கமே எடுத்துக்கொள்கிறது என்று சொன்னால் இது
கொள்கை முரண்பாடல்லவா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் நினைவூட்டுத்த விரும்புகிறேன்.
ஏற்கெனவே இருந்த அதிகாரங்கள் பறிக்கப்பட்டு இருக்கின்றன.
சத்துணவுக் கூடங்களுக்குப் போகக்கூடாது பஞ்சாயத்து யூனியன்
தலைவர்கள் என்றும் கலெக்டர் நாமினேஷன் செய்யலாம் என்
றும், அதைப்போலவே இன்னும் சொல்லப்போனால் நாமினேஷன்
செய்யப்படுபவர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைப் போன்ற
உரிமை வருகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்பம இந்தப்
பதவிகளைப் பறிக்க வந்துவிட்டீர்களே, இது நியாயம்தானா
என்றும், இதில் ஏதாவது அரசியல் உள்நோக்கத்தோடு அரசு
செயல்படுகிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே,
அரசியல் உள்நோக்கத்தோடு செய்யப்படுகிற காரியமல்ல.
ஊராட்சி மன்றங்களுக்கும், நகராட்சிகளுக்கும் இருக்கின்ற அதி
காரங்களை எடுத்துவிட வேண்டுமென்று பல ஊழியர்கள்
போராட்டம் நடத்தியபோது அப்போது இந்த அழுத்தமான
குரலைக் காணோம். அப்போது அதிகாரத்தைக் கொடு என்றுதான்
பதில் வந்தது. அப்போது கொடு என்று சொல்லிவிட்டு—இது
சாதாரண விஷயம், இதைப் போய் ஏன் சொல்கிறார்கள் என்
பதற்கான அர்த்தம் எனக்குப் புரியவில்லை—நான் உதாரணத்
திற்காகச் சொல்கிறேன். ஆசிரியர்களை மீண்டும் உள்ளாட்சித்
துறைக்குக் கொண்டு வரவேண்டும் என்று சட்டம் கொண்டுவர
முயன்றபோது விட்டார்களா? முடிந்ததா? இப்போது
எங்கே அதிகாரம் என்று கேட்கிறார்கள். அப்போது எங்கே
போயிற்று இந்தக் குரல். அப்போது இந்தக் குரலைக் கேட்க
வில்லையே நாம்.



1986 ஏப்ரல் 26]

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நம்முடைய
உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ** **
** ** **

ஆசிரியர்கள் அரசாங்க ஊழியர்களாக ஆக்கப்பட வேண்டும்
என்ற கருத்திலே யாருக்கும் பட்டிமன்றம் வைத்து விவாதிக்க
வேண்டிய அவசியம் கிடையாது. அரசாங்க ஊழியர்கள் ஆக்க
வேண்டும் என்ற கருத்திலே அவர்களுக்கு...... (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே***
இன்னொரு கருத்தைச் சேர்த்துச் சொல்லுகிறேன். ஆசிரியர்
களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கும்போது, மற்ற ஊழியர்
களும் அரசு ஊழியர்களாக தாங்கள் ஆக்கப் பெற வேண்டும்
என்று கோருவது தவறு இல்லை. வேறு வழி இல்லை. அரசு
ஊழியர்களாக ஆக்குங்கள், ஆக்கப்பெற வேண்டும் என்று எல்
லோரும் கேட்கிறார்கள். இப்படித்தான் உள்ளாட்சித் துறை
யிலும் கேட்கிறார்கள். அதில் சிலபேர் நீதிமன்றத்திற்குக்கூட
போயிருக்கிறார்கள். சட்டத்தைத் திருத்த வேண்டி வந்தது,
சட்டத்தைத் திருத்துகிறோமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது.
உள்ளாட்சிக்கு இருக்கிற அதிகாரங்களில் ஏதோ ஒன்றை அரசு
எடுத்து தன்னிடம் வைத்துக் கொண்டு பெருமை தேடிக்
கொள்ளப்போவதில்லை.

மாண்மிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் சீக்கிரம்
முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய தலைவர் அவர்
களே, ** ** ** **

(குறுக்கீடுகள், கூச்சல், குழப்பம்.)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,
நான் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரணமாக ஒரு சட்டத்
தைப் பற்றி, அதன் ஷரத்துக்களைப் பற்றி பில்லிலே பேசிக்
கொண்டிருக்கும் போது அந்த மசோதாவைப்பற்றி மட்டும் பேசு
வது நல்லது என்பதுதான் இங்கே கடைபிடித்து வரும் மரபு...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிப்பட்ட விவகாரங்
களை எல்லாம் பேசக் கூடாது. இனிமேல் பேசக்கூடாது. அப்படி
தனிப்பட்டு பேசியவைகளையெல்லாம் அவைக் குறிப்பிலே
யிருந்து நீக்கி விடுகிறேன். திரு. ரகுமான்கான் தொடர்ந்து பேசி
சீக்கிரம் முடியுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப்பெற்றது.

[1986 ஏப்ரல் 26

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞராக தாங்கள் இருந்தாலும் இலக்கியம் படித்தவர்கள். உங்களுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் வழக்கறிஞராக * * * * வந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையிலே நான் உதாரணத்திற்காகச் சொன்னேன். அரசாங்க ஊழியர்களாக ஆசிரியர்களை ஆக்குவது எங்களுக்கு உடன்பாடான கொள்கை. ஏனென்றால் அரசாங்க பெனிபிட்டுகள் அவர்களுக்குக் கிடைக்கின்றன.

அதைப்போலவே இன்னொன்றை உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். மாநகராட்சியிலே இருக்கிற ஊழியர்கள் இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு போக இருக்கிறார்கள். அவர்களுக்கு அதே வேலை தான் அங்கே. ஆனால் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்கப்படாத காரணத்தாலே மாநகராட்சி ஊழியர்களுக்கு உள்ள பெனிபிட்டுகளும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று சொல்லுகிறார்கள் ஆனால் இவர்களைப் பொறுத்த வரையில் அதாவது ஹெல்த் அசிஸ்டென்ட்ஸ், ஆன்சிலியரி நர்சஸ் இவர்கள் எல்லாம் நீங்கள் அரசாங்க ஊழியர்களாக ஆக்கினால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை. ....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சின்ன சந்தேகம் மட்டும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பிரைமரி மருத்துவத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே உள்ளாட்சித் துறையிடம் இருந்தது. அந்த பிரைமரி ஹெல்த் செண்டர்கள் ஏற்கெனவே மருத்துவத் துறைக்கு மாற்றியாகிவிட்டது. வேறு வழியில்லை. கொடுத்துத்தான் ஆகவேண்டும். அதை கொடுத்ததற்குப் பிறகு இதை வைத்திருப்பதால் இலாபமே இல்லை. அவர்கள் அந்தத் துறையின் கண்டிரோலுக்குப் போகிறார்கள். அவர்கள் அரசு ஊழியர்களாக ஆவதில் தவறு இல்லை. இது ஒரு சாதாரண விஷயம். இதிலே அரசியல் எதுவுமே இல்லை.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, மருத்துவத் துறையைப் பிரித்து விட்ட காரணத்தாலே, இவர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்குவதனால் என்ன நிலைமை ஏற்படுகிறது என்பதைச் சொல்லுகிற போது, அவர்களின் நிரந்தர பயணப்படி பாதிக்கப்படுகிறது. இரண்டாவது சீனியாரிட்டி பாதிக்கப்படுகிறது. இல்லை என்று உத்தரவாதம் தர முடியுமா? சீருடைகள் கூடக் கிடைக்காமல் போகிறது. இரண்டாவது தகுதியுள்ளவர்கள் என்று வரும்போது—தகுதி உள்ளவர்கள், தகுதி இல்லாதவர்கள் என்ற பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை—குறைந்த அனுபவம் உள்ளவர்கள் நிறைந்த அனுபவப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 ஏப்ரல் 26] [திரு. அ. ரகுமான்கான்]

உள்ளவர்கள், மற்றும் குவாலிபிகேஷனிலே கூட டிபரன்ஸ் உள்ளவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இன்னொன்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் நடுவில் வந்து விட்டக் காரணத்தாலே சொல்கிறேன்; 58வது வருட சட்டத்தில்,

'Establishment and Maintenanceof Maternity and Child Welfare Centres including maintenance of a 'Thayi' service and offering advice and assistance to mothers in family planning'.

இந்தச் சட்டத்தை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் படித்திருப்பார் என்று நான் நம்புகிறேன். மருத்துவத் துறைக்கு ஏற்கெனவே அது வந்துவிட்ட பிறகு ஏன் அது பற்றி பேசுகிறார் என்று கேட்கிறார். ஆனால் அந்த பஞ்சாயத்து ஆக்ட் படி 65 செக்ஷன் (சி)ன்படி அவர்கள் உத்தரவு போட்டார்களே அந்த நாள் வரைக்குப் அது....(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, ஒரு நிமிடம். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அதைச் சொன்னார். அந்தச் சட்டத்தை திருத்தத்தான், நாம் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம். We are amending the Act. It is every simple. Thiru A. Rahman Khan has read the original Act, the Parent Act. We have brought me an amend ment. That is all. We are only amending the Act. It is very simple.

THIRU A. RAHMANKHAN : Mr. Speaker Sir, my learned Minister said that this print is very simple. Therefore, it is my humble submission, without making any amendment to the Parent Act, whether this Government has the power to pass orders, but unfortunately this Government has violating the basic structure of the rules, the Act, the Government has passed the order even in the year 1982. It is not an illegal order ? Therefore, the affected party went to the Court and preferred an appea in which the court has passed the judgment restraining the act of the Government. The Court has also given the stay order. Contempt Petition has been filed.

[திரு. அ. ரகுமான்கான்] [1986 ஏப்ரல் 26

(பிற்பகல் 2–30)

அரசாங்கம் கோர்ட் கொடுத்த உத்தரவை மீறிவிட்டு, அமெண்ட் மென்ட் பேரண்டல் ஆக்ட்டிற்குச் செய்யாமல்,....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அவையின் நேரத்தைக் கருதிச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதே வாசகத்தை மூன்றாவது முறையாகச சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் முடித்து விட்டால் அதில் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். உறுப் பினர் அவர்கள் மூன்றாவது முறையாக இதைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். As an excellent Debater he would do better.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இடையில் குறுக்கிட்டுக் கேட்டதால் சொல்கிறேன். அவர்கள் மேலவையிலிருந்து இப்போது தான் வந்தார்கள். நான் கேட்பதை திரும்பத் திரும்பக் கேட்பதாகச் சொல்கிறார்கள். அதற்கு அவர்கள் பதில் சொல்லிவிட்டால் போதுமானது. இது மிகப் பெரிய அரசியல் சட்ட வியாக்கியானங்கள் அடங்கிய மசோதா இல்லை. மூன்றாயிரம் பேருக்கு மேற்பட்ட ஊழியர் கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவதால் நன்மை கிடைப் பதற்குப் பதில் பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இரண்டாவது, பேரண்டல் ஆக்ட்டைத் திருத்தாமல் ஆர்டர் 1982-ல் போட்டது தவறு அல்லவா? மூன்றாவது கண்ட்டம்ப்ட் ஆப் கோர்ட் என்று சொல் கிறபோது கோர்ட்டிலே உத்தரவுகளுக்கு அடி பணிகிறோம் என்று சொல்லிவிட்டு இதுவரையில் அடிபணியாமல் திடீரென்று சட்டத்தை இப்படிக் கொண்டு வந்து சட்ட வடிவமாக்குவது சரிதானா? இந்தச் சட்டம் இந்தத் துறையில் பணியாற்றுபவர் களை பாதிக்கக் கூடியதாகும். 10, 20 வருடங்களாக அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அடிப்படை வசதிகளை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடக்கூடாது. ஆகவே இது மிக முக்கியமான பிரச்சினை என்று சொல்லி அமர்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : எங்கள் கட்சியின் சார்பில் சில வார்த்தைகளை சொல்ல அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சி சார்பாக பேச அனுமதிக்கவில்லை. இப்போது திராவிட முன்னேற்றக் கழகத் தில் இரண்டு பேர்கள் பேசினார்கள். (குறுக்கீடு).

திரு. கு. ரமணி: அவரையும் பேச அனுமதித்து முடித்து விடலாம்.



1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிகமான வாய்ப்புகளை உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். 3, 4 உறுப்பினர்களாக இருப் பவர்களுக்குக் கூட அதிக நேரம் கொடுக்கிறீர்கள் என்று ஆளும் கட்சியில் வருத்தப்படுகிறார்கள். I am denying them all the opportu- nities. நாள்தோறும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. 130 உறுப் பினர்களில் நான்கு பேர் கூட பேச முடியவில்லையென்று சொல் கிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : நான்கு மணி வரை உட்காருவோம். ஆளும் கட்சியிலிருந்து இந்த மசோதாவில் ஐந்துபேர் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எவ்வளவு பேசி னாலும் பரவாயில்லை. நான் ஏதாவது சொன்னால் அதைப் பத்திரிகையில் போட்டு விடுகிறார்கள். ஆகவேதான் பேசாமல் இருக்கிறேன். உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டும் (குறுக்கீடு) இனிமேல் அப்படித்தான் செய்யப் போகிறேன். அதிக உறுப்பினர்களுக்கு ஆளும்கட்சி தரப்பில் வாய்ப்பு கொடுக்க வேண் டியிருக்கும். [குறுக்கீடு) Do not claim it as a matter of right. நான் அதிக அளவில் உங்களுக்கு வாய்ப்புகள் கொடுத்தும் இந்தப் பில்லில் நேரத்தைக் கருதி ஒத்துழைக்கவில்லையென்றால் என்ன செய்வது? It is not good. ஆளும் கட்சியிலும் கெட்ட பெயர், உங்களிடமும் கெட்ட பெயர். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசிக் கொள்ளுங்கள் என்கிறேன். அதைக் கேட்கக் கூடாதா?

திரு. கு. ரமணி : இதனால் உங்களுக்கு கெட்ட பெயர் ஒன்றும் வராது. நீங்கள் அனுமதித்தால் உங்கள் பெருந்தன்மை யைத்தான் அது காட்டுவதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி பேசுங்கள். எப் போதும் கடைசியில் உறுப்பினர்களுக்குத்தான் வெற்றி.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தின் மீது ஒரு சின்ன கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லிக் கொள்வது எல்லாம், நான் இந்தச் சட்டமன்றத்திற்கு மூன்றா வது தடவையாக வந்தும் கூட, ஒருநாள் கூட, ஒரு நிமிஷம்கூட, இந்தச் சட்டமன்ற நிகழ்ச்சியை வேறு திசைக்கு அல்லது வேண் டாத காரியத்திற்கு இதுவரைக்கும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் உங்களைக் குறை சொல்லவில்லை. இந்தப் பக்கம் 130 உறுப்பினர்கள் இருக் கிறார்கள். அவர்களுக்கு 3 பேர்களுக்கு மேல் பேசுவதற்கு

[பேரவைத் தலைவர்] [1986 ஏப்ரல் 26

அனுமதி கொடுப்பதில்லை. அவர்கள் கூட அதிகமான வாய்ப்பு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : நான் கூட தப்பாக ஒன்றும் சொல்லவில்லை. நான் இங்கே பேசுவதாக இருந்தால், சபாநாயகர் இடத்திலே அனுமதி கேட்டு வாங்கிய பிறகுதான் பேசுவேனே தவிர வேறு அல்ல.

எனவே இந்தத் திருத்தம் என்பது, 1982 ஆம் ஆண்டு அறிவிக்கப் பட்டதை, அவசரச் சட்டம் பிரகடனம் பண்ணினோம் என்று சொன்னால், 6 மாதத்திற்குள் அதை பாஸ் பண்ணி சட்டமாக ஆக்கிவிடுகிறோம், ஆனால் 1982 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு, இந்த ஊராட்சி ஒன்றியத் தேர்தல் பூராவும், முடிந்ததற்குப் பிறகு இப்படி அவசரம் அவசரமாகக் கொண்டு வரவேண்டிய அவசியம் என்ன என்பதைப் பார்க்கிறபோது தான் ஏதோ உள் நோக்கத்தோடு இது கொண்டு வரப்படுகிறது என்று சந்தேகப்படக்கூடிய நிலைமை இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

அதே நேரத்தில் கோர்ட்டை நாம் எப்போதுமே மதிப்பதாகச் சொல்கிறார்கள். சில தினங்களுக்கு முன்னாலே கூட கோர்ட்டைப் பற்றி இங்கே பேசினோம். அந்த ஊழியர்கள் இப்போது கோர்ட்டுக்குச் சென்று இருக்கிறார்கள். கோர்ட் தீர்ப்பு வந்த பிறகு இந்தச் சட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கலாம். ஆகவே இன்றைக்கு மத்திய அரசாங்கம் மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரம் தர வேண்டும் என்று கேட்கிற நேரத்தில், ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக் கூடிய எல்லா அதிகாரங்களையும் பறிக்கக்கூடிய வகையில், தற்போது கொஞ்சம் கொஞ்சமாக இருக்கின்ற அதிகாரங்களைப் பறிக்கிற அளவிற்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

ஆகவே இந்தச் சட்டத்தினுடைய ஷரத்துக்களை மேலே பொதுமக்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால்தான் இன்றைக்கு உண்மையிலேயே, எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் நாங்கள் அத்தனை பேர்களும், இந்தச் சட்டத்தை முழுமனதோடு ஆதரிக்கின்ற ஒரு சட்டமாக இது அமைந்திருக்கும். ஆகவே எதிர்க்கட்சியில் இருக்கிற நாங்கள் இது குறைப்பட்டுச் சொல்கிற சட்டமாக இருக்கிறது என்று சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், 1982 ஆம் ஆண்டு ஏற்கெனவே, ஒரு



1986 ஏப்ரல் 26] [டாக்டர் எச். வி. ஹண்டே]

அரசு ஆணை மூலமாக ஜி.ஓ.எம்.எஸ். 1936 என்று சொல்லி,
இதன் மூலமாக நாம் ஏற்கெனவே போடப்பட்டு இருக்கக்கூடிய
அந்த உத்திரவு, அதை எதிர்த்து, சில பேர்கள் கோர்ட்டுக்குச்
சென்றார்கள் என்பதை எல்லாம் சொன்னார்கள். அதுதான்
உண்மை. நாம் ஏற்கெனவே 1982 ஆம் ஆண்டு செப்டம்பர்
மாதம் போடப்பட்ட ஒரு உத்தரவு. இதிலே எந்தவிதமான
உள்நோக்கமும் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு
நான் சொல்லிக் கொள்கிறேன், இதிலே எந்தவிதமான உள்
நோக்கத்திற்கும் இடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் உத்தி
ராபதி அவர்கள் பேசும்போது ஏதோ உள் நோக்கத்தினுடைய
அடிப்படையிலே கொண்டு வரப்பட்ட சட்டம் என்று
சொன்னார்கள். ஏற்கெனவே எதற்காக இந்தச் சட்டத்தைக்
கொண்டு வந்தோம் என்பதை மட்டும், நல்வாழ்வுத் துறையின்
இலாக்காவிலே என்ன பிரச்சினை ஏற்பட்டது என்பதை மட்டும்,
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்து கொண்டால் நன்றாக
இருக்கும். இந்த 'Multi-purpose Health workers'
என்கிற ஒரு திட்டம் தமிழகத்திலே நாம் திடீரென்று கொண்டு
வந்த திட்டம் அல்ல. அது அகில இந்திய ரீதியாக, இன்னும்
சொல்ல வேண்டுமானால் National Health Policy என்று அகில
இந்திய ரீதியாக எடுக்கப்பட்ட ஒரு திட்டம்.

By this Bill provision is being made to provide for more comprehensive Health care to the rural people.

ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகிற நேரத்
திலே நாம் கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய இலட்சோபலட்சம்
மக்களுக்குச் சாதகமாகப் பேசுகிறோமா, இல்லை அவர்களுக்குப்
பாதகமாகப் பேசுகிறோமா, undemocratic, மக்களுக்காக,
மக்களால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி என்று சொன்னதற்குப்
பிறகு, நாங்கள் இப்போது சொல்லக்கூடிய கருத்து, இது கிரா
மப் பகுதிகளில் இருக்கக் கூடிய 3½ கோடி மக்களுக்கு நன்மை
தரக்கூடிய ஒரு திட்டமாகத்தான் நாம் இதை சொல்கிறோம்.
இது இந்த இடத்தில் மட்டுமல்ல, டெல்லி அரசாங்கத்திலே
மட்டும் அல்ல. உலக சுகாதார நிறுவனத்திலே,
W.H.O. — Developing countries 77 நாடுகளில், உலகத்
திலே இருக்கக்கூடிய அந்த நாடுகளில் இருக்கக்கூடிய
'Multi purpose Health workers' திட்டம்தான், இந்த நாட்டில்
இருக்கக்கூடியது மட்டுமல்ல, உலகத்தில் இருக்கக்கூடிய
பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கிற பல்வேறு நாடுகளில்,
கிராமப் பகுதிகளில் இருக்கிற நிலைமைகளை மாற்ற வேண்டும்
என்றால், இது ஒரு தாரக மந்திரம் 'Multi purpose
Health workers' என்கிற ஒரு திட்டத்தை, இன்று உலகத்தில்
பல்வேறு பகுதிகளில் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை
இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1986 ஏப்ரல் 26

(பிற்பகல் 2-40)

ஆகவே, This is not against the people. இங்கே நான் தேவையில்லை என்று பேசுவதன் மூலமாக நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். ஏழை எளிய பாட்டாளி கிராமப் பகுதி மக்களுக்கு எதிராக நாம் பேசுகிறோமா என்ற அச்சத்தை நான் இங்கே தெளிவு படுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

At present, there is no technical assistance.

(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதாவது கிளாரிபிகேஷன் இருந்தால் கேளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்களும், மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும் கடுமையாகப் பேசுகிற நேரத்திலே, நம்முடைய நண்பர்கள் உணர்ச்சி வசப்பட்டு பேசிய நேரத்திலே கூட நான் பொறுமையாக இருந்தேன். நான் ஒன்றும் உங்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய கருத்தைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) கொஞ்சங் கூட உங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே, நான் என்ன பாயிண்ட் சொல்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். By accepting your point we are indirectly harming 3½ crores of people. That is my point. I have the right to say that. அந்தக் கருத்தை நான் சொல்வதற்கு உரிமை இல்லையா? ஏனென்றால் இந்த மாதிரியாக நாம் செய்வதன் மூலமாக 3½ கோடி கிராமப் பகுதி மக்களுக்குத் தீமை ஏற்படுமோ என்கிற அச்சத்தை உங்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டுமென்ற கடமைக்காகச் சொல்கிறேன். At present there is no technical control over the existing functions of maternity Centres and Health Assistants.

அந்த வகையிலே ஒரு டெக்னிக்கல் அசிஸ்டென்ஸ் அங்கே தேவை என்பதற்காக District Health Officer அவர்கள்தான், அந்த டெக்னிக்கல் அசிஸ்டெண்ட்ஸ் கொடுக்க முடியாது என்பதற்காக National Health Policy-லே ஒவ்வொரு மாநிலத்திலேயும் கொண்டு வரப்பட்டிருக்கின்ற ஒரு திட்டமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, This is a scheme as per National Health Policy which has been approved by the Parliament. பாராளுமன்றத்திலே The National Health Policy was placed on the Table of the House. It was debated and approved. After the adoption of this policy there will be only Primary Health Centres and Sub-Centres to implement Integrated Health Services to all persons by giving qualified technical support.



1986 ஏப்ரல் 26] [டாக்டர் எச். வி. ஹண்டே]

ஆக இவைகளையெல்லாம் நாம் ஒருங்கிணைத்து Integrated ஆக அந்த இடத்திலே, சப்-சென்டர் இருக்கக்கூடிய இடத்திலே பலநோக்கு சுகாதாரப் பணியாளர்களுக்கு Multi-purpose Health Workers—Maternity problems, Leprosy problems, Tuberculosis problems இன்னும் மற்ற வகையில், எல்லாவற்றுக்கும் நாம் 1½ வருஷம் அவர்களுக்கு டிரெயினிங் கொடுத்து, டிஸ்டிரிக்ட் ஹெல்த் ஆபீசர் மூலமாக Training கொடுத்து அதற்குப் பிறகு கிராமப் பகுதி மக்களுக்காக, நன்மை செய்வதற்காக கொண்டு வரப்பட்ட திட்டமே தவிர இன்னும் நல்ல வகையிலே நம்முடைய பணிகளைப் பூரணப்படுத்தவேண்டுமென்ற வகையிலும் நாம் கொண்டு வந்திருக்கிறோம். By this Bill the implementation of Maternity care— நான் மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்களுக்கு சொல்கின்றேன்....the expanded programme on immunisation will be implemented in a better manner under a union policy as per the National Health Policy. அந்த வகையிலே நாம் கொண்டு வந்திருக்கிறோம். Our future plan is to have one P.H.C. for every 30,000 people each of which will have six Health Sub-centres என்கிற வகையிலே 30 ஆயிரம் ஜனத்தொகைக்கு ஒரு ஆரம்பச் சுகாதார நிலையமும், ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு 6 தாய்-சேய் நல விடுதிகள் என்று சொன்னாலும் சரி (One Sub-Centre) என்று சொன்னாலும் ஒரே பொருளாக இருக்கும். ஆகவே, அந்த வகையிலே இன்னும் சொல்கின்றேன்.

The experience so far had been that technical control by District Health Officer over a Maternity Centre was more effective, was really more effective. ஆனால் டி.எச்.ஓ. எல்லைக்குள் வரவில்லை என்றால், டெக்னிகல் அஸிஸ்டென்ட்ஸ் கொடுக்கவில்லையென்றால் பிரச்சனை இருக்கிறது என்று நாம் பார்த்திருக்கிறோம். இன்றைய தினத்தில் நம்முடைய நல்வாழ்வுத் துறை இலாக்காவிலே 7,650 Health Sub-centres என்ற Maternity Centres இருக்கின்றன. இவை 2,814 பஞ்சாயத்து யூனியனுடைய எல்லைக்குள்ளே இருக்கக்கூடியவை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

Under the Multi-purpose Health Schemes the scale of pay for all workers will be same. The existing workers who are Unit workers will be trained with better skill and also their service conditions will be improved. They will be given Travelling Allowance as per the Tamil Nadu Travelling Allowance Rules.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1986 ஏப்ரல் 26

ஆகவே எந்த விதமான ஒரு பிரச்சனையும் இல்லை என்பதை
மட்டும் இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன், ஏற்கனவே
1982 ஆம் ஆண்டு அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள்.
கோர்ட்டுக்குச் சென்ற நேரத்திலே நாம் இந்தச் சட்டத்தைத்
திருத்த வேண்டும் என்று சட்டத்திற்கு எதிராக நான் சொல்ல
வில்லை. நம்முடைய பஞ்சாயத்து யூனியனுடைய நிர்வாகத்தில்
பணியாற்றுகின்ற அந்தப் பணியாளர்களை நீங்கள் multi-
purpose training எடுத்துக் கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு
multi-purpose training கொடுப்பதற்கு தயவுசெய்து
உணர்ச்சிவசப்படாமல், ஒருகணம் National interest-ஐ நீங்கள்
பார்த்தால் நல்லது. Let us forget our political fight.
நாம் நன்கு யோசிப்போமானால், இதை நான் சிரிப்பதற்காக
சொல்லவில்லை, சைனாவில் இது இருக்கிறது. சைனாவில்
இந்த multi-purpose Health Workers அங்கே இருக்கிறார்
கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படு
கிறேன். இங்கே தேசிய கண்ணோட்டத்தோடு நாம் பார்ப்
போமானால் இதனால் நாம் கிராமப் பகுதியில் தரக்கூடிய
அந்த நல்ல உதவிகள் கிடைக்காமல் இருக்கிறது என்று
பல நிறுவனங்கள், W.H.O. போன்ற பல நிறுவனங்கள்
"What is it ? Your people have gone to the court. Have you not taken
steps to get the stay vacated ? என்று உலக சுகாதார நிலையம்
அங்கே பேசக்கூடிய அந்த அளவுக்கு கவனத்தை ஈர்த்து
இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே நாம் என்ன செய்கிறோம் என்றால், அங்கே இருக்கக்
கூடிய நீதிபதி அவர்களே சொன்னார்கள்— நாம் நினைப்பது
என்ன என்றால், அவர்களுக்கு பயிற்சி கொடுத்து விட்டால்
அவர்களை பயன்படுத்தலாம் என்று நினைத்தோம்— அது முடி
யாது. அந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டும் என்று. ஆகவே
இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லிக்
கொள்ளுவது எல்லாம் இந்த சட்டத்தை திருத்த வேண்டும் என்
கிறோமே தவிர இதற்கும் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும்
சம்பந்தம் இல்லை என்பது பற்றி இங்கே மாண்புமிகு உள்ளாட்சித்
துறை அமைச்சர் அவர்கள் மிக அழகாகப் பதில் சொன்னார்கள்.
அது அல்ல இப்போது பிரச்சினை. ஏற்கனவே, 3½, 4 ஆண்டு
களுக்கு முன்னால் நடைபெற்ற ஒரு நல்ல எண்ணத்தோடு அந்த
திட்டத்தை அமல் செய்வதற்காக நாம் இப்போது சட்டத்தை
திருத்த கொண்டு வந்து இருக்கிறோம்.

ஏற்கனவே மகாராஷ்டிராவில் அங்கே இருக்கக்கூடிய பஞ்
சாயத்து யூனியனில் இருப்பவர்கள் எல்லாம் Multi-purpose
Health Workers -களாக மாற்றி ஆகிவிட்டது. இன்றும்



1986 ஏப்ரல் 26] [டாக்டர் எச். வி. ஹண்டே]

பல மாநிலங்களில் மாற்றி ஆகிவிட்டது. ஏதோ ஒன்று இரண்டு மாநிலங்களில் கோர்ட்டுக்கு சென்று இருக்கிறார்கள். அந்த ஒன்று இரண்டு மாநிலங்களின் பட்டியலில் நம்முடைய தமிழகம் வரக்கூடிய காரணத்தால் இதைக் கொண்டு வருகிறோமே தவிர இதில் எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. நானே நினைத்தேன் in the interest of the Health of the rural preople. அந்த கிராமப் பகுதி மக்களின் நன்மைக்காக வருவதால் இது ஏகமனதாக எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் சர்ச்சை இல்லாமல் நீங்கள் எல்லாம் ஒத்துக்கொள்வீர்கள் என்று நினைத்தேன். இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் எழுப்பிய இந்த Health Department பிரச்சினை பற்றி மட்டும் நான் இங்கே தெளிவாக பதில் சொல்லியிருக்கிறேன். மற்ற பிரச்சினைகள் பற்றி ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லி இருக்கிற காரணத்தால் இவைகளை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : '1986ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1986) நிறைவேற்றப்பெற வேண்டும்''.

[1986 ஏப்ரல் 26

**தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (28-4-1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.49 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்..

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும் எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

142. கோரிக்கை எண். 30—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

143. 1986-87 ஆம் ஆண்டிற்கான சமூக நலத்துறை பற்றிய சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

144. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் செயல் முறை குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை (தமிழ்).

145. பொது நிறுவனங்களின் செயலாக்கம் குறித்த பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை (தமிழ்).

146. 1985–86 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).





## இணைப்பு

(46ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### சமூக நலத் துறை

### கோரிக்கை எண். 30

### கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87

### அத்தியாயம் 1

### முன்னுரை.

1.1. கோரிக்கை எண். 30-ன் கீழ் 1986–87 ஆம் ஆண்டிற்கு ரூ. 76,04,25,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.2. நமது நாடு சுதந்திரம் அடைந்த பிறகு வந்த ஆண்டு களில் மகளிர், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் மற்றும் நலிந்த பிரிவினரின் நலனில் அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

1.3. சமுதாய வளர்ச்சித் துறையின் ஒரு அங்கமாக 1947 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மகளிர் நலன் பிரிவு, இம் மாநிலத்தின் மகளிர் நலனை கவனித்து வந்தது. 1961 ஆம் ஆண்டில், மகளிர் நலத் துறையானது 1954-ல் தொடங்கப் பட்ட மாநில சமூக நல வாரியம் மற்றும் 1955-ல் தொடங்கப் பட்ட மகளிர் நல இயக்குநரகம் ஆகியவற்றுடன் இணைந்து, தனித் துறையாகச் செயல்படத் துவங்கியது.

1.4. மகளிர் நலம் மட்டுமல்லாமல், அனைத்து விதமான உடல் ஊனமுற்றோர், குழந்தை வளர்ச்சி, மற்றும் நல வாழ்வு, அனாதைகள் மற்றும் இம்மாநிலத்தில் உதவி தேவைப்படும் அனைவரின் நலனையும் கவனிக்கும் நோக்குடன் 1972 ஆம் ஆண்டு முதல் சமூகநலத் துறை என்னும் பெயருடன் செயல் பட்டு வருகிறது.

1.5. ஆறாவது திட்ட காலத்தில், மற்ற மாநிலத்தின் கவ னத்தை ஈர்க்கும் படியான முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் செயல்படத் துவங்கியது முதல் இத்துறை உன்னதமான வளர்ச்சியுற்றது. இத்திட்டத்தைத் தொடர்ந்து தாய்மார்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் பெண்கள் ஆகியோருக்கு உடல் நலம், உடல் பரிசோதனை மற்றும் இரள் நோய்த் தடைக் காப்புத் திட்டம் போன்ற பல சீரிய திட்டங்கள் செயல்படத் துவங்கின.

[1986 ஏப்ரல் 26

1.6. மகளிர் நலத்தில், தொழிற் பயிற்சி, விதவைகளின்,
மகள்களுக்குத் திருமணம், அனாதைப் பெண்களுக்குத் திருமணம்
மாநிலம் முழுவதும் அனாதை இல்லங்கள் தொடங்குதல், பள்ளி
செல்லும் பிள்ளைகளுக்கு இலவச சீருடை, விதவைகளின்
குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப்
புத்தகம் வழங்குதல் போன்ற முக்கிய திட்டங்களுக்கு
முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

1.7. உடல் ஊனமுற்றோர் நலனிற்காக, ஏலாமை கண்டு
பிடிப்பு முகாம்கள் நடத்துதல், சுயவேலை வாய்ப்பிற்கு உதவி,
காதொலி கருவிகள், சக்கர நாற்காலிகள் முதலியன வழங்குதல்,
பெட்டிக் கடைகள் அமைத்திட உதவி ஏனைய பிற உதவிகள்
வழங்கி, சீரிய சேவைகளைச் செய்து வருகின்றது.

அத்தியாயம் 2.

மகளிர் நலம்.

(1) சிறப்புத் திட்டங்கள் :

2.1. மகளிர்க்கென்றே பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டு
றவு சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை
அமைத்து, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டத் துறைகளில்
அவர்களுக்குப் பயிற்சியளித்து வேலைவாய்ப்பினை நல்கி, வரு
மானத்திற்கான வாய்ப்பினையும் கொடுத்து, அவர்களது பொரு
ளாதார முன்னேற்றத்திற்கு அரசு உதவி வருகிறது. அவர்
களுக்காக, கூட்டுறவுத் துறையில் தொழில் நிலையங்கள் ஏற்
படுத்தப்பட்டு, அவைகளுக்கு பங்கு மூலதனக் கடன் மற்றும்
இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவை கொள்முதல் செய்
வதற்கு மானியத் தொகை, நடப்பு மூலதனக் கடன் மற்றும்
நிர்வாக மேற்பார்வை உதவி ஆகியவை அளிக்கப்
பட்டு வருகின்றன. இதுவரையில் 5,455 மகளிர்
பல்வேறு தரப்பட்ட தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டார்
கள். அவர்களில் 5,356 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்
கப்பட்டுள்ளது. சில பெரிய தொழிற் கூட்டுறவு சங்கங்களின்
அமைப்பு பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

எழுதுபொருள் உற்பத்தி :

2.2. 15 தொழில் கூட்டுறவு சங்கங்கள் 975 மகளிர்க்கு
வேலைவாய்ப்பு அளிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன. 15 சங்கங்
களும் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன. இச்சங்கங்கள்
முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த
குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கான பதிவேடு
களைத் தயாரித்து அளிக்கின்றன.



1986 ஏப்ரல் 26]

பனைப் பொருள் தொழில்கள் :

2.3. பனைப்பொருள் தயாரிக்கும் தொழிலை அடிப்படை
யாகக் கொண்டு பனைநார் மற்றும் பனைப்பாய் ஆகியவைகளை
உற்பத்தி செய்யும் 10 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தர்மபுரி
மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு 250 மகளிர்க்கு வேலை
வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்த 10 கூட்டுறவு சங்கங்களும்
உற்பத்தியை ஆரம்பித்து விட்டன.

கிராம நூற்புமையம் :

2.4. மதுரை மாவட்டம், கண்ணேந்தல் கிராமத்தில் ஒரு
கிராமப்புற நூற்பு மையம் தொடங்கப்பட்டு இதன் மூலம் 25
கிராமப்புற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.
தஞ்சாவூர் மாவட்டத்தில் வலங்கைமான் என்னுமிடத்தில் மேலும்
ஒரு கிராமப்புற நூற்புமையம் தொடங்கப்பட்டுள்ளது.
32 மகளிர்க்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சாக்குக்கட்டி மற்றும் மெழுகுவர்த்திக் கூடம் :

2.5. மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்
வேலி மாவட்டங்களில் 2 சாக்குக்கட்டி மற்றும் 2 மெழுகு
வர்த்தி உற்பத்திக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு, 60 கிராமப்புற
மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்
திலும் 1980—81 முதல் உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது.

தீப்பெட்டித் தொழில் :

2.6. தீப்பெட்டித் தொழிலில் இதுவரை 4,016 பெண்களுக்கு
பயிற்சி அளிக்கப்பட்டு மகளிர் தீப்பெட்டி சங்கங்கள் ஏற்படுத்தப்
பட்டன. ஆனால் பல்வேறு காரணங்களினால் பெரும்பான்மை
யான சங்கங்கள் இயங்காமல் முடங்கி விட்டன. தற்போது 49
சங்கங்கள் மட்டுமே இயங்கி வருகின்றன. சேலம், திருநெல்
வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மேற்கூறிய
49 சங்கங்கள் முழு உற்பத்தியை மேற்கொள்ள ஒவ்வொரு சங்கத்
திற்கும் 50 சதவீதம் அதாவது ரூ. 4,950-க்கு மேற்படாத
சட்டம் மற்றும் அறுவை இயந்திரங்கள் வாங்க மானியம் வழங்கப்
பட்டுள்ளது. கச்சாப் பொருள்களை வாங்குவதற்கு நிதி உதவி
யாக ரூபாய் 3,000 வழங்க தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி
உத்தேசித்துள்ளது. மேற்படி தீப்பெட்டித் தொழில் கூட்டுற
வுச் சங்கங்களை நல்ல நிலையில் இயங்க மதுரையிலுள்ள
இணை இயக்குநர் (தீப்பெட்டி) அவர்களால் தக்க நடவடிக்கை
மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**கயிறு தொழில் :**

2.7. தஞ்சாவூர் மாவட்டம், நல்லூர் கிராமத்தில் ரூபாய் 6.61 இலட்சம் செலவில் ஒரு கயிறு தயாரிக்கும் பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 100 மகளிரிக்கு கயிறு தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு அங்கு கயிறு தயாரிக்கும் தொழில் கூட்டுறவு சங்கம் ஒன்று நிறுவப்பட்டு உற்பத்தியும் துவங்கப்பட்டு 100 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக இச்சங்கம் தஞ்சை மாவட்டத்தில் மெலட்டூர், அரித்துவாரமங்கலம் மற்றும் ஆலங்குடி ஆகிய மூன்று கிராமங்களில் கிளைகளை நிறுவியுள்ளது. தற்சமயம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் சிறப்பு மத்திய உதவியின்கீழ் 110 ஆதிதிராவிடர் மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**பட்டு நூல் எடுத்தல் :**

2.8. வீணாகும் கழிவுப் பட்டில் இருந்து பட்டு நூல் தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளன. இரண்டிலும் உற்பத்தி தொடங்கப்பட்டு 50 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

**தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் :**

2.9 ஆதரவற்ற மற்றும் விதவை மகளிர்க்கு இலவசமாக வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் மூலம் போதிய வேலை இன்மையால் அவர்களுக்கு வருமானம் கிடைக்க, மாநிலம் முழுவதும் மண்டல ரீதியாக சென்னை, ஈரோடு, தஞ்சாவூர் மற்றும் மதுரையில் 4 தொழில் கூட்டுறவு சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்பட்டோர் நலத்துறைப் பள்ளி மாணவர்களுக்கான சீருடைகளைத் தைத்து வழங்குவதோடு, இதர நிறுவனங்களில் தையல் வேலைகளையும் செய்கின்றன. தற்சமயம் இத்துறையின் கீழ் 1985-86 ம் ஆண்டில் மேலும் மூன்று மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் முறையே வேலூர், கடலூர், சேலம் ஆகிய மூன்று இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை 4,000 மகளிர் உறுப்பினர்களுக்கு இச்சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

**பள்ளி குழந்தைகளுக்கு இலவச சீருடை:**

2.10. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கு 1985-86 ஆம் ஆண்டில் இலவசச்



சீருடை வழங்கப்படும் என 8-3-1985 அன்று ஆளுநர் உரையில் கூறப்பட்டது. அதன்படி 1985-86 ஆம் ஆண்டிற்கு பள்ளிக் குழந்தைகளுக்குச் சீருடை வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 59,43,338 மாணவ, மாணவியருக்கு சீருடை தைக்கும் பணி இத்துறையைச் சார்ந்த மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் மன்றம் மற்றும் சேவை நிறுவனங்கள் மற்றும் தொழில் வளர்ச்சித் துறை தையற் தொழிற்கூடங்கள் மற்றும் சமூகநல வாரியத்தைச் சார்ந்த நிறுவனங்கள் ஆகியவைகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்நிறுவனங்கள் சீருடைகளை முழுமையாகத் தைத்து கல்வித்துறையினரிடம் பள்ளிக் குழந்தைகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு ஒப்படைத்துவிட்டன. சீருடை தைக்கும் பணியினால் ஏறக்குறைய 40,000 மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. சீருடைகளைத் தைக்க தையற்கூலியாக ரூ. 3.64 கோடி அரசு வழங்கியுள்ளது. 8 துணி வெட்டும் இயந்திரங்கள் இவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. விளம்பரச் செலவும், மாஸ்டர்கட்டர் செலவும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இத்திட்டம் சமூக நலத்துறையைச் சார்ந்த மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் மன்றம் மற்றும் சேவை நிறுவனங்கள் அனைத்தும் நல்ல நிலையில் இயங்கவும் குறிப்பாக மகளிர் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும் பெருமளவு உதவியுள்ளது.

**விதவைகள் மூலம் நடத்தப்படும் சிற்றுண்டிச் சாலைகள் :**

2.11. ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகளின் மறுவாழ்விற்காக கல்லூரிகள், தொழிற்சாலைகள் மற்றும் அலுவலக வளாகங்களில் நியாய விலை சிற்றுண்டிச்சாலைகள் நடத்தும் திட்டத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடைய முன்வரும் விதவைகளுக்கு தமிழ்நாடு அரசு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக உணவு தானியங்கள் மற்றும் இதரப் பொருட்கள் நியாய விலையில் வழங்கப்படுகின்றன. மேலும் இத்திட்டத்திற்கான மொத்தச் செலவுத தொகையில் 25 சதவிகிதத்தை மான்யமாக சமூக நலத்துறையும், எஞ்சியுள்ள 75 சதவிகித மூலதனத் தேவையைக் குறைந்த வட்டி விகிதத்தில் கடனாக வங்கியின் மூலம் பெறுவதற்கும

[1986 ஏப்ரல் 26

அரசு ஏற்பாடு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் கீழ்க்கண்ட
வாறு 72 அலகுகள் தொங்கப்பட்டு 150 பெண்களுக்கு வேலை
வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது:—

| வருடம். | மாவட்டம். | அலகுகளின் எண்ணிக்கை. | பயிற்சியளித்தல். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1982-83 | சென்னை | 20 | கில்டு ஆப் சர்விஸ். |
| | கோயம்புத்தூர் | 10 | சமூக நல விரிவாக்கப பணியாளர். |
| | தஞ்சாவூர் | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| | திருச்சிராப்பள்ளி | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| | சேலம் | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| 1983-84 | தஞ்சாவூர் | 10 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| 1984-85 | சென்னை | 2 | சமூக நல விரிவாக்கப் பணியாளர். |
| | மொத்தம் .. | 72 | |

(2) மகளிர்க்கான மற்ற தொழிலியல் பயிற்சிகள் :

2.12. தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் துறை
களில் மகளிர்க்கு சுமார் 120 தனியார் நிறுவனங்கள் மூலம்
பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்
ஆண்டுச்கு ரூ. 3,000-க்கு குறைவாக வருவாய் பெறும் குடும்பத்
தில உள்ள 16 முதல் 30 வயதிற்கு உட்பட்ட மகளிர் பயனடை
கிறார்கள்.

இந்த வருமான வரம்பு 1986-87-ல் ரூ. 6,000 ஆக உயர்த்தப்
பட்டுள்ளது.

தட்டச்சு :

2.13. இத்திட்டத்தில் பயன்பெறும் மகளிர்க்கு மொத்தம்
ரூ. 150 உதவித் தொகையாக பத்து மாதங்களுக்கு அளிக்கப்படு
கிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ரூ. 1.56 லட்சம்
செலவில் 1,000 ஏழைப்பெண்கள் பயன்பெறுகிறார்கள். இது
வரை, இத்திட்டத்தின் கீழ் 7,975 பெண்கள் பயன் அடைந்
துள்ளார்கள்.



1986 ஏப்ரல் 26]

கணக்குப் பதிவு மற்றும் கணக்குத்துறையில் பயிற்சி அளித்தல்:

2.14. இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெறும் மகளிர்க்கு
மொத்தம் ரூ. 165 உதவித் தொகையாக வழங்கப்பட்டு 6
மாதங்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ்
ஆண்டுதோறும் ரூ. 1.27 லட்சம் செலவில் சுமார் 400 பெண்கள்
பயனடைகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 3,040
பெண்கள் பயனடைந்துள்ளார்கள்.

சுருக்கெழுத்து :

2.15. இத்திட்டத்தின்படி பயிற்சி பெறும் மகளிர்க்கு மொத்
தம் ரூ. 220 உதவித் தொகையாக ஓராண்டிற்கு அளிக்கப்படு
கிறது. ஆண்டுதோறும் ரூ. 1.01 இலட்சம் செலவில் சுமார்
500 மகளிர் பயனடைகிறார்கள். இதுவரை 1,860 மகளிர்
இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

(3) உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள் (தையல்) :

2.16. தையல், கம்பளி நெசவு, பனை ஓலைப்பாய் பின்னு
தல், ஜமுக்காளம் நெய்தல், மூங்கில் மற்றும் மெழுகுவர்த்தி
வேலைகளுக்கான உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களை ஏற்
படுத்தி கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் 18-லிருந்து
35 வயதிற்குட்பட்ட மகளிர்க்கு ஒரு வருடத்திற்கு பயிற்சி
அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியானது அவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிப்
பதோடு அவர்கள் குடும்பத்தின் வருமானத்தினை அதிகரிக்கவும்
வகை செய்கிறது. இப்பயிற்சியின்போது பயிர்ச்சியாளர்களின்
போக்குவரத்து மற்றும் சில்லறைச் செலவினங்களுக்காக மாதம்
ஒன்றுக்கு, ஒவ்வொருவருக்கும் ரூ. 30 உதவித் தொகையாக
அளிக்கப்படுகிறது.

2.17. தற்போது 33 உற்பத்தி மற்றும் பயிற்சி கூடங்களும்
4 உற்பத்திக் கூடங்களும் சமூக நலத்துறையின் கீழ் இயங்கி
வருகின்றன. இத்திட்டத்திற்காக 1986-87 ஆம் ஆண்டிற்கு
ரூ. 24.24 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்
வொரு ஆண்டும் சுமார் 900 பெண்கள் இவ்வுற்பத்தி மற்றும்
பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். மேற்குறிப்பிட்ட
33 உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூட்டங்களில் 4 தையல் பயிற்சிக்
கூடங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில்
உள்ள மகளிர்க்காக என்றே ஆரம்பிக்கப்பட்டு முறையே வள்ளிக்
கொட்டாய் (வடாற்காடு மாவட்டம்), எலிவளவு, முண்டகம்
பட்டு மற்றும் அசக்காட்டுப்பட்டி (சேலம் மாவட்டம்) ஆகிய
இடங்களில் நடைபெற்று வருகின்றன.

[1986 ஏப்ரல் 26

4. அரசால் நடத்தப்படும் சேவை இல்லங்கள் :

2.18 சமூக நலத்துறையின் கீழ் 18 முதல் 40 வயது வரையுள்ள ஏழை விதவைகள், ஆதரவற்றப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர் ஆகியோர் நலனுக்காக ஆறு சேவை இல்லங்கள் தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இச்சேவை இல்லங்களில் பத்தாவது வகுப்பு வரை கல்வி பயிலவும், தையல், ஆடைகள் தைத்தல், எம்பிராய்டரி துணி பொம்மைகள் செய்தல், பாய் நெய்தல், முதலியவைகளில் பயிற்சி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தையல், எம்பிராய்டரி பயிற்சிகளில் ஒரு வருடம் பயிற்சி முடித்த இல்லவாசிகள் அரசால் நடத்தப்படும் தொழில் நுட்பத் தேர்வு எழுதவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

2.19 இச்சேவை இல்லங்களில் தங்குவோர் தங்களது இரண்டு குழந்தைகளுடன் அதிக பட்சமாக மூன்றாண்டுகள் தங்கலாம். மாதமொன்றிற்கு மகளிருக்கு தலா ரூ. 75-ம் குழந்தைகளுக்கு தலா ரூ. 60-ம் ஒரு மாத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அத்துடன் ஆண்டொன்றுக்கு பெரியவர்களுக்கு தலா ரூ. 60-ம் குழந்தைகளுக்கு தலா ரூ. 35-ம் உடைச் செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்க ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலுவோருக்கு ரூ. 40-ம், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலுவோருக்கு ரூ. 60-ம் ஆண்டிற்கு ஒரு முறை ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கு புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 15 ஆண்டிற்கொருமுறை வழங்கப்படுகிறது. 1981-82 ஆம் ஆண்டு முதல் கலைப்பாடங்களுடன் (Art Subjcc!) தாம்பரம் சேவை இல்லத்தில் 30 மாணவியர் என்ற குறியீட்டெண்ணிக்கையுடன் மேல்நிலை வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் இதே பாடங்களுடன் கூடிய மேல்நிலை வகுப்புகள் கடலூர் சேவை இல்லத்திலும் துவங்கப் பெற்றுள்ளது. இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவியருக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ. 75 வழங்கப்படுகிறது. இத்துடன் மேல்நிலை பள்ளியில் பயிலும் மாணவியருக்கு உடைச் செலவினமாக ரூ. 60-ம் புத்தகம் வாங்கும் தொகையாக ரூ. 100-ம் ஆண்டிற்கொருமுறை வழங்கப்படுகிறது.

2.20 தாம்பரம் சேவை இல்லத்தில் உடல் ஊனமுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக தனியாக ஒரு பிரிவும் இயங்கி வருகிறது. 30 பெண்களும் 20 குழந்தைகளும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.



1986, ஏப்ரல் 26]

2.21 தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய மூன்று சேவை இல்லங்களில் சுருக்கெழுத்து, தட்டச்சு போன்ற செயலகப் பணிக் கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இல்லத்திலும் 20 பெண்கள் வரை அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் உயர்கல்வி படிக்க இயலாத பெண்கள் பயன் பெறுகிறார்கள். இப்பயிற்சியில் ஓராண்டு முடித்தவர்கள் அரசு தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வேலை வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடிகிறது. பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 20 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இச்சேவை இல்லங்களில் நடத்தப்பட்டு வரும் தையல் பிரிவில் பயிற்சி பெறும் மகளிர் ஒவ்வொருவருக்கும் 1985–86-லிருந்து அவர்களது ஓராண்டு பயிற்சிக்காலச் செலவினங்களை மேற்கொள்ள ஆண்டுக்கு ரூ. 250, வழங்கப்படுகிறது.

2.22. இச்சேவை இல்லங்களில் தங்கும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான உடைச் செலவினத்தை மகளிருக்கு ரூ. 60-லிருந்து ரூ. 100 ஆகவும் குழந்தைகளுக்கு ரூ. 35-லிருந்து ரூ. 60 ஆகவும் 1986–87 ஆம் ஆண்டிலிருந்து உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

2.23. அரசு சேவை இல்லங்கள், மற்றும் அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்களில் பத்தாவது வகுப்பு தேர்ச்சி பெற்ற 367 மகளிர் குடும்ப நலத் துறையால் காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து இடங்களில் நடத்தப்படும் பலநோக்கு நலப்பணியாளர் (மகளிர்) ஒன்றரை ஆண்டுகளாப் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மற்றும் ஆகஸ்டு மாதங்களில் துவங்கும் அப்பயிற்சிக்கு மாணவியர் தேர்வு செய்யப்படுகிறார்கள். 1985 ஜனவரி வரை 1½ வருடக்காலப் பயிற்சி முடித்த 25 மகளிர் தற்பொழுது பலநோக்கு நலப்பணியாளர்களாகப் பணிபுரிகிறார்கள்.

2.24. தஞ்சை சேவை இல்லவாசிகளுக்கு சிறந்த பாதுகாப்பளிக்க தஞ்சை சேவை இல்லத்தைச் சுற்றி சுற்றுச்சுவர் 1986–87 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் கட்ட அரசு தீர்மானித்துள்ளது.

5. தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை இல்லங்கள் நடத்துதல் (மாநில அரசு உதவியுடன்

2.25. அரசு நிதி உதவியுடன் கஸ்தூரிபா சேவாஸ்ரமத்தினால் ஈரோட்டிலும் மதுரை சேவாஸ்ரமத்தினால் மதுரையிலும் முறையே ஜூன் 1981-லும் நவம்பர் 1981-லும் சேவை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2.26. ஒவ்வொரு சேவை இல்லத்திலும் 40 உள் உறுப்பினர் களுக்கு (பெண்கள்) இரண்டாண்டு 10–ம் வகுப்பு குறுகிய கால கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக் கும் மாதமொன்றுக்கு ரூ. 50 விதம் உதவித் தொகையும் மாதமொன்றுக்கு ரூ. 15 விதம் தொகுப்பு மான்யமும் அளிக்கப்படுகிறது.

2.27. ஒரு உயர்நிலை ஆசிரியை மற்றும் ஒரு தமிழாசி ரியை ஆகியோரின் ஊதியத்திற்கான செலவுத் தொகை மான்ய மாக அளிக்கப்படுகிறது.

6. சேவை இல்லங்கள் நடத்த தனியார் நிறுவனங்களுக்கு உதவியளித்தல் :

2.28. சேவை இல்லங்கள் நடத்திட தனியார் நிறுவனங் களுக்கு மானிய உதவி அளித்தல், சமூக நலத்துறையின் செயல் திட்டங்களில் ஒன்றாகும். சமூகத்தில் பின் தங்கிய பெண்களுக்கு 10-ம் வகுப்பு குறுகிய கால கல்விப் பயிற்சி அளிப்பதற்காக காந்திகிராமத்திலுள்ள கஸ்தூரிபா சேவி காஸ்ரமம் என்ற தனியார் தொண்டு நிறுவனத்திற்கு, ஒரு இல்லவாசிக்கு மாதமொன்றுக்கு ரூ. 50 விதம் உதவித் தொகை மானியமாக அளிக்கப்படுகிறது.

2.29. சமூகத்தில் பின்தங்கிய பெண்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பயிற்சியுடன் வாழ்க்கைக் கல்வி அளிப்பதற்காக சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திர் என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகை மானியமாக அளிக் கப்படுகிறது.

7. வருடாந்திர மான்யம் :

2.30. பல்வேறு சமூக நலப் பணிகளில் ஈடுப்பட்டுள்ள தனி யார் நிறுவனமான இந்திய சமூக நல சங்கத்தின் தமிழ்நாடு கிளைக்கு மான்யமாக ரூ. 2,000 ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

8. ஆசிரியர் பயிற்சி பள்ளி :

2.31. அரசு சேவை இல்லங்களிலும், அரசு மானியம் பெற்று நடைபெறும் தொண்டு நிறுவனங்களிலும் பத்தாவது வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவிகள் அவர்களது வேலை வாய்ப்பைக் கருதி இத்துறையால் 1966–67-ல் துவங்கப்பட்டு தற்பொழுது 40 குறியீட்டெண்ணிக்கையைக் கொண்ட ஒரு மேல் நிலைப் பிரிவும் ஒரு கீழ்நிலைப் பிரிவும் பல்லாவரத்தில் நடை பெறும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்படு



கின்றனர். இங்கு பயிலும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் உதவித் தொகையாக ரூபாய் 75 ஒவ்வொரு மாதமும் வழங்கப் படுகிறது. இப்பயிற்சி இரண்டு ஆண்டுகளுக்கு நடைபெறுகிறது. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்தபின்பு அவர்கள் இடை நிலை ஆசிரியர்களாக, இத்துறையால் நடத்தப்படும் நிறுவனங் களிலும், கல்வித் துறையால் நடத்தப்படும் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும், மாநகராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். இதற்காக இவர்கள் தங்களது பெயரை வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்.

9. அரசால் நடத்தப்படும் பணிபுரியும் பெண்கள் விடுதிகள் :

2.32. பணிபுரியும் மகளிர்க்கு பாதுகாப்பும் வசதியும் செய்து கொடுக்கும் பொருட்டு பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்கும் திட்டத்தை (தமிழ்நாடு) அரசு பல நகரங்களில் செயல்படுத்தி வருகிறது. அவை சென்னை (கிண்டி, எழும்பூர்), மதுரை, திருச்சிராப்பள்ளி, ஹோசூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 இடங்களில் செயல்படுகின்றன. எழும்பூர் விடுதியில் 35 பெண் களும் மற்ற விடுதிகளில் 50 பெண்களும் அனுமதிக்கப்படுகி றார்கள். மொத்தமாக இவ்வில்லங்களில் 285 பணிபுரியும் மகளிர் தங்கியுள்ளனர். இவ்விடுதியை நடத்துவதற்கென நிர்வாகப் பணியாளர்கள், அதாவது ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலாளர்கள், ஒரு அடிப்படை பணியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவுப் பணியாளர் ஆகியவர் களின் ஊதியம், விடுதிக் கட்டிட வாடகை ஆகிய செலவினங் களை அரசு மேற்கொள்கிறது. உணவுச் செலவு, மின்கட்ட ணம் மற்ற இதர செலவுகளைப் பணிபுரியும் மகளிரிட மிருந்து சம அளவில் பிடித்தம் செய்து ஈடுசெய்யப்படுகிறது. விடுதியில் வாடகைத் தொகையும் விகிதாச்சார முறைப்படி பணிபுரியும் மகளிரிடமிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. 1986–87 ஆம் ஆண்டில் கடலூரில் 30 நபர்களுக்காக பணி புரியும் பெண்கள் விடுதி ஒன்று ரூ. 1.25 இலட்ச செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

10. பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுதல் :

2.33 தனியார் நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் பெண்கள் விடுதி கட்டு தற்பொருட்டு மத்திய அரசு கட்டிடம் கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டில் 75 சதவீதம் மான்யம் வழங்கி வருகி றது. மாநில அரசுக்கு விண்ணப்பிப்பதன் பேரில் மொத்த மதிப்பீட்டில் 15 சதவீதம் அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைவோ அந்தத் தொகை மாநில அரசால் மேற்படி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. மத்திய மற்றும் மாநில அரசின் மானியங்களால் பயன்பெறும் நிறுவனங்கள் மீதமுள்ள

10 சதவீத செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும். இத் திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சி, நகராட்சியிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும். மற்ற எந்த அரசிடமிருந்தோ நிறுவனத்திடமிருந்தோ உதவித் தொகை பெறக்கூடாது.

2.34. 1985-86 ஆம் ஆண்டில் 4 பணிபுரியும் பெண்கள் விடுதிகள் கீழ்க்கண்ட இடங்களில் கட்டுவதற்கான மானியத் தொகை மத்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது:

1. அவ்வை இல்லம், அடையாறு, சென்னை
2. கன்ஸ்டிரக்டிவ் ஓர்க் வாலண்டியர்ஸ், வேலூர்.
3. தமிழ்நரடு பெண்கள் நல சங்கம், திருச்சிராப்பள்ளி.
4. திருச்சி சேவா சங்கம், திருச்சிராப்பள்ளி.

மாநில அரசு அளிக்கும் மானியத்திற்காக 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. மகளிர் மன்றங்கள் :

2.35. சமுதாய மற்றும் பொருளாதார இடர்பாடுகளைக் களைந்து எறியும் பொருட்டு கிராமப்புற பெண்களைக் கொண்ட ஒரு அமைப்பாக மகளிர் மன்றங்கள் உருவாக்கப் பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,360 மன்றங்கள் இருக்கின்றன. மகளிர் மன்றத்தில் அமைப்பாளர்களுக்கு ஒவ்வொரு மூன்று மாதத்திற்கும் ரூ. 15 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 வீதம் சமூக நலத்துறையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொடுக்கப் படுகிறது. இத்தொகை அமைப்பாளர்களின் மதிப்பூதியம், உணவைப் பாதுகாப்பது, சுகாதாரம், குழந்தைகள் நலம், ஊட்டச் சத்து தயாரித்தல், தொடர்பான செயல்முறை விளக்கம், குழந்தைகள் கண்காட்சி, கல்வி தொடர்பான சுற்றுலா, மற்றும் சமுதாயக் கல்விக்கான புத்தகங்கள் வழங்குதல் போன்ற பணிகளுக்குச் செலவிடப்படுகிறது.

### மகளிர் மன்றங்கள் மூலமாக பொருளாதார நிலையை ஊக்குவித்தல்

2.36. பலவிதமான பொருளாதார நடவடிக்கைகளை மேற் கொள்ள மகளிர் மன்றங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆண்டு முழுவதும் சிறப்பாகச் செயல் புரியும் மகளிர் மன்றங்களுக்கு பரிசுத் தொகை பணமாக வழங்கப்படுகிறது. சிறந்த மகளிர் மன்றங்கள் 3 வகையாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு பரிசு வழங்கப் படுகிறது.

| வகை | பரிசுத் தொகையின் மதிப்பு |
|---|---|
| அ | ரூ. 1000 தலா |
| ஆ | ரூ. 600 தலா |
| இ | ரூ. 400 தலா |





12. வழிகாட்டி நிலையங்கள் :

2.37. வழிகாட்டி நிலையங்கள் முதலில் 1978-79 ஆம் ஆண்டில் 4 மாவட்டங்களிலும் பின்னர் 1983-84 ஆம் ஆண்டில் 4 மாவட்டங்களிலும் துவக்கப்பட்டன. இந்த வழி காட்டி நிலையங்கள், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கன்யாகுமரி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டி நிலையங்கள் ஏழை விதவைகள், ஆதரவற்ற மற்றும் ஏழைப் பெண்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் சுயவேலை வாய்ப்புக்காக கடனுதவி பெற்றுத் தருதல், தகுதி வாய்ந்த பெண்களின் குழந்தைகளை தனியார் நல நிறுவனங்களிலும், ஆதரவற்ற குழந்தைகள் விடுதிகளிலும் சேர்க்க உதவுதல் ஓய்வூதியம் மற்றும் வைப்பு நிதி ஆகியவைகளைத் தாமதமின்றிப் பெற உதவுதல், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து பெற வேண்டியவற்றைப் பெற உதவுதல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றன. அநேக ஏழைப் பெண்கள் கல்வியறிவற்றவர்களாகவோ அல்லது, குறைந்த கல்வி பயின்றவர்களாகவோ இருப்பதால் இவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதில் தீவிர நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறது. இந்த வழிகாட்டி நிலையங்கள் இதுவரை ஏறத்தாழ 49,922 ஏழைப் பெண்களுக்கு வங்கி மூலம் ரூ. 77,88,800 வரை கடனுதவி பெற வழிவகை செய்துள்ளது.

2.38. ஜூலை 1985 முதல் சிறுதொழில செய்ய கடனுதவிக் கான மனுக்கள் நிதி நிறுவனத்துறையின் அறிவுரைப்படி 29 பிர்க்காக்களில் உள்ள தலைமை வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு அதன் பின் கடன் அனுமதிக்கும் பொருட்டு கிளை வங்கிகளுக்கு அனுப்பப்படுகிறது.

2.39. 1986-87-ம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்காக ரூ. 4.09 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

13. விதவைகள் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங் கள் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்குவது :

2.40 ரூ. 3,000க்கும் கீழ் ஆண்டு வருமானம் உள்ள விதவைப் பெண்களின் குழந்தைகள் பயன்பெற இலவசமாக பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் வழங்கும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. குழந்தைகளுக்கு புத்தகமும், நோட்டுப் புத்தகமும் கீழ்க்கண்டவாறு வழங்கப் பட்டு வருகின்றன.

[1986 ஏப்ரல் 26

ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 15, நடுநிலைப் பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 40, உயர்நிலைப் பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 60.

இதுவரை 24,331 குழந்தைகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 3,000 குழந்தைகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

2.41. மேல் நிலைக் கல்வி பயிலும் 1,000 பிள்ளைகளுக்கு பிள்ளை ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 100 மதிப்புள்ள புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் இலவசமாக வழங்குவதற்கு 1981–82 முதல் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 4,6 91 பிள்ளைகள் இந்தத் திட்டத்தின கீழ் பயன் பெற்றுள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் 1,000 பிள்ளைகள்பயன் பெறும் வகையில் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இதற்காக 1986–87-ல் ரூ. 4.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. ஆதரவற்ற விதவைகளின் பெண்களுக்கு திருமணத்திற்கான உதவி :

2.42. ஆண்டிற்கு ரூ. 3,000க்கும் குறைவாக வருமானமுள்ள விதவைப் பெண்கள் அவர்களுடைய பெண்களின் திருமணத்தை நடத்துவதற்காக நிதி உதவும் திட்டம் 1981–82ம் ஆண்டு முதல் அரசால் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக விதிக்கப்பட்டுள்ள திருமண வயது 18 முதல் 30 வரை ஆகும்.

2.43. ஒரு நபருக்கு ரூ. 1,000 விதம் ஒவ்வொரு ஆண்டும் 1,000 ஆதரவற்ற விதவைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது. தகுதிபெற்ற விதவையின் ஒரே ஒரு மகள் மட்டுமே இந்த உதவி பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். சென்னை நகரத்தில் சமூக நல இயக்குநராலும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளராலும் இந்த உதவிபெற தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதுவரை 4,282 விதவைகளின் பெண்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். இந்தத் திட்டம் 1984–85 ஆம் ஆண்டு முதல் ரூ. 10.15 இலட்சம் செலவில் 1,015 விதவைகள் பயன் பெறும் வகையில் தொடர்ந்து செயல் படுத்தப்படுகிறது.



1986 ஏப்ரல் 26]

15. அநாதைப் பெண்களின் திருமண நிதியுதவித் திட்டம் :

2.44. 1985–86 ஆம் ஆண்டு முதல் அநாதைப் பெண்களுக்கு உதவி செய்ய தமிழ்நாடு அரசு ஒரு தனித் திட்டத்தை செயல் படுத்துகிறது. அதன் படி 18 வயது முதல் 30 வரையிலான அநாதைப் பெண்களுக்கு அவர்களது ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் குறைவாக இருந்தால் ஒருவருக்கு ரூ. 1,000வீதம் திருமண நிதி உதவி அளிக்கப்படும். ஒரு குடும்பத்திலிருந்து ஒரு அநாதைப் பெண் மட்டுமே இவ்வுதவியைப் பெறத் தகுதியுடையவர். இத்திட்டத்தின் கீழ் ஆண்டிற்கு 1,000 அநாதைப் பெண்கள் பயன் பெறுவர்.

16. இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் :

2.45. 20 முதல் 40 வயது வரையிலுள்ள ஆதரவற்ற ஏழை விதவைப் பெண்டிர் மற்றும் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் நலிவுற்ற பெண்டிர், மற்றும் உடல் ஊனமுற்ற பெண்டிர் மற்றும் ஆண்கள் ஆகியோர் தமது பிழைப்புக்கு வழிதேடும் வகையில் அவர்களுக்கு இலவசமாகத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்கள் தையல் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். இத்திட்டம் 1974–75-ல் தொடங்கப்பட்டது. 1985–86 முடிய 11,28 9 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1986–87-ம் ஆண்டிலும 1,000 தையல் இயந்திரங்கள் வழங்க ரூ. 7.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. விதவை மறுமணத் திட்டம் :

2.46. விதவை மறுமணம் செய்து கொள்ளும் மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக ரூ. 5,000க்கு ஏழாண்டிற்குரிய தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் கைம்பெண்களுக்கு புது வாழ்வு அளிப்பதே 1975–76ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 18 முதல் 30 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைப்பெண்கள் மட்டுமே இததிட்டததின் கீழ் பயன்பெற தகுதி பெற்றவர்களாவர். 1985–86 முடிய 1,294 தம்பதியர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 1986–87 ஆம் ஆண்டிற்கு ரூ. 5 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

18. முதியோர் இல்லம் :

2.47. திருச்சிராப்பள்ளியில் முதியோர் இல்லத்தை மீண்டும் 17–1–1985 முதல் துவங்கி நடத்துவதற்கு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த இல்லத்தினால் பயன் பெறும் முதியோர்களின் எண்ணிக்கை 25 ஆகும். மாதம் ரூ. 350 செல

வருமானமுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண்
மூதியோர்கள் இந்த இல்லத்தில் சேருவதற்கு தகுதியுடைய
வர்கள்.

2.48. ஒவ்வொரு நபரும் உணவு மற்றும்
வாடகைக்கு ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ. 140 கட்டிட
வேண்டும். இந்த இல்லப் பணியாளர்களின் சம்பளம் செலுத்த
இதர சில்லரைச் செலவினங்கள் அரசால் மற்றும்
படுகின்றன. ஏற்றுக் கொள்ளப்

## 19. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்:

2.49. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 1983-ம் ஆண்டு
டிசம்பர் திங்களில் பதிவு செய்யப்பட்டது; இதற்கு அனுமதிக்கப்
பட்ட மூலதனம் ரூபாய் ஒரு கோடி ஆகும். கல்வி, உடல்நலம்,
வேலைவாய்ப்பு போன்ற எல்லாத் துறைகளிலும் மகளிர் முன்
னேற்றத்தை இக்கழகம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களிலுள்ள பெண் தொழில்
முனைவர்களை ஊக்குவிப்பதற்காக இக்கழகம் பல்வேறு பயிற்சி
முகாம்களை நடத்தியுள்ளது. ஒருங்கிணைந்த தமிழ்நாடு
ஊட்டச்சத்துத் திட்டத்தின் கீழ் மொத்தம் பத்து இலட்சம்
ரூபாய் செலவில் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்
களில் தலா நூறு பெண்களுக்கு கறவை மாடுகள் வழங்குவதற்கு
இக்கழகம் ஏற்பாடு செய்துள்ளது. இது போலவே தமிழ்நாடு
ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தின் கீழ் மொத்தம்
பதினாறு இலட்சம் ரூபாய் செலவில் மதுரை மற்றும் புதுக்
கோட்டை மாவட்டங்களில் ஆடுகள் வழங்க வகை செய்யப்
பட்டுள்ளது. மகளிர் முன்னேற்றத்திற்காக நார்வே நாட்டு
நிதி உதவியுடன் சென்னையில் 75 பெண்களுக்கு வேலை வாய்ப்பு
அளிக்கும் வகையில் நவீன ஆப்செட் அச்சகம் அமைக்கப்
பட்டுள்ளது. குழந்தைகளுக்கான கல்வி உபகரணங்கள் தயாரிப்ப
தற்காக நார்வே நாட்டு நிதி உதவியுடன் சென்னையில் ஒரு
தச்சுப் பட்டறை இயங்கி வருகிறது. இது போலவே மதுரையி
லும் ஒரு தச்சுப் பட்டறை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
ஆக மொத்தம் ரூபாய் 26.48 இலட்சம் செலவில் அமைந்துள்ள,
அமைக்க இருக்கும், இவ்விரு தச்சு வேலைப் பிரிவுகளும், 100
பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும், மற்றும் ஒலிபெருக்கிக்
கருவிகள். இடைநிலை அலைவரிசை மாற்றுக் கருவிகள் தயாரிப்ப
தற்காக ரூ. 5.94 இலட்சம் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்
பட்டு, அப்பிரிவினையும் இக்கழகம் நிறுவி அதன்மூலம் 16 பெண்
களுக்கு வேலை வாய்ப்பளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.
மேலும் திரை அச்சு மற்றும் பிளாஸ்டிக் வார்ப்புகள் தயாரிப்ப
தற்காக ரூ. 5.40 இலட்சத்தில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு
அதற்கான பிரிவினையும் நிறுவி 23 பெண்களுக்கு பயிற்சி
அளித்து வேலை வாய்ப்பளிக்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.



மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மொத்தம் ரூ. 162.68 இலட்சம் செலவில் 4,540 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் இக்கழகத்தின் வாயிலாக செயற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இக்கழகம் கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியத்தின் உதவியுடன் இயங்கிவரும் 16 சர்வோதய சங்கங்களின் மூலம் மொத்தம் ரூ. 163 இலட்சம் செலவில், 1,400 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் ஒரு திட்டத்தை செயற்படுத்தி வருகிறது. இது போன்றே, இக்கழகம் மேலும் 720 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக மொத்தம் ரூ. 77.78 இலட்சம் செலவில 32 கிராமப்புற தொழில் பிரிவுகளை அமைப்பதற்கான திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது தவிர, இக்கழகம் சிவகாசியில் 150 பெண்களுக்கு இதில் குறிப்பாக 75 ஊனமுற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் பொருட்டு மொத்தம் ரூ. 52 இலட்சம் செலவில் அதாவது ரூ. 40 இலட்சம் மத்திய அரசிடமிருந்தும், ரூபாய் 12 இலட்சம் மாநில அரசிடமிருந்தும் மானியமாகப் பெற்று, ஆப்செட்டுடன் கூடிய ஒரு நவீன அச்சகம் அமைப்பதற்கான கருத்துருவைத் தயாரித்து, அதன் பால் மத்திய அரசின் இசைவைப் பெற்று தொகையையும் மத்திய அரசிடமிருந்து பெற உள்ளது. மேலும், இக்கழகம் தமிழகத்தின் மகளிர் நிலை குறித்து விரிவாக ஆய்ந்து ஒரு சிறு நூலை வெளியிடுவதற்கான ஏற்பாட்டை செய்து வருகிறது. இக்கழகம் தமிழகத்திலுள்ள 78 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 5,000 பாலர் பள்ளிகளுக்கான கல்வி உபகரணங்களை அவ்வொன்றியங்களுக்கே எடுத்துச் சென்று வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளது.

## 20. பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சிவகாசி பகுதியில் சமூக வளர்ச்சித் திட்டம்.

2.50. சிவகாசி, சாத்தூர் மற்றும் வேம்பக்கோட்டை வட்டாரங்களிலும், சிவகாசி மற்றும் சாத்தூர் நகராட்சிகளிலும் அடங்கிய பகுதியில் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டுள்ள மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு சில அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக அரசு ஒரு திட்டத்தை தயாரித்தது. இத்திட்டம் 1984–85, 1985–86, 1986–87 ஆகிய மூன்று ஆண்டுகளில் மொத்தம் ரூபாய் 136.97 லெட்சம் செலவில் நிறைவேற்றப்படும். 'யூனிசெப்' நிறுவனம் இத்திட்டத்திற்காக ரூ. 77.88 இலட்சம் நிதி உதவி வழங்கும். இந்த மூன்றாண்டுகளிலும் மாநில அரசு இத்திட்டத்திற்காக ரூபாய் 46.41 இலட்சம் செலவினை ஏற்கும். இத்திட்டத்திற்கு பொது மக்களின் நன்கொடை ரூபாய் 12.68 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ளப்படும்:—

(1) ஒன்பது சிறு சுகாதார மையங்கள் அமைத்தல் ;

(2) சாத்தூரிலும் சிவகாசியிலும் இரண்டு மழலைகள் நல வைத்திய அலகுகள் அமைத்தல் ;

[1986 ஏப்ரல் 26

(3) வைத்திய அலுவலர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் புத்தறிவு பயிற்சி அளித்தல்;

(4) சாத்தூர் மற்றும் சிவகாசியிலுள்ள அரசு மருத்துவமனைகளுக்கு நடமாடும் வைத்திய ஊர்திகள் வழங்குதல் ;

(5) ஊட்டச் சத்து நல்வாழ்வு மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல்;

(6) பெருமளவில் தடுப்பு ஊசி போடுதல் ;

(7) வாய்வழி உடல் நீர் பாதுகாத்தல்;

(8) சாத்தூர் மாநகராட்சியில் குடிநீர் குழாய்களை விரிவுபடுத்துதல்;

(9) முதலமைச்சர் சத்துணவு மையங்களுக்கும் பால்வாடிகளுக்கும் மற்றும் பள்ளிகளுக்கும் குடிநீர் குழாய்களை விரிவுபடுத்துதல் ;

(10) குடிநீர் கைகுழாய்களை அமைத்தல் ;

(11) கழிப்பிடங்கள் ஏற்படுத்துதல் ;

(12) கிராமப் பகுதிகளில் கழிவு நீர் அகற்றுதல் மற்றும் சிமெண்ட் பலகைகள் போடுதல் ;

(13) கொசு ஒழிப்பு ;

(14) 100 முறைசாராக் கல்வி நிலையங்கள் அமைத்தல்;

(15) பணியாளர்களுக்கு கல்வி போதித்தல் ;

(16) தொழிலாளர்களுக்கு தொழில் செய்யும் போது பாதுகாப்பு அளித்தல்;

(17) அளத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு செய்தல் ;

(18) திட்ட அலுவலகத்திற்கு பணியாளர்கள், ஊர்திகள் மற்றும் தளவாடங்கள் வழங்குதல்.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான தலைமைப் பொறுப்பு காமராஜர் மாவட்ட ஆட்சியாளரைச் சாரும்.



1986 ஏப்ரல் 26]

## அத்தியாயம் 3.

## குழந்தைகள் நலம்.

3.1. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, கல்வி மற்றும் சுகாதாரப் பராமரிப்பு வழங்குவதற்கு இத்துறையில் பெரும்பாலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமூக நலத் துறையின் மூலம் 2 + வயதுமுதல் 4 + வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் இணைந்துசெயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல வளர்ச்சித் திட்டத்தின் மூலம் எல்லா குழந்தைகளின் சுகாதாரம் பராமரிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊட்டச் சத்தும் அளிக்கப்பட்டு வருகிறது.

### (1) மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

3.2. தமிழகம் பல வகைகளில் முன்னோடியாகத் திகழ்ந்த பெருமை வாய்ந்தது. அதில் ஒன்றாக மாண்புமிகு முதலமைச்சரின் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் 1-7-1982 முதல் கிராமப்புறங்களிலும், 15-9-1982 முதல் நகர்புறங்களிலும் 2 + வயது முதல் 4+வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துக் குறைவு ஏற்படாமல் தடுப்பதற்காகவும், முன் பருவக் கல்வி அளிப்பதற்காகவும் சுகாதாரப் பாதுகாப்பு அளிப்பதற்காகவும் துவக்கப்பட்டது. தற்போது கிராமப் பகுதிகளில் 23,040 குழந்தைகள் நல மையங்களும், நகர்ப்புறத்தில் 5,065 குழந்தைகள் நல மையங்களும் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டத்தில் 2+ வயது முதல் 4+ வயது வரையுள்ள பயன்பெறும் குழந்தைகள் எண்ணிக்கை ஏறத்தாழ 23.30 இலட்சங்களாகும்.

3.3. குழந்தைகளுக்கு பயன் அளிப்பதுடன் ஆயிரக்கணக்கான வேலையற்ற ஏழை மகளிர் பலர் இத்திட்டத்தின் மூலமாக வேலை பெற்றதனால் இத்திட்டம் அவர்களுக்கோர் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. குழந்தைகள் நல அமைப்பாளர்களாக பணியமர்த்தப் பெற்றுள்ள 28,105 மகளிரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் 5,383 பேரும், விதவைகள் 1,033 பேரும், ஆதரவற்ற மகளிர் 1,173 பேரும் உள்ளனர். அதுபோல குழந்தைகள் நல உதவியாளர்களாக அமர்த்தப்பெற்ற 56,210 மகளிரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் 11,463 பேரும் விதவைகள் 7,448 பேரும், ஆதரவற்றோர் 5,603 பேரும் அடங்குவர். ஆக இத்திட்டத்தில் 84,315 மகளிர் குழந்தைகள் நல அமைப்பாளர்களாகவும் குழந்தைகள் நல உதவியாளர்களாகவும் பணியமர்த்தப் பெற்றுள்ளனர்.

3.14. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்பணிகள் திட்டம் ஊட்டக் குறைவு மற்றும், அதன் தொடர்பான குறைபாடுகளை எதிர்த்துப் போராட கீழ்க்கண்ட செறிவுப் பணிகள் மூலம் முயற்சி செய்கிறது:—

1. துணை ஊட்டச் சத்து.
2. பள்ளி முன்னிலைக் கல்வி.
3. மருத்துவ சோதனை,
4. நோய்த் தடுப்பு,
5. மேல் மருத்துவ சோதனை?
6. சமுதாயத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் மற்றும் தாய்மார்களுக்கும் 'கேர்' உணவுப் பொருள்களான ஸி.எஸ்.எம். சாலட் எண்ணெய், பல்கர் கோதுமை வழங்கப்படுகின்றன. இந்த ''கேர்'' உணவுப் பொருள்கள் 39 திட்ட பிரிவுகளுக்கும் வழங்கப் படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் குழந்தை நல மையங்களில் 6 மாதங்கள் முதல் 2 வயது வரையிலான குழந்தைகளுக்கு 80 கிராம் ஸி.எஸ்.எம். மாவினைக் கொண்டு தயாரிக்கப்பட்டதிரவ உணவு வாரத்திற்கு ஆறு நாட்களுக்கு வழங்கப்படுகிறது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் வாரப் பங்கீடான 720 கிராம் பல்கர் கோதுமையும், 42 கிராம் சாலட் எண்ணெயும் வாரத்திற்கு ஒருமுறை பெற்று வீட்டிற்கு எடுத்துச் செல்கிறார் கள். தற்போது 78,040 குழந்தைகளுக்கும் 96,640 கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் ''கேர்'' நிறுவனம் வழங்கும் ஐ.சி.எஸ்.எம். மற்றும் பல்கர் கோதுமை ஆகியவை வழங்கப்படுகின்றன.

3.15. குழந்தை நல அமைப்பாளர்களுக்கு அவ்வப்போது விரிவான வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவில், ஒருங் கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்ட செய்தி அறிவிப்பு வெளியீடு ஒன்று 'பிள்ளைக் கனியமுதே' என்ற தலைப்பில் வெளி யிடப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு 39 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட பிரிவுகளுக்கு ரூ. 363.56 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர புதுக் கோட்டை மாவட்டத்தில் 13 கிராமப்புற திட்டப்பிரிவுகள் இயங்கும்.

(3) சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் தாய்சேய் நலப் பணிகள் திட்டம்:

3.16. ஆறு மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தை களுக்கும், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக் கும் சேவை புரியும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன்



ஆரம்பிக்கப்பட்ட ஓர் ஒருங்கிணைந்த திட்டம் தான் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், தாய்சேய் நலப் பணித் திட்டத்தின் கீழ் துணை ஊட்டச்சத்து, மருத்துவ சோதனை, நோய்த்தடுப்பு, மேல் மருத்துவ சோதனை, சுகாதார மற்றும் ஊட்டச் சத்துக் கல்வி மற்றும் முறைசாராக் கல்வி ஆகிய பல்வேறு பணிகள் அடங்கியுள்ளன.

தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்திற்குள் 122 குழந்தைகள் நல மையங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் ஒரு குழந்தை நல அமைப்பாளரும், இரண்டு குழந்தை நல உதவியாளர்களும் பணிபுரிகின்றனர். மேலும் நடமாடும் மருத்துவ நிலையங்கள் மூலம் 3 மருத்துவ அலுவலர்கள் தம் உதவி மருத்துவ பணியாளர்களுடன் மருத்துவப் பணிகளை நடத்தி வருகின்றனர். 2 வயதுக்குட்பட்ட குழந்தை கள் மற்றும் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்க களுக்கு 'கேர்' உணவுப் பொருட்களைத் கொண்டும் இதர குழந்தைகளுக்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ளூர் உணவினை கொண்டும் ஊட்டச் சத்துணவு அளிக்கப் படுகின்றது.

3.17. சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் 11ன் கீழ் 52 குழந்தை நல நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 1986-87ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத் தில் இத்திட்டத்திற்கு ரூ. 45.53 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்:

3.18. உலக வங்கியின் உதவியுடன் செயல்படும் இத் திட்டத்தின் முதற்கட்டப்பணி கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் முன்னோடித் திட்டமாக 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவங்கியது. பின்னர் இத்திட்டம் மதுரை, அண்ணா இராமநாதபுரம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆற்காடு மற்றும் செங் கற்பட்டு ஆகிய 9 மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவு படுத்தப்பட்டுள்ளது.

3.19. இந்த திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 55.78 கோடி ஆகும். ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பணி முயற்சிகளை திறமையாகவும் பரவலாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இது ஊட்டச் சத்து குறைந்த மிகவும் நலிந்த பிரிவினரான 6 மாதம் முதல் 36 மாதம் வரையிலான குழந்தைகளுக்கு முறையான மற்றும் ஒரு முக நோக்கத்தோடு செயல்படுவதின் மூலம் நிறைவேற்றப் படும். மேலும், இத்திட்டம் மிகுந்த கவனிப்பு தேவைப்படும் கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், முன்பருவக்

கல்வி பயிலும் குழந்தைகள் இவர்களுக்கு ஊட்டச்சத்துடன் இணைந்த பணிகளைச் செம்மையாகவும் திறம்படவும் செயற்படுத்த வகை செய்கிறது.

3.20. ஊட்டச்சத்து மையம் கிராமங்களுக்கு அனைத்துப் பணிகளையும் தரும் முக்கிய இடமாக உள்ளது. இவை சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் பொறுப்பில் இருந்து வருகின்றன. இவர்களது பணி ஊட்டச்சத்து மேற்பார்வையாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. மேலும் வட்டார அளவில் சமுதாய ஊட்டச் சத்துப் பயிற்றுநர்களாலும் வட்ட அளவில் வட்ட ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர்களாலும், மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர்களாலும், வழி நடத்தப்படுகின்றன. திட்டம் குறித்து மாவட்ட ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர்கள், மற்றும் வட்ட ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர்கள் மாறுபட்ட கால அளவில் வெவ்வேறு பயிற்சி நிறுவனங்களில் 3 வார திட்டப் பயிற்சியும் பெறுகின்றார்கள். இப்பயிற்சி அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலும், பவானிசாகர் குடிமுறை பணிகள் பயிற்சி நிலையத்திலும், காந்தி கிராம ஊரகக் கழகத்திலும் அளிக்கப்படுகின்றன. ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான பயிற்றுநர்கள் அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி அல்லது காந்தி கிராம ஊரகக் கழகத்தில் ஒரு மாத பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்றுநர்கள் சமுதாய ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்கு வட்டார அளவில் ஒரு மாதப் பயிற்சியளிக்கின்றனர். சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் வேலைத் திறனையும் திட்ட அறிவையும் மேம்படுத்தும் வகையில் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

3.21. ஆறு மாதம் முதல் 3 வயதிற்குட்பட்ட எல்லா குழந்தைகளின் எடையும் மாதாமாதம் எடுக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சத்துக் குறைவுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், இணை சத்துணவு தரப்படுகின்றது. மேலும் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை வயிற்றுப் பூச்சி நீக்கும் மருந்தும் தரப்படுகிறது. பொது சுகாதாரத் துறையின் கீழ் பணியாற்றும் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்கள் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள் போடுகின்றனர்.

3.22. ஒவ்வொரு 5,000 மக்கட்தொகைக்கும் ஒரு சுகாதாரத் துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு ஒரு ஆண் சுகாதாரப் பணியாளரும் ஒரு பெண் சுகாதாரப் பணியாளரும் பணி புரிகின்றனர். அந்த சுகாதார பணியாளர்களின் பணியை ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ அலுவலரின் கீழ் பணியாற்றும் சுகாதார மேற்பார்வையாளர்கள் கண்காணிக்கின்றனர். இத்திட்டத்தின் கீழ் ஒன்பது மாவட்டங்களில் 1,600 சுகாதார துணை நல மையங்களைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதில் 1071 மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 529 மையங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

3.23. கிராம சமுதாயத்தின் சுகாதாரம் மற்றும் உணவுப் பழக்கங்களை மாற்றியமைக்கும் முயற்சியில் திட்டம் வெற்றி பெறுவதற்கான ஒரு இன்றியமையாத அமைப்பாக இத்திட்டத்தின் தொடர்புப் பிரிவு கருதப்படுகிறது. கருத்தரங்குகள், பயிற்சி தகவல் கூட்டங்கள், புத்தறிவுப் பயிற்சி இயக்கங்கள் ஆகிய வற்றை நடத்துவதன் மூலம் திட்டத்தின் பல்வேறு பணியாளர் களுக்கும் திட்டத்தின் குறிக்கோள் செயல்முறை முதலானவற் றைப் போதித்து வருகின்றது. திரைப்படங்கள், சுவரொட்டிகள் சுவர் விளம்பரங்கள், செய்தித்தாள்கள் ஆகியவைகளைப் பயன்படுத்தி இத்திட்டம் சம்பந்தமான செய்திகள் பரப்பப்படு கின்றன.

(5) பழங்குடியினருக்கான குழந்தை நல நிலையங்கள்.

3.24. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட் டத்தின்கீழ், தென்னாற்காடு, வடாற்காடு, சேலம், தர்மபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் 169 குழந்தை நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. வட ஆற்காடு, மதுரை கன்னியாகுமரி, நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஆதிவாசிகளின் குழந்தைகளுக்காக 47 பாலர் பள்ளி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையங் கள் 01.07.1982 முதல் முதலமைச்சர் குழந்தைகள் சத்து ணவுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. 1986-87 ஆம் ஆண்டில் இவற்றைத் தொடர்ந்து நடத்த ரூ. 11.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(6) பாலர் பள்ளிகள்.

3.25. அரசே கிராமப்புறங்களில் நர்சரி பள்ளிகளை ஆரம்பிக் கலாம் என்பதனை கொள்கை அளவில் ஏற்று இதனைப் படிப்படி யாக செயலாக்கும் பொருட்டு முதற்கட்டமாக 1982-83 ஆம் ஆண்டில் ஏற்கனவே சமூக நலத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் 4,343 குழந்தைகள் நல மையங்களில் நர்சரி பள்ளிகளைத் திறக்க அனுமதிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக 1983-84—ல் 5,000 குழந்தைகள் நல மையங்களிலும், மூன்றாம் கட்டமாக 1984-85-ல் 5,000 குழந்தைகள் நல மையங்களிலும் நர்சரி பள்ளி திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. குழந்தை நல மையங்க ளிலுள்ள அமைப்பாளர்களே மேற்படி நர்சரி வகுப்புகளை நடத்து வதற்கு கல்வித் துறையைச் சார்ந்த ஆதாரப் பயிற்சியாளர்கள் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். மூன்று முதல் ஐந்து வயது வரையிலான குழந்தைகளுக்கு கதை, மழலையர் பாட்டு மற்றும் விளையாட்டு மூலம் கல்வி போதிக்கப்படுகிறது. குழந்தைகள் பொது அறிவை விரிவுபடுத்திக் கொள்ளும் வகையில் ஆக்க உணர்வினை செம்மைப்படுத்திக் கொள்ளவும், சுகாதாரம்

[1986ஏப்ரல் 26

மற்றும் நற்பழக்கங்களைப் பின்பற்றவும் போதிக்கப்படுகின்றனர்.
குழந்தைகள் எல்லா வகையிலும் வளர்ச்சி அடைந்திட தங்கள்
உரையாடல் திறமையினை மேம்படுத்திக் கொள்ள வலியுறுத்தப்
படுகிறது. இக்கல்விக்கான பாடத் திட்டங்கள் பள்ளிக் கல்வி
இயக்குநரைக் கொண்ட குழுவால் வகுக்கப்பட்டுள்ளது. மாண்டி
சோரி, கல்வி நிலைக்கு ஒத்த வகையில் சிறப்புக் கல்வி உபகர
ணங்கள் இப்பள்ளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இச்சிறிய
திட்டம் புதிய தலைமுறையை உருவாக்கி மாநிலத்திற்கும்
நாட்டிற்கும் பெருமையைக் கொணரவல்லது என்று எதிர்பார்க்கப்
படுகிறது. 1985-86ஆம் ஆண்டில் மீதமுள் 10,462 குழந்
தைகள் நல மையங்களிலும் பாலர் பள்ளிகள் திறக்க அரசு
ஆணையிட்டுள்ளது. குழந்தைகள் நல மைய அமைப்பாளர்
களுக்குப் பயிற்சி, கல்வி, உபகரணங்கள் வழங்குதல் முதலியன
படிப்படியாக நிறைவேற்றப்படும். இதற்கென 1986-87 ஆம்
ஆண்டில் ரூ. 3,535.89 இலட்சங்கள் நிதி ஒதுக்கிடு செய்யப்
பட்டுள்ளது.

(7) ஆதரவற்ற குழந்தைகள் அரசு பராமரிப்பு இல்லங்கள்.

3.26. ஐந்து முதல் 18 வயது வரையிலுள்ள ஆதரவற்ற குழந்தை
களுக்காக 250 குறியீட்டெண்ணிக்கை கொண்ட 20 ஆதரவற்ற
குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் இத்துறையால் பராமரிக்கப்
படுகின்றன. அவை கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்று
வருகின்றன:—

1. சென்னை—600 003
2. சென்னை—600 010
3. காஞ்சிபுரம்
4. திருவண்ணாமலை
5. கடலூர்
6. தஞ்சாவூர்
7. திருச்சிராப்பள்ளி
8. புதுக்கோட்டை
9. மதுரை
10. திண்டுக்கல்



1986 ஏப்ரல் 26]

11. மானாமதுரை
12. சாத்தூர்
13. இராமநாதபுரம்
14. ஸ்ரீவைகுண்டம்
15. நாகர்கோவில்
16. தர்மபுரி
17. சேலம்
18. ஈரோடு
19. அவினாசி
20. உதகமண்டலம்

3.27. இந்த இல்லங்களில் தங்கும் குழந்தைகளுக்கு இலவச
மாக உணவு, உறைவிடம், ஆடை, பாடப்புத்தகம் மற்றும் குறிப்
பேடுகள், மருத்துவ உதவி மற்றும் கல்வி அளிக்கப்படுகின்றன.
இந்த இல்லத்திலேயே 1 முதல் 5-ம் வகுப்புவரை இரண்டு
இடைநிலை ஆசிரியைகளால் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்
படுகின்றன. 5-வது வகுப்பிற்குமேல் உயர்கல்விக்காக இல்லக்
குழந்தைகள் அரசு அல்லது மாநகராட்சி அல்லது நகராட்சிப்
பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

3.28. உணவுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 60-ம்,
உடைச் செலவினத்திற்காக ரூ. 35-ம், படுக்கைக்காக ரூ. 20-ம்
புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ. 25-ம், ஆண்டிற்கொருமுறை
ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படுகிறது.

3.29. பெண் குற்றவாளிகளின் குழந்தைகளும் இவ்வில்லங்
களில் சேர்க்கப்படுகின்றனர்.

3.30 சென்னை, மதுரை, நாகர்கோயில் மற்றும் சேலம்
ஆகிய இடங்களிலுள்ள ஆதரவற்றோர் குழந்தைகள் பராமரிப்பு
இல்லங்களில் 1986-87 ஆம் ஆண்டில் சோதனை அளவில்
தொழிற் பயிற்சியின் அடிப்படையில் தையல் பயிற்சி நடத்த
உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(8) ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு.

3.31. ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளித்து
அவர்கள் வாழும் சமூகத்தில் அவர்களையும் மற்ற குடிமக்களைப்
போல வாழ வைக்கும் நோக்கத்துடன் 1974-75 ஆம் ஆண்டு
இத்திட்டம் தொடங்கப்பட்டது. அவர்களுக்கு போதிய அளவு
உணவு, உடை, இருப்பிடம், மருத்துவவசதி, கல்வி, வாழ்க்கைக்குத்
தேவையான கல்விப்பயிற்சி முதலிய வசதிகளை அளிப்பது
இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் குடில் முறையை

அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு குடிலும் 25 குழந்தைகளைக் கொண்டது. ஒவ்வொரு குடிலுக்கும் ஒரு இல்லத்தாயும் ஒரு சமையற்காரரும் நியமிக்கப்படுகின்றனர். 50 குழந்தைகள் அடங்கிய இரு குடில்களுக்கு, ஒரு பயிற்சி பெற்ற சமூக ஊழியரும் நியமிக்கப்படுகிறார். இல்லத்தாய்களின் உதவியுடன் 5 முதல் 18 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு தமது சொந்த குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் இச்சேவை செய்யப்படுகிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வரும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மான்யத்தை மத்திய அரசும் மாநில அரசும் முறையே 45:45 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. மீதமுள்ள 10 சதவிகித செலவுத் தொகையை நிறுவனமே ஏற்றுக்கொள்ளும். 1-4-1979 லிருந்து மேற்குறிப்பிட்ட விகிதத்தில் உதவி அளிக்கப்படுகிறது. 1-4-79-க்கு முன் அனுமதிக்கப்பட்டு தொடங்கப்பட்ட இல்லங்களுக்கான 90 சதவீதச் செலவுத் தொகையையும் மாநில அரசே ஏற்றுக் கொள்கிறது. பராமரிப்பு மான்யத்துடன் ஒரு குடிலுக்கு ரூ. 1.50 லட்சம் வீதம் கட்டிட மான்யமும் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 152 நிறுவனங்கள் மான்யம் பெற்று வருகின்றன. 11,304 ஆதரவற்ற குழந்தைகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து வருகின்றனர்.

3.32. தஞ்சை இந்திய குழந்தைகள் நல சங்கத்தினரால் நடத்தப்படும் குழந்தைகள் நல இல்லத்திற்கு மான்யம் அளித்தல்:—

தஞ்சையிலுள்ள இந்திய குழந்தைகள் நல சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் குழந்தைகள் நல இல்லத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு, சீர்திருத்தப் பள்ளித் துறையிலிருந்து சமூக நலத் துறைக்கு மாற்றப்பட்டு இவ்வில்லத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 30,000 பராமரிப்பு மான்யமாக வழங்கப்பட்டு வருகிறது.





## அத்தியாயம் 4.

## உடல் ஊனமுற்றோர் நலம்.

4.1 ஊனமுற்றோர், சமுதாயத்துடன் ஒருங்கிணைந்த ஒரு பகுதி ஆவர். எனவே அவர்கள் முடிந்தவரை எல்லாவிதமான பாதுகாப்பு உதவி மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை பெறத் தகுதி பெற்றவராவர்.

4.2 இந்த அரசு ஊனமுற்றோரின் நலன் கருதி முழுமனதுடன் பொறுப்புணர்ந்து அவர்களுக்குத் தேவையான வசதிகளை கல்வி, தொழிற்பயிற்சி, மருத்துவம், பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தில் மறுவாழ்வு போன்ற வசதிகளை ஏற்படுத்தித்தருவதில் தனது சிறப்பான கவனத்தை செலுத்தி வருகிறது. ஊனமுற்றோர்களின் நலனுக்காக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிறது. மருத்துவம், வாழ்க்கைத் தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக மறுவாழ்விற்கு உதவுவதே இத்திட்டங்களின் முக்கிய பணிகளாகும். 1977-78-ம் ஆண்டில் ஊனமுற்றோர் நலனுக்காக சமூக நலத் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 26.67 லட்சங்கள். ஆனால் இது 1986-87-ஆம் ஆண்டில் ரூ. 201.51 லட்சங்களாக உயர்ந்துள்ளது. மேலும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஊனமுற்றோர்கள் 1985-86-ம் ஆண்டு இறுதி வரை இந்த வசதிகளால் பயன் பெற்றனர்.

4.3 ஊனமுற்றவர்கள் மறுவாழ்வுக்கென செயற்படுத்தப்படும் கல்வி, வாழ்க்கைத் தொழில் பயிற்சி, வேலைவாய்ப்பு, சுய வேலைவாய்ப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் போன்ற திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

### 1. உடல் ஊனமுற்றோர்க்கு கல்வி வசதிகள்.

4.4 ஊனமுற்றோர்க்கு (பார்வையற்றோர், காது கேளாதோர், உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோர்) தனிக்கவனிப்பும், கல்வி வசதியும் தேவைப்படுகிறது. அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு சிறப்புச் செய்முறை நுட்பம் நிறைந்த ஆசிரியர்கள் தேவைப்படுவதால் சாதாரண குழந்தைகளை விட இவர்களுக்கு கல்வி அளிப்பது மாறுபட்டது.

4.5 இந்த சிறப்புத் தேவைகளைக் கருத்திற் கொண்டு ஊன முற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளையும் பயிற்சி நிலையங் களையும் அரசு நடத்துகிறது. தற்போது 51 சிறப்புப் பள்ளிகள் மற்றும் பயிற்சி நிலையங்கள் உள்ளன. விவரங்கள் வருமாறு:

| வரிசை எண். | நிறுவனத்தின் வகை. | அரசுப் பள்ளிகள். | மான்யம்பெறும் பள்ளிகள். | நகராட்சிப் பள்ளிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | பார்வையற்றோர் பள்ளி | 11 | 9 | .. | 20 |
| 2. | காது கேளாதோர் பள்ளி | 9 | 11 | 2 | 22 |
| 3. | மன வளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளி | 1 | 2 | .. | 3 |
| 4. | தொழுநோயால் பாதிக்கப் பட்டவர்களுக்கான பள்ளி. | .. | 1 | .. | 1 |
| 5. | உடல் ஊனமுற்றோர்க் கான பள்ளி | 1 | 1 | .. | 2 |
| 6. | பயிற்சிப் பள்ளி— | | | | |
| | (அ) பார்வையற்றோர்க்கு | 1 | .. | .. | 1 |
| | (ஆ) காது கேளாதோர்க்கு | .. | 1 | .. | 1 |
| | (இ) மனவளர்ச்சி குன்றியோருக்கு | .. | 1 | .. | 1 |
| | மொத்தம் | 23 | 26 | 2 | 51 |

4.6. சுமார் 4,500 உடல் ஊனமுற்ற சிறுவர்கள் இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வசதிகளுடன்சிறப்புக் கல்வி பெறு கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு தலா 2 செட் இலவசச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

4.7. 9 வயத்திற்கு மேற்பட்ட பார்வையற்ற மாணவிகளுக்கு தகுந்த கல்வி புகட்டவும் பாதுகாப்பு வழங்கவும், 1985–86-ம் ஆண்டில் பெண் ஆசிரியர்களைக் கொண்ட பார்வையற்ற பெண் களுக்கென தனியான அரசு பள்ளி திருச்சிராப்பள்ளியில் தொடங்கப்பட்டுள்ளது. 115 பர்வைற்ற பெண்கள் இந்தப் பள்ளியில் தற்போது படிக்கின்றனர்.



2. பார்வையற்றோருக்கான பிரெய்லி எழுத்து முறை வட்டார அச்சகம், பூவிருந்தவல்லி.

4.8. பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்கள் அச்சடித்து வழங்கும் பொருட்டு பூவிருந்தவல்லி அரசு பார்வை யற்றோர் பள்ளி வளாகத்தில் தனி அச்சகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. நான்கு தென் மாநிலங்களில் தேவையான பிரெய்லி எழுத்துப் புத்தகங்களை இவ்வச்சகம் அச்சிடுகிறது.

4.9. மேற்படி அச்சகத்தைப் பராமரிப்பதற்கான செலவை முதலில் தமிழ்நாடு அரசு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. பின்னர் இச்செலவினம் நான்கு தென் மாநில அரசுகளால் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

1984–85 முதல் அரசு மற்றும் அரசு மான்யம் பெறும் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு பிரெய்லி புத்தகங்கள் இலவச மாக வழங்கப்படுகின்றன.

4.10. 1986–87 ஆம் ஆண்டிற்கு மண்டல பிரெய்லி அச்சக பராமரிப்புக்காக நிதி ஒதுக்கீடு ரூ. 3.96 லட்சம் ஆகும்.

3. ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை.

4.11. முதலாம் வகுப்பு முதல் 8-ம் வகுப்பு வரை படிக்கும் ஊனமுற்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக ரூ. 10 முதல் ரூ. 84 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரையில் இந்த சலுகையை 40,400 மாணவர்கள் பெற்றுள்ளனர். 1986–87 ஆம் ஆண்டிற்கு ரூ.3.87 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.12. ஒன்பதாம் வகுப்பும் அதற்கு மேலும் பயின்று வரும் ஊனமுற்ற மாணவர்கட்கும் தொழில்நுட்பத் துறையில் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்கட்கும் மத்திய அரசு திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்களது கல்விக் கேற்ப உதவித் தொகை ரூ. 70 முதல் ரூ. 170 வரை வழங்கப் படுகிறது. இதுவரையில் 12,016 ஊனமுற்ற மாணவர்கள் இந்த வசதியை பெற்றுள்ளனர். 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 15.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. மனவளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனம்.

4.13. சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டையில் 25 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளைக் கொண்ட மனவளர்ச்சி குன்றியோர் அரசு நிறுவனம் பிப்ரவரி 1984-ல் தமிழக அரசால் துவக்கப்பட்டது.

[1986 ஏப்ரல் 26

4.14. இந்நிறுவனம் மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு இலவச உறைவிடம், உணவு வசதியுடன் கல்வி, மருத்துவ வசதி போன்ற மறுவாழ்வு வசதிகளை உண்டாக்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்டது.

இந்த வகையில் இந்த நிறுவனம் அரசுத் துறையால் நடத்தப்படும் முதல் நிறுவனமாகும்.

4.15. 1986–87 ஆம் ஆண்டில் இந்நிறுவன பராமரிப்புக்காக ரூ. 3.10 லட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

5. பார்வையற்ற காதுகேளாத, மனவளர்ச்சி குன்றியோருக்குப் போதிப்பதற்கான ஆசிரியர் பயிற்சி நிலையம்.

4.16. பார்வையற்ற காதுகேளாத, மனவளர்ச்சி குன்றியோருக்குப் போதிப்பதற்கான ஆசிரியர்களுக்குச் சிறப்பு பயிற்சிகள் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகிறது.

4.17. பார்வையற்றோருக்குப் போதிப்பதற்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்க பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளி வளாகத்தில் மண்டல பயிற்சி மையம் செயல் பட்டு வருகிறது. இந்த மையத்தில் நான்கு தென் மாநிலங்களிலிருந்தும் 12 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெறுகின்றனர். மேலும் இந்த மையத்தில் 15 ஆசிரியர்கள் பயிற்சி பெற தமிழக அரசால் ஒரு சிறப்பு பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி தொடர்ந்து நடைபெற 1986–87 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ. 2.01 லட்சங்களாகும்.

4.18. காது கேளாதோர்க்கு போதிப்பதற்கான நுணுக்கங்களை கொண்ட பயிற்சி 10 தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சென்னை லிட்டில் பிளவர் காதுகேளாதோர் பள்ளியில் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 1.25 லட்சங்கள் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.19. மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு போதிப்பதற்காக 20 ஆசிரியர்களுக்கு சென்னை பாலவிகார் சிறப்பு பள்ளியில் பயிற்சி கொடுப்பதற்காக மான்யம் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டில் ரூ. 45,600 நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



1986 ஏப்ரல் 26]

6. ஊனமுற்றோர்க்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி :

4.20. ஊனமுற்றவர்களை பணியில் அமர்த்துவது என்பது கடினமான ஒன்றாகும். அவர்களுக்கு வேலை வாய்ப்பிற்குத் தகுதியான சிறப்புப் பயிற்சியை அளிக்க வேண்டுமென்பதற்காகவும் அதனால் வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும் சிறப்புத் தொழிற் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

7. நவீன பயிற்சி மற்றும் உற்பத்திப் பணிமனை, முட்டுக்காடு:

4.21. செங்கற்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் 1975ஆம் வருடம் முதல் செயல்பட்டு வருகிறது. முச்சக்கரவண்டிகள், சக்கர நாற்காலிகள், இரும்பு பங்குகள், அலமாரிகள் போன்ற சாமான்கள் வடிவமைப்பதிலும் உற்பத்தி செய்வதிலும் 77 ஊனமுற்றவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1980 முதல் உற்பத்திக்கூடமாக இந்நிலையம் இயங்கி வருகிறது.

4.22. பயிற்சி பெற்ற 71 ஊனமுற்றோர்கள் அரசு நிறுவனங்களான அரசு அச்சகம், போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின்வாரியம், பொதுபணித்துறை மற்றும் சமூகநலத் துறைகளில் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். 1986-87 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தை தொடர்ந்து நடத்துவதற்காக ரூ. 21.23 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி :

4.23. கிண்டியில் 1967ஆம் ஆண்டு முதல் உயர் பொதுக்கல்வி முடிந்த வயது வந்த பார்வையற்றோர்களுக்கு எளிய பொறியியல் பயிற்சித் திட்டத்தின்கீழ் பயிற்சி அளிப்பதற்காக ஒரு எளிய பொறியியல் திட்டம் சென்னை கிண்டியில் இயங்கி வருகிறது.

4.24. பார்வையற்றோர்க்கு அளிக்கப்படும் பயிற்சி தொழில் தேவைக்கேற்ப போதுமான அளவு திறமை பெறவும், அவர்களது வேலை வாய்ப்பினை அதிகரித்துக் கொள்ளவும் போதுமானதாக இல்லை.

4.25. எனவே 1982-83ஆம் ஆண்டு முதல், அரசு பார்வையற்றவர்களுக்கு தகுந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்கு போதுமான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பை அளிக்கவும் இதனை தொழிற்பயிற்சி மையமாக மாற்றி அமைத்து, மேற்படி பயிற்சி திட்டத்தின்கீழ் பொறிப்பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 30

பார்வையற்ற நபர்கள் இப்பயிற்சிகளில் சேர்க்கப்படுகின்றனர். 1986-87 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இந்த நிலையத் திற்காக ரூ. 2.98 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

9. தொழிற்பயிற்சி நிலையத்தில் காதுகேளாதோர்க்கென தனிப் பிரிவு ஏற்படுத்துதல் :

4.26. காதுகேளாதோர் போதுமான தேர்ச்சித்திறம் பெறவும் வேலை வாய்ப்பிற்கான தகுதியை அதிகரித்துக்கொள் ளும் நோக்குடன் அரசு, கிண்டி மற்றும் மதுரையில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில், முழுவதும் காதுகேளாதோர்க்கு பொறிப்பகுதி பொருத்துதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய தொழில்களில் பயிற்சி கொடுக்க 1981-82 ஆம் ஆண்டில் 2 சிறப்புப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பயிற்சிக்காலம் இரண்டு வருடங்களாகும். 1981-83-ம் ஆண்டுகளில் 30 காதுகேளாதோர்க்கு பயிற்சி வழங்கப்பட்டது.

4.27. 1984-85 ஆம் ஆண்டில் கிண்டி தொழிற்பயிற்சி நிலை யத்தில் பொறிப்பகுதி பொருந்துபவர் வேலைக்கு 10 காது கேளாத மாணவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி பெற ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அவர்கள் தற்போது இரண்டாவது ஆண்டு பயிற்சி பெறுகின்றனர்.

1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடருவதற்காக ரூ. 0.47 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு :

4.28. பொருளாதார ரீதியாக தனித்து இயங்கவும் மற்றும் தன்னம்பிக்கை அடையச் செய்வதுமே ஊனமுற்றோரின் மறு வாழ்வு திட்டத்தின் குறிக்கோளாகும். அவர்கள் வாழ்க்கையை தானே நடத்திச் செல்ல வருமானம் கிடைக்கும் பணியில் அமர்த்துவதாலும் சுய வேலை வாய்ப்பிற்கு உதவி செய்வதா லும்தான் இது சாத்தியமாகும்.

4.29. ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு மற்றும் சுய வேலை வாய்ப்பிற்காகச் செயற்படுத்தப்படும் திட்டங்கள் பின் வருமாறு:

11. ஊனமுற்றோருக்குப் பெட்டிக் கடைகள் அமைப்பதற்கு உதவி அளித்தல்.

4.30. வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று சென்னை நகரம் மற்றும் பிற மாவட்டங்களிலும் பெட்டிக் கடைகள் அமைக்க ஊனமுற்றோர்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு ரூ. 250 முதல் ரூ. 500 வரை அரசு மானியமும் அளிக்கப் படுகிறது.



4.31. 1985 ஆம் ஆண்டு வரை காவல், மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு தகுந்த இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினால் 1985-86 வரை 1,240 ஊனமுற்ற நபர்கள் பயனடைந்துள்ளனர்.

4.32. 1986-87 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 0.94 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

12. பயிற்சி பெற்ற ஊனமுற்றோரை தொழில் பழகுவோராக நியமனம் செய்தல் :

4.33. 1979-80 ஆம் ஆண்டுமுதல் சிறப்பு தொழில் பழகுவோர் திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி வேலை வாய்ப் பிற்காக வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள ஊனமுற்றோர்கள் மாநிலத்திலுள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களில் ஒரு ஆண்டிற்குத் தொழில் பழகுவோராக அமர்த்தப்படுகின்றனர்.

4.34. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 150 உதவித் தொகையாக அரசால் வழங்கப்படுகிறது. ஒரு ஆண்டுப் பயிற்சி முடிந்தவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனம் ஊனமுற்றோரை நிரந்தர ஊழியராக எடுத்துக் கொள்ள வேண்டும். இத்திட் டத்தின் கீழ் 1,327 ஊனமுற்ற நபர்கள் பயனடைந்துள்ளனர்.

4.35. 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 0.75 லட்சம் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது.

13. பார்வையற்ற மகளிருக்காக தொழிற்கூடங்களுடன் கூடிய மறுவாழ்வு இல்லம் :

4.36. பார்வையற்ற மகளிருக்காக, சென்னை சாந்தோமில் 1978 முதல் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு மறுவாழ்வு இல்லம் இயங்கி வருகிறது. இங்கு வறுமையில் வாடும் ஆதரவற்ற 40 வயதுக்கு குறைந்த பார்வையற்ற மகளிர் அவர்களது கல்வித்தகுதி எதுவாயிருப்பினும் இந்த இல்லத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு நெய்தல், சாக்கு கட்டி செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு ஆளுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ. 50 உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு இல்லத் திலேயே வேலை அளிக்கப்பட்டு, தினமும் அவர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப ஊதியம் அளிக்கப்படுகிறது. இதுவரை 260 பார்வையற்ற மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர்.

4.37. 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 26

**14. மண்டல மறுவாழ்வு மையங்கள் :**

4.38. ஊனமுற்றோர் பிரச்சினையைத் தனிக் கவனிப்புடன் தீர்ப்பதற்கு ஒரு சிறப்பு அமைப்பு நிறுவப்பட்டது. இந்திய அர சால் நடத்தப்படும் ஊனமுற்றோர் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலைய அமைப்பைப்போன்ற இந்நிறுவனம் மண்டல மறுவாழ்வு நிலையமாக இயங்கி வருகிறது. சென்னை, மதுரை, கோயம் புத்தூர், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களைத் தலைமை மையமாகக் கொண்டு மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங் களையும் உள்ளடக்கி இந்த மண்டல மறுவாழ்வு நிலையங்கள் செயல்படுகின்றன. பிரதி மாதம் ஒவ்வொரு மண்டல மறு வாழ்வு மையமும் 100 ஊனமுற்ற நபர்களுக்கு உதவிகள் அளிக்கின்றன.

4.39. 1985-86ம் ஆண்டில் 3,553 ஊனமுற்றோருக்கு உதவி கள் வழங்கப்பட்டுள்ளன.

4.40. 1986–87ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர ரூ. 13.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**15, வேலையற்ற பார்வையற்றோருக்கு நிவாரண தொகை அளித்தல் :**

4.41. 1981 உலக ஊனமுற்றோர் ஆண்டின் திட்டங்களில் ஒன்றாக வேலையற்றோர் நிவாரணத் தொகையாக மாதம் ரூ. 50 வழங்கும் திட்டம் படித்த பார்வையற்றோர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இதன்படி எஸ். எஸ். எல். சி. அல்லது ஐ.டி.ஐ. சான்றிதழ் பெற்ற, வேலை வாய்ப்பு உயிர்ப் பதிவேட்டில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பதிவு செய்து, 40 வயதிற்குக் குறைந்த (தாழ்த்தப்பட்ட/பழங்குடியினராயின் 45 வயதிற்குள்) படித்த பார்வையற்றவர்கள் உதவித் தொகை பெறத் தகுதி யுடையவர்கள். சமூக நலத்துறை நிதி ஒதுக்கீட்டின்கீழ், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரால், மற்ற வேலை யில்லா நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்துடன் இத்திட்ட மும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86-ம் ஆண்டில் 70 பார்வையற்ற நபர்கள் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

4.42. 1986–87-ல் இத்திட்டத்திற்காக ரூ. 1.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16. ஊனமுற்றோருக்கு கருவிகள் வழங்குதல் :**

4.43. ஊனமுற்றோருக்கு அவர்களின் ஊனத்தின் தன்மைக் கேற்ப முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் காதொலிக் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.



1986 ஏப்ரல் 26]

4.44. முச்சக்கர வண்டிகள் : 1985-86ஆம் ஆண்டு இறுதி வரை 8,782 முச்சக்கர வண்டிகள் உறுப்பு நலம் குறைந்த உடல் ஊனமுற்ற ஏழைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

4.45. சக்கர நாற்காலிகள் : வாத நோயினால் பாதிக்கப் பட்ட உடல் ஊனமுற்றோருக்கு 1985–86-ம் ஆண்டு வரை 500 சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

4.46. காதொலிக் கருவிகள்: 18 வயதுக்கு குறைந்த பள்ளிக்கு செல்லும்/செல்லாத காது கேளாத குழந்தைகளுக்கு காதொலி கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. 1983–84ஆம் ஆண்டு வரை 3,297 காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

4.47. 1984–85 ஆம் ஆண்டு முதல் தமிழ் நாட்டிலுள்ள காதுகேளாத அனைவரும் பயனடைய இலவசமாக 15,000 காதொலி கருவிகள் வழங்க திட்டமிடப்பட்டது.

4.48. இதன்படி பயன் பெறுவோரைத் தேர்வு செய்ய எல்லா மாவட்டங்களிலும் பிப்ரவரி 1985-ல் மருத்துவப் பரிசோதனை முகாம் நடைபெற்றது. 20,562 நபர்கள் இம்முகாமில் தேர்வு செய்யப்பட்டனர்.

4.49. 1984–85-ல் 4,581 காதொலிக் கருவிகள் எல்காட்/ சிட்கோ நிறுவனத்தால் வழங்கப்பட்டன. அவைகள் செங்கற் பட்டு, மதுரை, திருநெல்வேலி, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த 4,581 பேருக்கு வழங்கப்பட்டன. மீதமுள்ளவர்களுக்கு 1986-87ல் வழங்கப்படும்.

4.50. 1986–87-ல் ஊனமுற்றோருக்குக் கருவிகள் இலவசமாக வழங்க ரூ. 24.62 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய திட்டங்கள்.

(17) தொண்டு நிறுவனங்களுக்கு மான்யம் வழங்குதல்.

4.51. 8 முதல் 14 வயதிற்குட்பட்ட மன வளர்ச்சி குன்றிய, காது கேளாத, பார்வையற்ற கைகால் ஊனமுற்ற குழந்தைகள், தொழு நோயாளிகளின் குழந்தைகள் ஆகியோர்களைப் பராமரிப் பதற்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 30 என்ற விகிதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மான்யம் அரசால் வழங்கப்படுகிறது. 1985–86-ம் ஆண்டில் 16 நிறுவனங்கள் அரசிடமிருந்து மான்யம் பெற்றுள்ளன. சுமார் 600 சிறுவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

4.52. 1986–87-ல் இத்திட்டத்திற்காக ரூ. 1.07 லடசம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

[1986 ஏப்ரல் 26

(18) உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு பயணச் சலுகை வழங்குதல் :

4.53. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு வீட்டிலிருந்து பள்ளிக்கு மற்றும் மருத்துவ மனைக்குச் சென்று திரும்பிவர அரசுக்குச் சொந்தமான போக்குவரத்துப் பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர) இலவசமாகப் பயணம் செய்ய சலுகை வழங்கப்படுகிறது. இதனால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் நிதி இழப்பை சமூக நலத்துறையினால் ஈடு செய்யப்படுகிறது. 1985-86 இறுதி வரையில் 13,139 ஊனமுற்ற குழந்தைகள்/மாணவர்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.

4.54. 1986–87-ல் இத்திட்டத்திற்காக ரூ. 4.00 லட்சம நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(19) செங்கற்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் நிறுவுதல்.

4.55. இந்திய அரசு நல அமைச்சகத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி, செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு மாவட்ட மறுவாழ்வு மையம் நிறுவ திட்டமிடப்பட்டது. ஐந்து ஆண்டு காலத்திற்கு இத்திட்டத்திற்கான செலவுத் தொகை ரூ. 74.80 இலட்சம் ஆகும். இந்த மாவட்ட மறுவாழ்வு மையம் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஊனமுற்றவர்களுக்கு மருத்துவம், வாழ்க்கைக் கல்வி சமூக பொருளாதார நிலைகளில் ஒரு விரிவான மறுவாழ்வுப் பணியினை அளிக்கும்.

4.56. இத்திட்டம் முதலில் காட்டாங்கொளத்தூர், திருக்கழுக்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயற்படுத்தப்படும். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள எல்லா ஊனமுற்றோரையும் தேர்வு செய்து, திட்ட காலத்தில் அவர்களுக்குத் தேவையான மறுவாழ்வு உதவிகளை அளிக்கிறது.

4.57. திட்டத்திற்குத் தேவையான தொகையில் இந்திய அரசு இரண்டு தவணைகளில் மொத்தம் ரூ. 12.75 (1984-85-ல் 10 லட்சம் 1985–86-ல் 2.75 லட்சம்) இதுவரை வழங்கியுள்ளது.

4.58. செங்கற்பட்டு மாவட்டத்தில் இத்திட்டம் விரைவில் செயற்படுத்தப்பட உள்ளது.



1986 ஏப்ரல் 26]

(20) தமிழ்நாடு மாநில ஊனமுற்றோர் வாரியம்.

4.59. 1971-ம் ஆண்டில் மாநில ஊனமுற்றோர் வாரியம் நிறுவப்பட்டது. தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டோர் பிரச்சினைகளை கருத்தில் கொண்டு அவர்களின் மறு வாழ்விற்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இவ்வாரியம் நிறுவப்பட்டது. இது முதலில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் நிர்வாகத்தின் கீழ் இருந்தது.

4.60. 1978-ம் ஆண்டில் வாரியத்தின் நிர்வாகம் சமூக நல இயக்க நிர்வாகத்திற்கு மாற்றப்பட்டது.

4.61. ஊனமுற்றவர்களின் நலத் திட்டங்களை உருவாக்குவதற்கு கருத்துக்களைக் கூற ஒரு வல்லுநர் குழுவும் இவ்வாரியத்தில் உள்ளது.

4.62. சமூக நல அமைச்சரின் தலைமையின்கீழ் இயங்கும் இவ்வாரியம் பிப்ரவரி 1984-ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.

4.63. இதுவரையில் 109 ஊனமுற்றோர்களுக்கும் 7 தொண்டு நிறுவனங்களுக்கும் மாநில ஊனமுற்றோர் வாரியத்திலிருந்து மான்யங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1986-87 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட இருக்கும் புதிய திட்டப்பணிகள் பற்றிய செயற்குறிப்பு.

2. (i) பார்வையற்ற மாணவர்களுக்கு தேர்வின்போது எழுத்துத் துணை உதவியாளர்.

4.64. இத்திட்டத்தின் நோக்கம் முதல் கட்டமாக சென்னையிலுள்ள மூன்று பார்வையற்றோர் சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் தேர்வின் போது வினாக்களுக்கு பார்வையற்ற மாணவர்களால் அளிக்கப்படும் பதிலினை உதவியாளர்கள் மூலம் எழுதுவதாகும். இத்திட்டத்தினால் அவர்கள் பொதுத்தேர்வின் போது நல்ல மதிப்பெண்கள் பெற உதவியாக அமையும்.

4.65. தேர்வுத்தாள் ஒன்றுக்கு ரூ. 6 வீதம் எழுத்துத்துணை உதவியாளர்களுக்கு வழங்கப்படும். 200 பார்வையற்ற மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன் பெறுவர்.

4.66. 1986— 87 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 28,000 ஆகும்.

2. (2) தஞ்சாவூர் அரசு காது கேளாதோர் உயர்நிலைப் பள்ளியில் ப்ளஸ் 2 வகுப்பு துவங்குதல்.

4.67. தஞ்சாவூர் அரசு காது கேளாதோர் உயர்நிலைப் பள்ளியில் 123 மாணவர்கள் எண்ணிக்கையுடன பத்தாம் வகுப்பு வரையில் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. 1985—86 ஆம் ஆண்டில் இப்பள்ளியில் 10 கூடுதல் மாணவர்கள் எண்ணிக்கையுடன் பதினோராம் வகுப்பு துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. காது கேளாத மாணவர்கள் தங்கள் படிப்பினைத் தொடர வேறு மேல்நிலைப்பள்ளிகளை நாடிச் செல்ல வேண்டி உள்ளது. மேலும் இங்கு வேறு அரசு காது கேளாதோர் மேல்நிலைப்பள்ளி எதுவும் இல்லை. ஆகவே இப்பள்ளியில் ப்ளஸ் 2 வகுப்பு துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1986—87 ஆம் ஆண்டில் 10 காது கேளாதோர் மாணவர்கள் ப்ளஸ் 2 வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

4.68. இத்திட்டத்திற்காக 1986–87ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 1.08 இலட்சமாகும்.

2. (3) அரசு காது கேளாதோர் பள்ளி, தர்மபுரி மற்றும் ஈரோடு ஆகியவைகளின் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துதல்.

4.69. தற்போது தர்மபுரி அரசு காது கேளாதோர் பள்ளியில் 83 குழந்தைகளும், ஈரோடு அரசு காது கேளாதோர் பள்ளியில் 50 குழந்தைகளும் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

4.70. இப்பள்ளியில் சேர்க்கைக்கான வேண்டுகோள்கள் அதிக அளவில் பெறப்படுகிறது. இம்மாவட்டங்களில் வேறு மானியம் பெறும் காது கேளாதோர் பள்ளிகள் இல்லை. எனவே இந்த இரண்டு பள்ளிகளின் குழந்தைகளின் எண்ணிக்கையை உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்படி இப்பள்ளிகளில் 60 குழந்தைகள் கூடுதலாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

4.71. இத்திட்டத்திற்காக 1986-87 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 3.47 இலட்சமாகும்.

2. (4). கலப்புத் திருமணம் புரிந்துகொள்ளும் தம்பதியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளை பார்வையற்ற ஒருவர் பார்வை உள்ள ஒருவரை மணந்து கொள்வதற்கும் நீட்டித்தல்.

4.72. கலப்புத் திருமணம் புரிந்து கொள்ளும் தம்பதியினருக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன: —

(அ) எட்டு கிராம் தங்கம்.
(ஆ) பணப்பரிசாக ரூ. 4,000.
(இ) திருமணச் செலவிற்காக ரூ. 300.



4.73. பார்வையற்றோர் பார்வையுள்ளவர்களைத் திருமணம் செய்துகொள்வதற்கும் இத்திட்டத்தை நீட்டிக்க கோரி ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் 20 பார்வையற்றோர் பார்வையுள்ளவர்களைத் திருமணம் செய்து கொள்ள உதவி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பயன் பெறுவோரும் ரூ. 6,000 பெறுவார்கள்.

4.74. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ. 1.20 இலட்சமாகும்.

2. (5) வடசென்னை மற்றும் அம்பத்தூரிலுள்ள ஊனமுற்றோருக்கான தொழிற்கல்வி மையத்தில் மூன்றாவது ஷிப்ட் அறிமுகப்படுத்துதல்.

4.75. அம்பத்தூர் மற்றும் வடசென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர்களுக்கான தொழிற்கல்வி மையத்தில் மூன்றாவது ஷிப்ட் அறிமுகப்படுத்துதல் மூலம் உடல் ஊனமுற்றோருக்கென தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களான வண்ணப்பூச்சு வேலை, வரைவுப்பணியாளர், பொருத்துபவர், இயந்திரப் பணியாளர், குழாய்ப்பணியாளர் போன்ற பயிற்சிகளில் மேலும் பலர் தேர்வுபெற்று அவர்கள் சுயவேலைவாய்ப்புப் பெறவும் அல்லது ஊதியம் பெறும் வேலைவாய்ப்புப் பெறவும் முடியும்.

4.76. முதற்கட்டமாக நகரத்திலுள்ள இந்த இரண்டு தொழிற்பயிற்சி மையங்கள் மூலம் 92 உடல் ஊனமுற்றோர்கள் பயனடைவார்கள். இப்பயிற்சித் திட்டம் சமூக நலத்துறை நிதியிலிருந்து வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநரால் செயல்படுத்தப்படும்.

4.77. இத்திட்டத்திற்காக 1986–87 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 2.87 இலட்சமாகும்.

[1986 ஏப்ரல் 26

## அத்தியாயம்—5

### தமிழ்நாடு சமூக நல வாரியம்

5.1. தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ் நாட்டின் தொண்டு நிறுவனங்களது மேம்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகித்து வருகிறது.

5.2. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :

சமூக நல அமைப்புகளை ஆரம்பித்து, உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித்திறனை வளர்ப்பதற்கு தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

3. உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல் :

5.3. தமிழ் நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடம் இருந்து பண உதவி பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்குப் பண உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் கூட பண உதவி செய்யப்படுகிறது.

5.4. தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று அலுவலக உறுப்பினர்கள் உட்பட 32 உறுப்பினர்களைக் கொண்டதாக, திருத்தியமைக்கப் பட்டது.

5.5. 1985—86 ஆம் ஆண்டில் 1,350 தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் 91.99 இலட்சம் பண உதவி செய்யப்பட்டது. விபரங்கள் பின்வருமாறு :

| வரிசை எண், திட்டத்தின் பெயர். (1) | அலகுகளின் எண்ணிக்கை. (2) | அனுமதிக்கப்பட்ட தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 திட்டக்கால உதவி | 25 | 2.14 |
| 2 வருடாந்திர உதவி | 231 | 4.28 |
| 3 மகிலா மண்டல திட்டம் | 34 | 1.25 |
| 4 சத்துணவுத் திட்டம் | 98 | 6.25 |
| 5 குழந்தைகள் காப்பகத் திட்டம் | 671 | 45.72 |
| 6 நகர்ப்புற விரிவாக்கத் திட்டம் | 1 | 0.66 |
| 7 விடுமுறை முகாம் | 44 | 2.20 |
| 8 குறுகிய காலக் கல்விப் பயிற்சி (1 வருடம்/2 வருடம்) | 11 | 2.48 |
| 9 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி | 84 | 16.35 |
| 10 பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி | 11 | 0.73 |
| 11 சமூகப் பொருளாதாரத் திட்டம் | | |
| (அ) உற்பத்தி அலகுகள் | 2 | 0.40 |
| (ஆ) சேவை முனைப்புத் திட்டம் | 5 | 0.50 |
| (இ) பால்வளத் திட்டம் | 14 | 2.92 |
| (ஈ) சுயவேலை வாய்ப்புத் திட்டம் | 1 | 0.10 |
| (உ) ஆடு வளர்த்தல் | 1 | 0.24 |
| 12 கிராமப்புற மகளிர் பயிற்சித்திட்டம் | 17 | 0.77 |
| 13 மாநில அரசு மான்யம் | 100 | 5.00 |
| மொத்தம் | 1350 | 91.99 |



[1986 ஏப்ரல் 26

## அத்தியாயம்—6

### சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை.

6.1 சீர்த்திருத்தப்பள்ளி மற்றும் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை முக்கியமாக இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது, ஒன்று 1920-ம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்தப்பள்ளிகள், மற்றொன்று 1956-ம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு-பாதுகாப்பு இல்லங்கள் ஆகும்.

6.2. இத்துறையின் முக்கிய நோக்கம் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் (1920) கீழ் நிறுவனத்திற்கு அனுப்பப்படும் இளங் குற்றவாளிகள், தவறிழைத்த இளைஞர்கள், ஆதரவற்றோர், கட்டுக்கடங்காச் சிறுவர்கள் மற்றும் 1956-ம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச்சட்டத்தின் கீழ் நெறி பிறழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிருக்கு பாதுகாப்பு அளித்தல், நடத்தை (நெறிப்படுத்துதல்) கல்வி, வாழ்க்கைக் கல்விப் பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகும். பிற்காப்பு நிறுவனங்களிலிருந்து விடுதலை பெறும் இல்லவாசிகளுக்கு பிற்காப்பு வசதியையும் இத்துறை அளிக்கிறது.

6.3 சமுகநலத்துறை இயக்குநர், சீர்த்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை இயக்குநராகவும் கூடுதல் பொறுப்பேற்று உள்ளார். ஒரு இணை இயக்குநர், சமூகநலத் துறை இயக்குநருக்கு, சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறையின் நிர்வாகப் பணிகளில் உதவி புரிகிறார். தென் மாவட்டங்களிலுள்ள நிறுவனங்களை திறமையான மேற்பார்வை செய்ய மதுரையில் ஒரு மண்டல அலுவலகமும் ஒரு துணை இயக்குநரின்கீழ் இயங்கி வருகிறது.

### தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920-ன் கீழுள்ள நிறுவனங்கள்.

6.4. இருபது சீர்திருத்தப்பள்ளிகள் (நீண்டகால வரையறை நிலையங்கள்) இம்மாநிலத்தில் 1920-ம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் உள்ளன. ஒன்பது அரசினரால் நடத்தப்படுகின்றன. எஞ்சிய பதினொன்று தனியார் பள்ளிகள், தனியார் பள்ளிகளுக்கு தமிழ் நாட்டிலுள்ள நீதிமன்றங்களால் சீர்திருத்தப் பயிற்சி பெற வேண்டி ஒப்படைக்கப்படும் சிறுவர்களைப் பராமரிப்பதற்கு அரசினரால் மானிய உதவி அளிக்கப்படுகிறது. மூளை பாதிக்கப்பட்ட குழந்தைகள் சென்னை, பாலவிகார் நிறுவனத்தின் கீழியங்கும் சீர்திருத்தப்பள்ளியில் பொறுப்பேற்கப்படுகின்றனர்.





6.5. பதினைந்து வரவேற்பு இல்லங்கள் (குறுகிய காலவரையறை) உள்ளன. இவ்வரவேற்பு இல்லங்கள் நீதிமன்றங்களின் முன் விசாரணை ஏற்கும் சிறுவர் சிறுமியருக்கு விசாரணைக் காலங்களில் பொறுப்பேற்கின்றன. இவ்வரவேற்பு இல்லங்களில் பதினொன்று அரசினராலும், ஏனைய நான்கு வரவேற்பு இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச்சங்கம் ஆகிய தனியார் நிறுவனங்களாலும் அரசினரின் நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன.

### 1956 ஆம் ஆண்டு (சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத்) தடுப்புச் சட்டத்தின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்.

6.6 அரசினர் விழிப்பு-காப்பகங்கள் (நீண்டகால வரையறை) 1956-ம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு புகலிடமும் பயிற்சியும் அளிக்கின்றன. ஆறு அரசினர் மகளிர் காப்பகங்கள் இத்துறையில் உள்ளன. இவற்றைத் தவிர எட்டு (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் நீதிமன்ற விசாரணைக் காலங்களில் சிறுமியர் மற்றும் பெண்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையறையுள்ள நிறுவனங்கள் நீண்டகால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு நுழைவாயில்களாகும்.

### பிற்காப்பு இல்லங்கள் :

6.7. மூன்று பிற்காப்பு இல்லங்கள் (சட்டத்தின் பாற்படாத) உள்ளன. இவற்றுள் இரண்டு சிறுவர்களுக்காகவும், ஒன்று சிறுமியர் மற்றும் பெண்டிருக்காகவும் உள்ளது. பெண்களுக்கான ஒரு இல்லம் வட ஆற்காடு மாவட்டம், வேலூரிலும், சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் ஆத்தூரிலும் (செங்கற்பட்டு மாவட்டம்) மதுரையிலும் உள்ளன. இவ்வில்லங்கள் தொழிற் கல்விப் பயிற்சியை, சீர்திருத்த இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு தொடர்ந்து அளித்து, அவர்கள் வேலைக்குத் தகுதிபெறுமாறு பயிற்றுவிக்கின்றன. உடைகள், உள்ளடக்கிகள் மற்றும் தோல்பொருட்கள், உற்பத்தியில் பயிற்றுவிக்கும் ஒரு தொழில் நிலையம், வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பில்லத்துடன் (வேலூர்) இணைக்கப்பட்டுள்ளது. இல்லவாசிகள் அகதிப் பெண்கள் மற்றும் உள்ளூர் பெண்கள் இந்நிலையத்தில் பயிற்சிக்கென தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### கல்வி:

6.8 அனைத்துச் சீர்திருத்தப் பள்ளிகளும் கல்விபுகட்டும் வசதிகளைப் பெற்றுள்ளன. எட்டாம் வகுப்பு வரை மாணவர்களுக்கு கல்வி புகட்டப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளி மற்றும் சென்னை, அரசினர்

பெண்கள் சீர்திருத்தப்பள்ளிகளில், உயர்நிலைப்பள்ளிப் பிரிவுகளில் மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பிக்கப்படுகிறது. உயர் கல்வியில் நாட்டமுள்ள மாணவர்கள் மேல்நிலைப் பள்ளி/கல்லூரி/தொழிற் பயிற்சி நிலையங்கள்/பல்தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் சேர்க்கப்படுகின்றனர்.

வாழ்க்கைக் கல்வி:

6.9. கீழ்க்குறிப்பிட்ட வருவாய் தரக்கூடிய தொழிற் கல்விப் பயிற்சிகள் இல்லவாசிகளின் இல்ல நீக்கத்திற்குப் பின் அவர்களின் மறுவாழ்வு இலகுவாக அமையும் பொருட்டு அளிக்கப்படுகின்றன.

(அ) சீர்திருத்தப்பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள்—

1. தச்சு,
2. தையல் மற்றும் பூவேலை,
3. நெசவு,
4. பாய் நெசவு,
5. கருமார்ப் பணி,
6. உலோகப்பணி,
7. தோட்டம் மற்றும் வேளாண்மை,
8. கொத்து வேலை
9. புத்தகம் கட்டுதல்
10. இசைக் கருவி
11. மாட்டுப் பண்ணை,
12. சோப்பு தயாரிப்பு.

(ஆ) பிற்காப்பு இல்லங்கள்—

(1) புத்தகம் கட்டுதல்
(2) கருமார்ப்பணி
(3) தையல்

மேலேயுள்ள தொழிற் பிரிவுகளில் சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளி மற்றும் தஞ்சாவூர், அரசினர் இள்நிலை சீர்திருத்தப்பள்ளியின் தையற் கூடங்களும், செங்கற்பட்டு, அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியில் தச்சு மற்றும் நெசவுத் தொழிற் கூடங்களும் இயந்திரமயமாக்கப்பட்டு மின்பொறிகளின் உதவியால் மாணவர்களுக்கு உற்பத்திசெய்ய பயிற்றுவிக்கவும், இல்ல நீக்கம் பெற்று வெளியேறி அவர்கள் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற வசதியும் செய்யப்பட்டுள்ளது. தச்சுப்பிரிவினை இயந்திரமயமாக்கும் திட்டம் தஞ்சாவூர், அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி மற்றும் இராணிப்பேட்டை, அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியிலும், சென்னை, அரசினர் மகளிர் காப்பகத்தில், ஒரு மின்சலவை கூடம் தொடங்கவும் அரசால் அனுமதிக்கப்பட்டு இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.





6.10. ஒரு குழந்தைகள் காப்பகம், சென்னை, அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. 10 மாணவிகளுக்கு இப்பிரிவில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

6.11. சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கென இல்லவியல் பயிற்சி ஒன்று துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கான காலம் ஆறு மாதங்கள் ஆகும்.

6.12. பற்ற வைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் ஒன்றினை இராணிப்பேட்டை, அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் ரூ. 5.34 லட்சம் செலவில் துவங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டி எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 20 மாணவர்கள் இத்தொழிற் கூடத்தில் பயிற்சி பெறுவர்.

6.13. 1984-85 ஆம் ஆண்டில் ஒழுக்க நெறியைப் பறி கொடுத்தவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்க 'தமிழ் நாடு நல நிதி' ஒன்று துவங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்நிதி உதவி மகளிர் காப்பகங்களிலிருந்து விடுதலை பெறும் தேவைப்படும் பெண்களுக்கு வழங்கப்படும். தொடர் ஆண்டு மானியமாக ரூ. 5 லட்சம் இந்நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 2.50 லட்சம் அரசினரின் நேரிடை மானியமாகவும், ரூ. 2.50 லட்சம் தமிழ் நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.. ஒவ்வொரு ஆண்டும் ஐம்பது இல்ல வாசிகள் இத்திட்டம் மூலம் பயன்பெறுவர். 1986-87 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

சீர்த்திருத்தப்பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் :

6.14. 1980-81 ஆண்டு முதல் சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கு இடையே உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டியினால் மாணவர்களின் திறமை உயர்வதுடன் அவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, சகோதரத்துவம், தலைமைப் பொறுப்பு ஆகிய பண்புகள் வளர வாய்ப்பளிக்கப்படுகிறது. சீர்திருத்தப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு கலை நிகழ்ச்சி 1986 மார்ச்சு திங்களில் நடைபெற்றது. சிறந்த மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இளங்குற்றவாளி வழிகாட்டி நிலையங்கள் :

6.15. சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில் உள்ள இளங்குற்றவாளி வழிகாட்டி நிலையங்கள் இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர், சிறுமியரைப் பற்றிய மனநிலை அறிக்கைகளை

அளித்து வருவதுடன், சிறுவர்களிடையே விளங்கும் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வுகளும் மேற்கொள்கின்றன. இவ்வழிகாட்டி நிலையங்கள் அருகிலுள்ள வரவேற்பு இல்லங்களின் கோரிக்கைகளை கவனிக்கின்றன. இந்நிலையங்களின் மீதான செலவினம் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற்குழுக்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

மறுவாழ்வு :

6.16. இல்லவாசிகள், நிறுவனங்களில் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர் அவர்களை சமுதாயத்தில் அமர்த்துவதன் மூலமாக மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. மறுவாழ்வு அளிக்கப்படும் முறைகளாவன:—

(1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல்.

(2) வேலை வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தருதல்.

(3) வேலைத் திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற தொழிற் கல்விக்கேற்ற கருவிகள் வழங்குதல்.

திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க ரூ. 1,000-ம் மற்றும் திருமணச் செலவுகளுக்கு ரூ. 100-ம் அரசினரால் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் (1-1-1983 முதல் 31-12-1985 முடிய) 10 இல்லவாசிகளுக்கு திருமணம் செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவு :

6.17. இத்துறையின் 1986-87-ம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடு (பணியாளர் சம்பளங்கள் உள்ளிட்டது) ரூ. 194.67 இலட்சம் ஆகும். மானிய உதவியாக தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் தொகை ரூ. 8.35 லட்சம் ஆகும்.

6.18. புதிய திட்டங்களை செயல்படுத்துவதன் நோக்கமாக இத்துறையின் நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவியர் மற்றும் பெண்டிருக்கு விரிவான கல்வி மற்றும் தொழிற்கல்விப் பயிற்சியை மேம்படுத்த வகைசெய்யப்பட்டுள்ளது. மேலும் சில சீர்திருத்தப்பள்ளிகள், வழிகாட்டி நிலையங்கள், வாழ்க்கைக் கல்வி (பயிற்சி) தொழிற்கூடங்கள் ஆகியவற்றையும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1985-90) துவங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.





## அத்தியாயம் 7.

### முதியோர் உதவித் தொகை திட்டம்.

7.1. உற்றார் உறவினர் ஆதரவின்றி, வாழ வழியற்றவர்
களுக்கு, சமூகப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட
வகைகளின்கீழ் முதியோர் உதவித் தொகை திட்டத்தினை
மாநில அரசு செயல்படுத்துகிறது :—

(அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் (1-4-1962 முதல்).

(ஆ) உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்] திட்டம் (1-11-1974 முதல்).

(இ) உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் (1-6-1975 முதல்).

(ஈ) உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்) திட்டம் (21-8-1981 முதல்).

7.2. முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம்.—
கண் பார்வையற்ற தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு
மற்றும் அவயவமிழந்து, வருவாய் ஈட்ட முடியாத, ஆதரவற்ற
நபர்கள் உதவித்தொகை பெற குறைந்த பட்ச வயது வரம்பு
60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்த பட்ச வயது
வரம்பு 65 ஆகும். இந்தத்திட்டம் 1-4-1962 முதல் செயல்
படுத்தப்படுகிறது.

7.3. முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊன
முற்றோர்) திட்டம்.—1-11-1974 முதல் இந்தத் திட்டம் 55
வயது நிரம்பிய ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு செயல்
படுத்தப்பட்டது. 1975-ல் குறைந்த பட்ச வயது வரம்பு 45 ஆக
குறைக்கப்பட்டது. கண்பார்வையற்றவர்களுக்கு வயது
வரம்பு ஏதுமில்லை. 50 சதவீதம் மற்றும் அதற்கு மேல் உடல்
ஊனமுற்ற ஆதரவற்ற நபர்கள் இந்த உதவித் தொகை பெற
தகுதியானவர்கள். உடல் ஊனம் தொடர்பானச் சான்று குறிப்
பிட்ட படிவத்தில், மருத்துவக் கல்லூரி/அரசு மருத்துவ மனை/
ஆரம்ப சுகாதார மையங்களைச் சார்ந்த அரசு மருத்துவர்களால்
இலவசமாக அளிக்கப்படும். இந்தத்திட்டம், தொழு நோயால்
பாதிக்கப்பட்டவர்களுக்கும் 1982-ம் ஆண்டில் விரிவு படுத்தப்
பட்டது.

7.4. உதவித் தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம்.—
1-6-1975 முதல் முதியோர் உதவித் தொகைத் திட்டம் 45
வயது நிரம்பிய ஆதரவற்ற விதவைகளுக்கும் நீட்டிக்கப்பட்டது.
1978-ல் இந்த குறைந்த பட்ச வயது வரம்பு 40 ஆக குறைக்கப்
பட்டது.

7.5. உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம்.—21-8-1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

7.6. உதவித் தொகை அளிக்கப்படும் முறை.—மேற்கண்ட திட்டத்தின்கீழ் உதவித் தொகை அளிக்கும் அதிகாரம் கோட்டாட்சியர்களுடையது. கோட்டாட்சியரின் ஆணையை எதிர்த்து மாவட்டாட்சியர்களுக்கு மேல்முறையீடு (முத்திரை கட்டணமின்றி) செய்ய மனுதாரருக்கு வாய்ப்புள்ளது.

7.7. உதவித் தொகை.—முதியோர் உதவித் தொகை திட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளாகிய 1-4-1962 முதல் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 20 உதவித் தொகையாக அளிக்கப்பட்டது. 1-4-1979 முதல் மாதம் ரூ. 25 ஆகவும் 1-4-1982 முதல் இதுநாள் வரை மாதம் ரூ. 35 ஆகவும் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகை பண அஞ்சல் மூலம் உதவித் தொகை பெறுபவர்கள் முகவரிக்கு வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கட்டண செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

7.8. இலவச கைத்தறி ஜனதா ஆடைகள் வழங்குதல்.—ஆண்டுக்கு இருமுறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் அன்று உதவித் தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வேட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வண்ண/வெள்ளைச் சேலையும் 1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த கைத்தறி துணிகளின் விலை விவரங்கள் பின்வருமாறு :—

| | ரூ. |
|---|---|
| (அ) ஒரு கைத்தறி ஜனதா வேட்டி .. | 18.50 |
| (ஆ) ஒரு கைத்தறி ஜனதா வண்ண சேலை .. | 22.25 |
| (இ) ஒரு கைத்தறி ஜனதா வெள்ளைச் சேலை .. | 24.30 |

7.9. இலவச அரிசி மற்றும் மதிய சத்துணவு வழங்குதல் :—1-11-1980 முதல் உதவித் தொகை பெறும் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு கிலோ சன்ன ரக அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.



136480

7.10. 15-1-1983 முதல் உதவித் தொகை பெறுபவர்களுக்கு முதலமைச்சர் சத்துணவுத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி, உதவித்தொகை பெறுபவர்களுக்கு நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவில் இருக்கும். சத்துணவிற்கான செலவு, ஒரு நபருக்கு, ஒரு வேளைக்கு 93 பைசா ஆகிறது.

| | |
|---|---|
| அரிசி .. .. .. .. | 200 கிராம். |
| பருப்பு .. .. .. .. | 15 கிராம். |
| எண்ணெய் .. .. .. | 10 கிராம். |
| காய்கறி மற்றும் தாளிதம் .. | 50 கிராம். |

இந்த மதிய சத்துணவு பெறுபவர்களுக்கு மட்டும் வாரம் ஒரு கிலோ அரிசிக்கு பதிலாக 15-1-1983 முதல் வாரம் அரைக்கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

7.11 முதியோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை மற்றும் அதிக பட்ச, தோராயமான ஆண்டுச் செலவினம்:—

| | எண்ணிக்கை |
|---|---|
| (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம் .. .. .. .. | 1,42,595 |
| (ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் திட்டம்) .. | 17,437 |
| (இ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம் .. .. .. | 79,668 |
| (ஈ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம். | 40,332 |
| மொத்தம் .. | 2,80,032 |

தோராயமான ஆண்டுச் செலவினம் ரூ. 24.36 கோடி ஆகும்.

7.12 கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை.—கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற 30 வயதுக்கு குறையாத பெண்களுக்கும் 1984-ம் ஆண்டு முதல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, முதியோர் உதவித் தொகை திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

—

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.